LA-36

# பாரதியார் பாடல்கள்

## விளக்கவுரை



LA-36

ஸ்ரீ லங்கா புத்தகசாலை — வெளியீடு

# பாரதியார் பாடல்கள்

## விளக்கவுரை

[ க. பொ. த. (சாதாரண) பரீட்சை 1965 — 1966 ]

பதவுரையும்
உவமான உவமேய விளக்கமும்
செய்யுள் நயமும் கொண்ட
புதிய வெளியீடு.

4436

உரையாசிரியர்:

வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

**க. வேந்தனார் அவர்கள்**

(தமிழ் விரிவுரையாளர், பரமேசுவரக் கல்லூரி)

(நான்காம் பதிப்பு)

1965

பதிப்புரிமை ]

[ விலை ரூபா 2-00

## உரிமையுரை

*பிறந்த அன்றே*

**பெற்ற அன்னையை இழந்த என்மேல்**

**நிறைந்த அன்பைச் சொரிந்து**

**சைவத் தமிழ்ப்பற்றும் சால்பும் தழைக்க**

*வளர்த்து*

**வாழ்வு தந்த என்னருமைத் தந்தையார்**

சரவணையூர்,

**துரையசிங்கம் கனகசபை**

**அவர்களுக்கு**

*நன்றிக் காணிக்கையாக*

**இந்நூல் உரையினை**

*நல்குகின்றேன்.*

கலைச்சோலை,
கந்தர்மடம்,
15-6-61.

க. வேந்தனார்.

Siva . Hylvaganam

## பதிப்புரை

இலங்கைக் கல்விப்பகுதியாரால் 1965 — 1966 வரையும் உள்ள காலங்களில் நிகழவிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரணம்) தேர்வுக்குக் குறிக்கப்பட்ட தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள பாரதியார் பாடல்களுக்குப் பதவுரையும் செய்யுள் நயமும் கொண்ட புதியதோர் விளக்கவுரை எழுதி வெளியிட வேண்டுமெனப் பல ஆசிரிய நண்பர்களும், மாணவர்களும் நேரில் வந்தும், கடிதவாயிலாகவும் எம்மைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் விருப்பத்தை நிறை வேற்றும் வண்ணம் **பரமேசுவரக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் திரு. க. வேந்தனார்** அவர்களை ஊக்கினேம். அவர்கள் பாரதியாரின் கவிதையுள்ளத்துடன் கலந்து நுகர்ந்து, நுகர்ந்து மிகச்சிறந்ததோர் விளக்கவுரையினை எழுதி உதவினர்கள்.

பாரதியாரின் பாடல்களுக்கு வித்துவான் அவர்கள் எழுதிய நயம், மாணவர்களுக்குப் புதியதோர் இலக்கிய விருந்தாகப் பொலிகின்றது. **எளிமையும், இனிமையும், உணர்ச்சி வீறும் கொண்ட பாரதியார் பாடல்களை, எங்ஙனம் நுகர்ந்து நுகர்ந்து சுவைக்கலாம் என்பதற்கோர் வழி காட்டியாக வித்துவான் அவர்களின் விளக்கவுரை விளங்குகின்றது.**

வித்துவான் அவர்கள் எழுதிய **கும்பகர்ணன் வதைப் படலம், இந்து சமய பாடம், சுந்தரகாண்டம் விளக்கவுரை** என்னும் நூல்களுக்குப் பேராதரவு நல்கி எம்மை ஊக்கிய ஆசிரியர்களும், மாணவர்களும் இந் நூலினையும் ஆதரிப்பார்களென எதிர்பார்க்கின்றோம்.

—பதிப்பாளர்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாரததேசம் ... ... | 1 — 18 |
| 2. | நடிப்புச் சுதேசிகள் ... ... | 19 — 35 |
| 3. | சுதந்திரப் பெருமை ... ... | 36 — 45 |
| 4. | சுதந்திரதேவியின் துதி ... ... | 46 — 59 |
| 5. | புதுமைப் பெண் ... ... | 60 — 76 |
| 6. | தொழில் ... ... | 77 — 82 |
| 7. | தமிழ்த் தாய் ... ... | 83 — 96 |
| 8. | தமிழ் ... ... | 97 — 106 |
| 9. | மூன்று காதல் ... ... | 107 — 125 |
| 10. | வெண்ணிலாவே ... ... | 126 — 141 |
| 11. | முரசு ... ... | 142 — 182 |


# பாரதியார் பாடல்கள்

## 1. பாரத தேசம்

**பா**ரததேசம் என்பது இந்தியா முழுமையையும் அகப் படுத்தி நிற்கும் தொடராகும். பாரதியார் தமது கவிதை யுல கில் சுதந்திர பாரத தேசத்தைப் படைத்து மிகப் பெருமிதங் கொள்கின்றார். அடிமைப் பாரதத்தில் வாழ்ந்து, பாரத மக்கள் படும் அல்லல்களைக் கண்டு ஆவி துடித்த பாரதியார், அந்த அடிமைப் பாரதத்தையே சுதந்திர பாரதமாகக் கற்பனை செய்து பாடிய கவிதைகளை, இப் பாரததேசம் என்னும் பகுதி யில் காண்கின்றோம். கவிதைகளின் ஓசை எழுச்சியும், பெரு மித நடையும் பாரதியாரின் உரிமை வேட்கையையும் தாய் நாட்டுப் பற்றையும் புலனாக்குகின்றன.

**இராகம்—புன்னாகவராளி**

**பல்லவி**

**பாரத தேசமென்று பெயர்சொல்லு வார் — மிடிப்**
**பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லு வார்.**

**பொருள்:**—பார்த தேசமென்று - பாரத தேசந்தான் எங் கள் தாய்த் திருநாடென்று, பெயர் சொல்லுவார் - (நிறைந்த பற் றுடன்) அதன் பெயரைச் சொல்லுபவர்கள், மிடிப்பயம் - வறுமை எம்மை வருத்துமோ என்றெண்ணும் அச்சத்தை, கொல்லுவார் - கொல்கிறவர்கள் (இல்லாமல் அழிக்கின்றவர் கள்) ஆவார், துயர்ப்பகை - துன்பமாகிய பகையையும், வெல் லுவார் - வெற்றிகொள்வார்.

**விளக்கம்:** பாரததேசம் என்னும் தாய்த் திருநாட்டின் பெயரை உண்மையான பற்றுடன் கூறுகின்றவர்கள் உள்ளத் தில் வறுமைப் பிணியினால் வருந்த நேருமோ என்ற அச்சமும், வாழ்க்கையில் ஏற்படுகின்ற பலவேறு வகைப்பட்ட துன்பங்களி

ணுல் உண்டாகும் தாக்கமும் உளவாகா என்பதாம். தாய்த் திருநாட்டில் உண்மைப் பற்றுடையவர்கள் சுதந்திரப் போரில் குதித்துச் செயலாற்றும்பொழுது, உளவாகும் வறுமை, துன்பம் என்பவற்றை வென்று விடுதலைபெற முனைந்து நிற்பார்கள் எனும் உண்மையைப் பாரதியார் பல்லவியில் தோற்றுவாய் செய்கின்ருர்.

சரணங்கள்

**1 வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம்; அடி**
**மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்;**
**பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்கு வோம்; எங்கள்**
**பாரத தேசமென்று தோள்கொட்டு வோம்: (பாரத)**

**பொருள்: அடி - பெண்ணே; வெள்ளிப் பனிமலையின் - வெள்ளிபோல விளங்குகின்ற பனியால் மூடுண்டு கிடக்கும் இமயமலையின், மீது - (மேல்) உச்சியில், உலவுவோம் - (மன வலிமையுடன் முயன்று ஏறி) உலாவித் திரிவோம், மேலைக் கடல் முழுதும் - பாரதநாட்டின் மேற்குத் திசையில் உள்ள அரபிக்கடல் எங்கும், கப்பல்விடுவோம் - கப்பல்களைச் செலுத்திச் செல்வோம் (சென்று வாணிபஞ் செய்வோம் என்பதாம்). பள்ளித்தலம் அனைத்தும் - பள்ளிக்கூடங்களை எல்லாம், கோயில்செய்குவோம் - கோவில்களைப்போல மதித்து ஆக்கமுறுத்துவோம். எங்கள் பாரததேசம் என்று - எங்கள் தாய்த் திருநாடு பாரததேசம் என்று சொல்லி, தோள்கொட்டுவோம் - (அங்ஙனம் தாய்த்திருநாட்டின் பெயரைச் சொன்னதினுல் வளர்ந்து எழுச்சிகொண்ட) தோள்களைத்தட்டிப் பெருமிதங் கொள்வோம்.**

**விளக்கம்:** சுதந்திர பாரதத்தின் மக்களாகிய நாம் மனத் திண்மையும், ஊக்கமும் கொண்டவர்களாய் வட இமயத்தின் உச்சியின்மேல் ஏறிச்சென்று உலாவுவோம். பாரதநாட்டின் மேற்கே உள்ள அரபிக்கடல் எங்கும் பாரதநாட்டின் கப்பல்களை இடைவிடாமற் செலுத்தி வாணிபஞ் செய்யும் பெருமுயற்சியில் ஈடுபட்டு உழைப்போம். இங்ஙனம் மலையையும், கடலையும் பாரத



மக்கள் தம் முயற்சியால் வென்று ஆட்சிபுரிய வேண்டுமெனப் பாரதியார் ஊக்கமும் உரமும் ஊட்டுகின்ருர்.

இனி, மலையாட்சியும், கடல் ஆட்சியும் பெற்ற பாரத மக்கள் கலை ஆட்சியிலும் மேம்பட்டவர்களாக விளங்க வேண்டும் என்பதே பாரதியாரின பேரார்வமாகும். பாரத நாட்டில் கோவில்களுக்குப் பெருமதிப்புக் கொடுக்கின்றது போலவே, பள்ளிக் கூடங்களையும் மதித்து ஆக்கமுறுத்தவேண்டும் என்பதாம்.

**பள்ளித் தலம் அனைத்தும்**
**கோயில் செய்கு வோம்**

எனப் பாரதியார் மிக ஆர்வத்துடன் கூறுகின்ருர்.

**வீடு தோறும் கலையின் விளக்கம்**
**வீதி தோறும் இரண்டொரு பள்ளி**
**நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்**
**நகர்கள் எங்கும் பலபல பள்ளி**

எனவரும் பாரதியாரின் பாடற்பகுதிகளையும் நோக்குக.

இனிப் **பள்ளித்தலம் அனைத்தும் கோயில்செய்கு வோம்,** என்பதற்குப் பள்ளிக்கூடங்கள் (கல்லூரிகள்) உள்ள இடங்களில் எல்லாம் சமயவழிபாட்டுக்குரிய கோவில்களையும் அமைத்துக் கலை உணர்ச்சியுடன் கடவுளுணர்ச்சியையும் ஊட்டுவோம் எனவும் பொருள் கொள்ளலாம்.

**2 சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப் போம்;**
**சேதுவை மேடுறுத்தி வீதிசமைப் போம்;**
**வங்கத்தில் ஓடிவரும் நீரின்மிகை யால்**
**மையத்து நாடுகளில் பயிர்செய்கு வோம். (பாரத)**

**பொருள்: சிங்களத் தீவினுக்கு - சிங்களத்தீவு என்று சொல்லப்படுகின்ற இலங்கைக்கு, (அதனை இந்தியாவுடன் இணைத்து) ஓர் பாலம் அமைப்போம் - பாலம் ஒன்று கட்டுவோம், சேதுவை - (தனுஷ்கோடிக்கும் தலைமன்னுருக்கும் இடையில் உள்ள) சேது என்னும் (இராமர்) அணையினை,**

**மேடுறுத்தி - உயர்த்தி, வீதி சமைப்போம் - தெரு அமைப்போம், வங்கத்தில் - வங்காளத்தில் நின்று, ஓடிவரும் - பெருகிப் பாய்ந்து வருகின்ற, நீரின் மிகையால் - கங்காநதியின் மிகுதியான நீரால், மையத்து நாடுகளில் - இந்தியாவின் மையத்திலே (நடுவில்) உள்ள நாடுகளில், பயிர் செய்குவோம் - (நெல் முதலிய) பயிர் வகைகளை உண்டாக்குவோம்.**

**விளக்கம்:** இக்கவிதையிலே, பாரதியாரின் கவிதை உள்ளத்திலே உருவாகும் செயல் திட்டங்களைக் காண்கின்றோம்.

இந்தியாவுடன் இலங்கையை இணைத்து ஒன்றாக்கிவிடப் பாரதியார் திட்டம் தீட்டுகிறார். தாய்நாடாகிய இந்தியாவுடன் சேய்நாடாகிய இலங்கையை, சேரவிடாமல் இடையே நின்று பிரிக்கின்ற சிறுகடலைப் பாலத்தினால் இணைத்துவிட்டால் ஏற்படும் பயன் பெரிதென்பதே பாரதியாரின் எண்ணமாகும். சைவம் புத்தம் என்னும் சமயங்களாலும், தமிழ் சிங்களம் என்னும் மொழிகளாலும் தாய்நாடாகிய இந்தியாவுடன் இணைந்து கிடக்கின்ற சேய்நாடாகிய இலங்கையை நிலத்தினாலும் இணைத்துவிட எண்ணுகின்ற பாரதியாரின் கவிதை உள்ளத்தின் அகலமும் ஆர்வமும் மிகமிகப் பாராட்டற்குரியதாகும். பாரதியாரின் கவிதைக் கனவு இன்றைய விஞ்ஞான உலகில் நனவாகச் செயற்படவுங் கூடும்.

இத்துடன் அவரின் கவிதை உள்ளம் அமைந்துவிடவில்லை. சேது என்னும் அணையை நன்குயர்த்தித் தெருவீதி அமைக்கவும் திட்டம் வகுக்கின்றார். இங்ஙனம் பாலமும், வீதியும் அமைத்த பாரதியார் மத்திய இந்தியாவிற்கு ஓர் நீர்ப்பாய்ச்சல் திட்டம் அமைத்துப் பயிர் செய்யவும் முயல்கின்றார். வங்க நாட்டில் பாய்கின்ற கங்காநதியின் நீரை மறித்துத் திருப்பி மத்திய இந்தியாவில் பாய்ச்சி, பயிர் செய்யவேண்டுமென்னும் பாரதியாரின் திட்டம், அவரின் சிந்தனைத்திறனைக் காட்டுகின்றது. இன்று நீரின்றிவரண்ட நிலப்பகுதிகளுக்கெல்லாம் ஆற்றுவெள்ளத்தைவிஞ்ஞான வசதிகளால் பாய்ச்சி, வளர்படுத்தும் வழிகள் பல நாடுகளிலும் மேற்கொள்ளப்படுதலைக் காண்கின்றோம்; இங்ஙனம்



பாரதியாரின் கவிதை உலகக் கற்பனைகள் எல்லாம் அரிய பெரிய விஞ்ஞான சாதனைகளாகச் செயற்படுவதை எண்ண எண்ண அவரின் கவிதையுள்ளத்தில் அறிவியற் புலமையும் ஆட்சிபுரிந்ததென்னும் அருமைப்பாடு புலனாகின்றது.

**3 வெட்டுக் கனிகள்செய்து தங்கம்முத லாம்**
**வேறு பலபொருளும் குடைந்தெடுப் போம்;**
**எட்டுத் திசைகளிலும் சென்றிவை விற்றே**
**எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவரு வோம்.**
**(பாரத)**

**பொருள்: வெட்டுக் கனிகள்செய்து - (நிலத்தில்) சுரங்கங்களைத் தோண்டி, தங்கம் முதலாம் - தங்கம், பொன், வெள்ளி, இரும்பு, கரி முதலிய வேறு பல பொருளும் - பலவேறுவகையான பொருள்களையும், குடைந்தெடுப்போம் - (மீண்டும் மீண்டும்) நிலத்தை அகழ்ந்து அகழ்ந்து எடுத்துக்கொள்வோம், இவை-(இங்ஙனம் நிலத்தைக் குடைந்து எடுத்த) தங்கம் முதலிய பொருள்களை, எட்டுத் திசைகளிலும்-உலகின்கண் உள்ள எட்டுத் திசைகளுக்கும் (எல்லாப் பக்கங்களுக்கும்), சென்று - (கடல் வழியாலும், நில வழியாலும்)கொண்டு சென்று, விற்றே - விற்று, எண்ணும் பொருளனைத்தும் - எங்கள் நாட்டுக்கு மிக இன்றியமையாமல் வேண்டுமெனக் கருதப்படுகின்ற பலவேறுவகைப்பட்ட பொருள்கள் யாவற்றையும், கொண்டுவருவோம் - (பிறநாடுகளிலிருந்து) பெற்று வருவோம்.**

**விளக்கம்:** பாரதியாரின கவிதை உள்ளத்தில், பாரத தேசத்திலேயே தங்கம், இரும்பு, கரி முதலான பொருள்களையும் நிலத்தைத் தோண்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்ற சிந்தனை தோன்றி நிழலாடுவதைக் காண்கின்றோம். பிறநாடுகளை எதிர்பாராமல் எங்கள் நாட்டிலேயே தங்கம் முதலான உலோகப் பொருள்களையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அப்பொருள்களில் எங்களுக்கு வேண்டியவைபோக மிகுதியான பொருள்களை உலகின் பல பகுதிகளுக்கும் கொண்டுசென்று விற்று, எங்கள்

நாட்டுக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொண்டுவர வேண்டுமென்றும் பாரதியார் திட்டம் வகுக்கின்றார்.

**எட்டுத் திசைகளிலும்**
**சென்றிவை விற்றே**
**எண்ணும் பொருளனைத்தும்**
**கொண்டு வருவோம்**

என அவர் பாடுகின்ற கவிதையில் அமைந்துள்ள எழுச்சியைப் பாருங்கள். சுதந்திர பாரதத்தின் நிலத்தைத் தோண்டி எடுக்கின்ற உலோகப் பொருள்கள் எல்லாம் உலகின் எல்லாத் திசைகளிலும் சென்று விற்கக்கூடிய அளவுக்குப் பெருகவேண்டும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும். இன்றைய சுதந்திர பாரதத்தில் இரும்பு, நிலக்கரி முதலிய பொருள்களை எடுத்தற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன, என்பதை அறிகின்றோம்.

4 **முத்துக் குளிப்பதொரு தென்கடலி லே;**
**மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந் தே,**
**நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந் து**
**நம்மருள் வேண்டுவது மேற்கரையி லே (பாரத)**

**பொருள்:** ஒரு தென்கடலிலே - ஒப்பற்ற (சிறப்பு வாய்ந்த) தெற்குக் கடலின்கண்ணே, முத்துக்குளிப்பது (கடலின் ஆழம் அளவும்) மூழ்கிச்சென்று முத்துக்களை (நம்நாட்டவர்) எடுக்கின்றார்கள், பலநாட்டினர் - (அங்ஙனம் குளித்தெடுக்க முத்துக்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளுதற்காக) உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ளவர்களாகிய, வணிகர் - வியாபாரிகள், வந்தே - நமது நாட்டை வந்தடைந்து, மொய்த்து - (முத்துக்களைப் பெறுதற்காக ஒருவரின் ஒருவர் முந்தி) நெருக்கமாகக் கூடி, நத்தி - (மிக) விருப்பங்கொண்டவர்களாய், நமக்கு - (பாரதநாட்டு மக்களாகிய) எங்களுக்கு, இனிய - மகிழ்ச்சியை ஊட்டுகின்ற நல்ல, பொருள் கொணர்ந்து - பொருள்களை (உபகாரமாகத் தருதற்பொருட்டு) கொண்டுவந்து, நம் அருள் வேண்டுவது - எங்களுடைய கருணையை (தயவை) எதிர்பார்த்தவண்ண



மாய் விரும்பி நிற்பது, மேற்கரையிலே-(பாரததேசத்தின்) மேற்குக் கரைத் துறைமுகங்களிலே (என்பதாம்).

**விளக்கம்:** தென்கடலில் முத்துக் குளிக்கும் செயலையும், அம்முத்துக்களைப் பெறுதற்காகப் பிறநாட்டு வணிகர்கள் மிக ஆராமையோடு வந்து குவிந்துநிற்கும் காட்சியையும் பாரதியார் மிகப் பெருமிதத்துடன் கூறுகின்றார்.

முத்துக்களைப் பெறுதற்காகப் பிறநாட்டு வணிகர்கள் வந்து நிற்கும் ஆர்வத்தைப் பாரதியாரால் மறக்கமுடியவில்லை.]

**மொய்த்து வணிகர் பலநாட்டினர் வந்தே**
**நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து**
**நம்மருள் வேண்டுவது**

என அவர் பாடிய கவிதையைப் படிக்கும்பொழுது எமது உள்ளத்திலும் புதியதோர் எழுச்சியும் பெருமிதமும் தோன்றுகின்றன. பிறநாட்டு வணிகர்கள் பொருள்கொடுத்து முத்துக்களைப் பெற வந்தவர்கள் என்றாலும், முத்துக்களை விலைக்கு விற்கும் பாரதநாட்டு மக்களின் கருணையைப் பெறுதற்காக அவர்களுக்கு மிக விருப்பத்தைக் கொடுக்கும் இனிய பொருள்களை உபகாரமாக உதவி நிற்கும் செயலை எண்ண எண்ண பாரதியாரின் உள்ளத்தில் இன்பமெழுகிறது.

**நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே**

என அவர் கூறுகின்ற செய்யுள் தொடரைப் படிக்கும்பொழுது எமக்கும் புதியதோர் இன்பம் எழுகின்றது.

**நத்தி—விரும்பி; மொய்த்து—நெருங்கி.**

5 **சிந்து நதியின்மிசை நிலவினி லே**
**சேரநன் னாட்டிளம் பெண்களுட னே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத் துத்**
**தோணிக ளோட்டிவிளை யாடிவரு வோம். (பார)**

**பொருள்:** சிந்து நதியின்மிசை - சிந்துநதியின் நீர்ப்பரப்பின்மேல், நிலவினிலே - நிலாக்காலத்திலே, சேரநன்னாட்டு

இளம்பெண்களுடனே - சேரரால் ஆளப்பட்டதனுல் சேரநாடு என்னும் பெயர் பெற்ற (இப்பொழுது மலையாளம் என வழங்குகின்றது) நல்ல நாட்டில் உள்ள இளமை நலம் நிரம்பிய பெண்களுடன் சேர்ந்து, சுந்தரத்தெலுங்கினில் - மொழிவளம் என்னும் அழகு நிரம்பிய இனிய தெலுங்கு மொழியினுல், பாட்டிசைத்து - பாட்டுக்களைப் பாடியவண்ணமாய், தோணிகள் ஓட்டி - தோணிகளைச் செலுத்தி, விளையாடிவருவோம் - விளையாடிவருவோம் என்பதாம்.

**விளக்கம்:** இக்கவிதையில் பாரதியாரின் பரந்த உள்ளத்தைக் காண்கின்றோம். மொழியினுலும் நிலத்தினுலும் வேறுபட்டு நிற்கும் பாரத மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டுப் பாரத மாதாவின் அணைப்பிலே தங்கி இன்பமடைய வேண்டும் என்னும் பெருநோக்கம் கொண்ட பாரதியார், தமது நோக்கத்துக்கு ஓர் உருக்கொடுத்துத் தீட்டிய இக்கவிதை காலம் கடந்து வாழும் பொருள்நலத்துடன் பொலிகின்றது.

சிந்துநதியிலே நிலாக்காலத்திலே, சேரநாட்டில் உள்ள (மலையாளத்தில் உள்ள) இளம் பெண்களுடன் அவர்களின் தாய் மொழியாக விளங்குகின்ற மலையாளத்திலோ அன்றித் தமிழிலோ பாட்டுப்பாடாமல் தெலுங்கு மொழியிலே பாட்டுக்களைப் பாடியவண்ணம், தோணிகளை ஓட்டி விளையாடுகின்ற ஒன்றுபட்ட அன்பினுல் இணைந்த தேசீயப் பெருவாழ்வைப் பாரதியார் ஓதி ஓதி ஆனந்தம் அடைகின்றுர்.

பாரதநாட்டு மக்கள் தமிழர், மலையாளிகள், தெலுங்கர், கன்னடர்கள், சீக்கியர், மராட்டியர் என மொழிகளினுலும் நிலப் பிரிவுகளினுலும் வேறுபட்டவர்களாய் ஒற்றுமை குலைந்து வாழாமல் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்னும் உயர்ந்த உண்மையைப் பாரதியார் இக்கவிதை மூலமாக எடுத்துரைக்கின்றுர்.

இங்ஙனம் எல்லோரும் ஒன்றுபட்டு வாழும் உயர்ந்த நிலையை **ஒட்பம்** என வள்ளுவர் உரைத்துள்ளார்.



ALAI WEST CHUNNAKAM

**உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு**

எனவரும் திருக்குறளை நோக்குக.

6 **கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்**
**காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்;**
**சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு**
**சேரத்துத் தந்தங்கள் பரிசளிப் போம்** (பாரத)

**பொருள்:** கங்கை நதிப்புறத்து - கங்கை நதியின் கரையிலே விளைகின்ற, கோதுமைப்பண்டம் . கோதுமை என்னும் பொருளை, காவிரி - காவிரிநதியின் கரையிலே உண்டாகிய, வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம் - பதிலாகக் கொடுத்துப் பண்டமாற்றுச் செய்வோம், (கோதுமையைக் கொடுத்து வெற்றிலையைக் கொள்ளுவோம் என்பதாம்) சிங்கமராட்டியர்தம் - சிங்கத்தைப்போல வீரம் மிக்கவர்களாகிய மராட்டியர்களுடைய, கவிதைகொண்டு - மராட்டியமொழிப் பாட்டுக்களை உள்ளம்கொண்டு (கேட்டுமகிழ்ந்து) அதற்கு, சேரத்துத் தந்தங்கள் - சேரநாட்டின்கண் உள்ள யானைத்தந்தங்களை, பரிசளிப்போம் - பரிசிலாகக் கொடுப்போம்.

**விளக்கம்:** இக்கவிதையிலும் ஒன்றுபட்டுவாழும் ஒட்பத்தையே மீண்டும் உரைத்து உரைத்துப் பாரதியார் மகிழ்கின்றுர். வடநாட்டின்கண் உள்ள வீரமராட்டியர்கள் பாடிய மராட்டிய மொழிக் கவிதைகளைக் கேட்டு மகிழும் அளவிற்குத் தென்னுட்டின்கண் உள்ள சேரநாட்டு மக்கள் மராட்டிய மொழிப் புலமை வாய்ந்தவர்களாக வாழவேண்டும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும். சேரநாட்டு யானைத் தந்தங்கள் வீரமராட்டியரின் கவிதைக்குப் பரிசிலாக வழங்கப்படும் பெருவிழாவை பாரதியாரின் கவிதை உள்ளம் கற்பனை செய்கின்றது. இங்ஙனம் பாரதியார் கவிதை உலகிற் கண்ட கற்பனைகளெல்லாம் பாரதநாட்டு மக்களின் வாழ்வாக மலர்ந்து வளம்சுரக்கும் காலம் மிக அண்மையில் உளதென்றே யாமெல்லாம் எண்ணக்கூடியதாக இருக்கின்றது.

7 **காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்;**
**ராசபுத் தானத்து வீரர் தமக்கு**
**நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம்.**
**(பாரத)**

**பொருள்: காசிநகர்ப் புலவர் - காசி நகரின்கண் உள்ள பேரறிஞர் ஒருவர், பேசும் உரைதான் - நிகழ்த்துகின்ற விரிவுரையினை, காஞ்சியில் - காஞ்சி நகரின்கண் இருந்துகொண்டே, கேட்பதற்கு - கேட்டு மகிழ்தற்கு ஏற்ற, ஓர் கருவிசெய்வோம் - ஒரு கருவியை நாங்கள் (ஆராய்ந்து) கண்டு அமைத்துக்கொள்வோம், ராசபுத்தானத்து - ராசபுதனம் என்னும் இடத்தில் உள்ள, வீரர் தமக்கு - போர் வீரர்களுக்கு, நல்லியல் - நல்ல தன்மையோடு பொருந்திய, கன்னடத்து - கன்னட தேசத்தின் கண் உள்ள, தங்கம் - தங்கத்தை, அளிப்போம் - பரிசிலாகக் கொடுப்போம் என்பதாம்.**

**விளக்கம்:** இக்கவிதையில் இன்று எங்கும் காணப்படும் வானொலிக் கருவியைப்பற்றி அன்று சிந்தித்த பாரதியாரின் கவிதை உள்ளத்தைக் காண்கின்றோம். சுதந்திர தாகம்கொண்ட பாரதியார் கவிபாடும் புலவராக மட்டும் விளங்காமல், சிறந்த விஞ்ஞான அறிஞராகவும் விளங்குகின்றார் என்பதை இதனால் அறிகின்றோம். ஒரு சிறந்த நகரத்தில் இருந்து பேரறிஞர் ஒருவர் நிகழ்த்துகின்ற விரிவுரையை உலக மக்கள் எல்லோரும் கேட்டு அறிவைப் பெறவேண்டும் என்ற ஆராவேட்கை பாரதியார் உள்ளத்தில் அலைமோதி எழுகின்றதென்பதை உணர்கின்றோம். பாரதநாட்டு மக்கள் விஞ்ஞானப் புலமை மிக்கவர்களால் வியத்தகு புதுப்புதுக் கருவிகளைப் புனைந்து உலக மக்களின் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்பதே பாரதியாரின் நோக்கமாகும்.

**காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்;**

எனும் இக்கவிதைத் தொடர்களில் பாரதியாரின் எண்ணத் துடிப்பு அப்படியே கிடந்து நிழலாடுவதை உணர்க.



வட இந்தியாவில் உள்ள ராசபுத்தான வீரர்களைப் பாராட்டிக் கன்னட நாட்டு மக்கள் தங்கத்தைப் பரிசிலாக அளித்து ஊக்குவிக்கும் உயர்ந்த பண்பாட்டைப் பாரதியார் உரைத்து மகிழ்கின்றார், இதனால் பாரததேசத்தில் வாழும் மக்கள் எல்லோரும் சாதி சமய மொழி வேறுபாடுகளை மறந்து எவரிடத்தில் என்னென்ன நல்லியல்புகள் காணப்பட்டாலும் அவற்றை எல்லாம் தமக்குரியதாக எண்ணி மகிழவேண்டும் என்னும் உண்மையைப் பாரதியார் நிலைநாட்டுகின்றார் என்பதைத் தெளிகின்றோம்.

8 **பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்**
**பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்;**
**கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்**
**காசினி வணிகருக்கு அவை கொடுப்போம்.**
**(பாரத)**

**பொருள்: பட்டினில் - பட்டு நூலினால், ஆடையும்-பட்டு ஆடைகளையும், பஞ்சில் - பஞ்சு நூலினால், உடையும்- பருத்தி ஆடைகளையும், பண்ணி - செய்து, மலைகளென - மலைகளைப் போல விளங்கும்வண்ணம், வீதிகுவிப்போம் - பாரத நாட்டுத் தெருவீதிகளில் விற்கும்பொருட்டுக் குவித்து வைப்போம், கட்டித் திரவியங்கள் - (திரவியக் கட்டி) பணத்தைக் கட்டி, கொண்டுவருவார் - கொண்டு வருகின்றவர்களாகிய, காசினி வணிகருக்கு - உலகின் பல பாகங்களிலும் உள்ள வியாபாரிகளுக்கு, அவை - பாரதநாட்டு வீதிகளில் செய்து குவித்த பட்டுப் புடைவைகளையும் பருத்திப் புடைவைகளையும், கொடுப்போம் - (பணத்தைப் பெற்றுக்கொண்டு) விற்றுவிடுவோம் என்பதாம். (கட்டித்திரவியம் என்பதற்கு தங்கக் கட்டியாக உள்ள பொருளை எனவும் கருத்துக் கூறலாம்.)**

**விளக்கம்:** இக்கவிதையில் பாரதியாரின் ஆர்வம் பெருகிப் பாய்கின்றது. பட்டாடைகளையும் பருத்தி ஆடைகளையும் நெய்து நெய்து மலைமலையாய்க் குவித்து வைத்து அவற்றை வருகின்ற வெளிநாட்டு வணிகர்களிடம் கட்டித் திரவியத்தைப் பெற்றுக்கொண்டு விற்றுவிடுவோம் எனப் பாரதியார் விளம்புகின்ற

மொழிகளைக் கேட்கக் கேட்க எங்களுக்கும் கவிதைவெறி மூளுகின்றது. சுதந்திர பாரதத்தில் வாழ்கின்ற மக்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஆடைகளை வெளிநாட்டு வணிகர்கள் விலைகொடுத்துப் பெறுகின்ற காட்சியைக் காண ஆசைப்படுகின்ற பாரதியாரின் ஆவித்துடிப்பு இக்கவிதையில் கிடந்து அலைமோதுகின்றது.

**9 ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம் செய்வோம்;**
**ஆலைகள்வைப் போம்கல்விச் சாலைகள் வைப்போம்;**
**ஓயுதல்செய் யோம்தலை சாயுதல் செய்யோம்;**
**உண்மைகள்சொல் வோம்பல வண்மைகள் செய்வோம்**
**(பாரத)**

**பொருள்:** ஆயுதம் செய்வோம் - போர்ப்படை முதலான பல திறப்பட்ட கருவிகளை எல்லாம் நாங்களே செய்து கொள்வோம். நல்ல காகிதம் செய்வோம் - வெளிநாட்டாரும் போற்றத்தக்க சிறந்த காகிதங்களை (கடதாசிகளை) நாங்களே செய்துகொள்வோம், ஆலைகள் வைப்போம் - தொழிற்சாலைகள் பலவற்றை உண்டாக்குவோம், கல்விச்சாலைகள் வைப்போம் - (தொழில் அறிவைப் பெறுதற்கும் பலகலைகளைப் பயிலுதற்கும் ஏற்ற) பல கல்வி நிலையங்களை நம் நாட்டில் கட்டுவோம், ஓயுதல் செய்யோம் - முயற்சியின்றி ஒருநாளும் ஓய்ந்திருக்க மாட்டோம், தலைசாயுதல் செய்யோம் - அறத்தை மறந்த பகைவர்களுக்கு அஞ்சித் தலைவணங்கமாட்டோம், உண்மைகள் சொல்வோம் - (என்ன இன்னல்கள் வந்து நேர்ந்தாலும்) உண்மை பேசுதலில் நின்று தவறமாட்டோம், பல வண்மைகள் செய்வோம் - பல திறப்பட்ட ஈகைகளாகிய தானதருமங்களைச் செய்து நாட்டில் வறுமைப்பிணி தோன்றாமல் தடுப்போம் என்பதாம்.

**விளக்கம்:** இக்கவிதையில் தொழில் வளத்தையும் கல்வி வளத்தையும் பாரத தேசமெங்கும் பெருக்கிப் புதுவாழ்வு படைக்கும் பெருந்திட்டத்தை பாரதியார் வகுத்துரைக்கின்றார். இத்திட்டங்கள் எல்லாம் செயற்பட வேண்டுமானால் பாரதநாட்டு மக்கள்



ஓயாத முயற்சி உடையவர்களாகவும், பகைவர்க்கு அஞ்சித் தலைவணங்காத தன்மான உணர்ச்சி படைத்தவர்களாகவும் விளங்கவேண்டும் என்று பாரதியார் விரும்புகின்றார். அங்ஙனம் தாம் எண்ணிய விருப்பம் நிறைவேறவேண்டுமானால் உண்மையில் தவறாத உயர்ந்த வாழ்வும், இல்லாதவர்க்கு உதவிசெய்யும் ஈகைப்பண்பும் உள்ளவர்களாய் பாரத மக்கள் வாழவேண்டும் எனவும் பாரதியார் பாடுகின்றார்.

**ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்:**

என்னும் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை பாரதியாரின் முயற்சித் துடிப்பையும் தன்மானத் துடிப்பையும் அப்படியே எடுத்துக் காட்டுகின்றன.

**10 குடைகள்செய் வோம்உழு படைகள் செய்வோம்;**
**கோணிகள்செய்வோம் இரும் பாணிகள் செய்வோம்;**
**நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்;**
**ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்.**
**(பாரத)**

**பொருள்:** குடைகள் செய்வோம் - எமக்கு வேண்டிய குடைகளை நாங்களே செய்துகொள்வோம், உழுபடைகள் செய்வோம் - உழவுத் தொழிலுக்கு வேண்டிய கலப்பை முதலிய கருவிகளை (புதிய முறையில்) நாங்களே செய்துகொள்வோம், கோணிகள் செய்வோம் - சணல் புல் முதலியவற்றைக் கொண்டு பல வகையான பைகளை நாங்களே செய்துகொள்வோம், இரும்பாணிகள் செய்வோம் - இரும்பினால் சிறிய ஆணிகளையும் நாங்களே செய்துகொள்வோம், நடையும் - நிலத்திலே செல்வனவும், பறப்பும்-வானத்திலே பறக்கின்றனவும் ஆகிய, உணர் - ஆராய்ச்சி பொருந்தியனவும் ஆகிய, வண்டிகள்-பலவகைப்பட்டஊர்திகளை (வாகனங்களை), செய்வோம் - எங்கள் நாட்டில் நாங்களே செய்துகொள்வோம், ஞாலம் - உலகின்கண் உள்ள மக்கள், நடுங்க வரும் - நடுங்கி அஞ்சத்தக்க, கப்பல்கள் - (போர்க்) கப்பல்கள் பலவற்றை, செய்வோம் - ஆக்குவோம் (கட்டுவோம்) என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் வெளிநாட்டையே நம்பி இராமல் நமக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் நம் நாட்டில் நாங்களே செய்துகொள்ளல் வேண்டும் எனப் புகல்கின்ற பாரதியாரின் புலமை உள்ளத்தைக் காண்கின்றோம், குடைகளும், உழுபடைகளும் பெருந்தொகையாக மக்கள் வாழ்வில் பயன்படுகின்ற பொருள்களாகும். இவற்றைச் செய்யும் முறைகளை மிக எளிதில் கற்றுக்கொள்ளலாம் என்பதே பாரதியாரின் எண்ணமாகும். இங்ஙனமே கோணிகள், ஆணிகள் என்பவைகளும் பெருந்தொகையாக வேண்டப்படுவனவாகும். இவற்றை நாங்களே செய்துகொள்ளாமல் வெளிநாட்டை எதிர்பார்த்திருப்பது நாணத்தக்கது என்பதைப் பாரதியார் குறிப்பாக எடுத்துக் கூறுகின்றார். நிலத்திலும் வானத்திலும் செல்லத்தக்க ஊர்திகளையும், உலக மக்கள் நடுங்கத்தக்க பெரும் போர்க் கப்பல்களையும் பாரதநாட்டு மக்கள் ஆக்கி உலக மதிப்பையும் வரவேற்பையும் பெறவேண்டுமெனப் பாரதியார் ஆசைப்படுகின்றார்.

**ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்**

என்னும் கவிதைத் தொடரில் பாரதியாரின் ஆசை அலை மோதுகின்றது.

**11 மந்திரங்கற் போம்வினைத் தந்திரம் கற்போம்;**
**வானையளப் போம்கடல் மீனை யளப்போம்,**
**சந்திரமண் டலத்தியல் கண்டு தெளிவோம்;**
**சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்.**
**(பாரத)**

**பொருள்:** மந்திரம் - அரசியற் சூழ்ச்சிகளையும் தொழில் நுட்பங்களையும் ஆராய்ந்து, கற்போம் - கற்றுக்கொள்வோம், (அரசியற் சூழ்ச்சிகளும் தொழில் நுட்பங்களும் எளிதில் அறிந்துகொள்ள முடியாதனவாய் மிக நுட்பமாக ஆராய்ந்து அறியக்கூடிய முறையில் மறைந்து கிடத்தலால் அவற்றை மந்திரம் எனக் குறிப்பிட்டார்) வினைத் தந்திரம் கற்போம் - அமைச்சியல், தூதியல், படைவகுப்பு முதலிய செயல்களுக்குரிய நூல்களைக் கற்றுக்கொள்வோம், (தந்திரம் - நூல் தந்திர உத்தி என நன்னூலில் வருவதை நோக்குக) வானை அளப்போம் - ஆகாய வெளியின் பரப்பையும் அளந்து காண்போம், கடல்மீனை அளப்போம் - அலைகடலின்கண் உள்ள மீன்களின் வகைகளையும் அளந்து காண்போம், சந்திரமண்டலத்தின் இயல் - சந்திரமண்டலத்தின் தன்மையை, கண்டுதெளிவோம் - ஆராய்ந்து கண்டு அறிவோம், சந்தி - தெருக்கள் கூடும் சந்திகளையும், தெரு - தெருக்களையும், பெருக்கும் - அளவில் பெருகச்செய்து அமைக்கின்ற, சாத்திரம் கற்போம் - நகரமைப்புக் கலைகளையும் நன்கு ஆராய்ந்து கற்றுக் கொள்வோம் என்பதாம்.



**விளக்கம்:** இக்கவிதையில் அரசியல் ஆட்சி முறைகளையும், அறிவியற் புலமையையும், நகரமைப்பு வழிகளையும் கற்றுத் தெளிந்தவர்களாய்ச் சுதந்திர பாரத மக்கள் சிறந்து விளங்குகின்ற பெருநிலையைக் கண்டு மகிழ விரும்புகின்ற பாரதியாரின் கவிதை உள்ளத்தைக் காண்கின்றோம்.

பெற்ற சுதந்திரத்தை மற்ற நாட்டினர்களும் மதித்து வரவேற்கும் முறையிற் பேணவேண்டுமானால் அரசியல் நுட்பங்களையும். தொழில் நுட்பங்களையும் தெளியவேண்டும் என்றும், வானை அளந்து அங்குள்ள மழையின் நிலை காற்றின்நிலை முதலியவற்றை அறிந்துகொள்ளும் விஞ்ஞானப் புலமையில் மிக்கவர்களாய் விளங்கவேண்டும் என்றும், கடலின் நீரைக் கிழித்து அதன் ஆழப் பரப்பெல்லாம் சென்று சென்று ஆராய்ந்து அங்கு வாழும் மீன்களின் வகைகளையும், அவற்றின் வாழ்க்கை நெறிகளையும் கண்டு தெளிந்து அளக்கும் கலைப் புலமையும் படைத்தவர்களாய்ச் சிறக்கவேண்டும் என்றும் பாரதியார் தமது கவிதை உலகில் நின்று கற்பனை செய்கின்றார்.

சந்திரமண்டலத்தை ஆராய்ந்து அதன் தன்மைகளை எல்லாம் கண்டு உணரவேண்டும் என்றும் பாரதியார் கட்டளை இடுகின்றார். இன்று நிகழ்ந்துகொண்டிருக்கும் சந்திர மண்டல ஆராய்ச்சி பாரதியாரின் கவி உள்ளக் கற்பனையை அப்படியே

மெய்ப்பித்துவிட்டது. நகரின் சந்திகளையும் தெருக்களையும் புதிய முறையில் பெருப்பித்துப் போக்குவரவுத்துறையை செம்மைப்படுத்தவேண்டும் எனவும் பாரதியார் திட்டம் இடுகின்றார். இன்றைய சுதந்திர இந்தியாவில் இத்திட்டம் செயலாகி வருவதைக் காண்கின்றோம். எனவே பாரதியாரின் கவிதை உள்ளம் பலதிறப்பட்ட ஆக்க வழிகளையும் சிந்தித்து ஆட்சிமுறையை அமைக்கின்றதென்பதை அறிகின்றோம்..

**12 காவியம்செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்;**
**கலைவளர்ப் போம்கொல்ல ருலை வளர்ப்போம்;**
**ஓவியம்செய் வோம்நல்ல ஊசிகள் செய்வோம்;**
**உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்.**
**(பாரத)**

**பொருள்:** காவியம் செய்வோம் - பெருங்காப்பியங்கள் என்னும் புதிய இலக்கியங்களை இயற்றுவோம், நல்ல காடு வளர்ப்போம் - (காடுகள்இருந்து அழிந்துபோன இடங்களிலெல்லாம்) புதிய காடுகளை வளர்ப்போம், கலைவளர்ப்போம் - விஞ்ஞானம், வானசாத்திரம், கணிதம், சோதிடம் முதலிய கலைகளை வளர்த்துப் பயன்படைப்போம், கொல்லர் உலை வளர்ப்போம் - இரும்புத்தொழில் புரியும் கொல்லர்களுடைய இரும்பு உருக்கும் உலைகளை விஞ்ஞான முறையில் புதிய போர்க்கருவிகளை இயற்றத்தக்க பெருந்தொழில் நிலையமாக வளம்பெருகச் செய்வோம், ஓவியம் செய்வோம் - சித்திரங்களைப் புதியமுறையில் தீட்டுவோம், நல்ல ஊசிகள் செய்வோம் - சிறந்த ஊசிகளையும் செய்வோம், உலகத் தொழில் அனைத்தும் - உலகின் கண்ணே விஞ்ஞான அறிவினால் இன்று புதிது புதிதாகத் தோன்றி விளங்குகின்ற பலவேறு வகைப்பட்ட தொழில்களை எல்லாம், உவந்து செய்வோம் - மகிழ்ச்சியோடு புரிந்திடுவோம் என்பதாம்.

**விளக்கம்:** இக்கவிதையில் பாரதியாரின் புலமை உள்ளத்தின் அகலத்தைக் காண்கின்றோம். புதிய காவியங்க



ளாகிய இலக்கியங்களைப் புனைந்து மக்கள் உள்ளத்தில் புதிய உணர்ச்சிகளை ஊட்டவேண்டும் என உரைத்த பாதிரியார் அதனை அடுத்துக் காடுகளை வளர்க்கவேண்டும் எனவும் கட்டளை இடுகின்றார். காவியங்கள் மக்களின் உள்ளத்தை அறிவினால் வளம்படுத்துவதுபோலக் காடுகள், மழையினால் நாட்டின் வளத்தைப் பெருக்கும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும். பல்வேறு அறிவியற் கலைகளை வளர்க்க வேண்டுமென உரைத்த பாரதியார் அதனை அடுத்துக் கொல்லர் உலைக்களத்தையும் வளர்க்கவேண்டுமெனக் கூறுகின்றார். அறிவும் ஆண்மையும் மக்கள் உள்ளத்தில் நிலைபெற வேண்டுமென்பதை இதனால் வலியுறுத்துகின்றார். கலைகளை மட்டும் உணர்ந்தால் போதாது. கொல்லர் உலையில் புதிய படைகளை வடித்துப் போர்த்திறம் வாய்ந்தவர்களாகவும் விளங்கவேண்டும் எனப் பாரதியார் புகல்கின்றார். சித்திரக்கலைத் திறமையுடன் நல்ல ஊசிகளைச் செய்யும் தொழில்நுட்பத் திறமையும் சேர்ந்திருக்கவேண்டுமெனவும் சொல்கின்றார். இங்ஙனம் உலகத்தின்கண் விளங்கும் பல்வேறு தொழில்களிலும் வல்லமை வாய்ந்தவர்களாய்ப் பாரத நாட்டு மக்கள் வாழவேண்டும் என்பதே பாரதியாரின் கவிதை உள்ளத்தில் நிலைபெற்ற கருத்தாகும் என்பதைக் காண்கிறோம்.

**13 'சாதி இரண்டொழிய வேறில்லை' யென்றே**
**தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்;**
**நீதிநெறி யினின்று பிறர்க் குதவும்**
**நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர். (பாரத)**

பொருள்: *தமிழ் மகள் - தமிழ் அன்னையின் தவப்புதல்வியாகிய ஔவையார், சாதி இரண்டு ஒழிய - உலகிற் சாதிகள் இரண்டே அல்லாமல், வேறு இல்லை என்றே - உயர்வு தாழ்வு குறித்து வேறுபட்ட பலசாதிகள் இல்லையென்று, சொல்லிய சொல் - கூறிய நீதிமொழிகளை, அமிழ்தம் என்போம் - சாவா மருந்தாகிய தேவா அமிழ்தம்போலக் கொண்டு மகிழ்வோம், நீதி நெறியில் நின்று - அறத்தை மேற்கொண்டு ஒழுக்கமுடையவர்களாய் வாழ்ந்து, பிறர்க்குதவும் - துன்பப்படுகின்ற பிறர்க்கு*

உதவி செய்கின்ற, நேர்மையர் - நன்னிலையில் நிற்பவர், மேலவர் - மேலான உயர்ந்த சாதியினராவர், மற்றோர் - நீதி, நெறி, நேர்மை என்பன இல்லாதவராய் பிறர்க்கு உதவாமல் வாழ்கின்றவர்கள், கீழவர் - தாழ்ந்த சாதியினராவர் என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் பலவேறு சாதிகளாகப் பிரிந்து சிதறிக் கிடக்கும் பாரதமக்களை நோக்கிப் பாரதியார் கூறுகின்ற அறிவுரைகளைக் காண்கின்றோம். நீதிநெறியில் நீங்காமல் நேர்மையுடையவர்களாய் வாழ்ந்து பொருளைத் தேடி அல்லல் அடையும் பிறர்க்கு உதவும் நல்லவர்கள்தான் மேலான சாதி என்றும், நீதிநெறிகளில் தவறி நேர்மையற்றவர்களாய், பிறர்க்கு உதவி செய்யாமல் வாழ்கின்ற தீயவர்கள்தான் கீழான சாதியினர் என்றும் ஔவையார் கூறிய அறிவுரைகளை அப்படியே பாரதியார் வழிமொழிந்து எம்மை வாழ்விக்க முயல்கின்றார்.

**சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்**
**நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்**
**இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்**
**பட்டாங்கி லுள்ள படி.**

எனவரும் ஔவையாரின் அறிவுரைகளை இத்துடன் ஒப்பிட்டு நோக்குக.

— — —



# 2 நடிப்புச் சுதேசிகள்

பாரதநாட்டில் விடுதலைப்போர் நடந்த காலத்திலே நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று என்பன இல்லாமல் வெறும் போலி வாழ்க்கை வாழ்ந்த மக்கள் சிலரின் நடிப்பைக் கண்ட பாரதியார், அவர்களை இகழ்ந்து பாடிய கவிதைகளை **நடிப்புச் சுதேசிகள்** என்னும் இப்பகுதியில் காண்கின்றோம். பொது மக்களின் மதிப்பைப் பெறுதற்காகப் போலிவேடம் பூண்டு நாட்டுப்பற்றுக் கொண்டவர்போல் நடித்து வாழ்ந்த நயவஞ்சகச் சுதேசிகளை இகழ்ந்து பாடிய பாரதியாரின் கவிதைகளில் கிடந்து அலைமோதுகின்ற உணர்ச்சிக் குமுறலும், கோபக் கனலும், இகழ்ச்சிப் பெருக்கும் எமது உள்ளத்தையும் தீண்டி உணர்ச்சி ஊட்டுகின்றன. நாட்டை அடிமைப்படுத்தி ஆளும் பகைவர்கள் ஆற்றுகின்ற கொடுமைகளிலும் நாட்டுப்பற்று இல்லாமல் உள்ளவர்கள்போல் நடித்துப் பொதுமக்களை ஏமாற்றி வாழ்கின்ற நடிப்புச் சுதேசிகளின் கொடுமை நஞ்சினும் கொடியது என்பதே பாரதியாரின் நெஞ்சத் திரையில் நிழலாடுங் கருத்தாகும்.

பழித்தறிவுறுத்தல்

கிளிக் கண்ணிகள்

**நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி**
**வஞ்சனை சொல்வா ரடீ! கிளியே!**
**வாய்ச் சொல்லில் வீரரடீ!** 1

பொருள்: *அடீ கிளியே! - அடீ கிளிபோன்ற பெண்ணே, நெஞ்சில் - மனத்தின்கண், உரமும இன்றி - கலங்காத மனத் திண்மை என்னும் வல்லமை இல்லாமலும், நேர்மைத் திறமும் இன்றி - நீதியோடு பொருந்தி நிற்கும் நிலை திரியாத வாழ்வு இல்லாமலும், வஞ்சனை சொல்வார் - பொது மக்களை வஞ்சித்துத் தம் வழிக்கு எடுக்கக்கூடிய வஞ்சனையான மொழிகளைச் சொல்வார்கள், வாய்ச் சொல்லில் வீரர் - (இவர்களெல்லாம் செயலின்றி) வாயால் மட்டும் நாட்டுப்பற்று உள்ளவர்கள்போல் பேசுவதில்தான் வீரர்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக்கவிதையில் மனத்திண்மையும், நேர்மை மாருத வாழ்வும் இல்லாதவர்களாய் வாய்ச்சொல்லினுல் மட்டும் பொதுமக்களை ஏமாற்றி வஞ்சிக்கின்ற நடிப்புச் சுதேசிகளின் போலி வாழ்க்கையை வெறுத்துக் கூறுகின்ற பாரதியாரின் உள்ளத்தைக் காண்கின்ருேம்.

**சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்,**
**சொல்லிய வண்ணம் செயல்:**

என்பது திருக்குறள்.

**அடி கிளியே என்னும் சொற்களை ஏனைய கவிதைகளுக்கும் ஏற்றபெற்றி கூட்டிக்கொள்க.**

**கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி,**
**நாட்டத்திற் கொள்ளா ரடி!—கிளியே!**
**நாளில் மறப்பா ரடி!** 2

பொருள்: ***கூட்டத்தில் - உரிமை உணர்ச்சி கொண்டோர் கூடி விரிவுரை நிகழ்த்துகின்ற) மகாநாடுகளில், கூடிநின்று - தாமும் கலந்து நின்று, கூவிப் பிதற்றல் அன்றி - ஆரவாரித்து வெறுஞ் சொற்களைக் கூறிக் குளறுதல் அல்லாமல், நாட்டத்திற் கொள்ளார் - (உரிமைப்போர் நிகழ்ச்சிகளை தமது உள்ளத்தில் பதித்து) செயலாற்றச் சிந்தியார்கள். நாளில் மறப்பார் - கேட்ட அன்றே (அவ்வுயர்ந்த நோக்கங்களை) மறந்துவிடுவார்கள் என்பதாம்.***

**விளக்கம்:** இக்கவிதையில் சுதந்திரத் தொண்டர்கள் கூடுகின்ற மகாநாடுகளில் தாமும் கூடிநின்று நாட்டுப்பற்று உள்ளவர்கள்போல் நடித்து வெற்ருரவாரம் செய்தலன்றி அங்கு நிகழ்ந்த செயல் திட்டங்களில் எட்டுணையும் கருத்து இல்லாமல் கேட்ட அப்பொழுதே மறந்து மக்களை ஏமாற்றுகின்ற நடிப்புச் சுதேசிகளின் பண்பை நெஞ்சுக் கொதிப்புடன் இகழ்ந்துரைக்கின்ற பாரதியாரின் வெஞ்சின மொழிகளைக் கேட்கின்ருேம். இந்நடிப்புச் சுதேசிகளின் செயல், கூட்டத்தில் கோவிந்தா என்



பதுபோல நாட்டத்தில் கொள்ளாத வெறும் ஆரவாரம் என்பதே பாரதியாரின் கருத்தாகும்.

**சொந்த அரசும் புவிச்சு கங்களும் மாண்புகளும்**
**அந்தகர்க் குண்டாகுமோ!—கிளியே!**
**அலிகளுக் கின்ப முண்டோ?** 3

பொருள்: ***சொந்த அரசும் - தமக்கே உரிமையாக உடைய அரசாட்சியும் புவிச் சுகங்களும் - (அங்ஙனம் சொந்த அரசாட்சியைப் பெற்றிருப்பதால்) இவ்வுலகின்கண் அடைகின்ற இன்பங்களும், மாண்புகளும் - பெருமைகளும் அந்தகர்க்கு - சுதந்திரத்தின் சிறப்பை உணரும் அறிவில்லாத அகக் குருடர்களுக்கு, (அறிவாகிய கண் இல்லாதவர்க்கு என்பதாம்) உண்டாகுமோ - கிடைக்குமோ, (கிடையாது) அலிகளுக்கு - ஆண் தன்மையும், பெண் தன்மையும் இல்லாதவராய் விளங்கும் பேடிகளுக்கு, இன்பமுண்டோ - இன்ப உணர்ச்சி உண்டாகுமோ, (இல்லை என்பதாம்.)***

**விளக்கம்:** இக்கவிதையில் சுதந்திர வாழ்வின் பெருமையை அறியாமல் அகக்குருடராய் வாழ்கின்ற நடிப்புச் சுதேசிகள் தம் நாட்டைத் தாமே ஆளுகின்ற அரசுரிமையின் சிறப்பையும், அதனுல் நுகரும் இன்பங்களையும், பெறும் பெருமைகளையும் உணரமாட்டார்கள் என்பதை வற்புறுத்திக் கூறுகின்ற பாரதியாரின் புலமை உள்ளத்தைக் காண்கின்ருேம்.

ஆண் தன்மையும் பெண் தன்மையும் இல்லாத அலிப், பிறவிகள் வாழ்க்கை இன்பத்தை உணராமல் வாழ்வதுபோல நாட்டுப்பற்று அற்ற நடிப்புச் சுதேசிகளும் சொந்த அரசின் சிறப்புக்களையும் சுதந்திரமாக வாழ்ந்து உலகில் அடையும் இன்பங்களையும் பெருமைகளையும் அறியாத குருடர்களாய் வெறும் வாழ்வு வாழ்கின்ருர்கள் என்பதே பாரதியாரின் கருத்தாகும்.

**ஆண்தன்மையும் பெண்தன்மையும் இல்லாமல் இன்பத்தை இழந்து வாழும் அலிகள் உவமானம்.**

நாட்டுப்பற்று முதலியன இல்லாமல் சொந்த அரசினையும், புவிச் சுகங்களையும் மாண்புகளையும் இழந்து அகக் குருடர்களாய் வாழும் அந்தகர்கள் (நடிப்புச் சுதேசிகள்) — உவமேயம்.

இன்பம் இல்லாமையும், சுதந்திர உணர்ச்சி இல்லாமையும் அலிகளுக்கும் நடிப்புச் சுதேசிகளுக்கும் உள்ள பொதுத்தன்மைகளாகும்.

கண்கள் இரண்டி ருந்தும் காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்ட மடி!—கிளியே!
பேசிப் பயனென் னடி! 4

பொருள்: *கண்கள் இரண்டிருந்தும் - பார்க்கின்ற கண்கள் இரண்டும் (பழுதின்றி) ஒளி நிறைந்தனவாய் இருக்கவும், காணுந் திறமை அற்ற - (அக்கண்களால்) பொருள்களைக் கூர்ந்து நோக்கி அறியும் வல்லமைப்பாடில்லாத, பெண்களின் கூட்டம் - (எதற்கும் அஞ்சி, ஒடுங்கிச் சிந்தனை இல்லாமல் சிறையில் இருந்தவர்கள்போல் மூடக் கட்டுப்பாடுகளினால் அறிவைப் பறிகொடுத்து அடங்கியிருக்கின்ற) பெண்களின் கூட்டம்போலவே இந்நடிப்புச் சுதேசிகள் இருக்கின்றார்கள். பேசிப் பயனென்ன - (இத்தகைய நடிப்புச் சுதேசிகளைப்பற்றி) பேசுவதால் ஒரு பயனும் இல்லை என்பதாம்.*

**விளக்கம்:** இக்கவிதையில் நடிப்புச் சுதேசிகளின் அறிவின்மையை எண்ணி எண்ணி சிந்தை துடித்து வெம்புகின்ற பாரதியாரின் உள்ளக் குமுறலை உணர்கின்றோம். இரண்டு கண்களும் ஒளியோடு நிரம்பி இருக்கப்பெறும், அவற்றின உதவியால் பலதிறப்பட்ட பொருள்களையும் கூர்ந்து நோக்கி அறிந்துகொள்ளும் வல்லமை இல்லாதவர்களைப்போல் நடிப்புச் சுதேசிகளும் நாட்டுப் பற்றின் சிறப்பையும் சுதந்திர வாழ்வையும் தமது அறிவினால் ஆராய்ந்து தெளிந்துகொள்ள முடியாமல் செயலற்று இருக்கின்றார்கள் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.



இங்ஙனம் செயலற்று இருக்கும் நடிப்புச் சுதேசிகளுக்கு உவமானமாகக் கண்கள் இரண்டும் இருந்தும் காணுந் திறமையற்ற பெண்களின் கூட்டத்தைப் பாரதியார் கூறியிருக்கின்றார். புதுமைப்பெண்ணைப் படைத்துத்தந்த பாரதியார் பெண்கள் கூட்டத்தைக் கண்கள் இரண்டு இருந்தும் காணுந் திறமையற்றவர்களென இகழ்ந்துரைக்கும் செயல் சிந்தனைக்குரியதாகும். மூடக் கட்டுப்பாடுகளினால் அடக்கி ஒடுக்கித் தம்மை அடிமைப்படுத்தவும், அக்கட்டுப்பாடுகளை அறுத்தெறிந்து விடுதலைபெற முடியாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கின்ற ஆண்மையற்ற பெண்களின் கூட்டத்தைத்தான் **கண்கள் இரண்டு இருந்தும் காணுந் திறமையற்ற பெண்களின் கூட்ட**மெனப் பாரதியார் இகழ்ந்துரைக்கின்றார் என்பதை நாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

யந்திர சாலை யென்பர் எங்கள் துணிக ளென்பர்
மந்திரத் தாலே யெங்கும்—கிளியே!
மாங்கனி வீழ்வ துண்டோ? 5

பொருள்: *யந்திரசாலை என்பர் - (எங்கள் நாட்டில்) யந்திர சாலைகள் அமைக்கவேண்டும் என்றும் சொல்வார்கள், எங்கள் துணிகளென்பர் - (எங்கள் நாட்டில்) நாங்கள் நெய்த துணிகளையே நாங்கள் அணியவேண்டும் என்றும் சொல்வார்கள். (இங்ஙனம் மிக உணர்ச்சியுடன் பேசுவார்களே அல்லாமல் அந்நடிப்புச் சுதேசிகள் செயலில் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்க) மந்திரத்தாலே - (கல்லால் எறிந்தோ அல்லது பிற கருவிகளாலோ வீழ்த்துவது அல்லாமல்) மந்திரத்தை உச்சரிப்பதனாலே, எங்கும் - எவ்விடத்தில் என்றாலும், மாங்கனி வீழ்வதுண்டோ - மாம்பழம் விழுமா (விழாது என்பதாம்).*

**விளக்கம்:** இக்கவிதையில் நாட்டின் விடுதலைக்கு முயற்சி செய்யாமல் சொல்லளவில் எங்கள் நாட்டில் யந்திரசாலைகள் அமைப்போம், எங்களுக்கு வேண்டிய துணிகளை நாங்களே செய்துகொள்வோம் என்றெல்லாம் கூறிக்கூறிப் பொதுமக்களை ஏமாற்றித் திரிகின்ற நடிப்புச் சுதேசிகளின் நாணமற்ற பண்பை

இடித்துக் கூறுகின்ற பாரதியாரின் எழுச்சிக் குரலைக் கேட்கின்றோம்.

**முயற்சியின்றி மந்திரத்தாலே மாங்கனி வீழ்த்த எண்ணுதல்—உவமானம்.**

**செயலின்றி சொல் அளவில் சுதந்திரம் பெற எண்ணுகின்ற நடிப்புச் சுதேசிகளின் செயல்—உவமேயம்.**

**முயற்சி இன்மை — பொதுத்தன்மை ஆகும்.**

**உப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டுச் சேலை என்றும்**
**செப்பித் திரிவா ரடி!—கிளியே!**
**செய்வ தறியா ரடி!** 6

பொருள்: *உப்பென்றும் - நம் நாட்டிலேயே உப்பை விளைவிப்போம் என்றும், சீனி என்றும் - நம் நாட்டிலேயே சீனியைச் செய்வோம் என்றும், உள்நாட்டுச் சேலை என்றும் - எங்கள் உள்நாட்டுத் தறிகளில் நெய்யப்படுகின்ற ஆடைகளையே நாங்கள் அணியவேண்டும் என்றும், செப்பித் திரிவார் - சொல்லித்திரிவார் (மேடைகளில் பேசித்திரிவார்கள்), செய்வது அறியார் - (இங்ஙனம் சொல்லித் திரிதலன்றி சொன்னவற்றை) செயலில் ஆற்றும் வழிகளை அறியமாட்டார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக்கவிதையில் செயலில் ஒன்றும் செய்ய முடியாத நடிப்புச் சுதேசிகள், சொல் முழக்கம் செய்து திரிகின்ற போலித் தன்மையைக் கூறி இகழ்கின்ற பாரதியாரின் உணர்ச்சிப் பண்பை உணர்கின்றோம், இங்ஙனம் செயல் உள்ளமின்றி சொல் அளவில் சுதந்திர உணர்ச்சி உள்ளார் போற் பேசித்திரிகின்ற நடிப்புச் சுதேசிகளின் செயல் மிக வெறுத்தற்குரியது என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்**
**நாவினாற் சொல்வ தல்லால்—கிளியே!**
**நம்புத லற்றா ரடி!** 7



பொருள்: *தேவியர் மானம் என்றும் - நமது நாட்டுப் பெண்களின் மானத்தை நாங்களே காப்பாற்றவேண்டும் என்றும், தெய்வத்தின் பக்தி என்றும் - நம் நாட்டில் கடவுட் பக்தியை நிலைபெறச் செய்யவேண்டும் என்றும், நாவினால் சொல்வது அல்லால் - நாவினால் மிக அழகாகச் சொற்களைத் தொடுத்துப் பேசுவதே அல்லாமல், நம்புதல் அற்றார் - அங்ஙனம் பெண்களின் மானத்தைக் காப்பதிலும் தெய்வபக்தியிலும் நம்பிக்கை வைக்கமாட்டார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் பெண்களின் மானத்தைக் காப்பது மேலானது என்றும், தெய்வபக்தியைப் பெருக்குதல் வேண்டும் என்றும், மக்களின் மதிப்பைப் பெறுதற்காகச் சொல்லித்திரிகின்ற நடிப்புச் சுதேசிகள் அக்கொள்கைகளில் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதை எண்ணிய பாரதியார் மிக மிக வெறுப்புடன் இகழ்ந்துரைக்கின்ற உரைகளைக் கேட்கின்றோம். பெண்களின் மானத்தைக் காத்தலும், தெய்வ பக்தியை வளர்த்தலும் பாரதநாட்டுப் பண்பாட்டில் வாழையடி வாழை போல நிலைபெற்றுவரும் பெரும் கொள்கைகள் ஆகும். இக் கொள்கைகளில் பற்று இல்லாமல் சொல்லளவில் பற்று உள்ளவர்கள்போலக் காட்டிப் பொதுமக்களை ஏமாற்றுகின்ற நடிப்புச் சுதேசிகளை எண்ண எண்ண பாரதியாரின் உள்ளம் வேகின்றது,

**மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப்**
**பேதைகள் போலு யிரைக்—கிளியே!**
**பேணி யிருந்தா ரடி!** 8

பொருள்: *பிறர் - (பகைவர்களாகிய) அந்நியர்கள், மாதரைக் கற்பழித்து - நமது பாரதநாட்டுப் பெண்களின் கற்பை அழித்து, வன்கண்மை - கொடுமைகளை, செய்ய - புரியவும், பேதைகள்போல் - (அந்த அந்நியர்களை எதிர்த்து அழிக்க முடியாமல்) அறிவிலிகள்போல், உயிரைப் பேணி இருந்தார் - தங்கள் உயிரைப் பெரிதாக மதித்துப் பாதுகாத்துக்கொண்டு இருந்துவிட்டார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் மாதரின் மானத்தைக் காப்பாற்றுதல் எங்கள் கடமை என்று வாய்வீரம் காட்டிப் பேசிய நடிப்புச் சுதேசிகள், பாரதநாட்டுப் பெண்களைப் பிறநாட்டுப் பகைவர்கள் வந்து கற்பழித்துக் கொடுமை செய்வதைக் கண்டும் அவர்களை எதிர்த்து அம்மாதர்களைக் காப்பாற்றும் ஆண்மையற்றவராய்த் தங்கள் உயிரைப் பெரிதாக மதித்துப் பாதுகாத்திருந்த பேடிச்செயலை எண்ணி எண்ணிப் பாரதியார் இகழ்ந்துரைக்கின்ற செயலைக் காண்கின்றோம். பெண்களைப் பகைவர்கள் கற்பழிக்கும்பொழுதுகூட அப்பகைவர்களை எதிர்த்துப் பெண்களைக் காப்பாற்ற முயலாமல் அஞ்சித் திரிகின்றவர்கள் வாயினால் மட்டும் பெண்களின் மானத்தைக் காப்பாற்றுவோம் என்று மேடைகளில் பேசுவதால் ஒரு பலனும் இல்லை என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய**
**ஆவி பெரிதென் றெண்ணிக்! கிளியே!**
**அஞ்சிக் கிடந்தா ரடி!** 9

பொருள்: *பிறர்கள் - பகைமை கொண்ட அந்நியர்கள், தேவி கோயிலிற் சென்று - அன்னை பராசக்தி எழுந்தருளி இருக்கும் திருக்கோவிலின் உள்ளே சென்று, தீமை செய்ய - கொடுமைகள் புரியவும், ஆவி பெரிதென்று எண்ணி - (அங்ஙனம் தேவி கோவிலிற் புகுந்து கொடுமை செய்கின்ற பகைவர்களை எதிர்த்து அழிக்காமல்) தங்கள் உயிரைப் பெரிதென்று மதித்து, அஞ்சிக் கிடந்தார் - அச்சம் கொண்டவர்களாய் வீட்டினுள் ஒளித்துக் கிடந்தார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் தெய்வபக்தியை வளர்க்க வேண்டும் என்று சொல்லளவில் மாத்திரம் கூறித்திரிகின்ற நடிப்புச் சுதேசிகள், அன்னை பராசக்தி கோவிலுக்குள் அந்நியர் புகுந்து தீமைகள் புரிந்தபொழுது அவர்களை எதிர்த்து அழிக்காமல் அஞ்சித் தங்கள் ஆவியைக் காத்தற்காக ஒளித்துக் கிடந்தார்கள் என இடித்துரைத்து இகழ்கின்ற பாரதியாரின் உள்ளத்தைக் காண்கின்றோம். இந்நடிப்புச் சுதேசிகள் உண்மையான தெய்வ நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் தங்கள் ஆவியைப் பொருட்படுத்தாமல் அன்னை பராசக்தி கோவிலிற் புகுந்து தீமைசெய்கின்ற அந்நியர்களின் ஆவியைக் குடித்திருப்பார்கள் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.



**ஆவி பெரிதென் றெண்ணிக்—கிளியே!**
**அஞ்சிக் கிடந்தா ரடி!**

என்னும் கவிதைத்தொடர்களைப் படிக்கும்பொழுது எமது உள்ளத்திலும் அருவருப்போடு கலந்த நாணம் எழுகின்றது.

**அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறு மதியும்**
**உச்சத்திற் கொண்டா ரடி!—கிளியே!**
**ஊமைச் சனங்க ளடி!** 10

பொருள்: *அச்சமும் - எடுத்ததற்கெல்லாம் அச்சம்கொள்ளுதலையும். பேடிமையும் - பேடித்தன்மையையும், அடிமைச் சிறு மதியும் - அடிமைசெய்து வாழ்தலையே பெரிதாக எண்ணுகின்ற அற்ப புத்தியையும், உச்சத்திற் கொண்டார் - உயர்வான குணங்களெனப் போற்றிக் கைக்கொள்ளுகின்றார், ஊமைச் சனங்கள் - (இவர்கள் பயனில்லாத சொற்களையே பாராட்டிப் பேசுவதனால்) உண்மை அறிந்து உரையாத ஊமைச் சனங்களாகவே இருக்கின்றார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் அச்சம், பேடித்தனம், அடிமை செய்யும் அற்பபுத்தி என்பவற்றைத் தமக்குரிய உயர்ந்த குணங்களாகக்கொண்டு உண்மை அறிந்து உரையாமல் பயனில்லாதவற்றையே மிகவும் பாராட்டிப் பேசுகின்ற நடிப்புச் சுதேசிகளை, ஊமைச் சனங்களெனப் பழித்துரைக்கின்ற பாரதியாரின் உள்ளக்கொதிப்பை உணர்கின்றோம்.

பயனில்லாதவற்றையே பேசி ஆரவாரம் செய்கின்ற நடிப்புச் சுதேசிகளின் பேச்சினால் ஓர் பயனும் உண்டாகாது என்பதை உணர்த்த விரும்பிய பாரதியார் ஊமைச் சனங்களென அவர்களை இகழ்ந்துரைத்துள்ளார் என்க.

**பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்**
**மக்கட் பதடி எனல்**

என்பது திருக்குறள்.

**வள்ளுவர் பயனில் சொல் பாராட்டுகின்றவர்களை மக்கட் பதடிகள் என்றார். பாரதியார் ஊமைச்சனங்கள் என்றார்.** உள்ளீடில்லாத மொழிகளை உரைக்கின்றவர்கள் என்பதே கருத்தாகும்.

**அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறு மதியும்**
**உச்சத்திற் கொண்டா ரடீ!—கிளியே!**

எனும் இத்தொடர்களில் நடிப்புச் சுதேசிகளின் எளிய பண்புகளைப் பாரதியார் அப்படியே படம்பிடித்து எமக்குக் காட்டுகின்றார்.

**ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்று மில்லா**
**மாக்க ளுக்கோர் கணமும்—கிளியே!**
**வாழத் தகுதி யுண்டோ?** 11

பொருள்: ***ஊக்கமும் - செயலாற்றவேண்டும் எனத் தோன்றுகின்ற மன எழுச்சியும், உள் வலியும் - (கலங்காமை என்னும்) மனத் திடமும், உண்மையில் - உண்மை பேசுதலில், பற்றும் இல்லா - குலையாத உறுதிப்பாடும் இல்லாத, மாக்களுக்கு - (மக்கள் உருவத்தைக் கொண்டுள்ள) விலங்குகளுக்கு, ஓர் கணமும் - ஓர் கணப்பொழுதாயினும், வாழத் தகுதி உண்டோ - இந்நிலவுலகத்தில் மக்களாக இருந்து வாழுதற்கு ஏற்ற தகுதி உண்டோ? (இல்லை என்பதாம்).***

**விளக்கம்:** இக் கவிதையில் ஆறறிவு படைத்த மக்கள் உள்ளத்தில் என்றும் நிலையாக விளங்கவேண்டிய பண்புகளாகிய ஊக்கம், உள்வலி, உண்மை பேசுதல் என்பவைகள், ஒன்றுமில்லாத விலங்குகளாக எங்கும் நடிப்புச் சுதேசிகள், ஒருகண நேரமேனும் இந்த உலகில் வாழத் தகுதி அற்றதர்கள் எனப் பாரதியார் மூழும் நெருப்புப்போல் கொதித்து மொழி



கின்ற வெஞ்சின உரைகளைக் கேட்கின்றோம். பகுத்தறிவு இல்லாத மக்களை விலங்குகளாக மதித்துக் கூறுதல் ஆன்றோர் மரபாகும்

**மாவும் மாக்களும் ஐயறி வினவே**
**பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே**

என்பது தொல்காப்பியம்.

மாக்கள் எனப்படுவார் **மன உணர்ச்சி இல்லாதவர்** எனப் பேராசிரியர் கூறும் உரையையும் நோக்குக.

**ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்று மில்லா**
**மாக்கள்**

எனப் பாரதியார் நடிப்புச் சுதேசிகளின் பண்பை எடுத்துரைக்கும் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை, ஓர் கணப்பொழுதேனும் நடிப்புச் சுதேசிகள் இவ்வுலகில் வாழத் தகுதி அற்றவர்கள்தான் என்னும் எண்ணம் எமது உள்ளத்திலும் எழுகின்றது.

**வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம்**

என்பது திருக்குறள். புகழ் இல்லாத உடம்பைச் சுமந்த நிலம் பழிப்பில்லாத வளப்பத்தை உடைய விளைவுங் குன்றும் என்பது இக்குறளின் கருத்தாகும் **வள்ளுவர், புகழ் இல்லாதவர்கள் உலகில் வாழத் தகுதி அற்றவர்கள் எனக் கூறுகின்றார். பாரதியார், ஊக்கமும் உள்வலியும் உண்மையில் பற்றும் இல்லாதவர்கள் வாழத் தகுதி அற்றவர்கள் எனக் கூறுகின்றார்.**

**மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென் றெண்ணும்**
**ஈனர்க் குலகந் தனில்!—கிளியே!**
**இருக்க நிலைமை யுண்டோ!** 12

**பொருள்; மானம் சிறிதென் றெண்ணி - (உயிரினும் சிறந்த) மானத்தை மிகச்சிறியதொன்றென்றே மதித்து, வாழ்வு பெரிதென் றெண்ணும் - (உடம்போடு கூடி இவ்வுலகில்) வாழ்கின்ற வாழ்வை மாத்திரம் மிகப்பெரியதென்று மதிக்கும், ஈனர்க்கு - (அறிவில்லாத) இழிந்தோர்க்கு, உலகந் தனில் - இந்த நிலவுலகத்தில், இருக்க நிலைமை உண்டோ - வாழ்தற்குத் தகுதி உண்டோ என்பதாம்,**

**விளக்கம்:** இக் கவிதையில் உயிரினும் சிறந்த மானத்தைச் சிறிதாக மதித்தும், நிலை இல்லாத வாழ்வைப் பெரிதாக மதித்தும் மான உணர்ச்சி இன்றி வாழ்கின்ற நடிப்புச் சுதேசிகளை வைதுரைக்கின்ற பாரதியாரின் வெய்ய மொழிகளைக் கேட்கின்றோம். மானத்தை இழந்து அடிமைகளாய்ச் சுதந்திர உணர்ச்சி இன்றி உலகில் இருந்து வாழ்கின்ற மக்களினால் ஓர் பயனும் இல்லை என்பதையும், அவர்கள் சுதந்திரநாட்டில் இருக்கத் தகுதி இல்லாதவர்கள் என்பதையும் பாரதியார் மிக அழுத்தந் திருத்தமாக எமக்கு அறிவிக்கின்றார்.

**ஈனர்க் குலகந் தனில்!—இனியே!**
**இருக்க நிலைமை உண்டோ!**

என்னும் தொடர்களைப் படிக்கும்பொழுது மானம் அழிந்து வாழும் நடிப்புச் சுதேசிகளின்மேல் பாரதியார் கொண்டுள்ள வெறுப்புணர்ச்சி அம்படியே எமக்கும் புலனாகின்றது.

**மானம் அழிந்தபின், வாழாமை முன் இனிதே:**

எனவரும் இனியவை நாற்பதில் உள்ள செய்யுட் பகுதியையும் நோக்குக.

**சிந்தையிற்கள் விரும்பிச் சிவசிவ வென்பது போல்,**
**வத்தே மாதர மென்பார்!—இனியே!**
**மனதி லதனைக் கொள்ளார். 13**

**பொருள்: சிந்தையில் - மனத்திலே, கள் விரும்பி - அறிஞர்களால் வெறுக்கப்படும் இழிவான கள்ளை உண்ணுதலில் மிக விருப்பமுடையவர்களாய் இருந்துகொண்டே, சிவசிவ என்பது போல் - வெளியில் தன்னை ஓர் சிவபக்தன் என்று பிறர் எண்ணும்படி சிவசிவ என இறைவன் திருப்பெயரைச் சொல்லுகின்றவர்களைப்போல், வந்தேமாதரம் என்பார் – தாய்க்கு வணக்கம் என்னும் பொருள்படும் வந்தேமாதரம் என்னும் சொல்லை ஓர் பற்றுமின்றி நாப்பழக்கத்தினால் சொல்வார்கள், அதனை - வந்தேமாதரம் என்னும் சொல் குறிக்கும் பொருளை, மனதில் கொள்ளார் - எட்டுணை ஏனும் தமது மனத்தின்கண் சிந்தியார்கள் என்பதாம்.**



**விளக்கம்:** இக் கவிதையில் கள் உண்ணும் எண்ணத்தையே மனதில் உடையவராய் இருந்துகொண்டு சிவசிவ என்று இறைவனின் திருநாமத்தைச் சொல்லிப் பொதுமக்களை ஏமாற்றித் திரிகின்ற போலித் துறவிகளைப்போல. நாட்டிற் பற்று இல்லாத நடிப்புச் சுதேசிகளும் வந்தேமாதரம் என்னும் தேசத் தொண்டர்களின் மூலமந்திரத்தை வாயளவிற்கூறி மனத்தில் அதனைப்பற்றி எண்ணாமற் பொதுமக்களை ஏமாற்றுகின்றார்கள் எனச்சொல்லி உயிர் துடிக்கின்ற பாரதியாரின் உள்ளக் குமுறலைக் காண்கிறோம்.

**வந்தேமாதரம்** என்பது பாரதநாட்டின் விடுதலைப் போர் வீரர்களும் தியாகிகளும் மிக மேலாக மதித்துக் கூறுகின்ற **மூலமந்திரமாகும்.** இத்துணைச் சிறந்த வந்தேமாதரம் என்னும் சொல்லை நடிப்புச் சுதேசிகள் வாயளவில் சொல்லித் தாங்களும் தேசத்தொண்டர்கள்போல வெளிக்குக் காட்டிக்கொள்கின்றார்களே என்பதை எண்ண எண்ணப் பாரதியாரின் உள்ளம் எரிகின்றது.

**வந்தே மாதர மென்பார்!**
**மனதி லதனைக் கொள்ளார்!**

எனும் தொடர்களைப் படிக்கும்பொழுது எமது உள்ளத்திலும் நடிப்புச் சுதேசிகளின் போலி வாழ்க்கையைப்பற்றிய சிந்தனை எழுகின்றது.

**பழமைபழமை யென்று பாவனை பேச லன்றிப்**
**பழமை இருந்த நிலை!—கிளியே!**
**பாமர ரேதறி வார்!** 14

பொருள்: *பழமை பழமை யென்று - எங்கள் நாட்டின் பழமைப் பண்பாட்டைப் பேணிவளர்க்கவேண்டும் என்று சொல்லி, பாவனை பேசலன்றி - உண்மைத் தேசத்தொண்டர்கள் சொல்வதைப் பார்த்து (கண்டபாவனையில் கொண்டைமுடித்தல் என்பதுபோலத்) தாமும் கூறுதலன்றி, பாமரர் - அந்த நடிப்புச் சுதேசிகள் ஆகிய அறிவிலிகள், பழமை இருந்த நிலை - எங்கள் பாரதநாடு பழங்காலத்தில் பெற்றிருந்த சிறப்பு நிலைகளை எல்லாம், ஏதறிவார் - எவ்வாறு அறிவார்கள் (அறியமாட்டார்கள் என்பதாம்).*

**விளக்கம்:** இக்கவிதையில் உண்மைத் தேசத் தொண்டர்கள் கூறுவதைப்போல நடிப்புச் சுதேசிகளும் பாரத நாட்டின் பழம் பழம்பெருமையை நாம் பாதுகாக்க வேண்டுமெனப் பாவனைசெய்து கூறுவதே அல்லாமற் சுதந்திரத்தின் பெருமையை உணராத அந்த அறிவிலிகளால் எங்ஙனம் பாரதநாட்டின் பழம்பெருமைகளை அறிய முடியுமெனப் பாரதியார் கூறி இகழ்கின்றார் என்பதை உணர்கின்றோம்.

நடிப்புச் சுதேசிகளும் தேச விடுதலைக்கு உழைக்கும் உண்மைத் தொண்டர்கள் உரைப்பதுபோலவே தாமும் உரைத்துப் பொதுமக்களை ஏமாற்றிப் புகழ்ஈட்ட முயல்கின்ற செயலைப் பாரதியாரால் பொறுக்க முடியவில்லை,

**நாட்டில்அவ மதிப்பும் நாணின் றிஇழி செல்வந்**
**தேட்டில் விருப்புங் கொண்டே!—கிளியே!**
**சிறுமை யடைவா ரடி!** 15

பொருள்: *நாட்டில் - நாட்டின்கண் உள்ள மக்களால், அவமதிப்பும் - தமக்கு மரியாதைக் குறைவு ஏற்படுதலையும் சிந்தியாமல், (நாட்டின் விடுதலைக்காக உழைக்கின்றோம் என உரைத்துக் கொண்டு) நாணின்றி - (தவறான வழிகளில் செல்கின்றோமே என்று) வெட்கமில்லாமல் (நாணமில்லாமல்),*



*இழிசெல்வத் தேட்டில் - நீதிக்கு மாறுபட்ட இழிவான வழிகளில் செல்வத்தைத் தேடுவதில், விருப்புங் கொண்டே - மிக விருப்ப முடையவர்களாய், சிறுமை அடைவார் - இகழ்ச்சி அடைவார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக்கவிதையில் நடிப்புச் சுதேசிகள் நாடு விடுதலை அடையும்வண்ணம் உழைக்க வேண்டுமெனக் கூறிக்கொண்டே பொதுமக்கள் தம்மைக் குறைவாக மதிக்கும் வண்ணம் நாணமில்லாதவர்களாய், இழிதொழில்களைச் செய்து செல்வத்தைத் தேடும்விருப்பத்தை உடையவர்களாய் கீழ்மை அடைவார்களெனக் கூறி வருந்துகின்ற பாரதியாரின் மனநிலையை உணர்கின்றோம்,

தேசத்தொண்டர் என்னும் போர்வையில் புதுந்துகொண்ட நடிப்புச் சுதேசிகள், தம்மை உண்மைத் தொண்டர்களென எண்ணிய பொதுமக்கள் அவமதிப்பார்கள் என்பதைக்கூட நினைக்காமல் தீய வழிகளால் செல்வத்தைத் தேட முயன்று சிறுமையடைகின்ற செயலை எண்ணி எண்ணிப் பாரதியார் மிக அருவருப்படைகின்றார்.

**இழி செல்வத் தேட்டில் விருப்புங் கொண்டே**
**கிளியே சிறுமை யடைவாரடி!**

எனும் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை பாரதியாரின் அருவருப்பை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது.

**சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்**
**சிந்தை இரங்கா ரடி!—கிளியே!**
**செம்மை மறந்தா ரடி!** 16

பொருள்: *சொந்தச் சகோதரர்கள் - தம்மோடு உடன்பிறந்த உரிமையை உடைய உடன்பிறப்பாளர்கள், துன்பத்தில் - பகைவர்கள் புரிகின்ற இன்னல்களினால் அல்லது வறுமை வருத்தம் முதலியவற்றால், சாதல் கண்டும் - இறந்துபோதலைப் பார்த்துக் கொண்டிருந்தும், சிந்தை இரங்கார் - தமது மனத்தில் சிறிதளவேனும் இரக்கம் கொள்ளமாட்டார்கள், செம்மை மறந்தார் - (இங்ஙனம் இரக்கமில்லாத இவர்கள் அல்லற்பட்ட*

***சுற்றத்தாரை ஆதரிக்க வேண்டும் என்னும்) நீதியையும் மறந்து விட்டார்கள் என்பதாம்.***

**விளக்கம்:** இக்கவிதையில் தம் உடன்பிறந்த சகோதரர்கள் துன்பத்தினால் இறந்துபோதலை நேரிற் கண்டும் தம்மால் இயன்ற உதவிபுரிந்து அவர்களின் துன்பத்தை ஓரளவாவது நீக்க எண்ணாமல் மனஇரக்கமின்றி நீதியையும் மறந்து வாழ்கின்ற நடிப்புச் சுதேசிகளின் எளிய பண்பை எண்ணி எண்ணிக் கவலை அடைகின்ற பாரதியாரின் மன நிலையை உணர்கின்றோம்.

இதனால் நடிப்புச் சுதேசிகள் நாட்டு மக்களை ஏமாற்றுவதுடன் அமையாது தம்முடன் பிறந்த சகோதரர்கள் வறுமை முதலிய இன்னல்களால் இறந்து போதலைக் கண்டும், இரங்கி உதவாத வன்கண்ணராய் வாழ்கின்றார்கள் என்பதையும் பாரதியார் நினைவூட்டுகின்றார்.

**சொந்தச் சகோதரர்கள்**
**துன்பத்திற் சாதல் கண்டும்**
**சிந்தை இரங்காரடீ!**

எனும் தொடர்களைப் படிக்கும்பொழுது நடிப்புச் சுதேசிகளின் இரக்கமில்லாத உள்ளம் அப்படியே காட்சி அளிக்கின்றது.

**பஞ்சத்தும் நோய்களிலும் பாரதர் புழுக்கள் போல்**
**துஞ்சத்தம் கண்ணாற் கண்டும்! கிளியே!**
**சோம்பிக் கிடப்பா ரடீ!** 17

பொருள்: ***பாரதர் - பாரத நாட்டு மக்கள், பஞ்சத்தும் - வறுமை மிகுதியினாலும், நோய்களிலும் - கொடும் நோய்களினாலும், புழுக்கள்போல் துஞ்ச - எலும்பில்லாத புழுக்கள் துடிதுடித்து இறப்பதுபோல இறந்துபடுதலை, தம் கண்ணாற் கண்டும் - தமது கண்களால் நேரே பார்த்துக்கொண்டிருந்தும், சோம்பிக் கிடப்பார் - வறுமைத் துன்பத்தையும் கொடிய நோய்களையும் நீக்கித் தம் நாட்டு மக்களைப் பாதுகாக்க முடியாமல் சோம்பல் உடையவர்களாய் உறங்கிக் கிடப்பார்கள் என்பதாம்.***

**விளக்கம்:** இக் கவிதையில் நடிப்புச் சுதேசிகள் உண்மை நாட்டுப்பற்று உடையவர்கள்போல நடித்துப் பேசுவார்களே அல்லாமல் பஞ்சத்தினாலும், நோய்களினாலும் துடிதுடித்துப் பாரத நாட்டு மக்கள் இறப்பதைக் கண்டும் தம்மாலியன்ற உதவி செய்து அவர்களைப் பாதுகாக்க முயலாமல் சோம்பிக் கிடப்பார்கள் எனச் சொல்லிச் சொல்லித் துன்பம் அடைகின்ற பாரதியாரின் உள்ளத்துடிப்பை உணர்கின்றோம்.



**புழுக்கள் போல் துஞ்சத் தம்**
**கண்ணால் கண்டும் சோம்பிக் கிடப்பாரடீ**

எனும் தொடர்களைப் படிக்கும்பொழுது பாரதமக்கள் இறந்துபட்ட பரிதாப நிலைமை எமது உள்ளத்தையும் உருக்குகின்றது.

**தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார்**
**வாயைத் திறந்து சும்மா!—கிளியே!**
**வந்தே மாதர மென்பார்!** 18

பொருள்: ***தாயைக் கொல்லும் - தமது தாயைத் தம் கண்முன்னேயே துடிக்கத் துடிக்கக் கொல்லுகின்ற கொடிய, பஞ்சத்தை - வறுமைப்பிணியை, தடுக்க - போக்குதற்கு, முயற்சியுறார் - சிறிதேனும் முயற்சி செய்யமாட்டாதவர்களாகிய அந் நடிப்புச் சுதேசிகள், சும்மா - ஓர் கருத்தும் இன்றி, வாயைத் திறந்து - தமது வாய்களை அகல விரித்து, வந்தேமாதரம் என்பார் - வந்தே மாதரம் என்னும் தாரக மந்திரத்தைச் சொல்வார்கள் என்பதாம், (தாயைக் கொல்லும் பஞ்சத்தை என்பதற்கு பெற்ற தாயையும் கொன்று தின்னக்கூடியதான கொடும் பஞ்சத்தை எனவும் பொருள் கூறலாம்).***

**விளக்கம்:** இக் கவிதையில் தாயைக் கொல்லும் மிகக் கொடும் பஞ்சம் தம் தாய்நாட்டில் நிலவுவதைக் கண்டும் அதனைப் போக்க முயலாமல் வாளா வந்தேமாதரம் எனக் கூறித் திரிகின்ற நடிப்புச் சுதேசிகளின் உணர்ச்சி அற்ற வாழ்வை எண்ணி எண்ணி வருந்துகின்ற பாரதியாரின் மனநிலையை உணர்கின்றோம்,

நடிப்புச் சுதேசிகள் நாட்டில் உள்ள வறுமை முதலியவற்றைப் போக்க முயலாமல் தாங்களும் உண்மைத் தேசத் தொண்டர்கள்போல நடித்து மக்களை ஏமாற்றிப் புகழடைய முயல்கின்ற போலிச்செயலைப் போக்கடிககவேண்டும் என்ற பெருவேட்கை பாரதியாரின் உள்ளத்தில் நின்று அலைமோதுவதை அறிகின்றோம்.

———

## 3. சுதந்திரப் பெருமை

சுதந்திரப் பெருமை என்பது அடிமை வாழ்வை அறுத்துச் சுதந்திர வாழ்வைப் பெறுதற்காகப் பாரதநாட்டில் தேசத் தொண்டர்கள் போர்தொடுத்த காலத்தில் சுதந்திரத்தின் சிறப்புக்களைப் போற்றிப் பாரதியார் பாடிய கவிதைத் தொகுதியாகும். இக்கவிதைகளில் சுதந்திர தாகம் கொண்ட பாரதியாரின் உணர்ச்சிக் குமுறலும், சுதந்திர வேட்கையும் பெருக்கெடுத்துப் பாய்கின்றன. அடிமைத் தளையை அறுத்து எங்கள் அன்னை நாடாகிய பாரததேசத்தை விடுதலை செய்வோமென வீறு கொண்டெழுந்த பாரதநாட்டு விடுதலை வீரர்களின் உயிர்த் துடிப்பும், உரிமை உணர்ச்சி வேகமும் இக்கவிதைகளில் நின்று நிழலாடுகின்றன.

"தில்லை வெளியிலே கலந்துவிட்டாலவர் திருப்பியும் வருவாரோ?"
என்னும் வர்ணமெட்டு

1 வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவா ரோ? (வீர)

பொருள்: **வீர சுதந்திரம் - (பிறருக்கு அடிமைப்பட்டு அடங்கி வாழாத) வீர சுதந்திரம் என்னும் தன்னாட்சி உரிமையை, வேண்டி நின்றார் - பெறுதற்கு விரும்புகின்றவர்களாகிய உண்மைத் தேசத் தொண்டர்கள், பின்னர் - அதனை நீங்கி, வேறொன்று - அதற்கு மாறுபட்ட அடிமை வாழ்வை, கொள்வாரோ - விருப்பி ஏற்றுக் கொள்வார்களோ கொள்ளமாட்டார்கள், என்றும் - எப்பொழுதும், ஆரமுது - நிறைந்த சுவையை உடைய தேவாமிர்தத்தை. உண்ணுதற்கு - (முயன்று பெற்று) அருந்துவதற்கு, ஆசைகொண்டார் - விருப்பம் கொண்டவர்கள், கள்ளில் - (அறிவை மயக்கும்) இழிவான கள்ளைப் பெறுதற்காக, அறிவைச் செலுத்துவாரோ - தமது அறிவினைச் செலுத்த முயற்சி செய்வார்களோ (செய்ய மாட்டார்கள் என்பதாம்)**



**விளக்கம்:** இக் கவிதையில் வீரசுதந்திர வாழ்க்கையை விரும்பி விடுதலைப்போர் புரிகின்ற தேசத்தொண்டர்கள் ஆளும் கட்சியாரால் அளிக்கப்படுகின்ற அடிமைச் சின்னங்களாகிய இழிந்த பதவி, பட்டம் முதலியவற்றை விரும்பமாட்டார்கள் எனக் கூறுகின்ற பாரதியாரின் விடுதலைப்போர் முழக்கத்தைக் கேட்கின்றோம்.

**வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?**

எனப் பாரதியார் உரிமைக்குரல் எழுப்பி உலக மக்களைக் கேட்கின்றார். வீரசுதந்திரம் பெறவேண்டும் என்னும் விடுதலை வெற்றி கொண்ட உண்மைத் தொண்டர்கள் பட்டம் பதவி என்பவற்றை எட்டுணையும் மதியார்கள் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

வீரசுதந்திரத்தை ஆரமுதென்றும், அடிமை வாழ்வைக் கள் என்றும் பாரதியார் இழித்துரைக்கின்றார். அரிய ஆரமுதத்தைப் பெற்று உண்ணுதற்கு முயல்கின்றவர்கள் இழிந்த கள்ளைப் பெற்று உண்பதற்கு முயலமாட்டார்களெனப் பாரதியார் அறுதியிட்டு உரைக்கின்றார்.

**ஆரமுதை உண்ணுதற்கு ஆசைகொண்டார் — உவமானம். வீரசுதந்திரம் வேண்டி நின்றார்—உவமேயம். இடைவிடாத முயற்சியும், ஆராவேட்கையும் பொதுத்தன்மைகளாகும்.**

**கள்—உவமானம்- அடிமையாக இருந்துபெறும் பட்டம் பதவிகள்—உவமேயம். இழிவும், பிறரால் இகழப்படுதலும் – பொதுத்தன்மைகளாம்.**

2 புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பா ரோ? (வீர)

**பொருள்:** புகழும்-(செயற்கரும் செயல்களை ஆற்றி அவற்றினுல் அடைகின்ற) உண்மைப் புகழும், நல் அறமுமே - தூய தரும நெறியுமாகிய இரண்டுமே, அன்றி - அல்லாமல், எல்லாம் - மற்றைய பட்டம் பதவி முதலியனவெல்லாம், வெறும் பொய்யென்று - நிலையில்லாமல் அழிந்துபோகும் பொய்மை உடையவைகள் என்று, கண்டாரேல் - ஆராய்ந்து தெளிவார்களேயானல், அவர் - அங்ஙனம் புகழும் அறமுமே மெய்யானவைகளெனத் தெளிந்த அத்தேசத் தொண்டர்கள், இகழுறும் - பிறரால் இகழும் தன்மை பொருந்தியதான, ஈனத் தொண்டியற்றியும் - அந்நியர்க்கு அடிமை செய்தல் ஆகிய இழிதொழிலைப் புரிந்தும், வாழ்வதற்கு - உயிர் வாழ்வதற்கு, இச்சையுற்று இருப்பாரோ - ஆசைப்படுவார்களா இல்லை என்பதாம்.

**விளக்கம்:** இக்கவிதையில் புகழும் நல்லறமும்தான் நிலையாக நிற்கக்கூடியவைகள் என்பதை உணர்ந்த சுதந்திர வீரர்கள், பிறர் இகழ்ந்து கூறத்தக்கதாக அந்நியரின்கீழ் அடங்கியிருந்து எளிய தொழில்களைப் புரிந்து வாழ விரும்பமாட்டார்கள் எனக்கூறிப் பெருமை அடைகின்ற பாரதியாரின் பெருமித உள்ளத்தைக் காண்கின்றோம்.

**இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு**
**இச்சையுற் றிருப்பாரோ?**

எனச் சுதந்திரதாகம் கொண்ட மக்களைப் பாரதியார் கேட்கின்ருர். சுதந்திரத்தின் சிறப்பை உணர்ந்த மக்கள் ஒருபோதும் அந்நியரின்கீழ் அடிமையாய் இருந்து அவர்களிடம் பெற்று வாழும் பட்டம் பதவிகளை விரும்பமாட்டார்கள் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**தொண்டு செய்யும் அடிமை உனக்குச்**
**சுதந்திர நினைவோடா**

எனப் பாரதியார் பிறிதோர் இடத்தில் கூறி இருப்பதையும் நோக்குக.



3 **பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்**
**பெற்றியை அறிந்தாரேல்—மானம்**
**துறந்தறம் மறந்தும்பின் உயிர்கொண்டு வாழ்வது**
**சுகமென்று மதிப்பாரோ? (வீர)**

**பொருள்:** பிறந்தவர் யாவரும் - (இவ்வுலகில்) பிறந்தவர்கள் எல்லோரும், இறப்பது உறுதி எனும் - இறந்துபடுதல் தவருது நிகழ்வது ஒன்ருகும் என்ற, பெற்றியை - உண்மையான தன்மையை, அறிந்தாரேல் – சுதந்திரதாகம் கொண்ட தொண்டர்கள் அராய்ந்து அறிவார்களேயானல். மானம் துறந்து - (உயிரினும் சிறந்த) மானத்தை விடுத்து, அறம் மறந்தும் - தருமத்தைக் கைவிட்டும், பின் - அங்ஙனம் தருமத்தையும் மானத்தையும் கைவிட்ட பின்பும், உயிர் கொண்டு வாழ்வது - உயிரை மட்டும் பாதுகாத்து வாழ்ந்திருப்பதை, சுகமென்று மதிப்பாரோ – இன்பம் என்று கருதுவார்களோ கருதமாட்டார்கள் என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் பிறந்தவர் யாவரும் இறப்பது உண்மையென்று தெளிந்த சுதந்திரத் தொண்டர்கள் மானத்தையும் அறத்தையும் கைவிட்டு அடிமைகளாய் உயிர் வாழ்ந்திருப்பதை இன்பம் என்று ஒருபோதும் எண்ணமாட்டார்கள் என மிக ஆர்வமுடன் கூறுகின்ற பாரதியாரின் மன எழுச்சியைக் காணகின்ருேம்.

**பிறந்தவர் யாவரும் இறப்பதுறுதி யெனும்**
**பெற்றியை அறிந்தாரேல்**

எனவரும் கவிதைத் தொடர்களில் நிலையாமை உணர்ச்சி நிழலாடுகின்றது.

**பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்**
**புதுவதன்று தொன்றியல் நெறியே**

எனவரும் மணிமேகலைச் செய்யுள் பகுதியையும் நோக்குக.

**மானம் துறந்து அறம்மறந்தும் பின்**
**உயிர்கொண்டு வாழ்வது**
**சுகமென்று மதிப்பாரோ.**

எனப் பாரதியார் கேட்கின்ற குரலிலே அவர் உள்ளத்தெழுந்த மானஉணர்ச்சியின் பெருக்கு, அப்படியே கிடந்து அலைமோதுகின்றது.

**இளிவரின், வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு.**

என்பது திருக்குறள்.

மானம் என்பது **தன்னிலையில் தாழாமையும், தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்** எனப் பரிமேலழகர் கூறும் கருத்தையும் நோக்குக.

**4 மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்**
**வாய்மையை உணர்ந்தாரேல்—அவர்**
**ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற**
**உடன்படு மாறுள தோ?** (வீர)

**பொருள்:** *மானுட ஜன்மம் - மக்கட்பிறவி, பெறுவதற்கு அரிதெனும் - அடைதற்கு அரியதொன்று என்ற, வாய்மையை உணர்ந்தாரேல் - உண்மையை உணர்வார்களானால், அவர் - அங்ஙனம் உண்மையை அறிந்த சுதந்திரத் தொண்டர்கள், ஊனுடல் தீயினும் - (சுதந்திரப் போரில் ஈடுபடுவதினால்) ஊனை உடைய (தமது) உடம்பு அழியுமாயினும், (ஊனோடு கூடிய உடம்பை நெருப்பில் இட்டு வேகவைத்தாலும் எனவும் பொருள் கொள்ளலாம்). உண்மை நிலைதவற - தாம் உண்மையென நம்பி மேற்கொண்ட சுதந்திர வாழ்வில் நின்றும் நீங்கி அடிமை வாழ்வை ஏற்க, உடன்படுமாறுளதோ - உடன்படுகின்ற தன்மை உண்டாகுமோ உண்டாகாது என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் மக்கள் பிறப்பின் மேம்பாட்டைய உணர்ந்த சுதந்திரத் தொண்டர்கள் தாம் சுதந்திரப் போரில் ஈடுபடுவதனால் இறக்கும் நிலைமை ஏற்பட்டாலும் அஞ்சி அடிமையாக இருப்பதற்கு உடன்படமாட்டார்கள் என மிக உணர்ச்சிப் பெருக்குடன் பாரதியார் உரைக்கின்றார்.



**ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற**
**உடன்படு மாறுளதோ?**

எனவரும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது உண்மைச் சுதந்திரத் தொண்டர்கள் தங்கள் ஊன்பொதிந்த உடல் அழிய நேர்ந்தாலும் அடிமைகளாக வாழ உடன்படமாட்டார்கள் என்னும் உணர்ச்சி எமது உள்ளத்திலும் எழுந்து இன்பமூட்டுகின்றது.

**சதையைத் துண்டு துண்டாக்கினும் உன்னெண்ணம்**
**சாயுமோ?—ஜீவன்—ஓயுமோ?**

எனப் பாரதியார் கூறும் இச்செய்யுட் பகுதியையும் நோக்குக.

**5 விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்**
**மின்மினி கொள்வாரோ?**
**கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்**
**கைகட்டிப் பிழைப்பாரோ?** (வீர)

**பொருள்:** *விண்ணிலிரவிதனை - வானவீதியில் உலாவித் தன் ஒளிக்கதிர்களினால் உலக மக்களைப் புரக்கின்ற சூரியனை, விற்றுவிட்டு - விலைக்குக் கொடுத்துவிட்டு, எவரும் - எத்தகைய அறிவிலிகள் என்றாலும், போய் - தேடிச்சென்று, மின்மினி கொள்வாரோ - (சூரியனை விற்ற பணத்தைக்கொண்டு அச்சூரியனுக்குப் பதிலாக அற்ப ஒளியை உடைய) மின்மினிப் பூச்சியை விலைக்கு வாங்குவார்களோ வாங்கமாட்டார்கள், (அதுபோல), கண்ணினும் இனிய - எங்கள் கண்களிலும் பார்க்க மிக மேலான. சுதந்திரம் போனபின் - உரிமை வாழ்வை இழந்தபின், கைகட்டிப் பிழைப்பாரோ - (அந்நியரின் கீழ் அடிமைகளாக இருந்து) கைகட்டி வாழ்வார்களோ வாழமாட்டார்கள் என்பதாம்,*

**விளக்கம்:** இக்கவிதையில் சுதந்திர உணர்ச்சிகொண்ட மக்கள் ஒருபோதும் அடிமைகளாக இருந்து வாழ விரும்பமாட்டார்கள் என ஆர்வத் துடிப்புடன் கூறுகின்ற பாரதியாரின் ஆனந்தவெள்ளம் அலை எறிகின்றது.

வானவீதியின்கண் நின்று பேரொளியைப் பரப்பி உலக உயிர்களை வாழ்விக்கின்ற சூரியனைப்போலப் பாரத தேசமெங்கும் அறிவொளி வீசிப் பாரத மக்களின் பண்பாட்டை வழிவழியாக நிலைபெறச் செய்யும் கண்ணினும் இனிய சுதந்திர வாழ்வை இழக்க ஒருபொழுதும் உரிமை உணர்ச்சிகொண்ட பாரத மக்கள் விரும்பமாட்டார்கள் என்பதே பாரதியாரின் கருத்தாகும் சுதந்திர வாழ்வை இழந்து அடிமை வாழ்வை மேற்கொள்வது சூரியனை விற்று அதற்குப்பதிலாக மின்மினியை விலைக்குப் பெறுவதுபோன்ற செயலாகும் என்பதைப் பாரதியார் விளக்கிக் கூறுகின்றார்.

**விண் — உவமானம், பாரததேசம் — உவமேயம். அகலமும், அளவிடமுடியாத பெருமையும் - பொதுத் தன்மைகளாகும்.**

**விண்ணில் இரவி (சூரியன்) — உவமானம். பாரத நாட்டின்கண் நின்று நிலவும் சுதந்திர வாழ்வு — உவமேயம். வாழும் உயிர்களுக்கெல்லாம் நன்மை செய்தலும், எங்கும் ஒளியைப் பரப்புதலும் — பொதுத்தன்மைகளாகும்.**

மக்கள் உறுப்புக்களில் கண் மிக இன்றியமையாததாய் விளங்குவதுபோல மக்கள் அடையும் பேறுகளில் சுதந்திரமே மிக இன்றியமையாததாய் விளங்குகின்றது என்பதை,

> **கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்**
> **கைகட்டிப் பிழைப்பாரோ?**

எனும் தொடர்களால் பாரதியார் எமக்கு இனிது விளக்கிக் கூறுகின்றார்.

6 **மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்**
**மாண்பினை யிழப்பாரோ?**
**கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினல்**
**கைகொட்டிச் சிரியாரோ?** **(வீர)**



பொருள்: *மண்ணில் — இந்நிலவுலகின்கண் உள்ள, இன்பங்களை — பட்டம் பதவி முதலிய நிலையில்லாத சிறிய இன்பங்களை, விரும்பி — அடைவதில் விருப்பங்கொண்டு, சுதந்திரத்தின் — சுதந்திரமாக வாழ்கின்ற, மாண்பினை — பெருமை பொருந்திய பேற்றினை, இழப்பாரோ — இழந்துவிட எண்ணுவார்களோ எண்ண மாட்டார்கள், கண்ணிரண்டும் விற்று — தமக்குரிய கண்கள் இரண்டினையும் விலைக்கு விற்றுவிட்டு, சித்திரம் வாங்கினல் — (கண்களை விற்றுப் பெற்றுக்கொண்ட அப்பணத்தைக் கொடுத்து) அழகிய சித்திரம் ஒன்றை ஒருவர் வாங்குவாராகுல், கைகொட்டிச் சிரியாரோ — (அவரின் அறியாமை மிக்க செயலைக்கண்ட உலக மக்கள்) கைகொட்டிச் சிரித்து அவரை இகழ்வார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் உலகில் அடையும் சிறிய இன்பங்களுக்காக மாண்புமிக்க சுதந்திரத்தை இழக்க ஒருபோதும் பாரத மக்கள் எண்ணமாட்டார்கள் எனச் சொல்லிச் சொல்லி இறுமாப்படைகின்ற பாரதியாரின் உள்ளத்தைக் காண்கின்றோம். பட்டம் பதவி முதலிய சிறிய இன்பங்களுக்காக, மாண்புமிக்க சுதந்திரத்தை இழந்து வாழுதல், ஒருவர் தமது இரண்டு கண்களையும் விற்று அழகு நிறைந்த சித்திரத்தை வாங்குவதுபோல இருக்கும், எனச் சிறந்த உவமானம் காட்டி எமது உள்ளத்தில் சுதந்திரத்தின் இன்றியமையாமையை மிக அழுத்தம் திருத்தமாகப் பதித்துள்ள பாரதியாரின் புலமைத்திறன் பாராட்டற்குரியதாகும்.

**கண் இரண்டினையும் விற்றல் உவமானம். மாண்புமிக்க சுதந்திரத்தினை இழத்தல் — உமமேயம். சிறப்பும், இன்றியமையாமையும் — பொதுத்தன்மைகளாகும்.**

**மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தை இழத்தல்—உவமானம். கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குதல்—உவமேயம். பிறரால் இகழப்படுதலும், பயனின்மையும் பொதுத்தன்மைகளாகும்.**

7 வந்தே மாதரம் என்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ? (வீர)

பொருள்: வந்தே மாதரம் என்று - வந்தே மாதரம் என்று சொல்லித் தாய்நாட்டிற்கு வணக்கம் செய்து அந்நாட்டினைத் தம் உயிரினும் மேலாக மதிப்பவர்கள், வணங்கியபின் - அங்ஙனம் தம் தாய்நாட்டை வந்தே மாதரம் எனக்கூறி வணக்கஞ் செய்தபின், (அச்சுதந்திரத் தொண்டர்கள்), மாயத்தை வணங்குவரோ - (பட்டம் பதவி முதலியவற்றைத் தமக்கு ஈந்து) தம்மை மயக்குகின்ற அடிமை வாழ்வாகிய மாயத்தை மதித்து வழிபாடு செய்வார்களோ செய்யமாட்டார்கள், வந்தே மாதரம் ஒன்றே - வந்தே மாதரம் என்று சொல்லித் தாய்நாட்டை வணங்குகின்ற ஒப்பற்ற சொற்றொடர் ஒன்றுதான், தாரகம் என்பதை - சுதந்திரத் தொண்டர்களின்) மூலமந்திரம் என்பதை, மறப்பாரோ - (அவர்கள் ஒருபோதும்) மறக்கமாட்டார்கள் என்பதாம்.

தாரகம் என்பதற்கு தம் உயிர் உடலில் தங்கி நிற்றற்கு ஆதாரமாக உள்ளது எனவும் பொருள் கூறலாம்).

**விளக்கம்:** இக் கவிதையில் தாய்நாட்டுக்கு வணக்கம் எனப் பொருள்படும் வந்தேமாதரம் என்னும் மூலமந்திரத்தின் கருத்தை உணர்ந்து சொல்லி அதனல் புத்துணர்ச்சி கொண்டு தம் ஆவி தளிர்க்கின்ற சுதந்திர வீரர்கள் ஒருபோதும் பட்டம் பதவி முதலிய சிறிய இன்பங்களைக் கொடுக்கும் அடிமை வாழ்வை விரும்பமாட்டார்களெனக் கூறுகின்ற பாரதியாரின் வெற்றி முழக்கத்தைக் கேட்கின்றோம்.

வந்தேமாதரம் என்பதுதான் பாரதநாட்டை விடுதலை செய்தற்காக சுதந்திரப் போர் தொடுத்த தேசத் தொண்டர்களின் உயிரினும் மேலான மூலமந்திரம் ஆகும். தம் உடலை விட்டு உயிர்போகும் நேரத்திலும் தேசத்தொண்டர்கள் இம்மந்திரத்தை மறக்கமாட்டார்கள்.



வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்து வோம்; முடி—தாழ்த்துவோம்
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ?—அவ—மானமோ?

எனவரும் பாரதியாரின் பாடல் இவ்வுண்மையை நிலைநாட்டி உரைத்தலைக் காண்க.

தாரகம் என்பது சமய நூல்களில் மூலமந்திரமாகிய பிரணவத்தின் பெயராய் விளங்குகின்றது. சமயத் தொண்டர்களுக்கு மூலமந்திரமாய் விளங்குகின்ற பிரணவத்தைப் போலத் தேசத் தொண்டர்களுக்கு வந்தேமாதரம் என்னும் தொடர் மூலமந்திரமாய் விளங்குகின்ற தென்பதை உணர்த்த எண்ணிய பாரதியார் அதனைத் தாரகமெனக் குறிப்பிட்டுள்ளார்.

வந்தே மாதரம் ஒன்றே தாரகம்

எனப் பாரதியார் அத்தொடரைத் தாரகம் எனக்கூறி மகிழ்தலை நோக்குக.

———

## 4. சுதந்திர தேவியின் துதி

பாரத மக்கள் தாங்கள் அடையும் பேறுகளையெல்லாம் சத்தியின் மயமாகக் காணும் பண்பாடு படைத்தவர்கள். நாட்டைப் பாரதமாதா என்றும், கல்வியைக் கலைமகள் என்றும், செல்வத்தைத் திருமகள் என்றும் சத்தியின் கோலமாகக் கொண்டு பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வருகின்றனர். அப்பரம்பரைப் பண்பாட்டில் ஊறி, உணர்ச்சி பெற்றெழுந்த பாரதியார் சுதந்திரத்தையும் சுதந்திர தேவியென சத்தியின் கோலமாக வைத்து வழிபாடு புரிகின்றார். சுதந்திர தேவியின் திருவருளைப் பெறாத நாட்டின் தாழ் நிலையையும், சுதந்திரதேவியின் அருளைப் பெறுதற்காக முயலும்பொழுது ஏற்படும் இன்னல்களையெல்லாம் தாங்கி நிற்கும் சுதந்திரத் தொண்டர்களின் வீர உள்ளத்தையும், சுதந்திரத்தின் மேம்பாட்டையும் சுதந்திர தேவியின் துதியென்னும் இப்பகுதியிற் காணலாம். பாரதியாரின் சுதந்திர வேட்கை அலை எறியும் கடல்போலப் பெருக்கெடுத்துப் பாய்கின்ற பெருமித நடை இக்கவிதைகளிற் கிடந்து நிழலாடுகின்றது.

**இதந்தரு மனையின் நீங்கி**
**இடர்மிகு சிறைப்பட் டாலும்**
**பதந்திரு இரண்டும் மாறிப்**
**பழிமிகுந் திழிவுற் றாலும்**
**விதந்தரு கோடி இன்னல்**
**விளைந்தெனை அழித்திட் டாலும்**
**சுதந்திர தேவி! நின்னைத்**
**தொழுதிடல் மறக்கி லேனே. 1**

**பொருள்: இதந்தரு - இன்பத்தை அளிக்கின்ற, மனையின் நீங்கி-இல்லத்தைத் துறந்து சென்று, இடர் மிகும் - துன்பம் நிறைந்த, சிறைப்பட்டாலும் - சிறைச்சாலையில் அடைபட்டு இருந்தாலும், பதம்-பதவியும், திரு-செல்வமும் ஆகிய, இரண்டும் மாறி - இரண்டினையும் இழந்து, பழிமிகுந்து - பிறரால் பழிக்கப்படும் தன்மை மிகுந்து, இழிவுற்றாலும் - தாழ்ந்த நிலையை அடைய நேர்ந்தாலும், விதந்தரு - வேறு வேறு வகையான, கோடி இன்னல் - கோடிக்கணக்கான துன்பங்கள், விளைந்து - உண்டாகி, எனை அழித்திட்டாலும் - என்னை அழிவு செய்தாலும், சுதந்திர தேவி - சுதந்திரம் என்னும் பெருவாழ்வை எமக்கு அளிக்கின்ற தேவியே, நின்னை - (என் உயிரினும் சிறந்த) உன்னை, தொழுதிடல் - வணங்குதலை, மறக்கிலேனே - (யான்) மறக்கமாட்டேன் என்பதாம்.**



**விளக்கம்:** இக் கவிதையில் இன்னல்கள் பல அடுத்து அடுத்து வந்தாலும், சுதந்திர தேவியாகிய நின்னைத் தொழுது வாழ்கின்ற தொண்டினை யான் மறக்கவே மாட்டேன் எனக் கூறும் பாரதியாரின் சுதந்திர வேட்கைத் துடிப்பைக் காண்கின்றோம்.

மனைவி மக்களோடு வீற்றிருந்து இன்ப நுகர்ச்சிபெற்று மகிழும் இல்லத்தைவிட்டு, துன்பமே நிறைந்த சிறைச்சாலைக்குச் செல்ல நேர்ந்தாலும், சுதந்திர தேவியைத் தொழுது தொண்டாற்றும் செயலை மறக்கமாட்டேன் எனப் பாரதியார் மிக மன மகிழ்ச்சியுடன் உரைக்கின்றார். மனைவி மக்களை விட்டுப் பிரிந்து நாட்டின் விடுதலைக்காகச் சிறைக்குப் புகும் வாழ்வு மிக அரியதொன்று; ஆதலினால் அதனை முற்கூறினார்.

பட்டம் பதவிகளை மிகப் பெரிதாக மதித்து வாழ்கின்றவர்கள் சுதந்திரத் துடிப்பினால் அவற்றையெல்லாம் உதறித் தள்ளி, கோடிக்கணக்கான துன்பங்கள் கூடிவந்து தம்மை அழித்திட்டாலும், சுதந்திரதேவியின் அருளை மறக்கமாட்டார்கள் எனவும் பாரதியார் மிக மான உணர்ச்சியுடன் கூறுகின்றார்.

இங்ஙனம் பாரதியார் தன்மேல் ஏற்றிக் கூறிய இவ் விடுதலை வேட்கைப் பண்புகள் பாரதநாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுச்சிபெற்றுச் செயலாக மலரவேண்டும் என்பதே அவரின் கருத்தாகும்.

**விதந்தரு கோடி இன்னல்**
**விளைந்தெனை அழித்திட் டாலும்**

எனப் பாரதியார் கூறுகின்ற இக்கவிதைத் தொடரில் நின்று அலை மோதுகின்ற சுதந்திரத் துடிப்பு ஆயிரம் ஆயிரம் சுதந்திர வீரர்களைப் படைத்து அளிக்கும் ஆற்றல் வாய்ந்ததாகும்.

**இன்னல் வந்து உற்றிடும் போது அதற்கு அஞ்சோம்**
**ஏழைய ராகி இனி மண்ணில் துஞ்சோம்**

எனவரும் பாரதியாரின் கவிதைத் தொடர்களையும் நோக்குக.

**நின்னருள் பெற்றி லாதார்**
**நிகரிலாச் செல்வ ரேனும்,**
**பன்னருங் கல்வி கேள்வி**
**படைத்துயர்ந் திட்டா ரேனும்,**
**பின்னரும் எண்ணி லாத**
**பெருமையிற் சிறந்தா ரேனும்**
**அன்னவர் வாழ்க்கை பாழாம்,**
**அணிகள்வேய் பிணத்தோ டொப்பார். 2**

பொருள்: *நின்னருள் - (சுதந்திர தேவியே) உனது கருணையாகிய சுதந்திரத்தை, பெற்றிலாதார் - பெறாதவர்கள், நிகரிலா - உவமை கூறமுடியாத, செல்வரேனும் - மிகப்பெருஞ் செல்வத்தை உடையவர்களாய் இருந்தாலும், பன்னரும் - (அளவிட்டுக்) கூற முடியாத, கல்வி - கற்ற கல்வி அறிவையும், கேள்வி - கற்றுணர்ந்தவர்களிடத்துக் கேட்ட கேள்வி அறிவையும், படைத்து - பெற்று, உயர்ந்திட்டாரேனும் - மேம்பாடு அடைந்தவர்கள் ஆனாலும், பின்னரும் - இவற்றையெல்லாம் அடைந்ததோடு அமையாமல் பின்பும், எண்ணிலாத - எண்ணிறந்த, பெருமையில் - மதிப்புக்களில், சிறந்தாரேனும் - உயர்ச்சி பெற்றாராயினும், அன்னவர் - (உன்னருளாகிய சுதந்திரத்தைப் பெறாமல்) மேற்கூறிய எல்லாச் சிறப்புக்களையும் பெற்றிருக்கின்ற அவர்களின், வாழ்க்கை - வாழ்வானது, பாழாம் - அழிந்துபோகும், (சுதந்திரம் இன்றி வாழ்கின்ற அவர்கள்) அணிகள் வேய் - அணிகலன்களை அணிந்து (ஆபரணங்களால்) அழகு செய்யப்பட்ட, பிணத்தோடொப்பார் - பிணத்தைப்போல் விளங்குவார்கள் என்பதாம்.*



**விளக்கம்:** இக் கவிதையில் சுதந்திர தேவியின் திருவருளாகிய சுதந்திரத்தைப் பெறாமல் அடிமைகளாக இருந்து வாழ்கின்றவர்கள் எத்துணைப் பெரும் பேறுகளை உடையவர்களாய் விளங்கினாலும் அவர்களின் வாழ்வு பயனில்லாததாகும் எனக் கூறுகின்ற பாரதியாரின் சுதந்திரதாகம் கொண்ட உள்ளத் துடிப்பைக் காண்கின்றோம்.

இவ்வுலக வாழ்விற்கு மிகமிக இன்றியமையாது வேண்டப்படுவது பொருட் செல்வமே ஆகும். **பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை** என்பது திருக்குறள். இப்பொருட் செல்வத்தை அடிமைகளாக இருப்பவர்கள் மிகமிகப் பெருந்தொகையாகப் பெற்றிருந்தாலும் அதனால் பயனில்லை என்பதே பாரதியாரின் கருத்தாகும். **நிகரிலாச் செல்வரேனும்** எனப் பாரதியார் கூறிய தொடரைப் படிக்கும்பொழுது அச்செல்வத்தின் மிகுதி புலனாகின்றது.

இங்ஙனம் செல்வம் மட்டுமேயன்றி அடிமைகளாக இருந்து வாழ்கின்றவர்கள் ஆராய்ந்து கற்றறிந்த அரும்பெருங் கல்வி கேள்விகளும் பலதிறப்பட்ட பெருமைகளும் பயனின்றிப் பாழாகுமெனப், பாரதியார் மிக, உணர்ச்சியுடனும் சுதந்திர எழுச்சியுடனும் கூறுகின்றார்.

**பன்னருங் கல்வி கேள்வி**
**படைத்துயர்ந் திட்டா ரேனும்**
**பின்னரும் எண்ணி லாத**
**பெருமையிற் சிறந்தா ரேனும்**
**அன்னவர் வாழ்க்கை பாழாம்,**

எனும் இக்கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசைப் பெருக்கும் உணர்ச்சிக் குமுறலும் அடிமைப்பட்டு வாழ்வோரின் மேம்பாடுகள் எல்லாம் பயனின்றிப் பாழாகப்போகும்

என்ற உண்மையை அழுத்தம் திருத்தமாக அனைவர் உள்ளத்திலும் பதிக்கக்கூடிய ஆற்றலுடன் விளங்குகின்றன.

இங்ஙனம் சுதந்திரம் இல்லாதவர்கள் பெற்றிருக்கும் சிறப்புக்களின் இழிவை

**அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்**

எனும் தொடரால் பாரதியார் எமக்கு விளக்கிக் கூறுகின்றார்.

**அணிகள் வேய் பிணம்—உவமானம்.**

**அடிமையாக வாழ்கின்றவர்கள் பெற்றுள்ள கல்வி, செல்வம் முதலிய சிறப்புககள் — உவமேயம்**

**பயனின்மையும், பிறரால் மதிக்கப்படாமையும் பொதுத்தன்மைகளாகும்.**

உயிர் இல்லாத பிணத்துக்கு உயர்ந்த அணிகலன்களை அணிந்து அழகு செய்வதினால் அப்பிணத்துக்கு ஓர் மேம்பாடும் எய்தாமை போல அடிமையாக வாழ்கின்றவர்கள் அடைந்துள்ள கல்வி செல்வம் முதலியவைகளால் அவர்களின் நாடு ஒரு பயனும் அடையாது என்பதாம்.

**தேவி! நின்னொளிபெ றாத**
**தேயமோர் தேய மாமோ?**
**ஆவியங் குண்டோ? செம்மை**
**அறிவுண்டோ? ஆக்க முண்டோ?**
**காவிய நூல்கள் ஞானக்**
**கலைகள் வேதங்க ளுண்டோ?**
**பாவிய ரன்றோ நின்றன்**
**பாலனம் படைத்தி லாதார்?** 3

பொருள்: *தேவி - சுதந்திர தேவியே, நின் ஒளி - உன்னுடைய சுதந்திரப் பேரொளியை, பெறாத - அடையாத, தேயம் - தேசமானது, ஓர் தேடமாமோ - (எத்துணைச் சிறப்புக்களுடன் விளங்கினாலும்) ஒரு தேசமென்று எண்ணப்படக்கூடியதாகுமோ, அங்கு - அந்தத் தேசத்தில், ஆவி உண்டோ - உயிர்கள் (வாழ்ந்தாலும்) வாழ்கின்றன என்று எண்ணலாமோ, செம்மை அறிவுண்டோ - சிறந்த அறிவு வளர்ந்து பயன் தருதலாகிய செயல் உண்டாகுமா, ஆக்கம் உண்டோ - செல்வம் உண்டாகுமா, காவிய நூல்கள் - (உயர்ந்த) இலக்கியங்களும், ஞானக் கலைகள் - (உபநிடதம் முதலிய) ஞான சாத்திரங்களும், வேதங்கள் - வேதங்களும், உண்டோ - உளவாகுமோ, நின்றன் - சுதந்திர தேவியாகிய உனது, பாலனம் - பாதுகாப்பை (சுதந்திர வாழ்வை), படைத்திலாதார் — பெறாதவர்கள், பாவியர் அன்றோ - கொடும் பாவிகளேயாவர் என்பதாம்.*



**விளக்கம்:** இக் கவிதையில் சுதந்திர தேவியின் அருளைப் பெறாத அடிமை நாட்டின் தன்மையையும், அங்கு வாழ்கின்ற மக்களின் கீழ்நிலையையும் இகழ்ந்துரைக்கின்ற பாரதியாரின் உணர்ச்சிக் குமுறலைக் காண்கின்றோம்.

சுதந்திர தேவியின் ஒளியைப் பெறாமல் இருக்கின்ற நாட்டை ஒரு நாடாகப் பாரதியார் கருதவில்லை. அங்கு உயிர்களும் இல்லை உண்மை அறிவும் இல்லை ஆக்கங்கள் இல்லை காவிய நூல்கள் இல்லை ஞான சாத்திரங்கள் இல்லை வேதங்கள் இல்லை அங்கு வாழ்கின்ற மக்கள் எல்லோரும் பாவிகள் என்றெல்லாம் பாரதியார் பழித்து வைதுரைக்கின்றார். அடிமையாக வாழ்கின்ற மக்கள் அடிமைத்தளையை அறுத்துச் சுதந்திர வாழ்வைப்பெற முயலாதிருந்தால் அவர்களின் எதிர்காலப் பரம்பரையினரை மீளா அடிமைகள் ஆக்கிப் பாழ்படுத்தும் பெரும் பாதகச் செயலைப் புரிகின்றவர்களாவார் என்பதை வலியுறுத்த

**பாவிய ரன்றோ நின்றன்**
**பாலனம் படைத்தி லாதார்?**

எனப் பாரதியார் வைது உரைக்கின்றார் என்பதை உணர்க.

ஒழிவறு நோயிற் சாவார்,
ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையில் நிற்பார்;
இழிவுறு வாழ்க்கை தேரார்,
கனவினும் இன்பங் காணுர்;
அழிவுறு பெருமை நல்கும்
அன்னை! நின் அருள்பெ ருதார். 4

பொருள்: *அன்னை - சுதந்திரதேவி யென்னும் தாயே, அழிவறு - அழிவில்லாத, பெருமை நல்கும் - பெருமையை அளிக்கின்ற, நின்னருள் பெருதார் - சுதந்திர வாழ்வு என்னும் நின் பெருங் கருணையைப் பெருதவர்கள், ஒழிவறு நோயில் - தீராத கொடும் பிணிகளால், சாவார் - இறந்துபடுவார்கள், ஊக்கமொன்று - அடிமைத்தளையை அறுத்து சுதந்திர வாழ்வைப் பெறுவோம் என்னும் ஊக்கத்தை (முயற்சியை) ஒருசிறிதேனும், அறியமாட்டார் - உணரமாட்டார்கள், கழிவுறு மாக்களெல்லாம் - (பிறநாட்டில்) கீழ்த்தர வாழ்க்கையில் இருக்கும் அறிவில்லாத மக்களும், இகழ்ந்திட - பழித்துரைக்கத் தக்கதாக, கடையில் நிற்பார் - இழிவான நிலையை அடைந்திருப்பார்கள், இழிவறு - இழிவில்லாத, வாழ்க்கை - உயர்ந்த வாழ்வு (சுதந்திர வாழ்வு) எப்படிப்பட்டதென்று, தேரார் - ஆராய்ந்து அறியார், கனவினும் - கனவில் என்ருலும், இன்பம் - (சுதந்திர வாழ்வு பெற்றிருப்பதனுல் ஏற்படும்) இன்பத்தை, காணுர் - அறிய மாட்டார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் அடிமைத்தளையை அறுத்துச் சுதந்திர வாழ்வைப் பெற முயலாமல் இருக்கின்ற மக்களின் அறியாமையை எடுத்துக்காட்டி இடித்துரைக்கின்ற பாரதியாரின் சுதந்திர எழுச்சியைக் காண்கின்ருேம்.

தீராத நோயினுல் சாகின்றவர்கள் சுதந்திரப்போர் ஆற்றிச் சாக முன்வரமாட்டார்கள். பிறநாட்டில் உள்ள கீழ்த்தர வாழ்க்கை வாழும் அறிவில்லாத மக்களாலும் இகழத்தக்க இழிநிலையில் இருந்து கீழ்மைப்படுகின்றவர்கள் ஏன் சுதந்திரப்போர் ஆற்றித் தம்மை உயர்த்திக்கொள்ளக் கூடாதெனப் பாரதியார் சிந்திக்கின்ருர். இன்பமே இல்லாத துன்பம் நிறைந்த அடிமை வாழ்வில் கிடந்து அல்லல் உறுகின்றவர்கள் சுதந்திர வாழ்வை அடையவேண்டும் எனும் துடிப்பினுல் என்று விழித்தெழுந்து சுதந்திரப்போர் தொடுக்கப்போகின்ருர்கள் என்றெல்லாம் பாரதியார் எண்ணி எண்ணி ஏங்குகின்ருர்.



இழிவறு வாழ்க்கை தேரார்
கனவினும் இன்பங் காணுர்.

எனப் பாரதியார் மொழிகின்ற கவிதைத் தொடர்களிலே சுதந்திரம் இன்றி அடிமையாய் வாழும் மக்களின இழிநிலே அப்படியே புலனுகின்றது.

தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்து
ஆவி யுந்தம தன்பும் அளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினும்
தாவில் வானுல கென்னத் தகுவதே 5

பொருள்: *தேவி - சுதந்திர தேவியே, நின்னருள் - (சுதந்திர வாழ்வை அளிக்கும்) உனது திருவருளை. தேடி - (எங்ஙனம் அடையலாமென அல்லும் பகலும்) ஆராய்ந்து தேடி, உளம் தவித்து - மனத்தில் என்றும் தீராத தாகம் கொண்டவர்களாய், தமது - தங்களுடைய, ஆவியும் - உயிரையும், அன்பும் - நிலை திரியாத பேரன்பையும் (சுதந்திரப் பற்றையும்), அளிப்பவர் - (சுதந்திர தேவியாகிய உனக்குக் காணிக்கையாக) தருகின்ற தேசத்தொண்டர்கள், மேவி நிற்பது - அடைந்திருப்பது, வெஞ்சிறையாயினும் - கொடிய துன்பங்களைக் கொடுக்கின்ற சிறைச்சாலையாய் இருந்தாலும், (அத்தேசத் தொண்டர்களுக்குச் சிறைத்துன்பம்) தாவில் - குற்றமில்லாத, வானுலகு என்ன - அமரர் உலகத்தில் பெறும் இன்பத்தைப்போல, தகுவதே - மேன்மை உடையதாய்த் தோன்றும் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் சுதந்திர வாழ்வு பெற வேண்டும் என்னும தீராத தாகத்துடன் சுதந்திரப் போர் தொடுக்கின்ற தேசத் தொண்டர்கள் தாம் சிறைச்சாலையில்

இருந்து அடையும் துன்பங்களை எல்லாம் தேவர் உலகத்தில் சென்றடையும் இன்பங்களாக மதித்து மகிழ்ச்சி அடைவார்களெனக் கூறுகின்ற பாரதியாரின் மன எழுச்சியைக் காண்கின்றோம்.

சுதந்திர வாழ்வுக்காக சுதந்திரப்போர் புரிகின்ற தொண்டர்கள் தங்கள் ஆவியையும் அன்பையும் சுதந்திர தேவிக்குக் காணிக்கையாகக் கொடுத்து உள்ளம் களிப்பார்களெனப் பாரதியார் கூறிக்கூறி மகிழ்கின்றார்.

**தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்து**
**ஆவி யும்தம தன்பும் அளிப்பவர்**

எனும் தொடர்களைப் படிக்கும்பொழுது சுதந்திரத் தொண்டர்களின் சுதந்திர தாகமும், உயிரையும் பொருட்படுத்தாத உழைப்பும், அன்பும் எமது உள்ளத்திலும் பதிந்துவிடுகின்றன. அவர்கள் சிறைச்சாலைத் துன்பத்தை தேவர் உலக இன்பமாக மதித்து மகிழ்வார்கள் என்பதைப் பாரதியார் மிக மகிழ்ச்சிப் பெருக்குடன் எமக்குக் கூறுகின்றார்.

**மேவி நிற்பது வெஞ்சிறை யாயினும்**
**தாவில் வானுல கென்னத் தகுவதே.**

எனும் தொடர்களைப் படிக்கும்பொழுது எம் உள்ளத்திலும் ஓர் ஆனந்தம் எழுகின்றது.

**அம்மை உன்றன் அருமை யறிகிலார்**
**செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்;**
**இம்மை யின்பங்கள் எய்துபொன் மாடத்தை**
**வெம்மை யார்புன் சிறையெனல் வேண்டுமே. 6**

பொருள்: *அம்மை - அன்னையே, உன்றன் - உனது திருவருளினால் அடையும் சுதந்திர வாழ்வின், அருமையறிகிலார் - அரிய சிறப்பினை அறியாமல் அடிமையாய் வாழுகின்றவர்கள், செம்மையென்று - சிறப்புடையன என்று, இழிதொண்டினை - பிறருக்கு அடிமைப்பட்டு அவர்கள் ஏவலின் வழிநின்று செ*



*ய்கின்ற தொண்டுகளை, சிந்திப்பார் - நினைப்பார்கள், (அங்ஙனம் அடிமைகளாய் இருக்கின்றவர்கள்) இம்மை இன்பங்கள் - இவ்வுலகத்தில் பெறக்கூடிய இன்பங்களை, எய்து - இருந்து அடைகின்ற, பொன் மாடத்தை - அழகிய மாடங்களோடு கூடிய இல்லத்தை (வீட்டினை), வெம்மையார் - கொடுமை நிறைந்த, புன்சிறை - எளிய சிறைச்சாலை, எனல் வேண்டுமே - என்றே கூறவேண்டும் என்பதாம்.*

விளக்கம்: இக் கவிதையில் சுதந்திர தாகம் இல்லாமல் அடிமை வாழ்வு வாழ்கின்ற அறிவிலிகள் அழகிய மாடங்களோடு பொருந்திய இல்லத்திலிருந்து அடைகின்ற உலக இன்பங்கள் எல்லாம் கொடிய துன்பங்களைத் தரும் எளிய சிறைச்சாலை வாழ்க்கையாகவே கொள்ளவேண்டும் எனக் கூறுகின்ற பாரதியாரின் உள்ளத் துடிப்பைக் காணகின்றோம்.

அடிமை வாழ்வில் மோகம் கொண்டவர்கள் அவ்வாழ்வினைப் பெரிதாக மதித்துப் போற்றுவார்களென்பதைப் பாரதியார் மிக அருவருப்புடன் கூறுகின்றார்.

**அம்மை உன்றன் அருமை யறிகிலார்**
**செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்**

எனும் தொடர்களில் அடிமை வாழ்வைப் பெரிதாக மதிக்கும் அறிவிலிகளின் உள்ளத்தைப் பாரதியார் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றார்.

அடிமை வாழ்வை வரவேற்று மகிழ்கின்றவர்கள் பொன் மாடத்திலிருந்து இந்திரபோகத்தை அடைந்தாலும் கொடிய கொடுமை நிறைந்த எளிய சிறைச்சாலையிலிருந்து அடைகின்ற துன்பத்தைப் போன்றதே எனப் பாரதியார் மிக அழுத்தம் திருத்தமாக [illegible] எடுத்துக் காட்டியுள்ளார்.

**[illegible]ற்றி னைப்பல நாட்டினர் வீரத்தால்**
**போற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்;**
**கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்துமே நின்**
**பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர். 7**

பொருள்: நின்னை – சுதந்திரதேவியாகிய உன்னை. மேற்றிசை - மேலைத்தேசத்தில் உள்ள, பலநாட்டினர் – பலநாட்டு மக்களும், வீரத்தால்–சுதந்திரம் பெறவேண்டும் என்னும் விடுதலைப் போர் வீரச் செயல்களால். போற்றி – (உன்னைப்) பாதுகாத்து மதித்து, புதுநிலை–(அடிமை வாழ்வில் நின்று நீங்கி) சுதந்திர வாழ்வென்னும் புதிய பெரும் நிலையினை, எய்தினர்–அடைந்தனர், (அங்ஙனம் சுதந்திரத்தை அடைந்த மேலைநாட்டினர்) கூற்றினுக்கு–இயமனுக்கு, (சுதந்திரப்போர் தொடுத்ததினால்) உயிர் கோடி கொடுத்தும் – தம் உயிரைக் கோடிக்கணக்காகப் பலிகொடுத்தும், (அதனால் உள்ளம் தளராமல்) நின் பேற்றினை – (உனது பெருங்கருணையினால் பெறும்) சுதந்திரப் பெருவாழ்வு என்னும் பேற்றினை (செல்வத்தை), பெறுவேமெனல் – பெற்றிடுவோம் என்னும் மன உறுதியுடன், பேணினர் – (சுதந்திர தாகம் குறையாத வண்ணம்) பாதுகாத்துப் போராடினர் என்பதாம்.

**விளக்கம் :** இக் கவிதையில் மேலை நாட்டினரின் சுதந்திர வேட்கையையும், அவர்கள் சுதந்திரத்தைப் பெறுதற்காக ஆற்றிய சுதந்திரப் போரில் கோடிக்கணக்காகத் தம்மைப் பலி கொடுத்த வீரச் செயலையும் பாராட்டி உரைக்கின்ற பாரதியாரின் ஆர்வத்துடிப்பை அறிகின்றோம்.

மேலைநாட்டினர் கோடிக்கணக்கான உயிர்களைச் சுதந்திரப் போரிற் பறிகொடுத்து விடுதலைபெற்ற வீரச் செயல்களைப் பாரதியாரால் மறக்க முடியவில்லை. பாரதநாட்டு மக்களும் மேலை நாட்டு மக்களைப்போல் உயிரைப் பொருட்படுத்தாமல் சுதந்திரப் போரில் குதித்து விடுதலை பெறவேண்டும் என்னும் வேட்கை பாரதியார் உள்ளத்தில் நின்று அலை எறிகின்றது,

**கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும்நின்**
**பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர்.**

எனும் தொடர்களைப் படிக்கும்பொழுது எமக்கும் விடுதலைப் போர் வீர உணர்ச்சி எழுகின்றது.



**அன்ன தன்மைகொள் நின்னை அடியனேன்**
**என்ன கூறி இசைத்திட வல்லனே?**
**பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்**
**சின்ன மற்றழி தேயத்தில் தோன்றினேன். 8**

பொருள்: அன்ன தன்மைகொள் - (மேற்கூறிய வண்ணம்) சுதந்திர வாழ்வை நல்கும் பெருங்கருணைப் பண்புகொண்ட, நின்னை - சுதந்திர தேவியாகிய உன்னை, அடியனேன் - அடியவனாகிய யான், என்னகூறி - எவ்வகையான புகழ் மொழிகளைச் சொல்லி, இசைத்திட - பாராட்டிப் போற்றிட, வல்லனே - வல்லவனாவேன், பின்னமுற்று - (சாதிசமயப் பூசல்களினால்) பலவேறு சிறுசிறு கூட்டத்தினராகப் பிரிந்து, பெருமை இழந்து - (பாரதநாட்டு மக்கள், வீரர்கள், அறிஞர்கள், உரிமை ஆட்சி உடையவர்கள், எனக் கூறப்பட்ட பழம்) பெருமைகளை (சிறப்புக்களை) எல்லாம் இழந்து (பறிகொடுத்து), நின் சின்னம் அற்று - உன் அடையாளமாகிய சுதந்திர ஒளி ஒருசிறிதேனும் இல்லாமல், அழி தேயத்தில் - சிதைவுற்றுக் கிடக்கின்ற தேசத்தில், தோன்றினேன் - (யான்) பிறந்துவிட்டேன் என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் அடிமைப்பட்டுக் கிடக்கும் பாரதநாட்டில் தோன்றிய யான், சுதந்திர தேவியாகிய உன்னை எங்ஙனம் பாராட்டிப் போற்றுவேன் எனப் பாரதியார் கூறுகின்ற இரக்கக் குரலைக் கேட்கின்றோம்.

**பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்**
**சின்ன மற்றழி தேயத்தில் தோன்றினேன்,**

எனப் பாரதியார் கூறுகின்ற இக்கவிதைத் தொடர்கள் அடிமைப் பாரதத்தின் கீழ்நிலையை அப்படியே எடுத்துக் காட்டுகின்றன.

**தாழ்வுற்று வறுமை மிஞ்சி**
**விடுதலை தவறிக் கெட்டுப்**
**பாழ்பட்டு நின்ற தாமோர்**
**பாரத தேசந் தன்னை**

எனப் பாரதியார் கூறும் இக்கவிதைத் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக. அடிமை நாட்டில் தான் பிறக்க நேர்ந்ததை இட்டு அல்லல் உறுகின்ற பாரதியாரின் உள்ளத் துடிப்பும், சுதந்திர தாகமும் அப்படியே இக்கவிதைத் தொடர்களில் நின்று நிழலாடுகின்றன.

**பேரறத்தினைப் பேணுநல் வேலியே!**
**சோர வாழ்க்கை, துயர்,மிடி யாதிய**
**கார றுக்கக் கதித்திடு சோதியே!**
**வீர ருக்கமு தே!நினை வேண்டுவேன். 9**

பொருள்: ***பேரறத்தினை – பெரிய (உயர்ந்த) தருமநெறியினை, பேணுநல் - பாதுகாக்கின்ற சிறந்த, வேலியே – வேலி (மதில்) போல விளங்குகின்ற சுதந்திர தேவியே, சோர வாழ்க்கை-களவுச் செயல்களால் வாழ்கின்ற பொய் வாழ்வும், துயர்–பகைவரால் ஏற்படுந் தீமை என்னுந் துன்பங்களும், மிடி யாதிய–வறுமை முதலியவைகளுமாகிய, கார் அறுக்க – இருளினைப்போக்க, கதித்திடு-மிக்கெழுந்திடும், சோதியே–பேரொளி போன்றவளே, வீரருக்கு-(உடல், பொருள், ஆவி மூன்றையும் சுதந்திர வாழ்வைப் பெறுதற்காக விடும் மனத்திண்மை கொண்ட) ஆண்மையாளராகிய சுதந்திரப் போர்வீரர்களுக்கு, அமுதே-அமுதம் போன்றவளே, நினை – சுதந்திர தேவியாகிய உன்னை, வேண்டுவேன் - (எமது பாரத தேசத்திற்கும் சுதந்திரம் தந்தருளவேண்டுமென்று), யான் வணங்குகின்றேன்.***

**விளக்கம்:** இக் கவிதையில் சுதந்திர தேவியின் சிறப்பைச் சொல்லிச் சொல்லித் துதிக்கின்ற பாரதியாரின் எல்லையில்லாத சுதந்திர தாகத்தைக் காண்கின்றோம். சுதந்திர தேவியை அறத்தின் வேலி என்றும், களவு, துயர், வறுமை என்பனவாகிய இருட்கூட்டத்தைப் போக்கி ஒளிவிரிக்கின்ற சோதியாகவும், விடுதலைப் போர்வீரர் பருகி மகிழும் அமிர்தமாகவும், பாராட்டி உரைக்கின்ற பாரதியாரின் விடுதலை வேட்கை நிரம்பிய உள்ளத்துடிப்பு எம்மையும் ஊக்கிவிடுகின்றது.



**சோர வாழ்க்கை, துயர், மிடியாதிய**
**கார றுக்கக் கதித்திடு சோதியே!**

எனுமிக் கவிதைத் தொடர்களில், ஓர் அடிமை நாட்டில் உள்ள **களவு, துயர், வறுமை என்பவற்றை இருளாகவும்,** சுதந்திர தேவியின் கருணையினுற் பெறும் **சுதந்திர வாழ்வினை, அந்த இருளைப் போக்கி ஒளி பரப்பும் சோதியாகவும்** உருவகஞ் செய்துரைத்த பாரதியாரின் புலமைத்திறன் போற்றற்குரியதாகும்.

---

## 5. புதுமைப் பெண்

சங்ககாலத்திலும் வேதகாலத்திலும் பெண்கள் ஆண்களோடு ஒத்த உரிமையும் சிறப்பும் மதிப்பும் உடையவர்களாகப் போற்றப்பட்டனர். இடைக்காலத்திற் பெண்களை ஆண்களின் அடிமைகளாக எண்ணி இகழ்ந்து மதிக்கும் கொள்கை தோன்றியது. இக்கொள்கை பாரதநாட்டில் மிகமிக வேரூன்றிப் பாரதநாட்டின் பழம் பெருமையையும் பண்பாட்டையும் பாழ்படுத்திவிட்டது. தாய்க்குலத்தை அடிமைப்படுத்தியதினால், மீளா அடிமைகளாகக் கிடந்து அல்லற்படுகின்ற சேய்க்குலத்தை (அடிமைப் பரம்பரையை) உடையதாகப் பாரதநாடு விளங்கியது.

இந்நிலையில் பாரதநாட்டின் அடிமைத்தளையை அறுத்தெறிய வேண்டுமானால் முதற்கண் பாரதப் பெண்களின் அடிமைத்தளை அறுத்தெறியப்படல் வேண்டுமெனப் பாரதியார் எண்ணினார். அவரின் எண்ணம் **புதுமைப் பெண்** என்னும் கவிதைகளாக உருப்பெற்றது. சுதந்திரப் பாரதத்தைப் படைக்க எழுந்த புதுமைப்பெண், அன்னை பராசக்தியின் கோலமாக நின்று, கூறுகின்ற அறத்தோடு கலந்த ஆண்மை உரைகள் ஆயிரம் ஆயிரம் ஊழிகள் நின்று வாழக்கூடிய பொருட்கருநிரம்பியனவாகும்.

**போற்றி போற்றி! ஓர் ஆயிரம் போற்றி! நின்**
**பொன்ன டிக்குப்பல் லாயிரம் போற்றிகாண்!**
**சேற்றிலேபுதி தாக முளைத்த தோர்**
**செய்ய தாமரைத் தேமலர் போலொளி**
**தோற்றி நின்றனை பாரத நாட்டிலே;**
**துன்பம் நீக்கும் சுதந்திர பேரிகை**
**சாற்றி வந்தனை, மாதரசே! எங்கள்**
**சாதி செய்த தவப்பயன் வாழிநீ!** 1



பொருள்: *மாதரசே - பெண்களின் தலைவியாகிய புதுமைப் பெண்ணே, நின் பொன்னடிக்கு - உனது பொன்போன்ற திருவடிகளுக்கு, போற்றி போற்றி - வணக்கம். வணக்கம், ஓர் ஆயிரம் போற்றி - ஆயிரம் முறை வணக்கம், பல்லாயிரம் போற்றிகாண்-பல ஆயிரம் முறை வணக்கம், (காண்- அசை) சேற்றிலே-சேற்றின்கண்ணே, புதிதாக-புதுமையாக, முளைத்த ஓர்-தோன்றிய ஒரு, செந்தாமரை - செந்தாமரையின்கண் நின்று பூத்த, தேமலர்போல்-தேன் தங்கிய (செந்தாமரை) மலரைப்போல; ஒளி தோற்றி நின்றனை-ஒளிவீசித் தோன்றி நிற்கின்றாய், பாரத நாட்டிலே - அடிமைப்பட்டுக் கிடந்து அல்லலுறுகின்ற இப் பாரத நாட்டிலே, துன்பம் நீக்கும் - (அடிமையென்னும்) துன்பத்தைப் போக்குகின்ற, சுதந்திர பேரிகை - சுதந்திர (உரிமை) முரசினை, சாற்றி வந்தனை-முழங்கிய வண்ணம் வந்துளாய், எங்கள் சாதி - பாரதநாட்டவர் என்னும் மக்களாகிய நாங்கள், செய்த தவப்பயன்-செய்த தவத்தின் பயனாகவே (நின்வருகை) விளங்குகின்றது. நீ - (இங்ஙனம் எங்கள் பாரதநாட்டு மக்கள் ஆற்றிய தவத்தின் பயனாகத் தோன்றிய) புதுமைப் பெண்ணாகிய நீ, வாழி-நீடூழி வாழ்வாயாக என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் பாரதியார் தாம் படைத்த புதுமைப் பெண்ணை, அன்னை பராசக்தியின் அருள் வரவாகக் கருதி வணங்குகின்ற ஆர்வக் குரலைக் கேட்கின்றோம்.

அடிமைப் பாரத நாட்டில் தோன்றிச் சுதந்திர தாகம் கொண்ட புதுமைப் பெண்ணை, சேற்றிலே புதிதாக முளைத்த செந்தாமரை மலர் என்று பாரதியார் பாராட்டி உரைக்கின்றார்.

**சேற்றிலே புதிதாக முளைத்ததோர்**
**செய்ய தாமரைத் தேமலர் போலொளி**
**தோற்றி நின்றனை பாரத நாட்டிலே;**

எனும் கவிதைத் தொடர்களில் பாரதியாரின் புலமைத்திறன் நிழலாடுகின்றது.

உரிமை வாழ்வைப் பறிகொடுத்து அடிமைப்பட்டு அல்லலுற்றுச் சிதறிச் சிதைந்து கிடக்கும் பாரத நாட்டைச் சேருக

வும், அப்பாரத நாட்டின்கண் தோன்றிச் சுதந்திரக் குரலை எழுப்பும் புதுமைப் பெண்ணைச் சேற்றில் தோன்றிய செந்தாமரை மலராகவும் கூறும் பாரதியாரின் உவமைத் திறன் பாராட்டுக்குரியதாகும்

**சேறு — உவமானம். அடிமைப்பட்டுக் கிடக்கும் பாரதநாடு — உவமேயம்.**

**இழிவும், அருவருப்பும், மதிப்பின்மையும் — பொதுத் தன்மைகளாகும்.**

**சேற்றிலே புதிதாகத் தோன்றிய செந்தாமரை மலர் — உவமானம். பாரத நாட்டில் தோன்றிய புதுமைப்பெண் — உவமேயம். இழிந்த இடத்தில் தோன்றியமையும், சிறப்பும் பொதுத்தன்மைகளாகும்.**

புதுமைப் பெண்ணின் எழுச்சிக்குரலால் பாரத நாட்டு மக்கள் விழிப்படைந்து சுதந்திர வாழ்வைப் பெற முயல்வார்கள் என்னும் கருத்தை நிலைநாட்ட எண்ணிய பாரதியார்

**துன்பம் நீக்கும் சுதந்திர பேரிகை**
**சாற்றி வந்தனை, மாதரசே!**

எனப் புதுமைப் பெண்ணைப் பாராட்டுகின்றார்.

**மாதர்க் குண்டு சுதந்திரம் என்றுநின்**
**வண்ம லர்த்திரு வாயின் மொழிந்தசொல்**
**நாதந் தானது நாரதர் வீணையோ?**
**நம்பிரான் கண்ணன் வேய்ங்குழ லின்பமோ?**
**வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே**
**மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ?**
**சாதல் மூத்தல் கெடுக்கும் அமிழ்தமோ?**
**தையல் வாழ்கபல் லாண்டுபல் லாண்டிங்கே! 2**

**பொருள்:** *(புதுமைப் பெண்ணே) மாதர்க்கு – பெண்களுக்கும், சுதந்திரம் உண்டு என்று – சுதந்திர வாழ்வு உரியதென்று, நின் - உன்னுடைய, வண் – அறிவு வண்மை (வளப்) நிரம்பியதும், மலர்த்திருவாய் - மலர்போன்ற அழகினை யுடையதுமாகிய வாயினைத் திறந்து, மொழிந்த சொல் - நீ கூறிய அறிவு மொழிகளின், நாதந்தான் அது - இனிமையும் பொருளும் நிரம்பிய ஓசையானது, நாரதர் வீணையோ - நாரத முனிவர் இசைக்கின்ற வீணையின் இனிய ஓசையோ, நம்பிரான் – எங்கள் தலைவனாகிய, கண்ணன் - கண்ணபிரான் ஊதுகின்ற, வேய்ங்குழலின்பமோ - புல்லாங்குழலிலிருந்து பெருகிவருகின்ற இசையின் இன்பமோ, வேதம் - வேதங்கள் நான்கும், பொன்னுரு - அழகிய வடிவத்தோடு பொருந்திய, கன்னிகையாகியே - இளம் பெண்ணின் உருவத்தைத் தாங்கி, எமை - எங்களை, மேன்மை செய்து - சிறப்படையச் செய்து, காத்திட - (அடிமை வாழ்வினின்றும் எம்மை எடுத்து) காப்பாற்றும் வண்ணம், சொல்வதோ – சொல்கின்ற பொருளுரைதானோ, சாதல் – இறத்தலையும், மூத்தல் - மூப்பு அடைதலையும், கெடுக்கும் - அழிக்கின்ற (இல்லாமற் செய்து அமரர் ஆக்குகின்ற), அமிழ்தமோ - ஓர் புதிய அமிர்தமோ, தையல் – புதுமைப் பெண்ணே, இங்கே - இப் பாரத நாட்டில், வாழ்க – வாழ்வாயாக, பல்லாண்டு - பல்லாண்டு வாழ்வாயாக என்பதாம்.*

**விளக்கம்:** புதுமைப் பெண் மாதர்க்குச் சுதந்திரம் உண்டெனக் கூறிய புதுமைக் குரலைக் கேட்ட பாரதியார் மிகமிக வியப்படைந்து விட்டார். பெண் குலத்தை அடிமைப் படுத்திய அடிமைப் பாரதத்தில் தோன்றிய புதுமைப் பெண் எழுப்பிய உரிமைக் குரலின் இனிமை, நாரதனின் வீணையிலே தோன்றிய இன்னிசை வெள்ளமோ, கண்ணபிரானின் புல்லாங் குழலில் நின்று பெருகும் இன்னிசை இன்பமோ, வேதம், அழகிய பெண்ணுருத்தாங்கி எழுந்தருளிப் பாரத மக்கள் உய்ந்து ஈடேறும் வண்ணம், சொல்லிய பொருளுரைகளோ, அல்லது சாதலும் மூப்பும் இல்லாத அமரர் வாழ்வை அளிக்கும் அமிழ்தமோ என்றெல்லாம் பாரதியார் பாராட்டி உரைக்கின்றார். புதுமைப் பெண் எழுப்புகின்ற சுதந்திரக் குரலால் அடிமைப் பாரதம் விடுதலை உணர்ச்சி பெற்றெழுந்துவிடும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே,
சிறிய தொண்டுகள் தீர்த்தடி மைச்சுருள்
தீயி லிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கை கூறும் நவீனங்கள் கேட்டிரோ! 3

பொருள்: நறிய-நறுமணம் (வாசனை) கமழ்கின்ற, பொன் மலர் - அழகிய மலர்போன்ற, மென்சிறு வாயினால்-மென்மையான சிறிய வாயினால், நங்கை - இளமை நலங்கனிந்த புதுமைப் பெண்ணானவள், கூறும் - சொல்கின்ற, நவீனங்கள் - (அடிமைப் பாரதத்திற்கு) மிகமிகப் புதியனவாய உரைகளை, கேட்டிரோ-கேட்டீர்களோ (கேளுங்கள்), அறிவு கொண்ட - பகுத்தறிவு கொண்ட, மனித உயிர்களை - மக்களினத்தை, அடிமையாக்க - (என்றும்) தமக்கு அடிமைகளாக இருக்கும் வண்ணம் அடக்கி வைக்க, முயல்பவர் - முயல்கின்றவர்கள், பித்தராம் - அறிவிலிகளேயாவர், நெறிகள் யாவினும் – (அறநூல்களிற் கூறிய) பல வழிகளிலும், மானிடர் - மக்கள், மேம்பட்டு-மேன்மை பெற்று, நேர்மைகொண்டு - நீதி என்னும் நடுநிலைமையையே தமக்குறுதுணையாகக்கொண்டு வாழ்ந்து, உயர் தேவர்கள் ஆதற்கே - உயர்ந்த (சிறந்த) அமரர்களாகுதற்கு, சிறிய தொண்டுகள் – சிறிய அடிமைச் செயல்களைச் செய்து (மானமின்றி) வாழ்கின்ற நிலைமையை, தீர்த்து - அறவே விட்டு, அடிமைச்சுருள் - (பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நிலவும்) அடிமைத் தளையென்னும் தொடரினை, தீயில் இட்டு - நெருப்பிலே போட்டு, பொசுக்கிட வேண்டுமாம் – எரித்துவிட வேண்டுமாம் என்க.

**விளக்கம்:** இக் கவிதையில் புதுமைப் பெண்ணின் உரிமை வேட்கை உரைகளை மிக ஆர்வமுடன் எடுத்துரைக்கின்ற பாரதியாரின் சுதந்திர தாகத்தைக் காண்கின்றோம்.



மக்களை மக்கள் அடிமைப்படுத்த முயல்கின்ற அறியாமையைப் புதுமைப்பெண் எள்ளி நகையாடுகின்றாள். சிறிய அடிமைகளாய் அடக்கப்பட்டுத் தொண்டுபுரிந்து வாழ்கின்ற அடிமை நிலையை இல்லாமல் எரித்துவிடவேண்டும் எனக் கூறுகின்ற புதுமைப் பெண்ணின் குரலைப் பாரதியார் மிக ஆர்வமுடன் வரவேற்கின்றார்.

சிறிய தொண்டுகள் தீர்த்தடி மைச்சுருள்
தீயில் இட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்.

எனவரும் கவிதைத் தொடர்களில் புதுமைப் பெண்ணின் சுதந்திர வேட்கை அலைமோதுகின்றது.

நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்களாதற்கே

எனும் கவிதைத் தொடர்களுடன்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

எனும் திருக்குறளை ஒப்பிட்டு நோக்குக.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்;
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்;
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ! 4

பொருள்: பெண்மைத் தெய்வத்தின் - பெண்குலத்தின் தெய்வம்போல விளங்குகின்ற புதுமைப் பெண்ணின், பேச்சுக்கள் - சுதந்திரதாகம் கொண்ட மொழிகளை, கேட்டிரோ - கேட்டீர்களோ, (கேளுங்கள்) ஆணும் பெண்ணும் - ஆண்களும் பெண்களும், நிகரென - ஒருவர்க்கொருவர் ஒப்பானவர்களென்று (சம

மானவர்களென்று), கொள்வதால் - கொள்வதினால் (ஒப்புக் கொண்டு உரிமை வாழ்வு வாழ்வதால்), இவ்வையம் – இந்த நில உலகம் (இந்நிலவுலகத்திலுள்ள மக்கள்), அறிவிலோங்கி - அறிவினால் மேம்பட்டு, தழைக்குமாம் - செழிப்படையும் (ஆக்கம் பெறும்). இங்கு - இப்பாரததேசத்தில், பூணும் - தனக்கு அணிகலனாகப் பொருந்தியுள்ள, நல்லறத்தோடு – தூய தருமத் தோடு கலந்த, பெண்ணுருப்போந்து - பெண்ணின் வடிவத் தில் வந்து, நிற்பது - எமக்குக் காட்சிதந்து எம்முன் எழுந் தருளி நிற்பது, தாய்சிவசிவசக்தியாம் - உலகின் அன்னையாக விளங்கும் (சிவசக்தியாகிய) உமாதேவியாரே ஆவர், நாணும் - வெட்கமும், அச்சமும் – பயமும், (புதுமைப்பெண்ணாகிய பரா சக்திக்கு வேண்டியதில்லை) நாய்கட்கு - நாய்களுக்கே, (கீழ்த்தர மான அடிமை உணர்ச்சி கொண்டவர்களுக்கே) வேண்டுமாம்- வேண்டியனவாகும், நற்குடி - (தான் பிறந்த) நல்ல குடும்பத் தின் உயர்ந்த பண்பாடுகளை, பேணும் - பாதுகாக்கின்ற, பெண்ணின் - (சிறந்த) பெண்களின், குணங்களாம் – குணங்க ளாக விளங்குவன, ஞானம் – மெய் அறிவு, நல்லறம் - தூய தருமம், வீரசுதந்திரம் - வீரத்தோடு பொருந்திய உரிமை வாழ்வு என்பவைகளாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் புதுமைப் பெண்ணின் சிறந்த பண்புகளைப் பாரதியார் படம்பிடித்துக் காட்டுகின்றார். **வெளியில் வராமல் வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடந்து எடுத்ததற்கெல்லாம் நாணிக்கோணி நிற்கின்ற வெட்கமும், கண்டதற்கெல்லாம் நடுங்குகின்ற அச்சமும் பெண்குலத்தின் குணங்கள் அல்ல.** ஞானமும், நல்லறமும், வீர சுதந்திரமும்தான் நற்குடிப் பெண்களின் குணங் கள் ஆகுமெனப் புதுமைப்பெண் நவில்கின்றாள்.

**ஞான நல்லறம் வீர சுதந்திரம்**
**பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்**

எனப் புதுமைப்பெண் கூறுகின்ற கொள்கை பெண்குலத்தின் மேம்பாட்டை விளக்குகின்றது.



தாய்க்குலத்தை அடிமைப்படுத்தினால் சுதந்திர ஒளியைக் காண முடியாது என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்**

எனவரும் கவிதைத் தொடர்களில் பாரதியாரின் ஆர்வம் அப் படியே நிழலாடுகின்றது.

**எட்டுமறி வினிலாணுக்கிங் கேபெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி**

எனவரும் பாரதியார் கூற்றையும் இத்துடன் ஒப்பிட்டு நோக்குக.

**நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்;**
**நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய்**
**தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்**
**சால வேயரி தாவதோர் செய்தியாம்;**
**குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்;**
**கொடுமை செய்தும் அறிவை யழித்துமந்**
**நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்;**
**நங்கை கூறும் வியப்புக்கள் கேட்டிரோ! 5**

பொருள்: *நங்கை கூறும்-இளமைநலம் கனிந்த புதுமைப் பெண் சொல்கின்ற, வியப்புக்கள் – ஆச்சரியம் அடைதற்குரிய கொள்கைகளை, கேட்டிரோ - கேட்டீர்களோ (கேளுங்கள்); நிலத்தின் தன்மை-நிலத்தின் (நல்ல அல்லது கெட்ட) குணம், பயிர்க்கு - அந்நிலத்தின்கண் முளைத்த பயிருக்கும், உளதாகு மாம் – உண்டாகும், (அதுபோல), நீசத்தொண்டும் - இழிவான அடிமைத்தனமும் (வாழ்வும்), மடமையும் – அறியாமையும், கொண்டதாய் – உடைய ஒரு தாயானவள், தலத்தில் – இந்நில வுலகத்தில், மாண்புயர் – பல சிறப்புக்களையும் பெற்று மேம் பாடடையும், மக்களைப் பெற்றிடல் - நன்மக்களை ஈன்று தரு தல், சாலவே – மிகவும், அரிதாவதோர் – முடியாத ஒரு, செய்தியாம் - நிகழ்ச்சி ஆகும், குலத்து மாதர்க்கு – நற்குடியிற் பிறந்த பெண்களுக்கு, கற்பு – கற்பொழுக்கமானது, இயல்*

பாகுமாம் - (தீக்குச் சூடும், நீர்க்குக் குளிர்ச்சியும் போல)இயல்பான ஓர் குணமாகும், அந்நலத்தை - அந்த நற்பண்பாகிய கற்பொழுக்கத்தை, கொடுமை செய்தும் — வீட்டுக்குள் அடைத்து வைத்தலாகிய கொடுஞ்செயலைப் புரிந்தும், அறிவை அழித்தும் - கல்வி கற்பிக்காமல் அவர்களின் அறிவைக் கெடுத்தும், காக்கவிரும்புதல் — (கற்பில் தவறுமல் அப்பெண்களை) காப்பாற்ற விரும்புதல் (எண்ணுதல்), தீமையாம் - தீய செயலாகும்.

**விளக்கம்:** இக் கவிதையில் பெண்குலத்தின் இயல்பான பண்பாடுகளையும், அப்பண்பாடுகளைச் செயற்கை நெறியால் அடிமைபபடுத்திக் காக்க முயல்கின்ற அறியாமையையும் பாரதியார் அப்படியே எடுத்துக் காட்டுகின்றுர்.

அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்குலத்தில் ஓர் தாய், சுதந்திர எழுச்சியும் சிறந்த பண்பாடுகளும் நிரம்பிய நன் மக்களைப் பெற முடியாது என்பதைப் பாரதியார் சிறந்த உவமானமூலம் எடுத்து விளக்குகின்றுர். நிலத்தின் தன்மைக் கேற்பவே அந்நிலத்தின்கண் தோன்றும் பயிர்கள் இருப்பது போல அடிமைப்பட்டுக் கிடக்கும் ஓர் தாய் பெற்ற மக்களும் அறிவு ஆற்றலின்றி அத்தாயின் தன்மையுடையவர்களாகவே விளங்குவர்கள் என்பதாம்.

நிலத்தின தன்மை பயிர்க்குள தாகுமாம்
நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவே அரிதாவது

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது பாரதியாரின் எண்ணம் எமது உள்ளத்திலும் அப்படியே பதிந்து விடுகின்றது.

**நிலத்தின் தன்மை — உவமானம். தாயின் தன்மை — உவமேயம். தம் தன்மையைத் தாம் ஈன்றவற்ருல் பிறர்க்குப் புலனுக்குதல் — பொதுத்தன்மையாகும்.**

**பயிர் — உவமானம். மக்கள் — உவமேயம். தாம் தோன்றியவற்றின் தன்மையைத் தாமும் கொண்டிருத்தல் — பொதுத்தன்மையாகும்.**



நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்

என்பது திருக்குறள்.

நற்குடிப் பெண்களுக்குக் கற்பு இயல்பானதென்றும், அக்கற்பினைக் காத்தற்காக அவர்களை வீட்டில் அடைத்துக் கொடுமைப்படுத்துதல் கல்வி ஊட்டாமல் அவர்களின் அறிவைக் கெடுத்தல் முதலிய செயல்களைப் பாரதியார் மிகமிக வெறுக்கின்றுர்.

குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்
கொடுமை செய்தும் அறிவை யழித்துமந்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது பாரதியாரின் உணர்ச்சித் துடிப்பு எமது உள்ளத்தையும் தொட்டு அசைக்கின்றது.

சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

என்பது திருக்குறள்.

புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்
சதும றைப்படி மாந்தர் இருந்தநாள்
தன்னி லேபொது வான வழக்கமாம்;
மதுரத் தேமொழி மங்கையர் உண்மைதேர்
மாத வப்பெரி யோருட னெப்புற்றே
முதுமைக் காலத்தல் வேதங்கள் பேசிய
முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம் 6

பொருள்: புதுமைப் பெண்ணிவள் - புதுமைப் பெண்ணுகிய இவளின். சொற்களும் - சுதந்திர தாகம் கொண்ட) மொழிகளும், செய்கையும் — புதுமையான (புரட்சி கொண்ட) செய்கைகளும், பொய்மை கொண்ட - பொய்யைத் தமது வாழ்க்கை நெறியாகக்கொண்டு மக்கள் வாழ்கின்ற கலிக்கு — இந்தக் கலியுகத்திற்கு, புதிதன்றி - புதியனவாகத் தோன்றுவதல்லாமல்,

சதுமறைப்படி – நான்கு வேதங்களிற் கூறுகின்ற கொள்கைகளின்படி, மாந்தர் இருந்தநாள் தன்னில் – மக்கள் வாழ்வு நடாத்திய வேத காலத்திலே, பொதுவான – ஆண், பெண் என்னும் இருபாலாரின் வாழ்விலும் நிலவிய, வழக்கமாம் – வழக்கங்கள் ஆகும். மதுரத்தேமொழி – இனிமையான தேன் போன்ற மொழிகளைப் பேசுகின்ற, மங்கையர் – பெண்கள், முதுமைக் காலத்தில் – பழமை வாய்ந்த வேதகாலத்தில். உண்மைதேர் – மெய்ப்பொருளை ஆராய்கின்ற, மாதவப் பெரியோருடன் – பெரிய தவத்தால் மேம்பட்ட ஞானிகளாகிய முனிவர்களுடன், ஒப்புற்றே – அறிவினால் ஒத்தவர்களாய் வீற்றிருந்து, வேதங்கள் – வேதங்களின் உண்மைப் பொருளை, பேசிய – கலந்து உரையாடி ஆராய்ந்த, முறைமை – வழக்கம், மாறிட – மாற்றமடைய, கேடு விளைந்ததாம் – (இக்கலிகாலத்தில்) மக்களுக்குப் பலவகையான தீமைகளும் உண்டாயின என்பதாம்,

**விளக்கம் :** இக் கவிதையில் வேத காலத்தில் ஆண்களோடு ஒத்த உரிமையும் அறிவும் படைத்தவர்களாய்ப் பெண்களும் வாழ்ந்தார்கள் என்னும் வரலாற்று உண்மையைப் பாரதியார் வற்புறுத்திக் கூறுகின்றார்.

வேதகாலப் பெண்கள் தங்கள் தலைவர்களாகிய முனிவர்களுடன் வேத உண்மைகளை ஆராய்ந்து அறியும் ஞான பலம் படைத்தவர்களாய் விளங்கினார்கள் என்பதாம். இக் கலிகாலத்தில் வேதகால ஒழுக்கங்கள் மாறிப் பெண்கள் ஆண்களுக்கு அடிமையென்னும் இழி வழக்கு தலையெடுத்ததினால் பல தீமைகளும் பாரதநாட்டில் உளவாயின என்பதே பாரதியாரின் கருத்தாகும்.

**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;**
**அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்**
**அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை**
**உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்**
**உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!** 7



பொருள்: உதயகன்னி – புதுமையாகத் தோன்றிய புதுமைப் பெண்ணானவள், உரைப்பது – சொல்கின்றவைகளை, கேட்டிரோ – கேட்டீர்களோ (கேளுங்கள்). நிமிர்ந்த நன்னடை – (மனத்தில் களங்கம் இல்லாமல் உண்டாகும் பெருமிதம் புலனாகும் வண்ணம்) நிமிர்ந்து நடக்கின்ற நல்ல நடை அழகும், நேர்கொண்ட பார்வையும் – (மனம் பலதிறப்பட்டு நிலையின்றி அலையாமல் ஒரு வழி நிற்பதால் உளவாகும்) நேரான கண் நோக்கமும் (பார்வையும). நிலத்தில் – இந்நிலவுலகத்தில், யார்க்கும் – எவர்க்கென்றாலும், அஞ்சாத – அச்சம் கொள்ளாத, நெறிகளும் – ஒழுக்கங்களும், திமிர்ந்த – நிறைந்த (பரிபூரணப்பட்ட), ஞானச் செருக்கும் – மெய்யறிவுத் திறத்தினால் ஏற்பட்ட செம்மாப்பும், இருப்பதால் – தங்களிடம் நிலைபெற்றிருப்பதால், செம்மை மாதர் – செம்மையான நெறிகளைக் கைக்கொண்ட பெண்கள், திறம்புவது இல்லையாம் – தங்களுக்குரிய ஒழுக்கத்தில் நின்றும் தவறுதல் உண்டாகாதாம், பேரிருளாம் – மிகப்பெரிய இருளென்று சொல்லப்படுகின்ற, அறியாமையில் – அறிவிலாமை ஆகிய கடலில், அமிழ்ந்த – மூழ்கிக்கிடந்து. அவலமெய்தி – பெருந் துன்பங்களை அடைந்து, கலையின்றி – கல்வி அறிவென்னும் கலை உணர்ச்சி சிறிதும் இல்லாமல், வாழ்வதை – வாழ்கின்ற இழிநிலையை, உமிழ்ந்து தள்ளுதல் – வெறுத்து நீக்குதல், பெண்ணறம் ஆகுமாம் – பெண்குலத்துக்கு உரிய தருமச் செயலாகுமாம் என்க

**விளக்கம் :** இக்கவிதையில் பெண்களிடத்தில் அமைய வேண்டிய சிறந்த பண்புகளைப் பாரதியார் மிகத் திறம்படக் கூறியுள்ளார். நடையிலும் பார்வையிலும் **ஓர் பெண்ணின் களங்கமில்லாத தூய உள்ளம் அப்படியே புலனாகும் என்பது பாரதியாரின் கருத்தாகும்.** நடையை **நிமிர்ந்த நன்னடை** என்றும், பார்வையை **நேர்கொண்ட** பார்வை என்றும் பாரதியார் சிறப்பித்துக் கூறுகின்றார்.

நிறைந்த ஞானச் செருக்கும் எவர்க்கும் அஞ்சாத ஒழுக்க நெறியும் படைத்த பெண்கள் ஒருபொழுதும் தமது செம்மை வாய்ந்த ஒழுக்க நெறியில் தவறமாட்டார் எனப் பாரதியார் மிகுந்த ஆர்வத்துடன் மொழிகின்றார்.

**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்.**

எனும் இக்கவிதைத் தொடர்களால் புதுமைப் பெண்ணின் நிலைதிரியாத அக உணர்ச்சிகளை அப்படியே பாரதியார் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

அறியாமையில் மூழ்கிக் கிடந்து கல்வி அறிவு சிறிதும் இல்லாமல் அவலம் அடைகின்ற அடிமை வாழ்வை வெறுத்துத் தள்ளி உரிமைப் போர் ஆற்றுதலே பெண் குலத்துக்குச் சிறந்த அறமாகும் எனப் பாரதியார் புகல்கின்றார்.

**உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்**
**ஓதுபற்பல நூல்வகை கற்கவும்,**
**இலகு சீருடை நாற்றிசை நாடுகள்**
**யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே**
**திலக வாணுத லார்நங்கள் பாரத**
**தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்;**
**விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை**
**வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம், 8**

பொருள்: *உலக வாழ்க்கையின் - உலகியல் வாழ்வில் அமைந்துள்ள, நுட்பங்கள் தேரவும் - புதிய புதியனவாய் இன்றைய நூற்றாண்டில் அமையும் வாழ்வின் நுட்பவழிகளை ஆராய்ந்து அறியவும், ஓது - (பிறநாடுகளில் ஆராய்ந்து), கற்கப்படுகின்ற, பற்பல - பலதிறப்பட்ட கலைகளைப்பற்றி விளக்கும், நூல்வகை - பலதிறப்பட்ட அறிவு நூல்களை, கற்கவும் - ஆராய்ந்து கற்றுணரவும், இலகு - விளங்குகின்ற, சீருடை - சிறப்புப் பொருந்தியனவாய் விளங்கும், நாற்றிசை - நான்கு பக்கங்களிலும் உள்ள, நாடுகள் யாவும் சென்று - நாடுகள் எல்லாவற்றிற்கும் சென்று அவ்வவற்றில் உள்ள, புதுமை - புதுமையான கலை நுட்பங்களை, இங்கே - இப் பாரத நாட்டின் கண், கொணர்ந்து - கொண்டுவந்து பரப்பி, திலகவாணுதலார் - பொட்டணிந்த அழகிய ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்கள், நங்கள் - எங்களுடைய, பாரததேசம் - பாரதநாடு, ஓங்க - உயர்ச்சிபெற, உழைத்திடல் வேண்டுமாம் - முயற்சி செய்தல் வேண்டுமாம், விலகி - நாட்டு விடுதலை முதலியவற்றில் பங்குபற்றாமல் ஒதுங்கி, வீட்டில் - வீட்டின்கண் உள்ள, ஓர் பொந்தில் - ஓர் மறைவான இடத்தில், வளர்வதை - ஒளித்திருந்து வாழ்வதை, வீரப்பெண்கள் - சுதந்திர உணர்ச்சியும், புதுமை வேட்கையும் கொண்ட வீரப்பெண்மணிகள், விரைவில் - மிகவிரைவாக, ஒழிப்பராம் - நீக்குவார்களாம் என்க.*



**விளக்கம்:** இக் கவிதையில் உரிமை வேட்கை கொண்டெழுந்த புதுமைப் பெண்குலத்தின் அரிய செயல் திட்டங்களைப் பெரிய வேட்கையுடன் கூறுகின்ற பாரதியாரின் சுதந்திரத் துடிப்பைக் காண்கின்றோம்.

உலக வாழ்வில் பெண்கள் ஒதுங்கி இருக்கும் நிலைமையை உதறித்தள்ளிப் புதுப்புது வகையாய் வளர்ந்துவரும் வாழ்க்கை நுட்பங்களைப் பெண்கள் ஆராய்ந்து தெளியவேண்டும் என்றும், பலதிறப்படப் பரந்து விரிந்து கிடக்கும் அறிவுக் கலைத்துறை நூல்களைப் பெண்கள் ஆராய்ந்து கற்க வேண்டும் என்றும், பெண்கள் பிறநாடுகள் எல்லாம் சென்று அங்கங்கு புதுமையாக விளங்கும் ஆய்வுக்கலை ஆக்கங்களைக் கொணர்ந்து பாரதநாட்டில் பரப்ப வேண்டுமென்றும், வீட்டின் ஓர் புறத்திலே ஒதுங்கி வாழும் பெண்களின் அடிமைத்தளையை அறுத்து விடுதலை உணர்ச்சியை வித்திட்டு விளைவு செய்யும் அரும் பணியில் பாரத நாட்டு வீரப் பெண்மணிகள் விரைவில் ஈடுபடவேண்டும் என்றும் பாரதியார் விரும்புகின்றார்.

**விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை**
**வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.**

எனும் கவிதைத் தொடர்களில் பாரதியார் உள்ளத்திலே தோன்றி அலைமோதுகின்ற பெண்கள் விடுதலை பெறவேண்டும் என்னும் உணர்ச்சி அப்படியே கிடந்து நிழலாடுகின்றது.

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்;
சவுரி யங்கள் பலபல செய்வராம்;
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்:
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்;
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்;
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ! 9

**பொருள்:** இளைய நங்கையின் - இளமை நலங்கனிந்த புதுமைப் பெண்ணின், எண்ணங்கள் - மனக் கருத்துக்களை, கேட்டிரோ — கேட்டீர்களோ (கேளுங்கள்), பலபல — (புதுமைப் பெண்கள்) பலவேறு வகைப்பட்ட, சாத்திரங்கள் - அறிவுக் கலைகளை, கற்பராம் - ஆராய்ந்து படிப்பார்களாம், பலபல - பலவேறு வகைப்பட்ட, சவுரியங்கள் - வாழ்க்கைக்கான சுகவழிகள், செய்வராம் — (ஆராய்ந்து) ஆக்குவார்களாம், மூத்த-மிகப் பழமைப்பட்டு முதிர்ந்த, பொய்மைகள் - பொய்யான கட்டுப்பாடுகள், யாவும் - எல்லாவற்றையும், அழிப்பராம் - இல்லாமல் தொலைத்து விடுவார்களாம், மூடக்கட்டுக்கள் - அறியாமையோடு கலந்த மூடக்கட்டுப்பாடுகள், யாவும் - எல்லாவற்றையும், தகர்ப்பராம் - நொறுக்கி விடுவார்களாம், மானிடர் - மக்களின், செய்கையனைத்தையும் - செயல்கள் எல்லாவற்றையும், காத்து - (தீமை கலவாத வண்ணம்) காப்பாற்றி, கடவுளர்க்கு - தெய்வங்களுங்கு, இனிதாக - இன்பந்தரும் செய்கைகளாக, சமைப்பராம் - ஆக்குவார்களாம், ஆண்மக்கள்—ஆண்கள், ஏத்தி — புகழ்ந்து, போற்றிட — பாராட்டி உரைக்கும் வண்ணம், வாழ்வராம் - (புதுமைப் பெண்களாகிய தாங்கள்) வாழ்வார்களாம் என்க.

**விளக்கம்:** இக்கவிதையில் புதுமைப் பெண்கள் தம்மை ஆக்கி நாட்டையும் நன்னிலை பெறச் செய்தற்காக மேற்கொள்ளும் செயல் திட்டங்களைப் பாரதியார் மிக இறுமாப்புடன் இயம்புகின்றார்.

புதுமைப் பெண்கள் பல கலைகளையும் கற்று அறிவில் சிறந்தவர்களாய் விளங்கியும், மூடக் கட்டுப்பாடுகளை முறி



யடித்தும் மக்கள் புரியும் செயல்களை எல்லாம் கடவுளுக்கு இனிதாகப் புரியும் வண்ணம் காப்பாற்றியும், ஆண்மக்கள் புகழ்ந்து போற்றிட நல்வாழ்வு வாழவேண்டும் என்பதே பாரதியாரின் உள்ளக் கருத்தாகும்.

மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்;
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்;

எனும் இக்கவிதைத் தொடர்களில் பாரத நாட்டுப் பெண்குலத்தை அடிமையாக்கும் பொய்க் கட்டுப்பாடுகளையும் மூடக் கொள்கைகளையும் தொலைத்து பெண்களுக்கு விடுதலை அளிக்க வேண்டுமெனப் பாரதியார் உள்ளத்தில் நீண்ட நாட்களாக நிலை பெற்றுள்ள பெருவேட்கை அப்படியே புலனாகின்றது.

போற்றி, போற்றி! ஜயஜய போற்றி! இப்
புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே!
மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னை, நல்
அருளி னாலொரு கன்னிகை யாகியே
தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள்
செல்வம் யாவினும் மேற்செல்வம் எய்தினோம். 10

**பொருள்:** போற்றி, போற்றி — வணக்கம், வணக்கம், ஜய, ஜய - வெற்றி உளவாகுக, வெற்றி உளவாகுக, போற்றி- வணக்கம், இப்புதுமைப் பெண்ணொளி - இந்தப் புதுமைப் பெண் பரப்புகின்ற சுதந்திர ஒளியானது, இங்கே - இந்தப் பாரதநாட்டின்கண், வாழி பல்லாண்டு - பலபல ஆண்டுகள் நிலைபெற்று வாழ்வதாக, வையம் — இந்நிலவுலகத்தை, மாற்றி- (அறியாமையோடு கூடிய நிலையில் நின்றும்) வேறுபடுத்தி, புதுமையுறச் செய்து - புதிய வீறு பெற்றுப் பொலியும் வண்ணம் செய்து, மனிதர் தம்மை - மக்களினத்தை, அமரர்களாக்கவே - (அவர்களின் அறியாமையை நீக்கி) தேவர்களாக ஆக்கி வாழ்வளிக்கும், ஆற்றல் கொண்ட - அருள் ஆற்றல் (வல்லமை) படைத்த, பராசக்தி அன்னை - பராசக்தி என்னும் திருப்

**பெயரை உடைய உலகமாதா ஆனவள், நல்லருளினால்-(சிறப்பாகப் பாரத மக்களையும் பொதுவாக உலக மக்களையும் ஈடேற்ற வேண்டும் என்று எண்ணிய) நல்ல கருணையால், ஒரு கன்னிகை ஆகியே - புதுமைப் பெண் என்னும் பெயரையுடைய ஓர் இளம் கன்னியாக எழுந்தருளி, தேற்றி - எமக்கு ஆறுதல் சொல்லி, உண்மைகள் கூறிட - உண்மைக் காரணங்களை எடுத்துரைத்து எம்மை ஈடேற்ற, வந்திட்டாள் - வந்திருக்கின்றாள், (அவளின் வருகையினால், செல்வம் யாவினும் - நாங்கள் பெறவேண்டிய செல்வங்கள் எல்லாவற்றினும், மேற் செல்வம் - சிறந்ததாக விளங்குகின்ற சுதந்திர வாழ்வு என்னும் செல்வத்தை, எய்தினோம் - அடைந்துவிட்டோம் என்க.**

**விளக்கம்:** இக் கவிதையில் புதுமைப் பெண்ணாக எழுந்தருளி வந்தவள் கருணையே உருவமாகிய அன்னை பராசக்தியே தான் எனச் சொல்லி மகிழ்கின்ற பாரதியாரின் கவிதை உள்ளத்தைக் காண்கின்றோம்.

அன்னை பராசக்தியானவள் தனது பெருங்கருணைப் பெருக்கினால் அடிமைத் தளையில் அகப்பட்டுக் கிடந்து அல்லல் உறும் மக்கள் உள்ளத்தில் விடுதலை உணர்ச்சி எழும் வண்ணம் நல்லறிவு கொடுத்து அவர்களை அமரர்களாகப் புதுக்கி அருளும் வண்ணம் புதுமைப் பெண்ணாக எழுந்தருளி வந்தாள் என்பதே பாரதியாரின் உள்ளக் கருத்தாகும்.

**ஆற்றல் கொண்ட பராசக்தி அன்னை, நல்**
**அருளினாலொரு கன்னிகை யாகியே**
**தேற்றி உண்மைகள்கூறிட வந்திட்டாள்.**

எனும் இக்கவிதைத் தொடர்களைப் படிக்கும் பொழுது எழுகின்ற ஓசைப்பெருக்கு பாரதியாரின் உள்ளத்துடிப்பையும் ஆர்வச் செழிப்பையும் அப்படியே எடுத்துக் காட்டுகின்றது.

———



## 6. தொழில்

சுதந்திர பாரதத்தைத் தமது கவிதை உலகிற் படைத்து மகிழ்கின்ற பாரதியார் பலவகைத் தொழில்களும் பாரதநாட்டில் வளரவேண்டுமென வற்புறுத்துகின்றார். எதற்கும் பிறநாடுகளை எதிர்பார்த்திருக்கின்ற நிலைமை மாறி எமக்கு வேண்டிய கருவிகளையும், பிற பொருள்களையும் நாமே நமது நாட்டில் செய்துகொள்ள வேண்டுமென்பதே பாரதியாரின் எண்ணமாகும். தொழில் இன்றி சோம்பிக்கிடக்கும் மக்கள் உள்ள நாடு, சுதந்திரம் பெற்றாலும் அடிமை நாடென்றே கருதப்படும் என்பதைப் பாரதியாரால் மறக்க முடியவில்லை. **உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்து இருப்போரை நிந்தனை செய்வோம்** எனப் பாரதியார் கூறியுள்ள மொழிகளையும் நோக்குக.

இக் கவிதைகளில், தொழிலின் மேம்பாட்டை விளக்கிப் பலவகையான தொழில்களையும் குறிப்பிடுகின்றார். தொழிலில் உயர்வு தாழ்வு பார்க்கக்கூடா தென்பதே பாரதியாரின் உயிர்க் கொள்கையாகும். மூலப்பொருள்கள் நிரம்பிய பாரதநாட்டில் பலவகைத் தொழில்களும் செய்தற்கேற்ற வாய்ப்புகளும் சூழ் நிலையும் இருக்கின்றன என்னும் எண்ணத்தினால் பாரதியார் அன்று கூறிய செயல் திட்டங்கள் எல்லாம், இன்றைய சுதந்திர பாரதத்தில் செயலாகி வருவதைக் காணக்காணப் பாரதியாரின் கவிதை உள்ளத்தின் மாண்பு புலனாகின்றது.

**இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!**
**யந்திரங்கள் வகுத்திடு வீரே!**
**கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!**
**கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!**
**அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்**
**ஆயிரந் தொழில் செய்திடு வீரே!**
**பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்**
**பிரம தேவன் கலையிங்கு நீரே!**

பொருள்: *இரும்பைக் காய்ச்சி - இரும்பை உருக்குலையில் இட்டுக் காய்ச்சி, உருக்கிடுவீரே - உருக்குங்கள், (அங்ஙனம் உருக்கிய இரும்பினால்) யந்திரங்கள் - பலதிறப்பட்ட கருவிகளை, வகுத்திடுவீரே - ஆக்குங்கள், கரும்பை - கரும்பினை யந்திரத்தில் இட்டு, சாறு பிழிந்திடுவீரே - (அதன்) சாற்றைப் பிழிந்தெடுங்கள், கடலில் - கடலின் ஆழமான இடத்தில், மூழ்கி - சுழி ஓடிச்சென்று, நன் முத்தெடுப்பீரே - நல்ல முத்துக்களை எடுங்கள், அரும்பும் வேர்வை - உடம்பின்கண் நின்று தோன்றுகின்ற வேர்வையை, உதிர்த்து - கொட்டிய வண்ணம், புவிமேல் - இந்நிலவுலகத்தில், ஆயிரம் தொழில் - ஆயிரம் வகையான தொழில்களை, செய்திடுவீரே - ஆற்றுங்கள். பெரும்புகழ் - அழியாத பெரும் புகழுரைகளை, உமக்கே - உங்களுக்கே, இசைக்கின்றேன் - உரியதாக மொழிகின்றேன். (அது என்னவெனில்) இங்கு-பாரதநாட்டில், பிரமதேவன் - படைப்புக் கடவுளாகிய நான்முகனின், கலை - படைப்புக் கலையை வளர்க்கின்ற (அவளின் வழித்தோன்றல்கள்); நீரே - நீங்களே என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் பலவகைத் தொழில்களையும் செய்யும்வண்ணம் பாரதநாட்டு மக்களை ஊக்கிப் பாராட்டுகின்ற பாரதியாரின் எழுச்சிக் குரலைக் கேட்கின்றோம். இரும்பை உருக்குங்கள், யந்திரங்களை ஆக்குங்கள் கரும்பில் சாறெடுங்கள், கடலில் மூழ்கி முத்தெடுங்கள், என்றெல்லாம் ஒவ்வொரு தொழிலையும் செய்து நாட்டின் ஆக்கத்தை வளர்க்கும் வண்ணம் பாரதநாட்டு மக்களைப் பாரதியார் அறைகூவி அழைக்கின்றார்.

**அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்**
**ஆயிரந் தொழில் செய்திடு வீரே!**

எனும் இக் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை பாரதியார் உள்ளத்தில் கிடந்து அலைமோதுகின்ற தொழில் ஊக்கச் செயல் திட்டங்களை அப்படியே எமதுள்ளத்திலும் பதித்துவிடுகின்றது.



**மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!**
**மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!**
**உண்ணக் காய்கனி தந்திடு வீரே!**
**உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!**
**எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!**
**இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!**
**விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!**
**மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே! 2**

பொருள்: *மண்ணெடுத்து - நிலத்தின் மண்ணைத் தோண்டி எடுத்து, குடங்கள் செய்வீரே - குடங்கள் முதலியவற்றை வனையுங்கள், மரத்தை வெட்டி - மரங்களை அறுத்து, மனை செய்குவீரே - வீடுகளைக் கட்டுங்கள், உண்ண - உண்ணுதற்கு, காய்கனி-காய்களையும் பழங்களையும், தந்திடுவீரே-உண்டாக்கித் தாருங்கள், நன்செய் - நல்ல வயல் (விளை) நிலங்களை, உழுது - உழுது பண்படுத்தி, பயிர் இடுவீரே - நெல், கோதுமை முதலியவைகளை விதைத்துப் பயிராக்கி விளைவுசெய்யுங்கள். எண்ணெய் - எள்ளை விளைவுசெய்து நல்ல எண்ணெயினையும், பால் நெய் - பசுக்கள் எருமைகள் என்பவற்றை வளர்த்துப் பால் நெய் (வெண்ணெய்) முதலியவற்றையும், கொணர்ந்திடுவீரே- உளவாக்கிக் கொடுங்கள். இழையை நூற்று - பஞ்சை நூலாக நூற்று, நல்லாடை - நல்ல சேலை முதலிய உடைவகைகளை, செய்வீரே - நெசவு செய்யுங்கள், எமை - எங்களை, விண்ணின் நின்று - வானுலகத்தில் நின்று, வானவர் - தேவர்கள், காப்பார் - காப்பாற்றுவார்கள், பார்மிசை - இந்த நிலவுலகத்தின் கண், மேவி - தங்கி நின்று, காப்பவர் - மக்களினத்தைப் பாதுகாக்கின்றவர்கள், நீரே - (உழவும் தொழிலும் புரிகின்றவர்களாகிய) நீங்களே என்பதாம்.*

**விளக்கம்:** இக்கவிதையில், உழவும் தொழிலும் புரிகின்றவர்களே இவ்வுலகத்தைப் பாதுகாக்கின்றவர்கள் எனக் கூறி மகிழ்கின்ற பாரதியாரின் பெருமிதத்தைக் காண்கின்றோம்.

பிறநாட்டில் இருந்து வருகின்ற பாத்திரங்களையும் மரத்தை அறுத்துச் செய்யும் பலதிறப்பட்ட பொருள்களையும் (தளபாடங்களையும்) உணவுப் பொருள்களையும், எண்ணெய், பால், நெய் முதலியவற்றையும், உடைகளையும் எதிர்பார்த்திராமல் எங்கள் நாட்டிலேயே எங்களுக்கு வேண்டிய இப்பொருள்களை யெல்லாம் ஆக்குங்கள் எனப் பாரதியார் ஊக்குகின்றார்.

வானுலகத்தில் நின்று தேவர்கள் உலக மக்களைக் காப்பாற்றுகின்றார்கள். மண்ணுலகத்தில் நின்று உலக மக்களாகிய எங்களைக் காப்பாற்றுகின்ற தேவர்கள் உழவும் தொழிலும் புரியும் தொழிலாளப் பெருமக்களாகிய நீங்களே, எனப் பாரதியார் தொழில் ஆற்றும் மக்களைப் பாராட்டியுரைக்கின்றார்.

**விண்ணி னின்றெமை வானவர் காப்பார்**
**மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே**

எனவருங் கவிதைத் தொடர்களைப் படிக்கின்றபொழுது எழுகின்ற பெருமிதச்சுவை பாரதியார் தொழிலாளர்மேற் கொண்டுள்ள பெருமதிப்பைப் புலனாக்குகின்றது.

**“உழுவார் உலகத்தார்க் காணி அஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து”**

எனவரும் திருக்குறளையும் நோக்குக.

**பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!**
**பரத நாட்டியக் கூத்திடு வீரே!**
**காட்டும் வையப் பொருள்களின் உண்மை**
**கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!**
**நாட்டி லேயறம் கூட்டி வைப்பீரே!**
**நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே!**
**தேட்ட மின்றி விழியெதிர் காணும்**
**தெய்வ மாக விளங்குவிர் நீரே!**





பொருள்: பாட்டும் – இசைப்பாக்களையும், செய்யுளும் – இலக்கியப் பாக்களையும், கோத்திடுவீரே–இயற்றுங்கள், (கோத்திடுதல்-தொடுத்து யாத்தல்) பரதநாட்டிய – பரதநாட்டியம் எனச் சொல்லப்படுகின்ற, கூத்திடுவீரே – கூத்தையும் (நன்கு) ஆடிப் பயிலுங்கள், காட்டும்-காணப்படுகின்ற (தோற்றுகின்ற) வையப் பொருள்களின் – உலகின்கண் உள்ள இயற்கைப் பொருள்களில் அமைந்துள்ள, உண்மை – இயல்பான தன்மைகளை, கண்டு - புதிதாக ஆராய்ந்து கண்டு, சாத்திரம் – புத்தகம் புதிய விஞ்ஞான சாத்திர நூல்களை (அறிவியற் கலைநூல்களை) சேர்த்திடுவீரே – (பாரதநாட்டின் அறிவுக்கொடையாக) இயற்றுங்கள். (சேர்த்தல் – புதிதாகத் தமது எண்ணத்தில் தோன்றிய சாத்திர உண்மைகளை ஒழுங்குபடுத்தி ஒருசேரத் தொகுத்து நூலாக்குதல்) நாட்டிலே – (எமது) பாரதநாட்டின்கண்ணே, அறம் – தருமநெறியை, கூட்டிவைப்பீரே - (நிலைதிரியாமல்) வளர்த்துப் பாதுகாத்து வையுங்கள், (கூட்டுதல் – வளர்த்தல்) நாடும் – (மக்கள்) விரும்புகின்ற, இன்பங்கள் – வாழ்க்கை நலங்கள் (வசதிகள்) என்னும் இன்பங்கள் யாவற்றையும், ஊட்டி வைப்பீரே - (முட்டின்றிப்பெற்று) நுகரும் வண்ணம் செய்யுங்கள், (இங்ஙனமெல்லாம் மக்களுக்கு வாழும் வாய்ப்புக்களை நீங்கள் வழங்குவீர்களானால்) தேட்டம் இன்றி – தேடுதல் இல்லாமல், விழிஎதிர் – கண்ணின் முன்னே. காணும்– தோன்றுகின்ற, (கண்கண்ட) தெய்வமாக - தெய்வம்போல, நீரே – நீங்கள், விளங்குவீர் - (எம்மால் மதிக்கப்பட்டு) சிறந்து வாழ்வீர்கள் என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில், பல கலைகளைக் கற்றும், புதிய சாத்திரங்களை ஆக்கியும், அறநெறியைப் பாதுகாத்தும் பாரத தேசத்தின் மேம்பாட்டை வளர்க்கின்றவர்களே கண்கண்ட தெய்வங்களாவார் எனப் போற்றிப் புகழ்கின்ற பாரதியாரின் எழுச்சியைக் காண்கின்றோம்.

இசைப் பாட்டுக்களும் இலக்கியப் பாட்டுக்களும் மக்கள் உள்ளத்தை அள்ளிப் புதிய இன்பத்தையும் எழுச்சியையும் பண்பாட்டையும் வளர்ப்பனவாகலின்,

**பாட்டும் செய்யுளும் கோத்திடுவீரே**

எனப் பாரதியார் ஆர்வக் குரலெழுப்பி அறைகின்றார்.

உலகிற் காணப்படும் பலதிறப்பட்ட பொருள்களில் இயற்கையாகவே அமைந்துகிடக்கும் உண்மைகளை ஆராய்ந்து கண்டு, பல அறிவியற் கலை நூல்களைப் பாரதமக்கள் ஆக்கி உலகிற் களிக்கவேண்டும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**வையப் பொருள்களின் உண்மை கண்டு**
**சாத்திரம் சேர்த்திடு வீரே**

எனப் பாரதியார் கூறும் பெருமிதக் குரலைக் கேளுங்கள். பாரத நாட்டின் பெருமையை நிலைநாட்டிய அறிவியற் கலைஞர்களாகிய **சகதீசசந்திரபோஸ், சேர். சி. வி. இராமன்** முதலியவர்கள் கண்டு உலகுக்களித்த புதிய சாத்திரங்களையும் பாரதியார் எமக்கு நினைவூட்டுகின்றார்.

---



# 7. தமிழ்த் தாய்

**தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்**

**(தாயுமானவர் ஆனந்தக்களிப்புச் சந்தம்)**

தமிழ்மொழி தொன்மையும் தெய்வத் தன்மையும் வாய்ந்தது. சங்கப் புலவர்களின் உள்ளத்தில் நின்று சுரந்த **பத்துப் பாட்டு எட்டுத்தொகை** என்னும் பண்பட்ட தீஞ்சுவை இலக்கியங்களை உடையது. தன்னோடொத்த பழமைவாய்ந்த பல மொழிகள் பேச்சு வழக்கில் நின்று இறந்துபடவும் தான் இன்றும் இளமை நலத்துடன் நின்று வாழ்வது.

இன்னும் தமிழ்மொழி சிறந்து உயர்தனிச் செம்மொழியாக ஓங்கி ஒளிர வேண்டுமானால் மேலைநாட்டில் வளரும் புத்தம் புதிய கலைகளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் தமிழிலும் தோன்ற வேண்டும் என்றெல்லாம் தமது உள்ளத்தில் தமிழ் மொழியின் ஆக்கங்கருதி யெழுந்த செயல் நெறிகளைத் தமிழ்த்தாய் சொல்வதுபோலப் பாரதியார் பாடிய கவிதைகள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. தமிழ்த்தாயின் குரலோடு கலந்து பாரதியார் பாடிய இக் கவிதைகள், தமிழ் மொழியின் ஆக்கங் கருதி உழைக்கின்றவர் மேற்கொள்ள வேண்டிய செயல்களை யெல்லாம் மிகத் திறம்பட விளக்குகின்றன. புதிய அருவி ஊற்றைப்போலப் பாரதியாரின் உள்ளத்துடிப்பின் வேகத்துடன் ஒன்றுபட்டுப் பாய்கின்ற இக்கவிதை வெள்ளத்தில் நாமும் மூழ்கிப் புதிய உணர்ச்சி பெறுவோமாக.

**ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை**
**ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்**
**வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை**
**மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்** 1

**பொருள்:** *என்னை - தமிழ் மொழியாகிய என்னை, ஆதி படைப்புக்காலத்தில், சிவன் - முழுமுதற் கடவுளாகிய சிவ*

பெருமான், பெற்று - ஈன்று, விட்டான் - உலகில் வாழும் வண்ணம் விடுத்தான், ஆரிய மைந்தன் - வடமொழியாகிய ஆரியத்தை உணர்ந்தவனும், வடநாட்டின்கண் இருந்து வந்த ஆரிய முனிவனும், அகத்தியன் என்றோர் - அகத்தியன் என்னும் பெயரை யுடையவனுமாகிய ஒரு, வேதியன் - அந்தணன். கண்டு - என்னுடைய இலக்கியச்செல்வத்தையும், மொழிவளத்தையும் ஆராய்ந்துகண்டு, மகிழ்ந்தே - மகிழ்ச்சி கொண்டவனாய், நிறைமேவும் - முழுத்தன்மை பொருந்திய (பூரணமான), இலக்கணம் - அகத்தியம் எனப் பெயர் கொண்ட பேரிலக்கண நூலை, செய்து கொடுத்தான் - இயற்றி எனக்கு அளித்தருளினான் என்பதாம். (ஆதிசிவன் என்பதை ஆதிபகவன் என்பது போலக் கொண்டு ஆதியாகிய சிவன் எனவும் பொருள் கொள்ளலாம்).

**விளக்கம்:** இக் கவிதையில் தமிழ் மொழியின் தந்தை சிவபெருமான் எனவும், அம்மொழிக்குப் பேரிலக்கணமியற்றியவர் அருந்தவக்கொள்கை அகத்தியனுர் எனவும், பண்டு தொட்டுவரும் வரலாற்றை அப்படியே வழிமொழிந்து மகிழ்கின்ற பாரதியாரின் ஆர்வத்தைக் காண்கின்றோம்.

சிவபெருமானே தமிழ்மொழியை தோற்றுவித்தருளினுர் என்று கூறுவது ஆன்றோர் மரபாகும். இதனை,

**இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்**

எனச் சிவஞானமுனிவர் கூறுவதாலும் உணர்க. அகத்திய முனிவர் வடநாட்டின்கண் இருந்து தமிழ் நாட்டிற்கு வந்து தமிழைப்பயின்று தமிழ்மொழிக்கு **அகத்தியம்** எனத் தன் பெயரைக்கொண்ட பேரிலக்கண நூல் ஒன்றை இயற்றி அருளினுர் எனனும் ஓர் வரலாறு பழமைதொட்டு தமிழ் நாட்டில் வழங்கிவருகின்றது.

**மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை**
**மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்**
**ஆன்ற மொழிகளி னுள்ளே - உயர்**
**ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்** 2

பொருள்: என்னை, மூன்று குலத் தமிழ் மன்னர் - சேரர் குலம், சோழர்குலம், பாண்டியர் குலம் என்று கூறப்படும்



மூன்று குலங்களிலும் தோன்றிய சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடைய மூவேந்தரும், மூண்ட - (உள்ளத்தில் நின்றும்) பெருகி எழுந்த, நல் அன்பொடு - தூய பேரன்புடன், நித்தம் - நாள்தோறும் (இடையீடின்றி) - வளர்த்தார், (சங்கம் நிறுவியும் புலவர்களை ஆதரித்தும்) வளர்த்தார்கள், ஆன்ற - உயர்தனிச் செம்மொழிகளாக வளம் படைத்து நிறைந்த, மொழிகளின் உள்ளே - மொழிகளுக்குள், உயர் - சிறந்த, ஆரியத்திற்கு - ஆரியமொழியென்று கூறப்படுகின்ற வடமொழிக்கு நிகரென - ஒப்பாகக் கூறும் வண்ணம், வாழ்ந்தேன் - உலகின்கண் நிலை பெற்று வாழ்ந்தேன் என்பதாம்.

மூன்று குலத் தமிழ் மன்னர் என்பதற்கு அக்கினி குலத்தினராகிய சேரரும், சூரியகுலத்தினராகிய சோழரும், சந்திர குலத்தினராகிய பாண்டியரும் என்றும் பொருள் கூறலாம்.

**விளக்கம்:** இக்கவிதையில், முடியுடை மூவேந்தர்களால் தமிழ்மொழி வளர்க்கப்பட்ட தென்பதும், வடமொழியோடு ஒத்த மேன்மையுடையதாய் தமிழ்மொழி நிலவுலகில் பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கிய தென்பதும் கூறப்பட்டுள்ளன.

முடியுடை மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களால் தமிழ்மொழி வளர்க்கப்பட்ட வரலாற்றைச் சங்க இலக்கியங்களால் அறியலாம். வடமொழியாகிய ஆரியத்தோடு ஒத்த பெருமையுடையதாய் அவ்வாரிய மொழியினும் வேறுபட்ட மொழியமைப்பும் இலக்கண அமைப்பும் கொண்டு விளங்கிய உயர்தனிச் செம்மொழி தமிழ் என்பதே பாரதியாரின் கருத்தாகும்.

**வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி**
**அதற்கிணையாத்**
**தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந்**
**தொழுதேத்துங்**
**குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேறுப்**
**பாகரெனில்**
**கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே**
**கணித் தறிவார்**

எனச் சிவஞான முனிவர், தமிழ்மொழியின் மேம்பாட்டை ஆரிய மொழியோடு ஒப்பிட்டுரைத்தலையும் நோக்குக.

**கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல**
**காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்**
**தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல**
**தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.** 3

பொருள்: ***கள்ளையும்*** *- தேனின்கண் (கள்ளின்கண்) உள்ள சுவையையும்,* ***தீயையும்*** *- நெருப்பின்கண் உள்ள வெம்மையையும் ஒளியையும்,* ***சேர்த்து*** *- கலந்து, (அவற்றுடன்)* ***நல்ல*** *- தூய,* ***காற்றையும்*** *- காற்றின்கண் உள்ள ஆற்றலையும்,* ***வான வெளியையும்*** *- ஆகாயவெளியின்கண் உள்ள அகலத்தையும்,* ***சேர்த்து*** *- கலந்து,* ***தெள்ளுதமிழ்ப் புலவோர்கள்*** *- சங்கத்தில் ஆய்ந்து செப்பஞ் செய்யப்பட்ட தமிழையுணர்ந்த சங்கப் புலவர்கள்,* ***பல தீஞ்சுவைக் காவியம்*** *- சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பிய இனிய இலக்கியங்களை,* ***செய்து கொடுத்தார்*** *- இயற்றி எனக்குக் கொடுத்தருளினார்கள் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் சங்கப்புலவர்கள் ஆக்கிய தீஞ்சுவை இலக்கியங்களின் பண்பைச் சிறந்தெடுத்துக் கூறுகின்ற பாரதியாரின் செம்மாப்பைக் காண்கின்றோம்.

தேனின் சுவையையும், தீயின் வெம்மையையும், ஒளியையும், காற்றின் ஆற்றலையும், வானின் அகலத்தையும், கலந்து அள்ளுசுவை இலக்கியங்களை ஆக்கி அளித்த சங்கப் புலவரின் ஆற்றலைத் தமிழ்த்தாயின் கூற்றாகக் கூறிப் பாரதியார் ஆர்வங் கொள்கின்றார்.

தேனின்கண் சுவை இயல்பாகவே அமைந்திருப்பது போல, இயல்பாகவே அமைந்துள்ள சொற்சுவையும், தீயின்கண் வெம்மையும் ஒளியும் இயல்பாகவே அமைந்திருப்பன போலத் தீமைகளை அழித்து எக்காலமும் எங்கும் நிலைபெறக் கூடிய (காலங்கடந்து வாழக்கூடிய) பொருளாற்றலும் அறிவு விளக்கமும் காற்றின்கண் இயல்பாகவே அமைந்துள்ள ஆற்றலைப் போல நிலைதிரியாத அறத்திறனும் (**என்பு இலதனை வெயில்போலக் காயுமே அன்பு இலதனை அறம்** என்பது திருக்குறள்). வானின் கண் இயல்பாகவே அமைந்துள்ள அகலத்தைப் போல அளவிடற்கரியதாய் நவில்தொறும் நவில்தொறும் புதிது புதிதான பொருள் நலத்தைப் புலனாக்கி அகன்று செல்லும் நோக்கும் உடையனவாய்ச் சங்க இலக்கியங்களும், வள்ளுவர், இளங்கோ வடிகள், கம்பர் முதலிய பிற்காலச் சான்றோரின் இலக்கியங்களும் சிறந்து விளங்குதலைக் காண்க.

இலக்கியத்திறனாய்வுப் புலமை படைத்த பாரதியார் இக் கவிதையினால் இலக்கியத்தின் நிலைபேறான பண்புகளுக்கெல்லாம் ஓர் உருவந் தீட்டியுள்ளார் என்க.

**கவிதைக் கனி பிழிந்த சாற்றிலே**
**பண் கூத்தென்னும் இவற்றின் சாரமெல்லாம்**
**ஏற்றி அதனோடு இன்னமுதைத் தான் கலந்து**
**காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்**
**மாதவனின் மேனி வகுத்தான் பிரமனென்போன்**

எனப் பாரதியார் கூறுகின்ற கவிதைத் தொடர்களுடன்,

**கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து - நல்ல**
**காற்றையும் வானவெளியையுஞ் சேர்த்து**

எனும் இத்தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக.

**சாத்திரங் கள்பல தந்தார் - இந்தத்**
**தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்**
**நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்**
**நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்** 4

பொருள்: ***சாத்திரங்கள் பல*** *- (தத்துவ உண்மைகளை உணர்ந்த ஞானிகள்) தத்துவ சாஸ்திர நூல்கள் பலவற்றை,* ***தந்தார்*** *- இயற்றித் தந்தார்கள்,* ***இந்தத் தாரணி எங்கும்*** *- (அவர்கள் அளித்த சாத்திரங்களின் சிறப்பினால்) இந்த நிலவுல*

கத்தில் உள்ள அறிஞர்கள் யாவரும், புகழ்ந்திட - பாராட்டிப் போற்றிசெய்ய, வாழ்ந்தேன் - வாழ்வு பெற்றிருந்தேன், நேத்திரங் கெட்டவன் - கண்கெட்டவனாகிய, காலன் - (கால எல்லை அறிந்து பொருள்களை அழிக்கும் காலதேவனாகிய) இயமன், தன்முன் - தனக்கு முன்னே, நேர்ந்தது - எதிர்ப்பட்டன, அனைத்தும் - எல்லாப் பொருள்களையும், துடைத்து - அழித்து, முடிப்பான் - முடிவு செய்வான் என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் காலன் என்னும் தேவனாவன் தன்முன் எதிர்ப்பட்ட பொருள்கள் எல்லாவற்றையும் அழிவு செய்யும் இயற்கை உடையவன் என்னும் உண்மை சொல்லப்படுகிறது.

காலங்கள் தோறும் தமிழகத்தில் தோன்றிய கடற்பெருக்கினால் பல அரிய தமிழ் நூல்கள் அழிந்துவிட்ட செயலைப் பாரதியார் நினைவூட்டுகின்றார்,

**நன்றென்றுந் தீதென்றும் பாரான் - முன்பு**
**நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்**
**சென்றிடுங் காட்டுவெள் ளம்போல் - வையச்**
**சேர்க்கை யனைத்தையுங் கொன்று நடப்பான் 5**

பொருள்: நன்றென்றும் - இந்நூல்கள் (அல்லது பொருள்கள்) மிக நல்லன என்றோ, தீதென்றும் - (இப்பொருள்கள்) மிகத் தீயன என்றோ, பாரான் - (அக்காலதேவன்) ஆராய்ந்து பாரான், முன்பு - தனக்கு முன்னே, நாடும் - காணப்படுகின்ற (தோன்றுகின்ற), பொருள்கள் அனைத்தையும் - பொருள்கள் எல்லாவற்றையும், வாரிச் சென்றிடும் - அள்ளிச் செல்கின்ற, காட்டுவெள்ளம் போல் - அடங்காமல் பெருக்கெடுத்து வருகின்ற பெரும் வெள்ளத்தினைப்போல, வையச்சேர்க்கை - உலகின்கண் தங்கியுள்ள பொருள்கள். அனைத்தையும் - முழுவதையும், கொன்று - அழித்து, நடப்பான் - (அக்காலதேவன்) செல்வான் என்பதாம்.

**(காட்டுவெள்ளம் என்பது, உயர்ந்த மரங்களும் மலைகளும் உள்ள காட்டில் கொட்டுகின்ற பெருமழையினால் பெருகி ஓடுகின்ற வெள்ளத்தைக் குறிக்கின்றது. காட்டு மழைபோல எனும் வழக்கையும் நோக்குக.)**



**விளக்கம்:** இக் கவிதையில், காலதேவன் செய்யும் அழிவின் மிகுதி சொல்லப்படுகின்றது.

காலதேவன் பொருள்களின் சிறப்பு, சிறப்பின்மை என்னும் பண்புகளை நோக்கி அழிக்கின்றவனல்லன் காட்டுவெள்ளம் பெருகி தன்முன் அகப்பட்ட பொருள்களை எல்லாம் அப்படியே வாரிக்கொண்டு செல்வதைப்போலவே காலதேவனும் உலகில் உள்ள பொருள்களையெல்லாம் அழிக்கும் இயல்புடையவன் என்பதாம்

**காட்டுவெள்ளம் — உவமானம், காலதேவன் — உவமேயம். தம்முன் அகப்பட்ட அனைத்தையும் அழித்தல் — பொதுத்தன்மையாகும்.**

தமிழகத்தில் காலதேவன் என்னும் இயமன் கடற்பெருக்கினாலேயே பொருள்களை வாரி அழிவு செய்துள்ளான் என்பதே ஆராய்ச்சியாளர் முடிபாகும். முப்பெரும் கடல்கோள்கள் அடுத்தடுத்துத் தமிழகத்தில் நிகழ்ந்தன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றார்கள். இங்ஙனம் தமிழகத்தில் நிகழ்ந்த கடல்கோள்களால் அரும்பெருந் தமிழ் நூல்கள் பல அழிந்தொழிந்தன என்பதைத் தமிழ் அன்னையின் கூற்றாகக் கூறிப் பாரதியார் மிகக் கவலைப்படுகின்றார்.

**பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**

எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுவதையும் நோக்குக.

**கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்**
**காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்**
**என்னென்ன வோபெய ருண்டு - பின்னர்**
**யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்! 6**

பொருள்: அந்நாள் - (யான் மிகச் செழிப்புடன் இருந்த) அந்தப் பண்டைக்காலத்தில், கன்னிப் பருவத்தில் - என் கட்டிளமைப் பருவத்திலே, என்றன் காதில் விழுந்த - என் காதினால்

கேள்விப்பட்ட, திசைமொழி எல்லாம் - திசைமொழிகளுக்கெல்லாம், என்னென்னவோ பெயருண்டு - என்னென்னவோ பல திறப்பட்ட பெயர்கள் வழங்கின, பின்னர் - காலஞ்செல்ல, யாவும் - அத்திசைமொழிகள் எல்லாம், அழிவுற்று - (காலதேவனால்) அழிக்கப்பட்டு, இறந்தன - சுவடும் இல்லாமல் செத்துவிட்டன, கண்டீர் - இவ்வுண்மையைத் தெளிந்து கொள்வீராக என்பதாம்.

**விளக்கம்**: இக் கவிதையில், தமிழ்மொழியோடு ஒத்த பழமை வாய்ந்தனவாய்ப் பண்டைக்காலத்தில் வழங்கிய பல திசைமொழிகள் அடிச்சுவடும் இல்லாமல் அழிந்துபட்ட வரலாறு நினைவூட்டப்படுகின்றது.

தமிழ்மொழியோடு ஒத்த பழமையுடைய திசைமொழிகள் பல அழிந்தொழிந்திடவும், தமிழ்மொழி மட்டும் இன்று காறும் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் நின்று வாழ்கின்ற சிறப்பைப் பாரதியார் சொல்லி மகிழ்கின்றார்.

**கன்னடமும் களி தெலுங்கும்**
**கவின் மலையா ளமுந்துளுவும்**
**உன்னுதரத் துதித் தெழுந்தே**
**ஒன்றுபல வாயி டினும**
**ஆரியம்போல் உலக வழக்கு**
**அழிந் தொழிந்து சிதையாவுன்**
**சீரிளமைத் திறம் வியந்து**
**செயன் மறந்து வாழ்த்துதுமே**

எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ்மொழியின் மேம்பாட்டை வியந்துரைத்திருத்தலை நோக்குக.

**தந்தை அருள்வலி யாலும்—முன்பு**
**சான்ற புலவர் தவவலி யாலும்**
**இந்தக் கணமட்டும் காலன்—என்னை**
**ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்** 7

பொருள்: *தந்தை - எனது தந்தையாராகிய சிவபெருமானின், அருள்வலியாலும் - திருவருளின் வல்லமையாலும், முன்பு - முற்காலத்திலே, சான்ற - அமைந்த (சான்றாண்மை நிரம்பிய), புலவர் - சங்கப் புலவர்களின், தவவலியாலும் - (சங்கத்தில் ஆராய்ந்து என்னை வளம்படுத்திய) தவவலியாலும், (என்னோடொத்த பழமையுடைய மொழிகள் இறந்துபட்டது போல், யானும் இறந்து படாமல்) இந்தக் கணமட்டும் - இன்றுவரையும் (இன்றைய கணப் பொழுதளவும்), காலன் - (என்னோடொத்த மொழிகளை எல்லாம் அழித்தொழித்த) காலதேவனானவன், என்னை - தமிழ் மொழியாகிய என்னை, ஏறிட்டுப் பார்க்கவும் - (எதிர்நின்று) உற்றுப் பார்க்கவும், அஞ்சி - அச்சங் கொண்டவனாய், இருந்தான் - இருந்து வருகின்றான்.*



**விளக்கம்:** இக் கவிதையில், தமிழோடு, ஒத்த பிற மொழிகள் காலதேவனால் தாக்குண்டு, அழிந்துபடவும், தமிழ் மொழி இன்றளவும் வாழ்ந்துவருகின்ற சிறப்புக் கூறப்படுகின்றது.

சிவபெருமானின் திருவருள் ஆற்றலினாலும், சங்கப் புலவர்களின் தவவலிமையாலும், தமிழ்மொழி இன்றளவும் மூவாச் சாவா முழுமுதன் மொழியாக நின்று வாழ்கின்றதென்பதாம்.

**கண்ணுதற் பெருங்கடவுளும்**
**கழகமோடு அமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்து**
**ஆய்ந்த இப்பசுந்தமிழ்**

எனப் பரஞ்சோதியாரும்,

**கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்**

என மாணிக்கவாசகப் பெருமானும்,

**பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே இருந்து வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை**

என வரந்தருவாரும், முறையே தமிழ்மொழி சிவபெருமானால் வளர்க்கப்பெற்றமையையும் சங்கப் புலவர்களால் ஆராய்ந்து செப்பஞ் செய்யப்பெற்றமையையும் பாராட்டி யுரைத்தலை நோக்குக.

**இன்றொரு சொல்லினைக் கேட்டேன் — இனி**
**ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்!**
**கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு**
**கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்! 8**

பொருள்: (இங்ஙனம் பெரும்புகழுடன் நிலைபெற்று வாழ்கின்ற யான்) எனது ஆருயிர் மக்காள் - என் அரிய உயிரைப் போன்ற மக்களே, இன்று – இன்றைக்கு (இந்த நூற்றாண்டில்) ஒரு சொல்லினைக் கேட்டேன் - ஓர் மொழியினை (வார்த்தையை)க் கேள்வியுற்றேன், கொன்றிடல் போல் - என்னைக் கொல்வது போன்ற, ஒரு வார்த்தை - ஓர் கொடிய சொல்லினை, இங்கு - இவ்விடத்தில், கூறத்தகாதவன் - என்னை இங்ஙனம் குறை கூறுதற்கு எள்ளளவும் தகுதியில்லாத ஒருவன், கூறினன் - சொல்லிவிட்டான், இனி ஏது செய்வேன் - அவன் கூறிய வசைமொழிக்கு யான் இனி என்ன செய்வேன், கண்டீர். (இதனை நீங்கள்) அறிந்துகொள்வீராக என்பதாம்.

**விளக்கம்:** இக்கவிதையில் தமிழ்மொழியின்கண் உள்ள குறையொன்றினைப் பிறமொழியாளன் ஒருவன் எடுத்துக்காட்டி இகழ்ந்துரைத்த செயல் கூறப்படுகின்றது.

தமிழ்மொழி இந்நூற்றாண்டுக்கேற்பப் புத்தம் புதிய கலைகளைப் பெற்றுப் பிறநாட்டார் போற்றி செய்யத்தக்கதாகப் பொலிய வேண்டுமெனக் கருதிய பாரதியார், பிறநாட்டார் கூறுவதாக வைத்து தமிழ்மொழி வளர்ச்சிக்கு வேண்டியவற்றைக் கூறுகின்றார். தமிழர்கள் தமிழ்மொழியை உலகமொழியாக நிலவக்கூடிய அளவுக்கு உயர்த்த வேண்டுமென்னும் ஆர்வத்துடிப்புப் பாரதியார் உள்ளத்தில் நின்று அலைமோதுவதை அறிகின்றோம்.

**“புத்தம் புதிய கலைகள்—பஞ்ச**
**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;**
**மெத்த வளருது மேற்கே—அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை,**



பொருள்: பஞ்சபூதச் செயல்களின் - நிலம், நீர், காற்று, நெருப்பு, வான் என்னும் ஐம்பெரும் பூதங்களின் செயல்களின்கண் அமைந்துள்ள, நுட்பங்கள் கூறும் – நுட்பத்திறங்களை எல்லாம் ஆராய்ந்து சொல்லும், புத்தம் புதிய - மிகமிகப் புதுமையான, கலைகள் – விஞ்ஞான சாத்திரங்கள் (அறிவியற் கலைகள்), மேற்கே - மேல்நாடுகளில், மெத்த வளருது - மிகவும் வளர்ச்சி யடைந்து வருகின்றது, அந்த - அங்ஙனம் மேல்நாடுகளில் சிறந்து விளங்குகின்ற அவ்விஞ்ஞான சாத்திரங்களாகிய, மேன்மைக்கலைகள் - உயர்ந்த மதிப்புக்குரிய கலைகளைப்பற்றி ஆராய்ந்து கூறும் நூல்கள், தமிழினில் இல்லை - தமிழ் மொழியின்கண் கிடையாது என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் ஐம்பெரும் பூதங்களின் செயல்நுட்பங்களை ஆராய்ந்து கூறும் அறிவியற்கலை நூல்கள் தமிழில் இல்லையெனச் சொல்லிக் கவல்கின்ற பாரதியாரின் உள்ளத் துடிப்பைக் காண்கின்றோம்.

மேலைநாட்டின்கண் வழங்கும் ஆங்கிலம், ஜேர்மன் முதலிய மொழிகளில் விஞ்ஞானசாத்திரம் என்னும் அறிவியற் கலைகளைப்பற்றி ஆராய்ந்து கூறும் அரிய நூல்கள் தோன்றி அம்மொழிகளை உலக மொழிகளாக உயர்த்திவிட்டன. தமிழ் மொழியில் விஞ்ஞானசாத்திர நூல்கள் இல்லாதிருத்தலால், அதன் பெருமை குறைந்து ஓர் சிறு மொழியாகக் கருதப்பட்டு விடும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**மெத்த வளருது மேற்கே—அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை**

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எமக்கும் தமிழ்மொழியில் அக்கலைகளை யெல்லாம் படைத்து அதனை வளம்படுத்த வேண்டுமென்ற ஊக்கம் எழுகின்றது.

**சொல்லவும் கூடுவதில்லை — அவை**
**சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;**
**மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த**
**மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்” 10**

**பொருள்:** சொல்லவும் - (மேலைநாட்டில் வளரும் அப் புத்தம்புதிய கலைகளை) தமிழில் எடுத்துரைக்கவும், கூடுவ தில்லை - இயலாதாம் (முடியாதாம்), அவை - அவ்வறிவியற்கலை களை, சொல்லுந்திறமை - விளக்கிக் கூறக்கூடிய ஆற்றல் வாய்ந்த கலைச்சொற்களும், தமிழ் மொழிக்கு இல்லை - தமிழ் மொழியின்கண் இல்லையாம், தமிழ் - (ஆகவே) தமிழ்மொழி யானது, இனி - இனி வருங்காலத்தில், மெல்ல - மெல்ல மெல்ல, சாகும் - (உலகவழக்கில் நின்று) இறந்துபடுமாம், அந்த மேற்கு மொழிகள் - (மேற்கூறியவண்ணம் புத்தம்புதிய விஞ்ஞானக் கலைகளைப்பற்றிய ஆராய்ச்சி நூல்களை உடைய) அம்மேலைத்தேச மொழிகள், புவிமிசை - இந்நிலவுலகத்தின் கண் இறவாமல் நின்று, ஓங்கும் - சிறந்து விளங்கும்.

**விளக்கம்:** இக்கவிதையில் புத்தம்புதிய விஞ்ஞானக் கலைகளைப் படைத்துதவாத நிலையில் உள்ள தமிழ்மொழி, காலப்போக்கில் உலகவழக்கில் நின்று வாழமுடியாமல் மெல்ல மெல்ல இறந்துபடுமெனக் கூறுகின்ற சிந்தனை உரைகளைக் காண்கின்றோம்.

காலத்திற்கேற்பத் தம்மை வளம்படுத்தி, வாழமுடியாத மொழிகள் மக்களின் ஆதரவை இழந்து இறந்துபட்டுவிடும் என்பதே மொழிநூலாரின் கொள்கையாகும். தமிழ்மொழியை மலர்த்திப் புதுவாழ்வு கொடுக்க வேண்டுமானால் அதன்கண் பஞ்சபூதங்களின் நுட்பங்களைக் கூறும் விஞ்ஞானக்கலை நூல் கள் பல தோன்றவேண்டு மென்பதே பாரதியாரின் பெரு வேட்கையாகும் என்க.

**மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த**
**மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்**

எனப் பாரதியார் கூறுகின்ற கவிதைத் தொடர்களில் அமைந் துள்ள எதிர்காலச் சிந்தனையும், மொழிநூற் புலமை நெறியும், தமிழார்வமும் எம்மையும் தமிழ்ப்பணி புரியும்வண்ணம் ஊக்கு கின்றன.



**என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!**
**இந்த வசையெனக் கெய்திட லாமோ?**
**சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்**
**செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்! 11**

**பொருள்:** என்று-(மேற்கூறியவண்ணம்) தமிழ்மொழியில் விஞ்ஞானசாத்திர நூல்கள் இல்லை என்றும், விஞ்ஞான சாத் திரத்தை எடுத்து விளக்கியுரைத்தற்கான மொழிவளம் தமிழுக் கில்லை என்றும், அந்தப்பேதை - அந்த அறிவிலி, உரைத்தான்- சொன்னான், ஆ - ஐயோ, இந்தவசை - இப்படியான வடுச் சொல், எனக்கு - காலங்கடந்து வாழும் உயர்தனிச் செம் மொழியாகிய எனக்கும், எய்திடலாமோ - வந்தடையலாமோ (ஆனபடியால் என் மக்களாகிய நீங்கள்), எட்டுத்திக்கும் - (இன்றே) எட்டுத் திக்குக்களிலும்உள்ள தேசங்களுக்கெல்லாம், சென்றிடுவீர் - (விரைந்து) செல்லுங்கள், கலைச் செல்வங்கள் யாவும் - (அவ்வத் தேசங்களில் உள்ள) பலதிறப்பட்ட விஞ் ஞானக் கலைகள் யாவற்றையும் ஆராய்ந்து கற்று, இங்கு - நான் வதியும் இத்தமிழகத்துக்கு, கொணர்ந்து - கொண்டு வந்து, சேர்ப்பீர் - சேருங்கள் என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் உலகின் பலபாகங்களிலும் உள்ள தேசங்களுக்கெல்லாம் தமிழ்மக்கள் சென்று ஆங்காங்கு தோன்றி வளர்ந்துவருகின்ற புத்தம்புதிய விஞ்ஞானக் கலைகளை யெல்லாம் ஆராய்ந்து கற்றுத் தமிழ்மொழியில் அக்கலைகளைப் பற்றிய அரிய ஆராய்ச்சி நூல்களை ஆக்கிப் பரப்பவேண்டு மென்னும் கொள்கை நிழலாடுகின்றது பிறநாட்டு நல்லறிஞர் கள் ஆக்கிய புதிய விஞ்ஞானக் கலைகளைக் கற்றுத் தமிழாக்கஞ் செய்யவேண்டிய கடமை தமிழ் மக்களைப் பொறுத்ததாகும் என் னும் உண்மையைப் பாரதியார் வற்புறுத்திக் கூறுகின்றார்.

**சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்**
**செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஆர் வத்துடிப்புப் பாரதியாரின் தமிழாக்கப்பணியைப் புலனாக்கு கின்றது.

தந்தை அருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்,
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன். 12

பொருள்; தந்தை - எனது தந்தையாராகிய சிவபெருமானின், அருள் வலியாலும் - திருவருள் வலிமையாலும், இன்று - இந்த இருபதாம் நூற்றுண்டாகிய இக்காலத்தில், சார்ந்த - என்னை ஆக்குதற்காக வந்து சேர்ந்துள்ள, புலவர் - அறிஞர்களின், தவவலியாலும் - மிகுந்த முயற்சியென்னும் தவத்திறத்தினுலும், இந்தப் பெரும்பழி - (என்மீது அந்தப்பேதை) விஞ்ஞான நூல்கள் இல்லை என்றும், விஞ்ஞானக் கலையை விளக்கிக் கூறத்தக்க சொல்வளம் இல்லையெனறும் ஏற்றிக் கூறிய இந்த வசைமொழிகள் (இகழ்ச்சியுரைகள்), தீரும் - (என்னைவிட்டு) நீங்கும், அங்ஙனம் வசைமொழிகள் என்னை விட்டு நீங்குவதிறைல்) புகழ் ஏறி - புகழ் மிகப்பெற்று, புவிமிசை - இந்நிலவுலகத்தின்கண், என்றும் - எப்பொழுதும் (உலகம் உள்ளதுணையும்), இருப்பேன் - நிலைபெற்று வாழ்வேன் என பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில் தமிழ்மொழி உலகம் உள்ள துணையும் இறவாமல் புகழுடன் நிலைபெறுதற் பொருட்டுத் தமிழ் மக்கள் ஆற்றவேண்டிய கடமை கூறப்படுகின்றது.

சிவபெருமானின் திருவருள் ஆற்றலுடன், இன்று வாழ்கின்ற தமிழ்நாட்டு அறிஞர்களின் பேருழைப்பும் சேர்ந்துதான் தமிழைப் பாதுகாக்க வேண்டுமென்று பாரதியார் கூறுகின்றுர்.

தமிழ்நாட்டறிஞர்கள் மேலைநாட்டு விஞ்ஞானக் கலைகளைக் கற்றுத் தெளிந்து அவற்றைத் தமது தாய்மொழியாகிய தமிழில் தந்து, பல விஞ்ஞான நூல்களை வெளிப்படுத்துதல் வேண்டும். இங்ஙனம் புத்தம்புதிய கலைநூல்களைப் புனைந்து தமிழ்மொழியை உலக மொழிகளில் ஒன்றுக உயர்த்தி மேம்படுத்தும்வண்ணம் பாரதியார் ஊக்குகின்றுர்.

— — —



# 8. தமிழ்

தமிழ்மொழி இனிமை கனிந்த உயர்தனிச் செம்மொழியென்பதைப் பாரதியார் இப்பகுதியில் எடுத்துக் கூறியுள்ளார். தமிழ் மக்கள் தமிழ்மொழியை நன்கு கற்றுப் போற்றுமல் இருக்கின்ற நிலையைப் பாரதியாராற் பொறுக்கமுடியவில்லை. தமிழர் தமிழைப் புறக்கணித்துத் தமிழ் அறியாமல் இருக்கின்ற இழிநிலை மாறவேண்டுமென்பதே பாரதியாரின் பெருவேட்கையாகும். இத்துடன் காலப்போக்கைத் தழுவித் தமிழில் புதிய கலை நூல்களை இயற்றுமல், தமிழின் பழம் பெருமையை மட்டும் பேசுகின்ற பழக்கம் மிகக் கொடியதெனவும் பாரதியார் எடுத்துக் காட்டுகின்றுர், கம்பர், வள்ளுவர், இளங்கோ வடிகள் முதலிய பெரும் புலவர்கள் ஆக்கிய நூல்கள் தமிழ்மொழியின் சொல்லாற்றலையும் பொருளாற்றலையும் புலனுக்குகின்றன என்றும், தமிழர்கள் உள்ளத்தில் உண்மை ஒளி பெருகிறைல், தமிழ்மொழியும் வளம்படும் என்றும் கூறித் தமிழ்த்தொண்டு புரியும்வண்ணம் தமிழ் மக்களை இடித்துரைத்து வழிகாட்டுகின்ற பாரதியாரின் உள்ளத்துடிப்பு இக்கவிதைகளில் நின்று நிழலாடுகின்றன.

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவ தெங்கும் காணேம்;**
**பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்**
**இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,**
**நாமமது தமிழரெனக் கொண்டிங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றே சொல்லீர்!**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்.** 1

பொருள்: யாமறிந்த - நாங்கள் கற்றறிந்த, மொழிகளிலே - (திருந்திய உலக) மொழிகளுள், தமிழ்மொழிபோல் - தமிழ் மொழியினைப்போல, இனிதாவது - இனிமை நலங் கனிந்ததோர் மொழியினை, எங்கும் காணேம் - (உலகின்) எப் பகுதியிலும் கண்டிலோம், (ஆனுல் தமிழைத் தாய்மொழியாகக்

கொண்ட தமிழர்களாகிய நாங்களோவென்றால்) பாமரராய் - (தமிழைக் கற்காமல்) அறிவில்லாதவர்களாய், விலங்குகளாய் - (பகுத்துணர்ச்சியில்லாத) மிருகங்களைப் போன்றவர்களாய். உலகனைத்தும் - உலகின்கண் உள்ள ஏனைய இனத்து மக்களெல்லாரும், இகழ்ச்சிசொல - (தமிழர்கள் அறிவற்ற சாதியென்று) பழித்துரைக்க, பான்மை கெட்டு - மக்கட்பண்பு அற்றவர்களாய், (பான்மை – தன்மை). நாமமது - பெயர் மாத்திரம், தமிழரெனக்கொண்டு – தமிழர் என வைத்துக் கொண்டு இங்கு - இத்தமிழகத்தில், வாழ்ந்திடுதல் - உயிர் வாழ்ந்து கொண்டிருத்தல், நன்றோ - நல்லதாகுமோ சொல்லீர் - (தமிழ் மக்களாகிய நீங்களே சிந்தித்துச்) சொல்லுங்கள். தேமதுர - தேன்போல இனிமை பொருந்திய, தமிழோசை – தமிழ் மொழியின் பேச்சொலியானது, உலகமெலாம் - இந்நிலவுலகம் எங்கும் உள்ள மக்களால் கற்றுப் பேசப்படும் வண்ணம், பரவும்வகை – வழக்கிப் பரவத்தக்கதாக, செய்தல் வேண்டும் – (தமிழர்களாகிய நாம்) செயலாற்றவேண்டும் (முயற்சி யெடுக்க வேண்டும்).

**தமிழ்மொழி உலக மொழியாகும் வண்ணம் தமிழ் மக்கள் முயற்சியெடுக்க வேண்டும் என்பதாம்.**

**விளக்கம்:** இக் கவிதையில், தமிழ்மொழியின் தனிச் சிறப்பும், அத்தனிச் சிறப்பை யுணராதவர்களாயும் தமிழ்மொழியைக் கற்று அறிவைப் பெறாதவர்களாயும் விலங்குகளைப் போலிருக்கின்ற தமிழ் மக்களின் இழிநிலையினையும் எடுத்துக் காட்டி இடித்துரைத்து வழிப்படுத்துகின்ற பாரதியாரின் உள்ளத் துடிப்பை உணர்கின்றோம்.

பன்மொழிப் புலமை வாய்ந்த பாரதியார், இன்று உலகில் வழங்குகின்ற திருந்திய உயர்தனிச் செம்மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ்மொழியே இனிமையில் மிக்கதென்பதைத் தெளிந்து, அறுதியிட்டுரைக்கின்றார்.

**யாம் அறிந்த மொழிகளிலே**
**தமிழ் மொழிபோல் இனிதாவது**
**எங்கும் காணோம்**



எனப் பாரதியார் கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசையும் பெருமிதமும் தமிழ்மொழியே மற்றைய மொழிகளில் எல்லாம் மிக இனிமையுடையது என அவர் கூறிய கொள்கையை நிலைநாட்டுகின்றன. ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் தாய்மொழி இனிதாகவே இருக்கும் என்பது ஓர் பொது விதியாகும். பாரதியார் தமிழ்மொழி இனிமையானது எனக் கூறியது, தம்து தாய்மொழியென்ற பற்றினால் அல்ல என்பதையும், மொழியாராய்ச்சி நெறியில் ஆராய்ந்து கண்ட உண்மை அறிவினாலேயே என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

**யாமறிந்த மொழிகளிலே**

எனும் தொடர் மொழிஆராய்ச்சி நெறியால் தாம் கண்ட உண்மையையே பாரதியார் கூறினார் என்பதை வலியுறுத்துகின்றது.

இங்ஙனம் உலக மொழிகளுக்குள், சிறந்து விளங்கும் செம்மைவாய்ந்த தமிழைத் தமது தாய்மொழியாகப் பெற்ற தமிழர்கள் தமிழைக் கருத்தூன்றிக் கற்காமல், அறிவிலிகளாய், மக்கட் பண்பற்றவர்களாய் உலக மக்கள் பழித்துரையாடத் தக்க இழிநிலையில் தமிழர் என்ற பெயருடன் உயிர்வாழ்ந்திருத்தல் நல்லதோ எனப் பாரதியார் எல்லையில்லாத மனக் கவலையுடன் எம்மைக் கூவிச் சொல்லுகின்றார்.

**பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்**
**இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு**
**நாமமது தமிழரெனக் கொண்டிங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்**

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கின்றபொழுது எழுகின்ற ஓசையில் பாரதியாரின் தமிழ்ப்பற்றும் தன்மானத் துடிப்பும் எம் உள்ளத்தையும் தொட்டு ஊக்குகின்றன.

இனிய தமிழ்மொழி, இந்த உலகமெலாம் வழங்கப்படும் உலகப் பெருமொழியாக நிலவி விளங்கும்வண்ணம் வைக்கத் தமிழ்மக்கள் முயலவேண்டும் என்ற பேராவல், பாரதியாரின் புலமை உள்ளத்தில் கிடந்து அலையெறிகின்றது.

**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்**

எனும் கவிதைத் தொடர்களிற் பாரதியாரின் உயிருணர்ச்சி அப்படியே பெருகிப் பாய்கின்றது.

**உலகமெலாம் பரவும்வகை**
**செய்தல் வேண்டும்**

எனுந் தொடரை மீண்டும் மீண்டும் படித்துப் பாருங்கள்.

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்,**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;**
**உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை;**
**ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்**
**வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!**
**சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்**
**தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! 2**

பொருள்: *யாமறிந்த* - நாங்கள் அறிந்த, *புலவரிலே* - உலகக் கவிஞர்களிலே, *கம்பனைப்போல்* - (கவிச்சக்கரவர்த்தியாகிய) கம்பரைப் போல, *வள்ளுவர் போல்* - (தெய்வப் புலவராகிய) திருவள்ளுவரைப் போல, *இளங்கோவைப் போல்* - (முத்தமிழ்ப் புலவராகிய) இளங்கோவடிகளைப் போல, *பூமி தனில்* - இவ்வுலகத்தில், *யாங்கணுமே* - (தமிழகம் ஒழிந்த) வேறெவ்விடத்திலும், *பிறந்ததில்லை* - தோன்றினதே இல்லை, *உண்மை* - (இங்ஙனம் யான் கூறுகின்ற இம்முடிவான செய்தி தமிழ்ப் பற்றினால் கூறுகின்றதாக எண்ண வேண்டாம்) மெய்யுரையேயாகும், *வெறும் புகழ்ச்சி இல்லை* - பொருளற்ற புகழ்மொழிகள் (முகமனுரைகள்) அல்ல, *ஊமையராய்* - (இத்துணைச் சிறந்த நல்லிசைப் பெரும்புலவர்கள் தோன்றிய தமிழ்க் குலத்தில் தோன்றி இன்று வாழ்கின்ற தமிழ் மக்களாகிய நாங்கள்) தமிழ் மொழியின் சிறப்பியல்புகளை உலக மக்கள் உணரும் வண்ணம் எடுத்து விளக்கியுரைக்கும் ஆற்றலின்றி இருப்பதால் ஊமைகளாகவும், *செவிடர்களாய்* - பிறமொழிப் புலவர்கள் தமிழ் மொழியைப்பற்றி ஆராய்ந்து கூறும் நுட்பத்



திறங்களைக் கேட்டுணரும் பிறமொழியறிவோ, அல்லது தமிழ் மொழி ஆராய்வில் சிறந்த புலமையோ இன்றி இருத்தலால் செவிடர்களாகவும், *குருடர்களாய்* - தமிழ்மொழியின் மொழியமைப்புத் திறனும் சொல்லாற்றலும், இலக்கணச் சிறப்பும் தொல்காப்பியம் எனும் முழுமுதல் இலக்கண நூலின்கண் ஆராய்ந்து விளக்கப்பட்டிருத்தலை ஆராய்ந்து காணும் அக உணர்ச்சியின்றி இருத்தலால் குருடர்களாகவும், *வாழ்கின்றோம்* - (தமிழர்களாகிய நாம்) வாழ்ந்து வருகின்றோம், *ஒருசொற் கேளீர்* - (தமிழ் மக்களே யான் கூறுகின்ற) ஒரு மொழியை (வார்த்தையை)க் கேளுங்கள், *சேமமுற* - (தமிழ் மக்களாகிய நாம்) நன்மை (சுகம்) அடைய, *வேண்டுமெனில்* - வேண்டும் என்றால், *தெருவெல்லாம்* - தெருவீதிகள் தோறும் (வீடுகள் தோறும்), *தமிழ் முழக்கம்* - (தமிழ் மொழியைப் பிழையறப் பேசியும் படித்தும், போற்றியும் ஆராய்ந்தும் தமிழ் மக்கள் ஆர்வத்தோடு எழுப்புகின்ற) தமிழின் இனிய ஓசை முழக்கம், *செழிக்க* - பொருட் கரு (வளம்) நிரம்பிச் செழிக்கும் வண்ணம் (செழிப்படைந்து கேட்கும் வண்ணம்), *செய்வீர்* - செய்யுங்கள்.

**விளக்கம்:** இச் கவிதையில், தமிழ்ப்பெரும் புலவர்களின் மேம்பாட்டையும், தமிழ் மக்கள் தமிழுணர்ச்சியின்றி வாழ்கின்ற புன்மையையும் எடுத்துக் கூறி இடித்துரைத்து, ஆக்கநெறி காட்டுகின்ற பாரதியாரின் தமிழ்ப் பற்றைக் காண்கின்றோம்.

உலக மகாகவிகளுள் உயர்ந்த இடத்தைப் பெற்று விளங்குகின்ற முப்பெரும் புலவர்கள் தமிழ் மொழியை அணிசெய்கின்றார்களென்னும் சிறப்பைப் பாரதியார் மிக மிக ஆர்வத்துடனும் பெருமிதத்துடனும் கூறுகின்றார்.

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை**
**உண்மை வெறும் புகழ்ச்சியில்லை**

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற பெருமிதத் துடிப்புப் பாரதியாரின் முடிந்தமுடிபான கொள்கைத் துடிப்பை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்கள் ஆகிய நாம் தமிழ்மொழியை ஆராய்ந்து கற்காமல், தமிழைப் புறக்கணித்து வாழ்கின்ற புன்மைப் பண்பால்,

**ஊமையராய்ச் செவிடர்களாய்க்**
**குருடர்களாய் வாழ்கின்றோம்**

எனப் பாரதியார் இடித்துரைத்து எம்மை ஊக்குகின்றார்.

தமிழ்மக்கள் நன்மை அடைந்து, உலகம் மதிக்கத்தக்க பெருநிலைபெற்று வாழவேண்டுமானால், தெருவீதிகள்தோறும் வீடுகள்தோறும் தமிழ் முழக்கம் செய்யவேண்டுமெனத் தமிழ் மக்களுக்குப் பாரதியார் ஆணையிடுகின்றார்.

**சேமமுற வேண்டு மெனில்**
**தெருவெல்லாம் தமிழ்முழக்கம்**
**செழிக்கச் செய்வீர்!**

எனுமிக் கவிதைத் தொடர்களுடன்

**தெருவுதோறும் மிகவலறிச் சிவபெருமான் என்றேத்திப்**
**பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படுவாமாறு**
**அருளெனக் கிங்கு**

எனவருந் திருவாசகத் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக.

**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;**
**இறவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;**
**மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்**
**சொல்வதிலோர் மகிமை இல்லை;**
**திறமான புலமையெனில் வெளிநாட்டோர்**
**அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.** 3

பொருள்: *பிறநாட்டு - (தமிழகத்தை ஒழிந்த) பிறநாடுக ளில் உள்ள, நல்லறிஞர் - (உலகின் ஆக்கக் கருதி உழைக் கின்ற) சிறந்த பேரறிஞர்கள் ஆராய்ந்து ஆக்கிய, சாத்திரங் கள் - அறிவியற் கலைகள் என்னும் விஞ்ஞான சாத்திர நூல் களை, தமிழ் மொழியில் - தமிழில், பெயர்த்தல் வேண்டும் - மொழி பெயர்க்க வேண்டும், இறவாத - அழியாத (உலகம் உள்ளளவும் நிலைபெறக்கூடிய), புகழுடைய - புகழைப் பெறக் கூடிய, புதுநூல்கள் - புதிய கருத்துக்களும் புதிய அமைப்புக்க ளும் கொண்ட) புத்தம் புதிய நூல்களை, தமிழ் மொழியில் - தமிழில், இயற்றல் வேண்டும் - ஆக்கல் வேண்டும், மறைவாக - (பிறநாட்டினர் அறிந்து பாராட்டாமல்) பிறரறியாவண்ணம், நமக்குள்ளே - எங்களுக்குள்ளேயே, பழங்கதைகள் - (கங்கை யையும், கடாரத்தையும் வென்ற தமிழர் என்றும், சங்கத்தில் வளர்ந்த தமிழ் என்றும்) பழம் பெருமைகளைக் கதைகளாக, சொல்வதில் - பேசிக் கொள்வதால், ஓர் மகிமை இல்லை - தமி ழர்களாகிய எமக்கு) ஒரு பெருமையும் வரப்போவதில்லை, திற மான புலமை எனில் - (எவ்விடத்தில்) சிறந்த புலமை (அறிவு) காணப்படுகின்றதென்றால், அதை - அப்புலமைத் திறத்தினை, வெளி நாட்டோர் - பிறநாட்டினர்கள் (பிறநாட்டு நல்லறிஞர் கள்), வணக்கம் செய்தல் வேண்டும் - மதித்துப் போற்றுதல் வேண்டும் என்பதாம்.*



**விளக்கம்:** இக் கவிதையில் தமிழ்மொழியை உலகமொழி யாக உயர்த்தி வாழ்வளித்தற்கான செயல்நெறிகளைக் கூறித் தமிழ்மக்களை ஊக்குகின்ற பாரதியாரின் ஆர்வப் பெருக்கைக் காண்கின்றோம்.

பிறநாட்டு (மேலைநாட்டு) நல்லறிஞர்கள் அரிதின் ஆராய்ந் தாக்கிய புத்தம் புதிய கலைகளை (விஞ்ஞான சாத்திர நூல்களை)த் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டுமெனப் பாரதியார் திட்டந் தீட்டுகின்றார். இங்ஙனம் மொழிபெயர்ப்பதுடன் அமையாது புத்தம் புதிய நூல்களைத் தமிழறிஞர்கள் தமிழில் இயற்றி மொழி வளத்தைப் பெருக்கவேண்டும் என்றும் பாரதியார் வேண்டு கின்றார்.

**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்**
**இறவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்**

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கப் படிக்கப் பாரதியாரின் தமிழாக்கச் செயல்திட்டத்தின் அருமைப்பாடு புலனாகின்றது.

காலத்தையொட்டித் தமிழ்மொழியைப் புதுக்கிப், புதிய புதிய கலைநூல்களால் அதனை வளம்படுத்தி வளர்த்தலை விடுத்துப், பிறர் அறியாமல் தமிழர்களாகிய நாம் நமக்குள்ளேயே பழம் பெருமைகளைப் பேசிக்கொண்டிருப்பதினால் பயனொன்றும் இல்லையென, இடித்துரைக்கின்ற பாரதியாரின் செயலூக்கம் மிக மிகப் பாராட்டத்தக்கதாகும். எமது புலமைத் திறமைகளையும் செயல் திறமைகளையும் பிறநாட்டார் மதித்துப் போற்ற வேண்டுமே அன்றி நாமே எமது பெருமைகளைப் பாராட்டிப் பேசுவது பொருளற்ற வெறுஞ் செயலாகுமென்பதே பாரதியாரின் கொள்கையாகும்.

**மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்**
**சொல்வதி லோர் மகிமைஇல்லை**
**திறமான புலமையெனில் வெளிநாட்டோர்**
**அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்**

எனுமிக் கவிதைத் தொடர்கள் **இறவாத புகழுடைய செயலூக்க மந்திரங்களாய்,** என்றென்றும் நின்று வாழக்கூடிய பொருளாற்ற லுடையனவாய்ப் பொலிகின்றன.

**தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்**
**நன்னீர் சொரிந்து வளர்த்தற் றால்**

என்பது நாலடியார்.

**உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண் டாகும்;**
**வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்**
**கவிப்பெருக்கும் மேவு மாயின்;**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்**
**விழிபெற்றுப் பதவி கொள்வார்;**
**தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்**
**இங்கமரர் சிறப்புக் கண்டார்.**



பொருள்: *உள்ளத்தில் – மனத்தின்கண்ணே, உண்மை ஒளி - வாய்மை (மெய்) என்று சொல்லப்படுகின்ற உள்ளொளியானது, உண்டாயின் – தோன்றுமானால், வாக்கினிலே* - (உள்ளத்தின்கண் நின்று தோன்றிய உண்மை ஒளியுடன் ஒன்றுபட்டெழுகின்ற) *சொல்லின்கண்ணும், ஒளி உண்டாகும் - உள்ளொளி நின்று நிழலாடுகின்ற (தன்மை) தெளிவு தோன்றும்,* (இங்ஙனம் உள்ளொளியோடு ஒன்றுபட்டெழுகின்ற சொல்லிலும் ஒளி தோன்றும் நிலைமை ஏற்பட்டவுடன் அத்துடன் கலந்து) *வெள்ளத்தின் பெருக்கைப் போல் - வெள்ளம் பெருக்கெடுத்து வருதலைப்போல. கலைப்பெருக்கும் – அறிவியற் கலை என்னும் விஞ்ஞான சாத்திரத்தின் பெருக்கமும், கவிப்பெருக்கும்–இலக்கியப் பெருக்கமும், மேவுமாயின் - பொருந்தி நின்றனவானால், பள்ளத்தில் – அடிமை வாழ்வென்னும் படுகுழியில், வீழ்ந்திருக்கும் - வீழ்ந்து கிடந்து வருந்துகின்ற (வருந்திக் கொண்டிருக்கும்), குருடர் எல்லாம்* - (அறியாமை என்னும் இருளிலே கிடந்து அல்லலுறுகின்ற) *அகக் குருடர்களாகிய அறிவிலிகள் எல்லோரும், விழிபெற்று - அறிவென்னும் அகக்கண்ணை அடைந்து, பதவி கொள்வார் - (சுதந்திர வாழ்வு என்னும்) உயர்நிலையை அடைவார்கள், தெள்ளுற்ற - (சங்கத்தில் ஆராய்ந்து) செப்பஞ் செய்யப்பட்ட, தமிழமுதின் – தமிழாகிய அமுதத்தின், சுவை கண்டார் - தீஞ்சுவையினை அழுந்தி அழுந்தி ஆராய்ந்துணர்ந்தவர்கள், இங்கு - இந்நிலவுலகத்தில், அமரர் – தேவர்களுக்குரிய, சிறப்புக்கண்டார் - இன்ப நுகர்வும் இறவாமை (சாவாமை)யும் ஆகிய சிறப்புப் பேறுகளை உடையவராய் நுகர்ச்சி பெற்று வாழ்வார்கள்,* (சிறப்புக் கண்டார் என்பது சிறப்புப்பேறுகளை நுகர்ந்து, அறிந்தவர்களாவார் என்பதாம்.

**விளக்கம்:** இக் கவிதையில், **கற்பனைத் திறம் வாய்ந்த அற்புதப் பெருங் கவிஞராகிய பாரதியார், உள்ளொளியோடு கலந்து சொல்லோவியமாகத் தோன்றும்** கலைப் பெருக்கத்தின் ஆற்றலையும், கவிப்பெருக்கத்தின் ஆற்றலையும் அழுந்தி நுகர்ந்து நுகர்ந்து வியந்து பாராட்டும் உயிர்த்துடிப்புத் திறம்கொண்ட கவிதைப் பண்பை உணர்கின்றோம்.

உள்ளத்திலே உண்மையின் ஒளியென்னும் உள்ளொளி நிலைபெறுமானால் உரையிலும் அதன் தன்மை நின்று நிழலாடுமெனப் பாரதியார் கூறுகின்ற கொள்கை அவரின் கவிதையுள்ளத் திறத்தைப் புலனாக்குகின்றது. வெள்ளப் பெருக்கெழுந்து பாயும் பொழுது அதன் ஆற்றலின்கண் ஏனைய பொருள்களெல்லாம் அகப்பட்டேவல் கொள்ளப்படுவது போலக் கலைப்பெருக்கினாலும் கவிப்பெருக்கினாலும் அள்ளுப் பட்டடங்கிய மக்களும் தங்கள் அறியாமை நீங்கி அக்கலை, கவிதை யென்னும் இரண்டினாலும் ஏவல் கொள்ளப்பட்டு ஏற்றமுறுவார் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண்டாகும்**
**வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்**
**கவிப்பெருக்கும் மேவுமாயின்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்**
**விழிபெற்றுப் பதவிகொள்வார்**

எனுங் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எமதுள்ளத்திலும் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் ஊற்றெடுத்துப் பெருகுவது போன்ற உணர்ச்சி உண்டாகின்றது.

**உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்**

எனுந் தொடருடன்,

**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**

எனவருந் திருவாசகத்தொடரையும்,

**தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார்**

எனுந் தொடருடன்,

**கூடலில் ஆய்ந்த ஒண்டீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனையோ**

எனவரும் திருக்கோவையார்த் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக.

---



## 9. மூன்று காதல்

நாமகள், திருமகள், காளி என்னும் சக்திகள் மூவர் மேலும் காதல் கொண்டு பாரதியார் பாடிய கவிதைகள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. கல்வியும் செல்வமும் வீரத்தோடு கலந்த கருணையும் மக்கள் வாழ்வுக்கு மிகமிக இன்றியமையாதனவாகும். இப்பேறுகளை நல்கும் திருவருட் சக்திகளாகிய நாமகளையும் திருமகளையும் காளியையும் மிகப் பழங்காலந் தொட்டே பாரதமக்கள் வழிபட்டு வருகின்றார்கள். **நவராத்திரி விழா** இம்முப்பெருஞ் சக்திகளின் வழிபாடாக மலர்ந்து வழக்காற்றில் நின்று நிலவுகின்றதென்பதை எல்லோரும் அறிவர்.

பாரதியார் தமது கவிதை உள்ளத்தை இம்முப்பெரும் சக்திகளிடத்தும் ஒப்படைத்து (அர்ப்பணித்து) நிற்கின்ற தன் மறதி நிலையினையே (தற்போதங் கெட்ட நிலை) காதல் எனக் குறிப்பிடுகின்றார். சைவநாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியராகவும் பாவித்துப் பாடியருளிய காதல் நெறியையே பாரதியாரும் கைக்கொண்டுள்ளார், **இறைவனிடத்துத் தம்மை முற்றும் ஒப்படைத்துத் தம செயலின்றி நின்று நுகருகின்ற அன்பு நெறியைக் காதல் நெறியாகப் பாவித்துப் பாடுகின்றபொழுதுதான், தமது உருக்கமான அன்பின் அகலத்தை உணர்ந்தும் நுகர்ந்தும் ஆனந்தமடைவார்கள்.**

சீவக சிந்தாமணியென்னும் பெருங் காப்பியத்தின் தலைவனாகிய சீவகன் கல்வியறிவில் மிக்கோங்கினான் என்பதை உணர்த்திய திருத்தக்க தேவர்,

**முழவெனத் திரண்ட திண்டோள் முரிவெஞ் சிலையினானும்**
**அழலெனக் கனலும் வாட்கண் அவ்வளைத் தோளினாளும்**
**மழலையாழ் மருட்டுந் தீஞ்சொல் மதலையை மயிலஞ் சாயல்**
**குழைமுக ஞானமென்னும் குமரியைப் புணர்க்க லுற்றார்**

எனுஞ் செய்யுளில், நாமகளைச் சீவகன் புணர்ந்தானெனக் கூறுவதையும் நோக்குக,

## முதலாவது—சரஸ்வதி காதல்

இராகம்—சரஸ்வதி மநோகரி] [தாளம்—திஸ்ர ஏகம்

**பிள்ளைப் பிராயத்திலே — அவள்**
**பெண்மையைக் கண்டு மயங்கிவிட் டேனங்கு**
**பள்ளிப் படிப்பினிலே — மதி**
**பற்றிட வில்லை யெனினுந் தனிப்பட**
**வெள்ளை மலரணைமேல் — அவள்**
**வீணையுங் கையும் விரிந்த முகமலர்**
**விள்ளும் பொருளமுதும் — கண்டேன்**
**வெள்ளை மனது பறிகொடுத்தேன், அம்மா!** 1

பொருள்: *பிள்ளைப் பிராயத்திலே - என் இளமைப் பருவத்திலேயே (சிறு பிள்ளையாக இருக்கும்பொழுதே),* **அவள் - நாமகளின்,** *பெண்மையைக்கண்டு - பெண்தன்மையாகிய பேரழகைக் கண்டு,* **மயங்கி விட்டேன் - காதல் கொண்டுவிட்டேன், அங்கு - (நாமகளைக் கண்டு மயங்கிய) அக்காலத்தில், பள்ளிப் படிப்பினிலே - பள்ளிக்கூடத்திற்குச் சென்று (கட்டளைக்கடங்கிப்) படிக்கின்ற கல்வியிலே, மதி - விருப்பம் (மனம்), பற்றிடவில்லை - நிலை கொள்ளவில்லை (பதியவில்லை), எனினும் - என்றாலும், அவள் - நாமகள், தனிப்பட - தனிமையாக, வெள்ளை மலரணை மேல் - வெண்தாமரை மலராகிய ஆசனத்தின்மேல், வீணையும் கையும் - வீணைதாங்கிய கையுடன் வீற்றிருந்தும், விரிந்த - பூத்துப் பொலிகின்ற, முகமலர் - (தனது) முகமாகிய மலரினால் (முகமலரின்கண் பொருந்திய வாயினால்), விள்ளும் - மொழிகின்ற, பொருளமுதும் - பொருளாகிய அமுதத்தையும், கண்டேன் - அறிந்துகொண்டேன், (இனி முகமாகிய மலரினால் குறிப்பாகக் கூறுகின்ற பொருளாகிய அமுதத்தை உணர்ந்து கொண்டேன் எனவும் பொருள் கூறலாம். "அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சங், கடுத்தது காட்டும் முகம்" என்பது திருக்குறள்), வெள்ளை மனது - (அங்ஙனம் கண்டவுடன்) கள்ளமில்லாத (என் குழந்தை) உள்ளத்தை, பறிகொடுத்தேன் - பறி கொடுத்துவிட்டேன், (அம்மா-வியப்பை உணர்த்துஞ் சொல்).**



**விளக்கம்:** இக் கவிதையில் பள்ளியிற் படிக்கும் பிள்ளைப் பருவத்திலேயே தாம் நாமகளின் கருணையைப் பெற நினைந்து அவள்மேல் மிக்க காதல்கொண்ட செயலைக் கூறுகின்ற பாரதியாரின் கவிதையுள்ளச் சிறப்பினைக் காண்கின்றோம்.

**பிள்ளைப் பிராயத்திலே அவள்**
**பெண்மையைக் கண்டு மயங்கிவிட்டேன்**

என்றும்,

**பள்ளிப் படிப்பினிலே மதி பற்றிடவில்லை**

என்றும் பாரதியார் கூறுகின்ற கவிதைத் தொடர்களால் அவர், பள்ளியிற் பயிலும் பச்சிளம் பருவத்திலேயே கல்விக் கடவுளாகிய நாமகளின்மேற் காதலாகிக் கசிந்துருகும் நிலையை அடைந்துவிட்டார் எனபதை அறிகின்றோம்.

அவர் தமது கள்ளம் இல்லாத வெள்ளை உள்ளத்தில் நாமகள் குடியேறிவிட்டாள் என்பதைக் கூறிப் பேருவகை கொள்கின்றார். நாமகள் வீணைதாங்கிய கையுடன் வெண்தாமரை மலர்மேல் வீற்றிருந்துகொண்டு, முகமலரால் மொழிகின்ற பொருளமுதை நுகர்ந்து நுகர்ந்து, பாரதியார் தமதுள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டார் என்பதை நாம் படித்துணர்கின்றோம்.

தமது கள்ளம் இல்லாத வெள்ளை உள்ளத்தை வெண்தாமரை மலராகக் கொண்டு நாமகள் குடியேறிவிட்டாளென்பதையே பாரதியார் குறிப்பாக எமக்குக் கூறுகின்றார்.

**வெள்ளை மனது பறிகொடுத்தேன்**

எனப் பாரதியார் கூறுகின்ற குரலிலே, **கள்ளமில்லாத என் உள்ளத்தைக் கலைத் தெய்வத்திற்குக் காணிக்கையாகக்**

**கொடுத்துவிட்டேன்** என்னும் பெருமிதம் நிழலாடுவதை நோக்குக.

**ஆடி வருகையிலே — அவள்**
**அங்கொரு வீதி முனையில் நிற்பாள்; கையில்**
**ஏடு தரித்திருப்பாள் — அதில்**
**இங்கிதமாகப் பதம்படிப் பாள், அதை**
**நாடி யருகணைந்தால் — பல**
**ஞானங்கள் சொல்லி இனிமை செய்வாள் "இன்று**
**கூடி மகிழ்வ" மென்றால் — விழிக்**
**கோணத்தி லேநகை காட்டிச்செல்வாள், அம்மா! 2**

**பொருள்:** *ஆடிவருகையிலே - (யான் வீதி வழியாக) விளையாடிக்கொண்டு வரும்பொழுது, அவள் - நாமகள், அங்கு—அவ்விடத்தில் உள்ள, ஒரு வீதிமுனையில் - ஒரு தெருவீதியின் முன் பக்கத்திலே, நிற்பாள் - காணப்படுவாள், கையில் - (அங்ஙனம் வீதியிற் காணப்படும்பொழுது) தனது கையிலே, ஏடு - புத்தகம், தரித்திருப்பாள் - வைத்திருப்பாள் (தாங்கியிருப்பாள்), அதில் - அப்புத்தகத்தின்கண் இருந்து, இங்கிதமாக - என் (உள்ளத்திற்கு) இனிமை தரத்தக்கதான, பதம்-பொருள் பொதிந்த பாக்களை, படிப்பாள் - படித்தருள்வாள், அதை - அங்ஙனம் படித்த அப்பாவின் பொருட்சுவையை, நாடி - விரும்பி (கேட்பதற்காக), அருகணைந்தால் - (அவளின்) பக்கத்தே சென்றால், பல - பலதிறப்பட்ட, ஞானங்கள் - மெய்ஞ்ஞான உண்மைகளை, சொல்லி - (எனக்குக்) கூறியருளி, இனிமை செய்வாள் - இனிமை உணர்ச்சியை ஊட்டியருள்வாள், (அவளூட்டிய இனிமை உணர்ச்சியினால் ஆனந்தமடைந்த யான், அவளை நோக்கி) இன்று - இப்பொழுது, கூடி மகிழ்வம் - (நாங்கள் இருவரும்) கலந்து பேருவகை கொள்வோம், என்றால் - என்று (யான்) கூறினால், விழிக்கோணத்திலே - கடைக்கண்ணினால் என்னைப் பார்த்து, நகைகாட்டி - புன்னகை செய்து, செல்வாள் - சென்றுவிடுவாள், (மறைந்திடுவாள்).*

**விளக்கம்:** இக் கவிதையில் கலைத் தெய்வமாகிய நாமகளின்மேற் காதல் கொண்ட பாரதியார், அவளின் அருளைப் பெற்று ஆனந்தமடைதற்குரிய நிலைமை கிட்டிவிட்டதெனக் கூறி மகிழ்கின்ற ஆர்வத் துடிப்பை அறிகின்றோம்.

தெரு வீதிகளில் ஓடி விளையாடுகின்ற சின்னஞ்சிறு பருவத்திலேயே பாரதியார், நாமகளின் நல்லருளைப் பெற்றுவிட்டார். தான் விளையாடச் செல்கின்ற தெருவீதி முனையில் நாமகள் புத்தகந் தாங்கிய கையுடன் எழுந்தருளி நிற்பாள் என்றும், தனக்கு ஞானக் கருத்துக்களை நல்குவாள் என்றும், தன்னுடன் கூடி மகிழும்வண்ணம் கேட்டால் குறுநகை புரிவாள் என்றும், கூறிக்கூறிப் பாரதியார் உள்ளங் குழைகின்றார்,

**ஆடி வருகையிலே அவள் அங்கொரு**
**வீதி முனையில் நிற்பாள்**

என்றும்,

**ஏடு தரித்திருப்பாள் அதில் இங்கிதமாகப்**
**பதம் படிப்பாள்**

என்றும்,

**இன்று கூடி மகிழ்வமென்றால்**
**விழிக் கோணத்திலே நகை**
**காட்டிச் செல்வாள்**

என்றும் பாரதியார் கூறுகின்ற கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற இன்ப உணர்ச்சியும், ஈடுபாடும் அவர் நாமகளுடன் கலந்து அவளருளாலே ஆதரிக்கப்பட்டு ஆனந்தமடைகின்றார் எனும் உண்மையைப் புலனாக்குகின்றன.

**ஆற்றங் கரைதனிலே — தனி**
**யானதோர் மண்டப மீதினிலே, தென்றற்**
**காற்றை நுகர்ந்திருந்தேன் — அங்கு**
**கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்; அதை**
**ஏற்று மனமகிழ்ந்தே — "அடி**
**என்னோ டிணங்கி மணம்புரிவாய்" என்று**
**போற்றிய போதினிலே — இளம்**
**புன்னகை பூத்து மறைந்துவிட்டாள், அம்மா! 3**

பொருள்: (யான் ஒரு நாள்) ஆற்றங்கரைதனிலே - ஆற்றங்கரையிலே, தனியான - தனித்துள்ள, ஓர் மண்டபமீதினிலே - மண்டபத்தின்கண்ணே, தென்றற் காற்றை - (இளவேனிற் பருவத்தில் வீசுகின்ற) தென்றல் காற்றினை, நுகர்ந்திருந்தேன் - அனுபவித்து (நுகர்ந்து) மகிழ்ந்தவண்ணமாய் இருந்தேன், அங்கு - அங்ஙனம் யான் தென்றற் காற்றின் இன்பத்தை நுகர்ந்துகொண்டிருந்த அவ்விடத்தில், (நாமகள்) கன்னிக் கவிதையொன்று - கன்னித் தன்மையென்னும் புதிய இளமை பொருந்திய பாடலொன்றினை, (முதற் பாட்டினை) கொணர்ந்து - கொண்டுவந்து, தந்தாள் - கொடுத்தருளினாள், அதை - அக்கன்னிக் கவிதையினை, ஏற்று - பெற்று, மனமகிழ்ந்தே - உள்ளத்தில் உவகை கொண்ட யான், (அவளை நோக்கி) (என்னோடு - என்னுடனே, இணங்கி - கருத்தொருமித்து, மணம் புரிவாய் - (என்னை) திருமணஞ் செய்துகொள்வாயாக, என்று - என்று சொல்லி, போற்றியபோதினிலே - வணக்கஞ்செய்த நேரத்திலே, (அவள்) இளம் புன்னகை பூத்து - இளமைச் செவ்வி கனிந்த புன்சிரிப்புப் புரிந்துவிட்டு, மறைந்துவிட்டாள் - மறைந்து சென்றுவிட்டாள்.

**விளக்கம்:** இக்கவிதையில், நாமகளின் கருணையால் தாம் முதற் கவிதையை (கன்னிக்கவிதை)ப் பாடிப் பயனடைந்த செயலைப் பாடி மகிழ்கின்ற பாரதியாரின் ஆனந்தப் பெருக்கை அறிகின்றோம்.

கன்னிக் கவிதை என்னும் முதற் பாட்டைத் தாம்பாடி மகிழ்ந்த சூழ்நிலையைப் பாரதியார் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**ஆற்றங் கரைதனிலே — தனி**
**ஆனதோர் மண்டபமீதினிலே தென்றல்**
**காற்றை நுகர்ந்திருந்தேன் — அங்கு**
**கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்**

எனப் பாரதியார் பாடுகின்ற கவிதையைப் படித்துப் பாருங்கள். கன்னிக் கவிதையைக் கலைமகள், பாரதியார் உள்ளத்தில் கருக்கொண்டெழும் வண்ணம் கருணைபுரிந்தபொழுது அவர்,



ஆற்றங்கரையில் உள்ள தனியானதோர் மண்டபத்திலே தென்றல் காற்றை நுகர்ந்து இன்ப உணர்ச்சியுடன் வீற்றிருக்கின்றார்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே,**

எனும் தேவாரத்துடன்,

**ஆற்றங் கரைதனிலே தனி**
**ஆனதோர் மண்டப மீதினிலே தென்றல்**
**காற்றை நுகர்ந்திருந்தேன் அங்கு**
**கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்.**

எனும் இக்கவிதைத் தொடர்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். திருநாவுக்கரசடிகள் ஈசனின் இணையடி நீழல் இன்பத்தைப் பெற்றுப் பாடியபொழுது நுகர்ந்த இன்பமும், பாரதியார் நாமகளின் கருணையைப் பெற்றுக் கன்னிக் கவிதையைப் பாடியபொழுது நுகர்ந்த இன்பமும் ஒரே தன்மையாக இருத்தலை நோக்குக.

கன்னிக் கவிதையைப் பாடிய பாரதியார் கலைமகளுடன் அத்துவிதமாகக் கலந்துவிட்டார்.

**அடி என்னோடிணங்கி மணம் புரிவாய் என்று**
**போற்றிய போதினிலே — இளம்**
**புன்னகை பூத்து, மறைந்துவிட்டாள்**

எனப் பாரதியார் பாடுகின்றபொழுது அவருள்ளத்தில் எழுகின்ற காதலின்பத்தை உணருங்கள்.

**போற்றி நிற்பது என்று கொல்லோ**
**என்பொல்லா மணியைப் புணர்ந்தே.**

எனுந் திருவாசகத் தொடர்களுடன் பாரதியாரின் கவிதைத் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக.

கன்னிக் கவிதை என்பது முதற் பாடிய கவிதை எனப் பொருள்படும். இராமன் முதன்முதல் ஆற்றிய போரைக் காகுத்தன் கன்னிப்போர் எனவும், கண்ணப்பர் முதன்முறை வேட்டையாடச் செல்வதைக் கன்னி வேட்டை மகன் போக எனவும் வருகின்ற வழக்காற்றை நோக்குக.

சித்தந் தளர்ந்ததுண்டோ? — கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்ததுபோல் — பகற்
பேச்சும் இரவிற் கனவும் அவளிடை
வைத்த நினைவை யல்லால் — பிற
வாஞ்சையுண்டோ? வய தங்ஙன மேயிரு
பத்திரண் டாமளவும் — வெள்ளைப்
பண்மகள் காதலைப் பற்றி நின்றேன், அம்மா! 4

பொருள்: *சித்தம் தளர்ந்ததுண்டோ* - (கூடி மகிழ்வோம் என்று யான் கேட்டவுடன் கலைத்தேவி மறைந்துவிட்டாள் என்று) என்னுடைய மனம் நிலைகுலைந்திடவில்லை, (தளர்ந்ததுண்டோ இல்லை என்பதாம்), *கலைத்தேவியின்மீது* - கலைத்தெய்வம் என்னும் நாமகளின்மேல், *விருப்பம் வளர்ந்து* - (தீராத) வேட்கையென்னும் காதல் பெருகிட, *ஒரு பித்துப் பிடித்தது போல்* - ஒப்பில்லாத ஒரு பைத்தியம் கொண்டது போல் (கொண்டவனாய்), *பகற்பேச்சும்* - பகற்பொழுதெல்லாம் அக்கலைத் தெய்வத்தைப் பற்றி (நினைந்து நினைந்து) அவள் அழகினைச் சொல்லி மகிழ்வதும், *இரவில்* - இராப்பொழுதெல்லாம், *கனவும்* - அக்கலைத் தெய்வத்தைக் கனவிற் காண்பதுமாய், *அவளிடை* - அக்கலைத் தெய்வமாகிய நாமகள்மேல், *வைத்த நினைவையல்லால்* - கொண்ட நினைவே (எண்ணம்) அன்றி, *பிற வாஞ்சை* - பிறபொருள்களில் விருப்பம், *உண்டோ* - உண்டாகவில்லை, *அங்ஙனமே* - அப்படியே (நாமகளின் பேச்சும் நினைவுமாகவே), *வயது* - என்வயது, *இருபத்திரண்டாமளவும்,* - இருபத்திரண்டு நிரம்பும்வரையும், *வெள்ளை*-(வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக்கமலத்தே வீற்றிருக்கின்ற கார



ணத்தால்) தூய வெண்மையாக விளங்குகின்றவளும், *பண் மகள்*- வீணையில் இனிய பண்ணிசையை எழுப்புகின்றவளுமாகிய கலைமகளின்மேல், *காதலை* - யான் கொண்ட காதலையே, *பற்றி நின்றேன்* - பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்தேன்.

**விளக்கம்:** இக்கவிதையில் இருபத்திரண்டு வயதளவும் உலகப்பற்றில் ஈடுபடாமல், கலைமகளின் எண்ணமும் பேச்சுமாகவே இருந்து, விழிப்பிலும் உறக்கத்திலும் அவளையே கண்டு காதல் மிக்கவராய் அவளுடன் கலந்து வாழ்ந்த தமது பெரும்பேற்றைக் கூறுகின்ற பாரதியாரின் கவிதை உள்ளத்தைத் காண்கின்றோம்.

உள்ளம் உலைதலின்றி இருபத்திரண்டு வயதளவும் கலைமகள்மேல் தீராத காதலுடையவராய் வீற்றிருந்து, கவிதை மழையைக் கொட்டிய பாரதியாரின் புலமை வாழ்வின் தூய்மைப் பண்பை அவரே கூறக் கேட்கின்ற பெருவாழ்வை நாமும் பெற்றுவிட்டோம்.

**கலைத் தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு**
**பித்துப் பிடித்ததுபோல் பகற் பேச்சும்**
**இரவிற் கனவும் அவளிடை**
**வைத்த நினைவை யல்லால் பிற**
**வாஞ்சை யுண்டோ**

எனப் பாரதியார் பாடிய கவிதைத் தொடர்களைப் படிக்கும் பொழுது, அவர், தம் எண்ணமெல்லாவற்றையும் கலைமகளின் மேல் வைத்து வாழ்ந்த கலைவாழ்வின் தூய பண்பாட்டை உணர்கின்றோம்.

இருபத்திரண்டு வயதளவும் கலைத்தெய்வமாகிய நாமகளின் மேற்கொண்ட காதலுணர்வுடன் வாழ்ந்து கவிதைகளை அருவி ஊற்றைப்போலப் பாடிய பாரதியாரின் கவிதை உள்ளத்தின் அகலத்தையும் ஆற்றலையும் இன்று நாங்கள் அனுபவித்து மகிழ்கின்றோம்.

பகற் பேச்சும் இரவிற் கனவும் அவளிடை
வைத்த நினைவை யல்லால் பிற
வாஞ்சை யுண்டோ

எனும் இக்கவிதைத் தொடர்களுடன்

**சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்**
**கண்ணிணை நின் திருப் பாதப் போதுக்காக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாகுன்**
**மணிவார்த்தைக் காக்கி**

எனவரும் திருவாசகத் தொடர்களை ஒப்பிட்டு நோக்குக.

## இரண்டாவது—லக்ஷ்மி காதல்

இராகம்—ஸ்ரீராகம்] [தாளம்—திஸ்ர ஏகம்

**இந்த நிலையினிலே — அங்கோர்**
**இன்பப் பொழிலி னிடையினில் வேறொரு**
**சுந்தரி வந்துநின்றாள் — அவள்**
**சோதி முகத்தின் அழகினைக் கண்டென்றன்**
**சிந்தை திறைகொடுத்தேன் — அவள்**
**செந்திரு வென்று பெயர்சொல்லினாள்; மற்றும்**
**அந்தத் தின முதலா — நெஞ்சம்**
**ஆரத் தழுவிட வேண்டுகின்றேன், அம்மா!** 5

பொருள்: *இந்த நிலையினிலே - (இங்ஙனம் யான் இருபத்தி ரண்டாண்டுகள், கலைமகளிடத்தில் காதல் கொண்டிருந்த) நிலைமையிலே, அங்கோர் - அவ்விடத்தில் உள்ள ஒரு, இன்பப் பொழிலின் இடையினில் - இன்ப உணர்ச்சியை ஊட்டுகின்ற சோலையின்கண்ணே, வேறொரு - இன்னும் ஓர், சுந்தரி—அழகி, வந்து நின்றாள் - வந்து தோன்றினாள், அவள் - அச்சுந்தரியின், சோதி முகத்தின் - ஒளிபொருந்திய முகத்தின்கண் நிழலாடுகின்ற, அழகினை - எழிலை, கண்டு — நோக்கியதும், என்றன் சிந்தை - எனது உள்ளத்தை, திறை கொடுத்தேன் - பறிகொடுத்து விட்டேன், (கப்பமாகக் கொடுத்துவிட்டேன்), அவள் - அச்*



*சுந்தரி, மற்றும் - அதன் பின்பும், பெயர் - தன்னுடைய பெயர், செந்திரு என்று - செம்மை வாய்ந்த திருமகள் என்று, சொல்லினாள்—கூறினாள், அந்தத்தினம் முதலாய் - அந்தநாள் தொடங்கி, நெஞ்சம் - எனதுள்ளம், ஆர - (இன்பத்தினால்) நிறைவடையும் வண்ணம், தழுவிட - (அச் செந்திருவை) அணைந்திட, வேண்டுகின்றேன் - விரும்புகின்றேன்.*

**விளக்கம்:** இக்கவிதையில் பொருட் செல்வத்தை நல்கும் திருமகளின்மேற் காதல்கொண்டு, அவளின் பெருங்கருணையை விரும்பிநின்ற தமது உள்ளத் துடிப்பைக் கூறும் பாரதியாரின் உவகைப் பெருக்கை உணர்கின்றோம்.

இருபத்திரண்டு ஆண்டுகள் நிறையுமளவும் கலைமகளின் மேற் காதல்கொண்டு, அவளின் கருணையினால், கவிதை மழையைப் பொழிந்த பாரதியார், உலக இன்பங்களுக்கு மிக இன்றியமையாத பொருட்செல்வத்தை விழைந்து திருமகளின் கருணையை விழைகின்றார்.

**இன்பப் பொழிலின் இடையினில்**
**வேறொரு சுந்தரி வந்துநின்றாள்**

எனும் தொடர்களில் உலக இன்ப நுகர்வுக்குப் பொருள் மிக இன்றியமையாததென்பதை உணர்ந்து கூறுகின்ற பாரதியாரின் உயிர்த் துடிப்பை உணர்கின்றோம்.

**இன்பப் பொழிலின் இடை** எனுந்தொடரை **பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை** எனவரும் திருக்குறளுடன் ஒப்பிட்டு நோக்குக. கவிதை பாடுதலில பெருங் காதல்கொண்ட பாரதியார், இல்லறவாழ்வில் ஈடுபட்ட பின்பு பொருட்செல்வத்திற் காதல் கொண்டவராய்த் திருமகளின் கருணையை விரும்புகின்றார்.

**சோதி முகத்தின் அழகினைக் கண்டென்றன்**
**சிந்தை திறை கொடுத்தேன்**

எனுந் தொடர்களில் பாரதியாரின் உள்ளம் பொருட் செல்வத்தில் பெருவேட்கை கொண்ட நிலை அப்படியே புலனாகின்றது.

பொருளிலார்க் கிலை இவ்வுல கென்றநம்
புலவர் தம்மொழி பொய்மொழி அன்றாகாண்
பொருளிலார்க் கினமில்லை துணையிலை
பொழுதெலாம் இடர்வெள்ளம் வந்தெற்றுமால்
பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்

எனத் தமது சுயசரிதையில் பாரதியார் கூறுவதையும் நோக்குக.

**புன்னகை செய்திடுவாள் — அற்றைப்**
**போது முழுதும் மகிழ்ந்திருப்பேன்; சற்றென்**
**முன்னின்று பார்த்திடுவாள் — அந்த**
**மோகத்தி லேதலை சுற்றிடுங் காண்; பின்னர்**
**என்ன பிழைகள் கண்டோ — அவள்**
**என்னைப் புறக்கணித் தேகிடுவாள்; அங்கு**
**சின்னமும் பின்னமுமா — மனஞ்**
**சிந்தியுளமிக நொந்திடு வேன், அம்மா!** 6

பொருள்: *புன்னகை செய்திடுவாள் - (அச் செந்திருவென்னுந் திருமகள்) என்னைப் பார்த்துப் புன்சிரிப்புப் புரிந்திடுவாள், அற்றைப்போது - அங்ஙனம் அவள் புன்சிரிப்புச் செய்த அந்நாள், முழுதும் - முழுவதும், மகிழ்ந்திருப்பேன் - உவகை கொண்டிருப்பேன், (திருமகளின் அருளால் சிறிய செல்வத்தைப் பெற்று அந்நாள் முழுவதும் உவகையுடன் இருப்பேன் எனக் குறிப்புப் பொருள் தோன்றுதலைக் காண்க.) என்முன் - எனக்கெதிரே (முன்பாக), சற்று நின்று - (அத்திருமகளானவள்) சிறிதுநேரம் நின்று, பார்த்திடுவாள் - நோக்கியருள்வாள், அந்த மோகத்திலே - (திருமகள் என்முன் நின்று என்மேல் திருநோக்கம் புரிந்ததினால் ஏற்பட்ட) மயக்கத்தினால், தலை சுற்றிடுங்காண் — என் தலை சுழன்றிடும், (காண் - அசை), (திருமகள் எனக்குப் பெருஞ் செல்வத்தைத் தந்தவுடன் யான் செல்வச் செருக்கினால் மயங்கித் தலைகீழாக நடக்கத் தொடங்கிவிடுவேன், எனவோர் குறிப்புப்பொருள் தோன்றுதலையும் காண்க ; பின்னர் - அதன்பின்பு, என்ன பிழைகள் - என்னிடத்தில் என்ன குற்றங்களை, கண்டோ - கண்டதினாலோ (நானறியேன்), அவள் - அச்செந்திருமகளானவள், என்னை - அடியேனாகிய என்னை, புறக்கணித்து — பொருட்படுத்தாமல் விடுத்து, ஏகிடுவாள் - சென்று விடுவாள். அங்கு - அங்ஙனம் அவள் சென்றிட அவ்விடத்தே நின்று, மனம் - என்மனமானது, சிந்தி — சிதறி, சின்னமும் — நிலைகுலையப்பட்டும், பின்னமுமாய் — சிறு துகளாக நொறுங்கப் பட்டும், உளம் — சித்தம், மிக நொந்திடுவேன் - மிகவும் வருத்தங் கொண்டிடுவேன்.*



**விளக்கம்:** இக்கவிதையில், சிலகாலம் திருமகளின் அருளைப் பெற்றும் சிலகாலம் பெறுமலும் தாம் வறுமையால் வாடிய நிலையைச் சொல்லி வருந்துகின்ற பாரதியாரின உள்ள நிலையை உணர்கின்றோம்.

உலகவாழ்வில் இடையிடையே வறுமைக் கொடும்பிணியால் பாரதியார் அல்லற்பட்டுத் திருமகளின் அருளை வேண்டி நின்ற நிலைமையை அப்படியே சொல்லிச் சொல்லி எம்மையும் ஊக்குகின்றார்.

**புன்னகை செய்திடுவாள் அற்றைப்போது**
**முழுதும் மகிழ்ந்திருப்பேன்**

என்றும்,

**என்ன பிழைகள் கண்டோ — அவள்**
**என்னைப் புறக்கணித் தேகிடுவாள்**

என்றும் பாரதியார் கூறுகின்ற கவிதைத் தொடர்களால் அவர் இடையிடை பொருட் செல்வத்தைச் சிறிதளவாதல் பெற்றும் இடையிடையே வறுமைத் துன்பத்தால் வாடி வருந்தியும் இருந்த நிலை புலனாகின்றது.

**சின்னமும் பின்னமுமா — மனம்**
**சிந்தி உளமிக நொந்திடுவேன்**

எனும் தொடர்களில் பாரதியார் அடைந்த வறுமைத் துயரின் மிகுதி புலனாகின்றது.

**வறுமைப் பாழ்பிணி ஆற்றப்படா துளம்**
**உருகிப் போனது தேற்றப்படாதினி**
**மகிமைக் கேடுகள் பார்க்கப் படாதுன — தருள்வாய்**

எனவரும் திருப்புகழ்த் தொடர்களையும் நோக்குக.

**காட்டு வழிகளிலே — மலைக்**
**காட்சியிலே, புனல் வீழ்ச்சியிலே, பல**
**நாட்டுப் புறங்களிலே, நகர்**
**நண்ணு சிலசுடர் மாடத்திலே, சில**
**வேட்டுவர் சார்பினிலே — சில**
**வீர ரிடத்திலும் வேந்த ரிடத்திலும்,**
**மீட்டு மவள்வருவாள் — கண்ட**
**விந்தை யிலேயின்ப மேற்கொண்டுபோம், அம்மா! 7**

பொருள்: *காட்டுவழிகளிலே - (செழித்தோங்கும்) காடுகள் நெருங்கியுள்ள வழிகளிலும், மலைக் காட்சியிலே - (வானளாவ ஓங்கி மழை முகிலுடன் விளங்குகின்ற) மலைகளின் அழகுத் தோற்றத்திலும், புனல் வீழ்ச்சியிலே - (மலைத்தலையில் நின்று இறங்கி வருகின்ற) அருவியின் வீழ்ச்சியிலும் (பாய்ச்சலிலும்), பல-பலவகையான, நாட்டுப்புறங்களிலே - வயல் வளம் வாய்ந்த ஊர்ப் புறங்களிலும், நகர் நண்ணும் - பட்டினங்களிலே உள்ளனவும், சுடர் - மின்னலைப்போல ஒளி வீசுகின்றனவுமான, சில மாடத்திலே - மேல் மாடங்கள் அமைந்த சில இல்லங்களிலும், சில வேட்டுவர் சார்பினிலே - சில இடங்களில் உள்ள வேடர்களின் இருப்பிடங்களாக விளங்கும் வேட்டுவச் சேரிகளிலும், சில வீரரிடத்திலும் - வீரர்கள் சிலரிடத்திலும் (வீரர்களின் தோளிலும்), வேந்தரிடத்திலும் - மன்னர்களிடத்திலும் (மன்னர்களின் செங்கோலாட்சியிலும்) அவள் - அத்திருமகளானவள், மீட்டும் - பின்பும், வருவாள் - எனக்குக் காட்சி தந்திடுவாள், கண்ட - அங்ஙனம் அத்திருமகளைக் கண்ட, விந்தையிலே - ஆச்சரியத்தினாலே, இன்பம் - இன்ப உணர்ச்சியானது, மேற்கொண்டு போம் - எனக்கு மேலோங்கிவிடும்.*

**விளக்கம்:** இக் கவிதையில், அழகுத்தெய்வமாகிய திருமகளின் அருட்காட்சியைத் தாம் கண்டுகளித்த இடங்களைச் சொல்லி மகிழ்கின்ற பாரதியாரின் ஆர்வக்குரலைக் கேட்கின்றோம்.



கவிதை உள்ளம் கொண்ட பாரதியார் திருமகளின்மேற் கொண்ட காதல், வெறும் பொருட்செல்வப் பேற்றுடன் நின்றுவிடவில்லை. எங்கெங்கே அழகும் செழிப்பும் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் திருமகளின் காட்சியைக் கண்டு ஆவி தளிர்க்கின்றார்.

செழித்து வளர்ந்த காடுகளின் கவினிலும், வானளாவ ஓங்கியுள்ள மலைகளில் நிழலாடும் கவினிலும், மலைகளின் உச்சியில் நின்று வெள்ளியை உருக்கி ஓடவிட்டாற்போல இறங்கி வருகின்ற அருவிப்பெருக்கின் கவினிலும், நாட்டுப் புறங்களில் உள்ள வயல் நிலங்களில் பச்சைப் பசேலென விளங்கும் பயிர்களின் இளமைக் கவினிலும், நகரங்களில் அமைந்துள்ள மாடிவீடுகளின் கவினிலும், வேட்டுவச் சேரியில் உள்ள வேடர்களின் வீர வாழ்விலும், குறிஞ்சி நிலத்தில் அமைந்துள்ள செழிப்பிலும், வீரவாழ்க்கை படைத்த வீரர்களின் தோள்களில் நின்று நிழலாடும் ஆண்மைக் கவினிலும், மன்னர்களின் ஆட்சித்திறமை, ஆண்மை என்பவற்றின் கவினிலும் திருமகளின் காட்சியைக் கண்டு இன்பவெறி கொண்டேனெனப் பாரதியார் பாடிய இக்கவிதை புலவர்க்கோர் புதுவிருந்தாகும்; கவிதையுள்ளம் என்னென்ன வகையில் செல்வ நுகர்வைப் பெற்று இன்பமடைகின்ற தென்பதைப் பாரதியார் எமக்கு உணர்த்தியுள்ளார்.

**காட்டு வழிகளிலே — மலைக்**
**காட்சியிலே, புனல் வீழ்ச்சியிலே**

எனக் கவிதையைத் தொடங்குகின்றபோதே அவர் திருமகளைப் பார்த்தவிடமெலாம் நீக்கமறக் கண்டு இன்பம் அடைகின்ற ஆனந்தப் பெருக்கை அறிகின்றோம்.

**மீட்டும் அவள் வருவாள் கண்ட**
**விந்தையிலே இன்பம் மேற்கொண்டு போம்.**

எனும் கவிதைத் தொடர்களில் பாரதியார் அடைந்த இன்ப உணர்ச்சியின் இயல்பை அறிகின்றோம்.

## மூன்றாவது—காளி காதல்

இராகம்: புன்னாகவராளி] [தாளம்: திஸ்ர ஏகம்

**பின்னோர் இராவினிலே — கரும்**
**பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு;**
**கன்னி வடிவமென்றே — களி**
**கண்டு சற்றேயரு கிற்சென்று பார்க்கையில்**
**அன்னை வடிவமடா! — இவள்**
**ஆதி பராசக்தி தேவியடா! — இவள்**
**இன்னருள் வேண்டுமடா! — பின்னர்**
**யாவு முலகில் வசப்பட்டுப் போமடா! 8**

பொருள்: *பின் - பின்னர் (திருமகளின் அருளைப் பெற்ற பின்), ஓர் இராவினிலே - ஒருநாள் இராப்பொழுதில், கரும் பெண்மை அழகு ஒன்று - (அழகு கரிய பெண்மை ஒன்று) அழகு நிறைந்த கரிய நிறத்தையுடைய பெண்ணொருத்தி, என் கண்முன் - என் கண்ணின் முன்னே, வந்தது - வந்து காட்சி கொடுத்தாள் (தோன்றினாள்). கன்னி வடிவமென்றே - (அப் பெண்ணைக் கண்டவுடன்) இளங் கன்னிப்பருவ உருவமுடையவளாய் இருக்கின்றாள் என்று, களிகண்டு - மிக மகிழ்ச்சியைப் பெற்றவனாய், சற்றே - சிறிது, அருகிற் சென்று - அவளின் பக்கத்திலே சென்று, பார்க்கையில் - (யான்) பார்த்தபொழுது தான், (உண்மையை உணர்ந்தேன்) அவள்—அக்கன்னிப் பெண்ணானவள், அன்னை வடிவமடா - என் தாய்த்தெய்வத்தின் உருவமாகக் காட்சியளித்தாளடா, இவள் - இவள்தான், ஆதிபராசக்தி தேவியடா - எல்லாவற்றிற்கும் முதலாகவுள்ள பராசக்தியாகிய தேவியென்பதை உணர்ந்துகொண்டேனடா, இவள் - இத்தேவியின், இன்னருள் - இனிய கருணை, வேண்டுமடா - எமது வாழ்வுக்கு மிக இன்றியமையாது வேண்டுவதொன்றாகுமடா, பின்னர் - அவளின் இனிய கருணையைப் பெற்றபின், உலகில் - இந்நிலவுலகின்கண் உள்ள, யாவும் - எல்லா வகையான இன்பப் பேறுகளும், வசப்பட்டுப்போமடா - எங்கள் ஆட்சிக்குள் அடங்கி (உட்பட்டு)ப் போமடா.*



**விளக்கம்:** இக் கவிதையில் அன்னை பராசக்தியின்மேற் காதல்கொண்டு அவளின் கருணையைப் பெற முயல்கின்ற பாரதியாரின் எழுச்சியை உணர்கின்றோம்.

கல்வியும் செல்வமும் நிரம்பப் பெற்றாலும் அன்னை பராசக்தியின் இன்னருள்தான் அவை யாவற்றையும் முட்டின்றி நுகர்விக்கும் ஆற்றல் வாய்ந்ததென்னும் எண்ணத்தால் அள்ளுப்பட்ட பாரதியார், அவளின் அருளாற்றலைப் பாராட்டி வியக்கின்றார்.

கன்னிப்பெண் வடிவத்தில் காட்சிகொடுத்த தாய்த்தெய்வத்தைக் கண்டவுடன் பாரதியார் களிகொண்டுவிட்டார். அருகில் சென்று பார்த்தவுடன் கன்னியுருவத்தில் நிற்பவள் ஆதி பராசக்தியென்பதை அறிந்தார்.

**அன்னை வடிவ மடா — இவள்**
**ஆதி பராசக்தி தேவியடா — இவள்**
**இன் னருள் வேண்டுமடா**

எனுங் கவிதைத் தொடர்களை படிக்கும்பொழுது எழுகின்ற ஓசையும் எழுச்சியும், பாரதியார் ஆதிபராசக்தி தேவியிடங் கொண்ட பக்தியையும் மதிப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

**மாகாளி பராசக்தி துணையே வேண்டும்**
**வையகத்தில் எதற்கும் இனிக்கவலை வேண்டா**
**சாகாமல் இருப்பது நம் சதுராலன்று**
**சக்தி அருளாலன்றோ பிறந்தோம் பார்மேல்**

எனப் பாரதியார் பராசக்தி வணக்கத்தில் கூறுவதையும் நோக்குக.

**செல்வங்கள் பொங்கிவரும்; — நல்ல**
**தெள்ளறி வெய்தி நலம்பல சார்ந்திடும்;**
**அல்லும் பகலுமிங்கே — இவை**
**அத்தனை கோடிப் பொருளினுள்ளே நின்று**

**வில்லை யசைப்பவளை — இந்த**
**வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்**
**தொல்லை தவிர்ப்பவளை — நித்தம்**
**தோத்திரம் பாடித் தொழுதிடு வோமடா!** ௯

பொருள்: செல்வங்கள் பொங்கிவரும் - (இப்பராசக்தியின் அருளால்) பொருட்செல்வம் அருட்செல்வம் எனும் இருவகைச் செல்வங்களும் பெருகி மென்மேலும் வளர்ந்துகொண்டே இருக்கும், நல்ல - தூய்மையான (ஆணவச் சார்பில்லாத), தெள்ளறிவு - தெளிந்த ஞானம், எய்தி - எமக்கு வரப்பெற்று, நலம் பல - (அதனால்) பல நன்மைகளும், சார்ந்திடும் - உண்டாகும், இங்கே - இவ்வுலகில், அல்லும் பகலும் - இரவும் பகலும், இவை - எமக்குமுன் காணப்படுகின்றவைகளாகி", அத்தனை கோடி - (எண்ணுள் அடங்காத) பல கோடிக்கணக்கான, பொருளினுள்ளே - இயங்கியற்பொருள், நிலையியற் பொருள்களெனும் இப்பொருள்களின் உள்ளே எல்லாம், நின்று-எள்ளுள் எண்ணெய்போலக் கலந்து நின்று, வில்லை அசைப்பவளை - தன் கையிலே உள்ள வில்லை வளைக்கின்றவளும், இந்த - (அங்ஙனம் வில்லை வளைப்பதினால்) இவ்வுலகில் உள்ள. வேலையனைத்தையும் - எல்லாப் பொருள்களையும் இயங்க வைத்தலாகிய செயல்கள் (கிரியைகள் எல்லாவற்றையும்), செய்யும் - செய்தருளுகின்ற, வினைச்சியை - கிரியாசத்தியை, தொல்லைதவிர்ப்பவளை - எமது பிறவித்துன்பத்தைப் போக்குகின்றவளை, நித்தம் - என்றும் (எப்பொழுதும்), தோத்திரம் பாடி - (அவளின் புகழைக் கூறுகின்ற பொருள்சேர் புகழுரைகளாகிய) தோத்திர (வணக்க)ப் பாக்களைப் பாடி, தொழுதிடுவோமடா - வணக்கஞ் செய்வோமடா.

**விளக்கம்:** இக் கவிதையில், அன்னை பராசக்தியின் அருளாற்றலை வியந்துரைத்துப் பாராட்டி, அவளை வணங்கும் வண்ணம் எம்மையெல்லாம் ஊக்குகின்ற பாரதியாரின் இன்ப உள்ளத்தைக் காண்கின்றோம்.



**அல்லும் பகலும் இங்கே — இவை**
**அத்தனை கோடிப் பொருளினுள் ளேநின்று**
**வில்லை அசைப் பவளை — இந்த**
**வேலை அனைத்தையும் செய்யும் வினைச்சியை**

எனவரும் இக்கவிதைத் தொடர்களில், அன்னை பராசக்தியைப் பற்றி ஆகமங்களில் கூறுகின்ற தத்துவப் பொருள்களை யெல்லாம், அடக்கி உரைக்கும் பாரதியாரின் ஞானத்திறன் கிடந்து நிழலாடுகின்றது.

**மூலப் பரம் பொருள் ஊக்கம் — இந்த**
**மூன்று புவியும் அதன் ஆட்டம்**
**காலப் பெருங் களத்தின் மீதே — எங்கள்**
**காளி நட முலகக் கூட்டம்**

எனச் சத்திவிளக்கத்தில் பாரதியார் கூறுவதையும் நோக்குக.

**வேலை அனைத்தையும் செய்யும் வினைச்சி**

எனுந் தொடருடன்,

**பவள வாய்ச்சி, தவளவா ணகைச்சி**
**நஞ் சுண்டு கறுத்த கண்டி**

எனவரும் சிலப்பதிகாரத் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக.

---

# 10. வெண்ணிலாவே!

வெண்ணிலா, திங்கள், சந்திரன், மதி என்பன ஒரு பொருட் சொற்கள். வெண்ணிலாவின் அழகினையும் அதன் தண்ணொளியின் இனிய பண்பினையும் பாராட்டிப் பாடாத புலவர்கள் இல்லையெனவே சொல்லலாம். பாரதியார் வெண்ணிலாவின் பண்புகளைப் புதியமுறையில் புனைந்து கூறுகின்ற அரிய கவிதைகள், **இவ் வெண்ணிலாவென்னும்** பகுதியில் இடம்பெற்றுள்ளன.

கற்பனைத் திறனும், கவிதை வளமும் படைத்த பாரதியார், தமது சொற்சித்திரத்தில் வெண்ணிலாவின் வியத்தகு பண்புகளுக்கெல்லாம் வண்ணமும் வடிவுங் கொடுத்துத் தீட்டியுள்ளார். பாரதியாரின் உள்ளத்திரையில் பதிந்த வெண்ணிலா **எண்ணிலடங்காத ஏற்றத்தையும் எழிலையும், தேய்ந்தும் வளர்ந்தும் மாறாத நிறைவையும்** பெற்றுப் பொலிகின்றது.

நீலவான் பரப்பாகிய கடலில் நிலவுமொரு தீவாக வெண்ணிலாவைப் பார்க்கும் பாரதியாரின் கண்ணில் நிழலாடுகின்ற புலமை ஒளியுடன் நாமும் கலந்து, இக் கவிதைகளின் கற்பனை நலத்தைக் கண்டு மகிழ்வோம்.

**எல்லை யில்லாததோர் வானக் கடலிடை**
**வெண்ணிலாவே! — விழிக்**
**கின்ப மளிப்பதோர் தீவென் றிலகுவை**
**வெண்ணிலாவே!**
**சொல்லையும் கள்ளையும் நெஞ்சையுஞ் சேர்த்திங்கு**
**வெண்ணிலாவே! — நின்றன்**
**சோதி மயக்கும் வகையது தானென்சொல்**
**வெண்ணிலாவே!**



**நல்ல ஒளியின் வகைபல கண்டிலன்**
**வெண்ணிலாவே! — இந்த**
**நனவை மறந்திடச் செய்வது கண்டிலன்**
**வெண்ணிலாவே!**
**கொல்லும் அமிழ்தை நிகர்த்திடுங் கள்ளொன்று**
**வெண்ணிலாவே! — வந்து**
**கூடி யிருக்குது நின்னொளி யோடிங்கு**
**வெண்ணிலாவே!** 1

பொருள்: *வெண்ணிலாவே! நீ எல்லையில்லாத - முடிவு காண முடியாமல் பரந்துகிடக்கும், ஓர் - ஒப்பற்ற, வானக் கடலிடை - வானம் (ஆகாயம்) என்னும் பெருங்கடலின்கண், விழிக்கு - பார்க்கின்ற கண்களுக்கு, இன்பம் அளிப்பது - இன்பத்தைக் கொடுக்கும் (உவகை உணர்ச்சியை ஊட்டுகின்ற), ஓர் தீவென்று - ஒரு தீவைப்போல, இலகுவை - காட்சியளிக்கின்றாய், நின்றன் - உன்னுடைய, சோதி - (தன்)ஒளியானது, இங்கு - இவ்விடத்தில், சொல்லையும் - (தீஞ்சொல் கவியின்பம் போன்ற) சொல்லின் சுவையையும், கள்ளையும் - தேனின் சுவையையும், நெஞ்சையும் - என் உள்ளத்தினையும், சேர்த்து - ஒன்றாகக் கலந்தாற்போன்று, மயக்கும் - இன்பத்தை ஊட்டி மயங்க வைக்கின்ற, வகையது தான் - தன்மைதான், என் சொல் - என்னென்று சொல்வேன், நல்ல ஒளியின் - (நீ தரும் ஒளியைக் கண்ட யான்) நல்ல இன்பத்தை ஊட்டுகின்ற ஒளிகளின், வகை பல கண்டிலன் - பலதிறப்பட்ட பண்புகளையும் கண்டறியேன், இந்த - இதோ நான் அடைந்துள்ள, நனவை - விழிப்பு நிலையை, (உன் ஒளியைப்போல் வேறெந்த ஒளியும்) மறந்திட - மறந்துவிட, செய்வது - செய்தலை, கண்டிலன் - கண்டறியேன், கொல்லும் - அறிவை அழித்து (மயக்கி), அமிழ்தை நிகர்த்திடும் - அமிழ்தின் சுவைபோன்றதோர் ஆனந்தத்தைக் கொடுத்திடும், கள்ளொன்று - மது ஒன்று, வந்து - (எங்கிருந்தோ) சுரந்து வந்து, இங்கு - இவ்விடத்தில் நீ வீசுகின்ற, நின் ஒளியோடு - உனது ஒளியினுடன் (தண்ணொளியுடன்), கூடியிருக்குது - கலந்திருக்கின்றது.*

**விளக்கம்:** இக்கவிதையில் வெண்ணிலாக் கொட்டுகின்ற தண்ணொளி இன்பத்தை நுகர்ந்து கவிதை வெறி கொண்ட

பாரதியாரின், புதிய நலங்கனிந்த புலமைக் குரலைக் கேட்கின்றோம்.

எல்லைகாண முடியாமல் அகன்றுகிடக்கும் நீலவான் பரப்பைக் கடலாகவும், அந்நீலவான் பரப்பில் காணப்படுகின்ற வெண்ணிலாவை ஒரு தீவாகவும் கூறுகின்ற பாரதியாரின் புலமை போற்றத்தக்கதாகும்.

பரந்துபட்ட அகல்வான் பரப்பைக் கடலாகவும், அவ்வானத்தில் விளங்கும் வெண்ணிலாவைத் தீவென்றும் குறிப்பிடும்பொழுது, **வானக்கடல் என்பதை வானமாகிய கடலென உருவமாகவும், தீவென்று இலகுவை' என்பதை தீவைப்போல விளங்குவாய் என உவமையாகவும் கொள்ளவேண்டும் தீவென்றிலகுவை,** என்பதில் வருகின்ற **'என்று'** என்பது உவம உருபாகும்.

வெண்ணிலா விரிக்கின்ற தண்ணொளிக் கதிரின்கண் அமைந்துள்ள இன்பத்தை, நுகர்ந்து உளஞ்செழித்த பாரதியார் சொல்லின்பத்தையும் தேனின்பத்தையும் தம் உளத்தின்கண் கலந்து, சுவைக்க வைத்ததுபோன்ற புதியதோர் அனுபவத்தைப் பெற்றுவிட்டதாகக் கூறுகின்றார்.

**சொல்லையும் கள்ளையும் நெஞ்சையும்**
**சேர்த் திங்கு வெண்ணிலாவே**
**நின்றன் சோதி மயக்கும் வகையதுதான்**
**என்சொல்**

எனும் தொடர்களில் அமைந்துள்ள சொல்லின்பமும் பொருளின்பமும் பாரதியாரின் கவிதையுள்ளத்தின் செழிப்பைக் காட்டுகின்றன. இக்கவிதைத் தொடர்களுடன்

**சொன் னலமும் பொரு ணலமும்**
**சுவைகண்டு சுவைகண்டு துய்த்துத் துய்த்துக்**
**கன்னலிலே சுவை யறியுங் குழந்தைபோல்**
**தமிழ்ச் சுவை நீ களித்தாயன்றே**



எனப் பாரதியார் பாடிய ஓலைத்தூக்கில் வருந் தொடர்களுடன் ஒப்பிட்டு நோக்குக.

**மாதர் முகத்தை நினக்கிணை கூறுவர்**
**வெண்ணிலாவே! — அஃது**
**வயதிற் கவலையின் நோவிற் கெடுவது**
**வெண்ணிலாவே!**
**காத லொருத்தி இளைய பிராயத்தள்**
**வெண்ணிலாவே! — அந்தக்**
**காமன்றன் வில்லை யிணைத்த புருவத்தள்**
**வெண்ணிலாவே!**
**மீதெழும் அன்பின் விளைபுன் னகையினள்**
**வெண்ணிலாவே! — முத்தம்**
**வேண்டிமுன் காட்டு முகத்தி னெழிலிங்கு**
**வெண்ணிலாவே!**
**சாதல் அழிதல் இலாது நிரந்தரம்**
**வெண்ணிலாவே! — நின்**
**தண்முகந் தன்னில் விளங்குவ தென்னை கொல்?**
**வெண்ணிலாவே!** 2

**பொருள்:** *வெண்ணிலாவே! நீ மாதர் முகத்தை - பெண்களின் (மங்கையர்களின்) முகத்தினை, நினக்கு - உனக்கு, இணை என்று கூறுவர் - ஒப்பாகும் என்று உரைப்பார்கள், அஃது - உனக்கு ஒப்பாகும் எனக் கூறுகின்ற பெண்களின் முகமானது, வயதில் - வயதின் முதிர்ச்சியாலும், கவலையின் - துன்பத்தின் மிகுதியாலும், நோவில் - உடற்பிணியினாலும். (வருத்தத்தினாலும், நோயில் எனவும் பாடங் கொள்ளலாம்). கெடுவது - அழகு குறைந்துவிடும். (ஆனபடியால் பொதுவாகப் பெண்களின் முகத்தை உனக்கு ஒப்புக்கூறுதல் பொருந்தாது) உனக்கு ஒப்பாக உரைக்கக் கூடியது, காதலொருத்தி - காதலுணர்ச்சியுடையவளாய். இளைய பிராயத்தள் - இளமை நலங்கனிந்த பருவத்தைக் கொண்டவளாய். காமன்றன் - (காதற் கடவுளென்னும்) மன்மதனுடைய, வில்லையிணைத்த - வில்லினைப் போன்ற, (அழகிய) புருவத்தள் - புருவத்தைப் பெற்றவளாய், மீதெழும் - மிக்குத் தோன்றுகின்ற, அன்பின் - அன்பினாலே,*

வினை – உண்டாகின்ற, புன்னகையினள் – புன்சிரிப்பைப் புரி கின்றவளாய் விளங்குகின்ற ஒரு பெண், தன் காதலன், முத்தம் வேண்டி - முத்தமிடுதலை விரும்பி, முன்காட்டும் - அவனுக்கு முன்னின்று (நீட்டிக) கொடுக்கின்ற, முகத்தின் எழில் – முகத் தின் எழில் அழகுதான், இங்கு - இவ்வுலகத்தில் உனக்கு ஒப்புரைக்கக்கூடியது என்க. நின் தண் முகந்தன்னில் - உனது குளிர்ந்த முகத்தின்கண்ணே, சாதல் - சாதலும், அழிதல் – இறத்தலும், இலாது - இல்லாததாய், நிரந்தரம் - எப்பொழு தும், விளங்குவது - விளங்குகின்றதாகிய பேரெழில் (ஒளி), என்னை கொல் - என்ன காரணத்தினால், சொல்வாயாக.

**விளக்கம்:** இக்கவிதையில், வெண்ணிலாவைப் பொது வாக மாதர் முகத்துடன் ஒப்பிட்டுக் கூறுவதை மறுத்துப் புதியதோர் மாதின் எழில் முகத்தைப் படைத்து உவமை காட்டு கின்ற பாரதியாரின் கற்பனைத்திறத்தைக் காண்கின்றோம்.

**மாதர் முகத்தை நினக்கிணை கூறுவர்**
**வெண்ணிலாவே — அஃது**
**வயதிற் கவலையின் நோவிற் கெடுவது,**
**வெண்ணிலாவே**

எனுங் கவிதைத் தொடர்களில் அப்படியே பாரதியாரின் கற் பனைத்திறன் புலனாகின்றது. பெண்களின் முகம் முதுமையி னாலும், கவலையினாலும், வருத்தத்தினாலும், அழுகுகெட்டு மாறு படுந் தன்மையுடையது என, **வெண்ணிலாவாகிய உவ மானப் பொருளை உயர்த்தியும், பெண்களின் முக மாகிய உவமேயப் பொருளை இழித்தும் பாரதியார் உரைக்கின்றார்.** இங்ஙனம் பழித்துரைப்பதை அணிநூலார் **நிந்தை உவமை** எனக் கூறுவர். இங்ஙனம் பெண்களின் முகத்தை இழித்துக் கூறிய பாரதியார்,

**காத லொருத்தி இளைய பிராயத்தள்**
**காமன்றன் வில்லை இணைத்த புருவத்தள்**
**மீதெழும் அன்பின் வினை புன்னகையினள்**
**முத்தம் வேண்டி முன்காட்டு முகத்தின்**
**எழில் இங்கு**

எனப் புதியதோர் முகத்தைப் படைத்துத் தருகின்றார்.



**காதலுணர்ச்சியுடையவளாய், இளமை நலங் கனிந்த பருவத்தைக் கொண்டவளாய், மன்மதனின் கரும்பு வில்லைப்போல் வளைந்த புருவத்தைப் பெற்றவளாய், மிக்குத் தோன்றுகின்ற அன்பினால் உண்டாய புன் சிரிப்புப் பொருந்தியவளாய் விளங்குகின்ற ஓர் பெண், தன்காதலன் இடுகின்ற முத்தத்தைப் பெற விரும்பி நீட்டிக்கொடுக்கின்ற முகத்தின் அழகினையே வெண் ணிலாவுடன் ஒப்பிட்டுரைக்கலாம்** என்பதே பாரதியார் கூறும் இக்கவிதைத் தொடர்களின் கருத்தாகும்.

இங்ஙனம் பாரதியார் படைத்துக்கூறிய இக்கற்பனை முகம் தமிழ் இலக்கிய உலகிற் காணப்படாத புதிதோர் பொருளாகும்.

**நின்னொளி யாகிய பாற்கடல் மீதிங்கு**
**வெண்ணிலாவே! — நன்கு**
**நீயும் அமுதும் எழுந்திடல் கண்டனன்**
**வெண்ணிலாவே!**
**மன்னு பொருள்க ளனைத்திலும் நிற்பவன்**
**வெண்ணிலாவே! — அந்த**
**மாயன் அப்பாற்கடல் மீதுறல் கண்டனன்**
**வெண்ணிலாவே!**
**துன்னிய நீல நிறத்தன் பராசக்தி**
**வெண்ணிலாவே! — இங்கு,**
**தோன்றும் உலகவனே யென்று கூறுவர்**
**வெண்ணிலாவே!**
**பின்னிய மேகச் சடைமிசைக் கங்கையும்**
**வெண்ணிலாவே! — நல்ல**
**பெட்புற நீயும் விளங்குதல் கண்டனன்**
**வெண்ணிலாவே!** 3

**பொருள்:** *வெண்ணிலாவே! இங்கு - இவ்வுலகத்தில், நின் - உன்னுடைய, ஒளியாகிய பாற்கடல் மீது - ஒளிபோல விளங்கு*

இன்ற திருப்பாற்கடலின்கண்ணே, நீயும் - (தண்ணொளிக் கதிர்களை வீசும்) வெண்ணிலாவாக நீயும் அமுதும் - தேவாமிர்தமும், எழுந்திடல் - தோன்றியதுபோன்ற காட்சியை, நன்கு - (யான்) நன்றாக, கண்டனன் - கண்டுகொண்டேன். மன்னும் - நிலைபேறுயுள்ள, பொருள்கள் - இயங்கியற் பொருள் நிலையியற்பொருள் என்று கூறப்படுகின்ற, அனைத்திலும் - எல்லாப் பொருள்களிலும், நிற்பவன் - (உள்ளும் புறமும்) கலந்து நிறைந்து நிற்கின்றதெய்வமாகிய, மாயன் - மகா விஷ்ணு (திருமால்) வானவர், அப்பாற்கடல் மீது - அந்தத் திருப்பாற்கடலின்கண், உறல் - அறிதுயில் கொண்டு கிடத்தலை, கண்டனன் - கண்டுகொண்டேன், துன்னிய - மிகுந்த (நெருங்கித் தடித்த), நீல நிறத்தள் - நீல நிறமுடையவளாகிய, பராசக்தி - அன்னை பராசத்தியென்னும், அவள் - அவளே, இங்கு தோன்றும் - இங்கு எம்மால் காணப்படுகின்ற, உலகு என்று - உலகினையே வடிவமாக உடையாள் என்று, கூறுவர் - ஞானிகள் கூறுகின்றார்கள், பின்னிய - (அப்பராசத்தியின்) பின்னல்பட்டு, (ஒன்றோடொன்று பிணைப்புண்டு கிடத்தல்) மேகச்சடைமிசை - மழைமுகில் போலக் கரியதாய் விளங்கும் சடையின்கண்ணே, கங்கையும் - கங்காதேவியும், நீயும் - வெண்ணிலாவாகிய நீயும், நல்ல பெட்புற - நல்ல பெருமை பொருந்தியவர்களாய், விளங்குதல் - வீற்றிருந்து விளங்குவதை, கண்டனன் - கண்டுகொண்டேன்.

**விளக்கம்:** இக் கவிதையில், வெண்ணிலாவின் பண்புகளில் நிழலாடும் தெய்வச்சாயலைக் கண்டு, உளம்செழித்து வீறும் உணர்ச்சிவெள்ளப் பெருக்குடன் பாடுகின்ற பாரதியாரின் உயர்திறனைக் காண்கின்றோம்.

வெண்ணிலாவின் ஒளிவெள்ளம் உலகெலாம் பரவி அலையெறிகின்ற காட்சி பாரதியாரின் புலமை உள்ளத்திற்கோர் புதுவிருந்தளித்துவிட்டது. அவர் வெண்ணிலாவின் ஒளிவெள்ளத்தைத் திருப்பாற்கடலில் எழுந்த அமுதமாகவும், அவ்வொளிவெள்ளப் பரப்பில் தோன்றுகின்ற வெண்ணிலாவை முன் திருப்பாற்கடலில் எழுந்த அமுதத்துடன் தோன்றிய வெண்ணிலாவாகவும் கூறி மகிழ்கின்றார்.



**நின்னொளி யாகிய பாற்கடல் மீதிங்கு**
**வெண்ணிலாவே — நன்கு,**
**நீயும் அமுதும் எழுந்திடல் கண்டனன்**

எனும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்போது பாரதியார் கண்ட காட்சி அப்படியே எமதுள்ளத்திலும் தோன்றுகின்றது.

இங்ஙனம் வெண்ணிலாவின் ஒளிவெள்ளத்தைத் திருப்பாற்கடலில் எழுந்த அமுதமாகக் கண்ட பாரதியார் அவ்வொளிவெள்ளம் நீலவான் பரப்பெல்லாம் பரவி அலையெறியும் காட்சியை இன்னொரு வகையாகவும் கற்பனை செய்கின்றார். நீலவானத்தைத் திருமாலாகவும், அவ்வானமெல்லாம் பரவி அலைவீசுகின்ற வெண்ணிலாவின் ஒளிவெள்ளத்தைத் திருப்பாற்கடலாகவும் அவர்க்குத் தோன்றுகின்றது. உடனே

**மாயன் அப்பாற்கடல் மீதுறல்**
**கண்டனன் வெண்ணிலாவே**

எனப் பாடுகின்றார்.

பின், அந்நீலவான் பரப்பை உலகமே உருவமாக விளங்கும் பராசக்தியின் கோலமாகவும், அவ்வானத்தில் மிதக்கும் மழைமுகிற் கூட்டத்தை அவளின் சடையாகவும், அவ்வான வெளியில் உள்ள வெண்ணிலாவையும் ஆகாய கங்கையையும் அப்பராசக்தியின் சடைமேல் தங்கி விளங்குகின்றனவாகவும் புனைந்து கூறுகின்றார்.

**துன்னிய நீலநிறத்தள் பராசக்தி இங்கு**
**தோன்றும் உலகவளே என்று கூறுவர்**

எனவும்,

**பின்னிய மேகச்சடைமிசைக் கங்கையும் நல்ல**
**பெட்புற நீயும விளங்குதல் கண்டனன் வெண்ணிலாவே**

எனவும் வரும் கவிதைத் தொடர்களில் பாரதியாரின் கற்பனைத்திறன் அப்படியே கிடந்து நிழலாடுகின்றது.

சிவபெருமான் தமது சடைமுடிமேல் அணிந்துள்ள சந்திரனும், கங்கையும் அன்னை பராசக்தியின் சடைமேலும் விளங்குகின்றன என்று கூறினர். இங்ஙனம் சிவனின் செயல்களையெல்லாம் பராசக்தியின் செயலாகக் கொண்டும் கூறுதல் மரபாகும். இதனை,

**மதியின் வெண்டோடு சூடுஞ் சென்னி**
**நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்**
**பவள வாய்ச்சி**

எனவும்,

**பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கிளந்**
**திங்கள் வாழ் சடையாள் திருமுன்றிலே**

எனவும் சிலப்பதிகாரத் தொடர்களால் அறிக.

**காதலர் நெஞ்சை வெதுப்புவை நீயென்பர்**
**வெண்ணிலாவே! — நினைக்**
**காதல் செய்வார் நெஞ்சிற் கின்னமு தாகுவை**
**வெண்ணிலாவே!**
**சீத மணிநெடு வானக் குளத்திடை**
**வெண்ணிலாவே! — நீ**
**தேசு மிகுந்தவெண் தாமரை போன்றனை**
**வெண்ணிலாவே!**
**மோத வருங்கரு மேகத் திரளினை**
**வெண்ணிலாவே! — நீ**
**முத்தி னொளிதந் தழகுறச் செய்குவை**
**வெண்ணிலாவே!**
**தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும்**
**வெண்ணிலாவே! — நலஞ்**
**செய்தொளி நல்குவர் மேலவ ரமன்றோ?**
**வெண்ணிலாவே!** 4

பொருள்: *வெண்ணிலாவே! நீ, காதலர் நெஞ்சை* – (ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிந்த) *காதலர்களின் மனத்தை, வெதுப்புவை என்பர்* – (காதலுணர்ச்சியைப் பெருக்கி) *துன்பப்படுத்து*



*வாய் என்று சொல்வார்கள், நினை – உன்மேல், காதல் செய்வார் நெஞ்சில்* – (ஒருவரை ஒருவர்விட்டுப் பிரிந்தவர்களாய், உடனுறையும் காதலர்கள்) *அன்பு செய்வார்களானால், இன்னமுதாகுவை* – *அக்காதலர்களுக்கு, இனிய அமுதினைப்போல இன்பமூட்டுவாய், நீ, சீத – குளிர்ச்சி பொருந்திய, மணி – நீலமணிபோல் விளங்கும், நெடுவானக் குளத்திடை – நீண்ட ஆகாயமென்னும் குளத்தின்கண் பூத்த, தேசு மிகுந்த – அழகு நிறைந்த, வெண்தாமரை – வெண்தாமரை மலரை, போன்றனை – போல விளங்குகின்றாய், மோதவரும்* – (வெண்ணிலாவாகிய) *உன்னைத் தாக்கி மறைக்கவருகின்ற, கருமேகத்திரளினை – கரியமேகக் கூட்டத்தினுக்கு, நீ, முத்தின் ஒளி தந்து – வெண்மையான முத்தின் ஒளிபோன்ற ஒளியைக்கொடுத்து,* (அவற்றின்மேல் பரப்பி) *அழகுற – அழகோடு பொருந்தி விளங்க, செய்குவை – செய்திடுவாய்,* (இங்ஙனம் நீ உன்னைத் தாக்கிச் சிதைக்க வருகின்ற மேகக்கூட்டத்திற்கு, ஒளியைக் கொடுத்து அழகுறச் செய்யும் செயலை எண்ணும் பொழுது) *மேலவர் – அறிவிற் சிறந்த சான்றோர்கள், தீது புரிந்திட* – (தமக்குத்) *தீமை செய்ய,* (நினைந்து) *வந்திடும் – தம்மை நோக்கி வருகின்ற, தீயர்க்கும் – கொடியவர்களுக்கும், நலஞ் செய்து – நன்மைசெய்து, ஒளி நல்குவர் – புகழுடன் வாழத்தக்க பெருமதிப்பையும் கொடுப்பார்கள்,* (என்னும் உண்மை புலனாகின்றது என்பதாம்)

**விளக்கம்:** இக்கவிதையில் வெண்ணிலாவின் செயல்களையும், பண்புகளையும் சொல்லி மகிழ்கின்ற பாரதியாரின் நல்லிசைப் புலமை வளத்தைக் காணகின்றோம்.

ஒருவரை ஒருவர், விட்டுப் பிரிந்திருக்கும் காதலருள்ளத்தில், காதலுணர்ச்சியைப் பெருக்கித் துன்புறுத்துந் தன்மை வெண்ணிலாவுக்குண்டெனச் சொல்லுதல் கவி மரபாகும்.

**கொடியை அல்லைநீ யாரையும் கொல்கிலாய்**
**வடுவில் இன்னமுதத் தொடும் வந்தனை**
**பிடியின் மென்னடைப் பெண்ணேரொன்றால் எனைச்**
**சுடுதியோ கடல் தோன்றிய திங்களே**

என இராமபிரான்மேற்கொண்ட காதல் நெஞ்சமுடன் இருந்த சீதாதேவி வெண்ணிலாவைப் பரப்பும் திங்களை நோக்கிச் சொல்லியதாக வரும் இக்கவிதையை நோக்குக.

**காதலர் நெஞ்சை வெதுப்புவை**
**நீ யென்பர் வெண்ணிலாவே**

எனுந் தொடர்களுடன்,

**எனைச் சுடுதியோ கடல்**
**தோன்றிய திங்களே.**

எனுந் தொடர்களையும் ஒப்பிட்டுணர்க.

இங்ஙனம் பிரிந்த காதலரை வருத்துகின்ற வெண்ணிலா பிரிவின்றி வாழுங் காதலர் நெஞ்சில் இன்னமுதம் போன்ற இன்ப உணர்ச்சியைப் பெருக்கி மகிழ்விக்கும் எனக் கூறுதலும் கவிமரபாகும்.

**கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்ப் பிரிந்து**
**உலர்ந்தவர்க் குயிர்சுடு விடமு மாயுடன்**
**புலந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய்**
**மலர்ந்தது நெடுநிலா மதனன வேண்டவே**

எனக் கம்பர் வெண்ணிலா மலர்ந்ததைப்பற்றிக் கூறுதலை நோக்குக. **கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்,** எனும் கம்பர் கூறுந் தொடருடன் **காதல் செய்வார் நெஞ்சிற் கின்னமுதாகுவை,** எனப் பாரதியார் கூறிய கவிதைத் தொடரை ஒப்பிட்டுணர்க.

இங்ஙனம் பிரிந்த காதலர்களின் நெஞ்சில் துன்ப உணர்ச்சியையும், புணர்ந்த காதலர்களின் நெஞ்சில் இன்ப உணர்ச்சியையும் பெருக்குகின்ற வெண்ணிலாவின் செயலைக் கூறிய பாரதியார் அவ்வெண்ணிலா வானப்பரப்பில் தோன்றுகின்ற தன்மையைக் கூறி மகிழ்கின்றார்.

**சீதமணி நெடு வானக் குளத்திடை**
**வெண்ணிலாவே — நீ**
**தேசு மிகுந்த வெண்தாமரை போன்றனை**



இதில், குளிர்ச்சி பொருந்திய நீலநெடுவான்பரப்பைக் குளமாகவும், அவ்வானத்தின்கண் விளங்கும் வெண்ணிலாவை குளத்தின்கண் பூத்து விளங்கும் வெண்தாமரை மலராகவும் வைத்துப் பாடிய பாரதியாரின் உவமைத்திறனை உணர்கின்றோம்.

**நீலவான்பரப்பு – உவமானம். குளம் - உவமேயம். நிறமும் அகலமும் - பொதுத்தன்மைகள்.** (இனி வானக் குளம் எனச் செய்யுளில் கிடந்தபடியே வைத்து, வானமாகிய குளம் என விரித்து உருவக அணியாகவும் கொள்ளலாம்.)

**வெண்மதி - உவமானம். வெண்தாமரைமலர் - உவமேயம். நிறமும் அழகும்-பொதுத்தன்மைகளாகும்.**

தன்னை எதிர்த்து மோதி மறைக்கவரும் கரியமுகிற் கூட்டங்களுக்கெல்லாம், வெண்மையான முத்துப்போல விளங்குகின்ற தண்ணொளியைக் கொடுத்து மகிழ்விக்கின்ற வெண்ணிலாவின் செயலை எடுத்துக் காட்டாக வைத்து மிகச் சிறந்ததோர் உண்மையைப் பாரதியார் உரைக்கின்றார்.

**தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும்**
**நலஞ் செய்து ஒளி நல்குவர்**
**மேலவ ராமன்றோ**

என்பதே பாரதியார் எமக்கெடுத்துரைக்கும் உண்மையாகும். தனக்குத் தீமை புரிந்த முகிற் கூட்டத்திற்குத் தன் ஒளியைக் கொடுத்து நன்மை புரிந்த வெண்ணிலாவின் செயலை வியந்து கூறிய பாரதியார்,

**இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு**

எனவருந் திருக்குறளை நினைவூட்டுகின்றார்.

**அணங்குவாள் விடஅரா அணுகும் எல்லையும்**
**குணங்கெடாது ஒளிவிரி குளிர்வெண் திங்கள்போல்**

எனவரும் கம்பரின் கவிதைத் தொடர்களுடன்,

மோத வரும் கருமேகத் திரளினை
வெண்ணிலாவே நீ
மூத்தின் ஒளிதந்து அழகுறச் செய்குவை

எனுமிப் பாரதியாரின் கவிதைத் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக.

மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்திடும்
வெண்ணிலாவே! — உன்றன்
மேனி யழகு மிகைபடக் காணுது
வெண்ணிலாவே!
நல்லிய லார்யவ னத்தியர் மேனியை
வெண்ணிலாவே! — மூடு
நற்றிரை மேனி நயமிகக் காட்டிடும்
வெண்ணிலாவே!
சொல்லிய வார்த்தையில் நாணுற்றனை போலும்
வெண்ணிலாவே! — நின்
சோதி வதனம் முழுதும் மறைத்தனை
வெண்ணிலாவே!
புல்லியன் செய்த பிழைபொறுத் தேயருள்
வெண்ணிலாவே! — இருள்
போகிடச் செய்து நினதெழில் காட்டுதி
வெண்ணிலாவே! 5

பொருள்: *வெண்ணிலாவே! மெல்லிய — மென்மையான,* மேகத்திரைக்குள் - *மூகில் என்னும் திரையினுள்ளே, மறைந்திடும் - நீ மறைந்து நிற்கும்பொழுத, உன்றன் — உன்னுடைய, மேனி - (வெண்மையான ஒளியோடு பொருந்திய) உன் உடலின் (திருமேனி), அழகு — எழிலானது, மிகைபடக்காணுது - மிகச் சிறந்து (அதிகப்பட்டு) விளங்குகின்றது, (அங்ஙனம் உன் மேனி முகிலினுல் மறைக்கப்பட்டிருக்கும்பொழுது, மிக அழகுடன் விளங்குந்தன்மை) நல்லியலார் - சிறந்த பெண் தன்மைகள் (இயல்புகள்) யாவும் நிரம்பிய, யவனத்தியர் - யவனநாட்டு மகளிர்கள், மேனியை - தங்கள் இயற்கை (அழகு நிரம்பிய) உடலினை, மூடு — மூடி (போர்த்து) மறைக்கின்ற, நற்றிரை — பாலாவிபோன்ற நல்ல திரையானது (ஆடையானது), மேனி — அவர்கள் உடலழகினை, நயமிகக் காட்டிடும் - மேலும் மேலும் அதிகப்படுத்திக் காட்டும் தன்மையைப் போன்றதாகும் (என்று நான் கூறிய) சொல்லிய வார்த்தையில் - (அன்பின் தன்மையைக் காட்டுகின்ற) பாராட்டுரைகளால் (உரைகளைக்கேட்டு), நாணுற்றனை போலும் — வெட்கமடைந்து விட்டனையோ, நின்-உனது, சோதிவதனம் - ஒளி பொருந்திய முகம், முழுதும் - முழுவதையும், மறைத்தனை - மறைத்துவிட்டாய், புல்லியன் - அறிவிற் குறைந்தவனாகிய அடியேன், செய்தபிழை - ஆற்றிய குற்றத்தை, பொறுத்தே அருள் - பொறுத்தருளி, இருள்போகிடச் செய்து — உன்னை மூடியுள்ள இருண்ட முகிற்படலத்தை அகலச்செய்து, (என் அறியாமையாகிய இருளைப்போக்கி, என்றும் குறிப்புப்பொருள் கொள்ளலாம்) நினது எழில் - உனது அழகு நிறைந்த (அழகிய) முகத்தை, காட்டுதி - காட்டுவாயாக என்பதாம்.*



**விளக்கம்:** இக் கவிதையில் வெண்ணிலா, மெல்லிய முகிலினுள் மறைந்து செல்லும்பொழுது, தோன்றுகின்ற புதிய அழகின் பொலிவினைத் தம் புலமைக்கண்ணுற் கண்டு மகிழ்ந்த பாரதியாரின் ஆர்வக்குரலைக் கேட்கின்றோம்.

மெல்லிய முகிலினூடே மறைந்து செல்கின்ற வெண்ணிலாவின் எழில், மிகுந்து தோன்றும் காட்சியை, அழகு நிறைந்த யவனநாட்டு மகளிர் தமது தலையின்மேல் பாலாவி போன்ற மெல்லிய ஆடையினுல் முக்காடிட்டு, முகத்துடன் தம்மேனியையும் மூடிச் செல்லும்பொழுது, அவர்களின் முகமும் மேனியும் முன்னையிலும் எழில் மிகுந்து விளங்குகின்ற காட்சியுடன் ஒப்பிட்டுரைத்த பாரதியாரின் புதிய உவமைத்திறன் போற்றத்தக்கதாகும். **(இவ்வுவமை, பாரதியாரே படைத்துத் தமிழ் இலக்கிய உலகில் வாழ விடுத்ததொன்ருகும்.)**

நல்லியலார் யவனத்தியர் (தம்)
மேனியை மூடும் நற்றிரை
அவர்களின் மேனி (அழகை)
நய மிகக் காட்டிடும்

தன்மையைப்போல,

மெல்லிய மேகத் திரைக்குள்
மறைந்திடும் வெண்ணிலாவே
உன்றன் மேனி அழகு
மிகபடக் காணுது,

எனக் கொண்டுகூட்டுக. இதில், யவனநாட்டு மகளிர் தம் மேனியைத் திரையினுல் மூடுதல் - உவமானம். வெண்ணிலா மெல்லிய மேகத்திற்குள் மறைதல் - உவமேயம். அழகுமிக்குத் தோன்றுதல் - பொதுத்தன்மையாகும்.

மேகத்திரை என்பதை, மேகமாகிய திரை என உருவகமாகவும் கொள்ளலாம்.

இங்ஙனம் மெல்லிய மேகத்துக்குள் மறைந்த மதியைப் பாடி மகிழ்ந்த பாரதியார் அம்மதி தன் உருவெந் தோன்ருத வண்ணம் கருமுகிற் கூட்டத்துள் மறைந்தவுடன் மிகவும் கவலை கொண்டுவிட்டார். வெண்ணிலா ஒளி வெள்ளத்துடன் கலந்து கலந்து கவிதை வெறிகொண்ட பாரதியாரின் உள்ளம் அவ் வெண்ணிலா மறைந்தவுடன் உலேந்துவிட்டது.

சொல்லிய வார்த்தையில்
நாணுற்றனை போலும்
வெண்ணிலாவே நின்
சோதி வதனம் முழுதும் மறைத்தனை

எனப் பாரதியார் கூறுகின்ற குரலிலே அவருள்ளத்தில் நின்று நிழலாடும் சோக உணர்ச்சி அப்படியே புலனுகின்றது.



நெரித்த திரைக்கடலில்
நின்முகங் கண்டேன்
நீல விசும்பினிடை
நின்முகங் கண்டேன்

என வருங் கவிதைத் தொடர்களில் சோதி வதனத்தைக் கண்டு பாரதியார் அடையும் ஈடிணையில்லாத உவகை தோன்றுகின்றது.

யான் உன்னைப் பாராட்டி உரைத்த மொழிகளில் ஏதும் குற்றம் இருந்தாலும் பொறுத்தருளி, உன் எழில் வடிவத்தை எனக்குக் காட்டுவாயாக எனப் பாரதியார் வெண்ணிலாவை இரந் திரந்து வேண்டுகின்ருர்,

புல்லியன் செய்த பிழைபொறுத்தேயருள்
இநன் போகிடச் செய்து,
நினதெழில் காட்டுதி
வெண்ணிலாவே

எனப் பாரதியார் வெண்ணிலாவை வேண்டுகின்ற குரலிலே நிழலாடுகின்ற சோகமும், ஆராமையும், அழகுணர்ச்சியில் அழுந்தி அழுந்தி ஆவி தளிர்க்கும் பாரதியாரின் புலமை உள்ளப் பொலிவைக் காட்டுகின்றன.

---

# 11. முரசு

பாரதியாரின் உள்ளத்தில் பாரதநாட்டு மக்கள் விடுதலை பெற்று, வீரமும், தன்மானமும், அன்பும், அருளும், அறப்பண்பும் உடையவர்களாய், அகிலம் எல்லாம் போற்றிசெய்ய வாழ வேண்டும் என்ற பெருவேட்கை கிடந்து அலைமோதிக்கொண்டே இருக்கும். அந்த அலைமோதலின் எழுச்சியினால், அவர் பாடிய கவிதைகளின் தொகுப்பே **முரசு** என்னும் இப்பகுதியாகும்.

இம்முரசொலிக் கவிதைகளைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை முரசின் ஒலியைப்போலவே அலைஅலையாய்ப் பரந்து செல்கின்றது. சாதிப் பிரிவுகளாலும், சமயப் பிரிவுகளாலும் தனித்தனியாகச் சிதறுண்டு கிடக்கின்ற பாரதநாட்டு மக்களை, அறைகூவி அழைத்துப் பாரதியார் கூறுகின்ற அறிவுரைகள் ஆயிரம் ஆயிரம் ஊழிகள் நின்று வாழக்கூடிய ஆற்றலுடன் பொலிகின்றன.

பிறப்புரிமையினால் சாதிச்சிறப்புக் கூறுகின்ற கொள்கையையும், ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுத்துரைக்கின்ற வன்கண்மையையும், நிறத்திமிரினால் மக்களைத் தாழ்த்திவைக்கும் நீதியற்ற செயலையும் அறத்தொலையுங்கள், அன்பு நெறியைப் போற்றுங்கள், உலக மக்களெல்லாம் ஒருதாய் வயிற்றுக் குழந்தைகள்போல ஒன்றுபட்டு வாழுங்கள், பெண்குலத்தை அடிமைப்படுத்தல் பாவம், மெலியவரை வலியவர் வதைத்து வாழ்கின்ற செயலை வீழ்த்துங்கள், தெய்வம் எம்மையெல்லாம் சிறந்த நெறி ஒழுகச்செய்து காக்கும். என்றெல்லாம் பாரதியாரின் புலமை முரசம் பேரொலி எழுப்புகின்றது.

இம்முரசொலி யென்னும் பெருமுழக்கம் மொழியையும் நாட்டையும் கடந்து உலகப் பெருமுரசாக ஒலிக்கின்றது. பாரதியாரின் முரசொலியில் மொழிகின்ற கொள்கைகள் முழு உலகத்துக்கும் உரிய பொறிநெறிகளாகும்.



**வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் — இங்கு**
**வாழும் மனிதர் எல்லோர்க்கும்**

எனவும்,

**அன்பென்று கொட்டு முரசே — அதில்**
**யார்க்கும் விடுதலை யுண்டு**

எனவும்,

**அறிவை வளர்த்திட வேண்டும் — மக்கள்**
**அத்தனை பேருக்கும் ஒன்றாய்**

எனவும் வரும் முரசொலித் தொடர்கள், கட்டற்று எங்கும் பரந்து கிடக்கும் வானத்தின் அகலம்போலப் பொருள்வளம் நிரம்பியனவாய் விளங்கி உலக மக்கள் எல்லோர் உள்ளத்திலும் இடம்பெற்று வாழும் உயிர் ஆற்றல் உடையனவாய், இருப்பதை நோக்குங்கள்.

**நாக் கடிப்பாக வாய்ப்பறை அறைந்து**
**சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்**

எனவரும் பழம்பாட்டின் தொடர்கள் புலவர்கள் உலக மக்களுள்ளத்தில் அறிவுவளம் பெருகும் வண்ணம் அறைகின்ற முரசின் தன்மையை விளக்குகின்றன. நாவை அடிக்கும் கோலாகவும், வாயை முரசாகவும் கொண்டு புலவர் பெருமக்கள் அடிக்கின்ற முரசொலி, போர் முரசு முதலிய தோற்கருவிகளைப்போல் அல்லாமல் உலகம் உள்ளளவும் நின்று முழங்கும் ஏற்றமுடைய தென்பதையும் நாம் உணர்ந்துகொளல் வேண்டும்.

பாரதியார் பழந்தமிழ்ப் புலவர்களைப் போலவே, தமது உள்ளத்தில் நின்று எழுந்த எண்ணங்களை எமக்குணர்த்தி எம்மை வாழ்விக்கவேண்டுமென்னும் பெருங்கருணையினால், தமது நாவை அடிக்கும் கோலாகவும், வாயை முரசாகவும் (பறையாகவும்) கொண்டு முழக்கிய முரசின் ஒலியானது, என்றென்றும் எமதுள்ளத்தில் கேட்டவண்ணமாகவே இருக்கின்றது.

**வெற்றி எட்டுத் திக்கும் எட்டக்**
**கொட்டு முரசே.**

**வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!**
**வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!**
**நெற்றி யொற்றைக் கண்ணனேடு நிர்த்தனம் செய்தாள்**
**நித்த சக்தி வாழ்க என்று கொட்டு முரசே!**

பொருள்: *வெற்றி - எமது பாரதநாட்டின் ஞான வெற்றியும், சுதந்திர வெற்றியும், எட்டுத் திக்கும் - உலகின் எட்டுத் திசைகளிலும், எட்ட - சென்று பரவும்வண்ணம், (இசை திசை போக என்பதாம்) முரசே - முரசப்பறையே, கொட்டு - நீ முழங்குவாயாக, வேதம் - (எமது நாட்டின் ஞானநிதியாகிய) வேதங்கள் நான்கும், (வேத நெறிகள்) என்றும் - எப்பொழுதும், வாழ்க - நிலைபெற்று வாழ்வதாக, என்று - என்று வாழ்த்தி, முரசே - முரசப்பறையே, கொட்டு - நீ முழங்குவாயாக, நெற்றி - நெற்றியின்கண், ஒற்றைக் கண்ணனேடு - ஒப்பற்ற அக்கினிக் கண்ணை உடையவனுகிய சிவபெருமானுடன், நிர்த்தனம் செய்தாள் - நின்று நடனம் புரிகின்றவளும், நித்த - என்றும் உள்ளவளுமாகிய, சக்தி - சத்தி யென்னும் காளிதேவியானவள், வாழ்க - வாழ்வாளாக, என்று - என்று வாழ்த்தி, முரசே - முரசப்பறையே, கொட்டு - நீ முழங்குவாயாக.*

**விளக்கம்:** இக் கவிதையில் பாரதநாட்டின் வெற்றியும், வேத வழக்குகளும், சிவசக்தியின் திருவருளும் நிலைபெறுவதாகவென வாழ்த்தி முரசை முழங்கும்வண்ணம் முழங்குகின்ற பாரதியாரின் புலமை எழுச்சியைக் காண்கின்ருேம்.

பாரதநாடு சுதந்திரம் பெற்று, வெற்றியுடன் உலகமெலாம் போற்றும் வண்ணம் விளங்கினுற்ருன் வேத வழக்கும், தெய்வக் கொள்கையும் நிலைபெற்ருேங்கும் என்பது, பாரதியாரின் எண்ணமாகும். இதனை,

**தேவிநின் ஒளி பெருத**
**தேயமோர் தேய மாமோ**
**ஆவியங் குண்டோ செம்மை**
**அறிவுண்டோ ஆக்க முண்டோ**
**காவிய நூல்கள் ஞானக்**
**கலைகள் வேதங்க ளுண்டோ**



எனச் சுதந்திரதேவியின் துதி, என்ற பகுதியில் பாரதியார் கூறுகின்றதினுல் அறிக.

1 **ஊருக்கு நல்லது சொல்வேன் — எனக்**
**குண்மை தெரிந்தது சொல்வேன்;**
**சீருக் கெல்லாம் முதலாகும் — ஒரு**
**தெய்வம் துணை செய்ய வேண்டும்.**

பொருள்: *ஊருக்கு - ஊரின்கண் வாழ்கின்ற மக்களுக்கு, நல்லது - (என் உள்ளத்தில் தோன்றும்) நல்ல அறிவுரைகளை, சொல்வேன் - எடுத்துக் கூறுகின்றேன், எனக்கு - மனதில் எனக்கு, உண்மைதெரிந்தது - உண்மையெனத் தோன்றியவற்றை, சொல்வேன் - கூறுகின்றேன், சீருக்கெல்லாம் முதலாகும் - நாங்கள் பெறுகின்ற சிறப்புகளுக்கெல்லாம். மூலகாரணமாக விளங்கும், ஒரு தெய்வம் - ஒப்பற்ற முழுமுதற் கடவுள், துணை செய்யவேண்டும் - துணையாக நின்று திருவருள் புரியவேண்டும். (என்பதை உணர்ந்துகொள்வீராக என்பதாம்).*

**விளக்கம்:** இக் கவிதையில், மக்களாகிய நாம் அடைகின்ற சிறப்புக்களுக் கெல்லாம் மூலகாரணமாக விளங்கும் முழுமுதற் கடவுளின் திருவருளையே துணையாக நாம் பெற வேண்டும் எனக் கூறுகின்ற பாரதியாரின் தெய்வ நம்பிக்கையை உணர்கின்ருேம்.

**சீருக்கெல்லாம் முதலாகும் ஒரு தெய்வம்**
**துணை செய்ய வேண்டும்**

எனப் பாரதியார் கூறுகின்ற கடவுட் கொள்கையுடன்

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

எனவரும் திருவள்ளுவரின் கடவுட் கொள்கையையும் ஒப்பிட்டு நோக்குக.

தெய்வத்தின் துணையின்றி நாம் ஒரு பேற்றையும் எய்த முடியாதென்னும் உண்மை, பாரதநாட்டு மக்கள் உள்ளத்தில்

வழிவழியாக நிலைபெற்று நின்று மலரவேண்டு மென்னும் கொள்கை பாரதியாரின் கவிதையுள்ளத்தில் கிடந்து நிழலாடு கின்றது.

**தெய்வம் நமக்குத்துணை பாப்பா — ஒரு**
**தீங்கும்வர மாட்டாது பாப்பா**

எனக் குழந்தைகளுள்ளத்திலும் தெய்வ நம்பிக்கையை வளர்த்து வாழ்வுதர முயலும் பாரதியாரின் ஆர்வத் துடிப்பையும் நோக்குக,

2 **வேத மறிந்தவன் பார்ப்பான், — பல**
**வித்தை தெரிந்தவன் பார்ப்பான்,**
**நீதி நிலைதவ றாமல் — தண்ட**
**நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.**

பொருள்: *வேதம் அறிந்தவன் - நான்கு வேதங்களையும் ஓதி, அவற்றின்கண் உள்ள உண்மைப்பொருளை உணர்ந்தவனும், பல - பலதிறப்பட்ட, வித்தை தெரிந்தவன் - சோதிடம் முதலிய கலைகளைக் கற்றுணர்ந்து எமக்கு, உரைக்கின்ற ஆற்றல் வாய்ந்தவனுமே, பார்ப்பான் - அந்தணன் எனக் கூறப்படுவான், நீதிநிலை - நீதி நெறியில் நின்று, தவறாமல் - நீங்காமல். தண்ட - கொடியாரை ஒறுத்தலாகிய தண்டனை முதலிய, நேமங்கள் - நியமங்களையும், (எனவே சாம, பேத, தான, தண்டம் என்னும் ஆட்சி நியமங்கள் நான்கினையும் என்பதாம், சாமம் - இன்சொற் கூறுதல், பேதம் - பிரித்தல், தானம் - கொடுத்தல், தண்டம் - ஒறுத்தல்.) செய்பவன் - செய்து, மக்கள் நல்வழியைக் கைக்கொண்டு வாழும்வண்ணம் செங்கோலாட்சி புரிகின்றவன், நாய்க்கன் - அரசனாவான்.*

**விளக்கம்:** இக் கவிதையில் அந்தணர், அரசர் எனப் படுவோரின் பண்புகளை எடுத்துரைக்கின்ற பாரதியாரின் சிந்தனைத்திறனைக் காண்கின்றோம்.

அந்தணர் எனப் பிறப்பினால் ஓர் சாதி இல்லையென்றும், வேதங்களையும் பலதிறப்பட்ட கலைகளையும் உணர்ந்த



வர்களே அந்தணராவார் என்பதையும் பாரதியார் வற்புறுத்தி யுரைக்கின்றார்.

**அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்**

எனவருந் திருக்குறளுடன் பாரதியாரின் கருத்தை ஒப்பிட்டு நோக்குக.

இனி அரசர் எனப் பிறப்புரிமைபற்றிய சாதிப் பிரிவினையும் பாரதியார் ஒப்புக்கொண்டிலர். நீதி திறம்பாமல் கொடியாரை ஒறுத்துச் செங்கோலாட்சி செய்கின்றவனே மன்னனாவான், எனப் பாரதியார் சொல்லுகின்றார். அரசன் மகன் அரசனெனும் பிறப்புரிமை யொன்றினையே கருதி, நீதி நிலை திறம்பிய கொடியோரையும் அரசரெனக் கொள்ளும், இழி நிலையைப் பாரதியார் மிக வெறுக்கின்றார் என்பதை உணர்கின்றோம்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப்படும்.**

என வரும் திருக்குறளையும் நோக்குக. முறைசெய்து மக்களைக் காப்பாற்றாதவன் பிறப்புரிமையால் மன்னனாக இருப்பினும் அவனை மன்னனெனக் மக்கள் கொள்ளார் என்பதாம்.

**முறைசெய்து** என்பதை **நீதிநிலை தவறாமல்** என்றும், **காப்பாற்றும்** என்பதை **தண்ட நேமங்கள் செய்பவன்** என்றும் பாரதியார் விளக்கியுரைக்கின்றார்.

**நாயகன் நாய்க்கன் என நின்றது.**

3 **பண்டங்கள் விற்பவன் செட்டி — பிறர்**
**பட்டினி தீர்ப்பவன் செட்டி**
**தொண்டரென் றோர்வகுப் பில்லை, — தொழில்**
**சோம்பலைப் போல் இழி வில்லை.**

பொருள்: *பண்டங்கள் - பொருள்களை, விற்பவன் - (மக்களுக்கு) விலையாகக் கொடுக்கும் தொழிலை ஆற்றி அதனால், பிறர் பட்டினி - மக்களின் பசிப்பிணியை, தீர்ப்பவன் - போக்குகின்ற*

*வனே, செட்டி - வணிகன் ஆவான், தொண்டர் என்று - அடிமைகள் என்று சொல்லப்படும், ஓர் வகுப்பில்லை - ஒரு சாதிப் பிரிவு கிடையாது. தொழில் - (ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆற்றலுக்கேற்ற) தொழிலைச் செய்யாமல் இருக்கின்ற, சோம்பலைப் போல் - சும்மா முயற்சியின்றி இருப்பதுபோல், இழிவு - தாழ்ந்த நிலை, இல்லை - வேறொன்று உலகில் இல்லை என்பதாம். (எனவே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆற்றலுக்கேற்பத் தமக்கும் பிறர்க்கும் பயன்தரக்கூடிய தொழில்களைச் செய்தல் உயர்வாகும் என்பதை உணர்கின்றோம்.*

*இதனால், அந்தணர், அரசர், வணிகர், தொழிலாளர் என நான்கு பிரிவினராக மக்கள் வாழ்கின்றார்கள என்பதே பாரதியாரின் கொள்கை என்பதை அறிகின்றோம்.)*

**விளக்கம்:** இக்கவிதையில், பிறப்புரிமை இன்றித் தம் செயலாகிய சிறப்புரிமையால் தோன்றிய வணிகர் தொழிலாளர் எனும் இரு பிரிவினரின் பண்பைக் கூறுகின்ற பாரதியாரின் கவிதை உள்ளத்தைக் காண்கின்றோம்.

பொருள்களை விலைக்கு விற்கின்ற வணிக மக்களாகிய செட்டிகள், மக்களின் பசிப்பிணியைப் போக்குகின்ற தண்ணளியாளர் எனப் பாரதியார் பாராட்டி யுரைக்கின்றார். கொள்விலையிலும் பார்க்கப் பலமடங்கு விலையைக் கூட்டி விற்பதினால் மக்களைப் பட்டினிபோடுகின்ற பண்பற்ற வணிகரைப் போலாது, மக்களின் பசிப்பிணியைப் போக்கி. அவர்களை வாழ்விப்பதையே பெரு நோக்கமாகக் கொண்டு, சிறிய ஊதியத்தைப் பெற்றுப் பொருள்களை விற்கின்ற பெருந்தன்மைவாய்ந்த வணிகப் பெருமக்களையே பாரதியார் இங்கு குறிப்பிடுகின்றார்.

**நெடு நுகத்துப் பகல் போல**
**நடுவு நின்ற நல்நெஞ்சி னோர்**
**வடு அஞ்சி வாய் மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடி**
**கொள்வ தூஉம் மிகை கொளாது**
**கொடுப்ப தூஉம் குறை கொடாது**
**பல பண்டம் பகர்ந்து வீசும்**



என வரும் பட்டினப்பாலையில் கூறியுள்ள வணிகப் பெருமக்களின் பண்புகளை நோக்குக.

இனி, தமக்கும் பிறர்க்கும் பயன்தரத்தக்க பல்வேறுவகைப்பட்ட தொழில்களை ஆற்றுகின்ற மக்களையெல்லாம் தொழிலாளர் எனும் ஒரு வகுப்பாகப் பாரதியார் கூறுகின்றார். இவர்களும் அந்தணர், அரசர், வணிகர் எனும் வகுப்பினரைப்போல மக்கள் வாழ்வுக்கு மிக இன்றியமையாதவர்களென்பதே பாரதியாரின் கருத்தாகும். இனி,

**உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம்**

என்றும்,

**குடைகள் செய்வோம்**
**உழுபடைகள் செய்வோம்**
**ஆயுதஞ் செய்வோம் நல்ல**
**காகிதஞ் செய்வோம்**
**கொல்லர் உலை வளர்ப்போம்**

என்றும்,

**கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே**
**மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே**
**மரத்தை வெட்டி மனைகள் செய்வீரே**

என்றும், பல தொழில்களையும் பாராட்டி உரைக்கின்ற பாரதியாரின் கவிதைத் தொடர்களில் அறிக.

4 **நாலு வகுப்பும் இங் கொன்றே; — இந்த**
**நான்கினில் ஒன்று குறைந்தால்,**
**வேலை தவறிச் சிதைந்தே — செத்து**
**வீழ்ந்திடும் மானிடச் சாதி.**

பொருள்: *நாலு வகுப்பும் - அந்தணர், அரசர், வணிகர், தொழிலாளர் எனும் நான்கு பிரிவினர்களும், இங்கு - இப் பாரத தேசத்தில், ஒன்றே - ஒரு குலத்தினர்களேயாவர். இந்த நான்கினில் - இங்கு கூறப்பட்ட, அந்தணர், அரசர், வணிகர்,*

***தொழிலாளர் எனும் நான்கு பிரிவினரிலும், ஒன்று குறைந்தால் - ஒரு பிரிவினர் தம் நிலைதவறிக் கெடுவார்களானால், வேலை தவறி - தொழில் நெறிகள் எல்லாம் நிலைமாறி, சிதைந்தே - உருக்குலைந்து, மானிடச்சாதி - மானிடசாதி யென்னும் மக்களினம், செத்து - மடிந்து, வீழ்ந்திடும் - (அடிச்சுவடும் இல்லாமல்) ஒழிந்துவிடும்.***

**விளக்கம்:** இக் கவிதையில், அந்தணர், அரசர், வணிகர், தொழிலாளர் என்னும் நான்கு பிரிவினருள் எந்த ஒரு பிரிவினராதல் தம் நிலைகெட்டுச் சிதைவார்களேயானால் மக்களினமே அழிந்துவிடும் எனக் கூறுகின்ற பாரதியாரின் சிந்தனைத் திறனை உணர்கின்றோம்.

அறிஞர்களும் அரசனும் வணிகர்களும் தொழிலாளர்களும், ஒரு நாட்டின் அமைதியையும் ஆக்கத்தையும் பெருக்கி வளர்ப்பதில் ஒத்த உரிமை உடையவர்கள் எனத் திட்டப்படுத்திக் கூறும் பாரதியாரின் அறிவகலம் மிகமிகப் பாராட்டத்தக்கதாகும்.

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு**

எனவும்,

**ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**வேந்தமை வில்லாத நாடு**

எனவும் வரும் திருக்குறளையும் நோக்குக.

இதில், **தள்ளா விளையுள்** என்பது **தொழிலாளர்களையும்**, **தக்கார்** என்பது **அந்தணரையும்**, **தாழ்விலாச் செல்வர்** என்பது **வணிகரையும்**, **வேந்து** என்பது **அரசரையும்** குறித்து நிற்றலையும் உணர்க.

5 **ஒற்றைக் குடும்பந் தனிலே — பொருள்**
**ஓங்க வளர்ப்பவன் தந்தை**
**மற்றைக் கருமங்கள் செய்தே — மனை**
**வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.**



பொருள்: ***ஒற்றைக் குடும்பந்தனிலே - ஒரு குடும்பத்தின்கண்ணே, பொருள் ஓங்க - பொருள்வளம் பெருகும்வண்ணம், வளர்ப்பவன் - (தன் முயற்சியால்) பொருளை ஈட்டி வளர்க்கின்றவன், தந்தை - தந்தையாவான், மற்றைக் கருமங்கள் - மனை அறத்துக்குரிய ஏனைய காரியங்களை, செய்தே - ஆற்றி, மனை - இல்லத்தில் உள்ளோர்களை, வாழ்ந்திடச் செய்பவள் - நல்வாழ்வு வாழும் வண்ணம் தொண்டாற்றுகின்றவள், அன்னை - தாயாவாள்.***

**விளக்கம்:** குடும்பம் நன்கு வாழ்வுபெற வேண்டுமானால் பொருள்வளம் பெருகவேண்டும். பொருள்வளம் பெருகத்தக்க முயற்சிகளைப் புரிந்து பொருளை ஈட்டுகின்றவன் குடும்பத் தலைவனாகிய தந்தையாவான். குடும்பத் தலைவனாகிய தந்தை முயற்சியின்றிச் சோம்பி இருப்பானாயின் அக்குடும்பம் சீர் கெட்டுப்போகும் என்பதே பாரதியாரின் கருத்தாகும்.

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்**

எனவும்,

**குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு**

எனவும் வரும் திருக்குறள்களை நோக்குக.

இனி குடும்பத் தலைவனாகிய தந்தை எத்துணைப் பெரும் பொருளை ஈட்டித் தொகுத்தாலும், குடும்பத்தை நடத்துகின்றவளாகிய தாயினிடம், இல்லறத்துக்குரிய நற்குணங்களாக விளங்கும், **துறந்தாரை உபசரித்தல், விருந்தினரைப் பேணல், வறியாரிடம் இரக்கங்காட்டுதல்** முதலியனவும், நற்செயல்களாய் விளங்கும், **இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருளை அறிந்து காப்பாற்றி வைத்தல், உணவுகளைச் சுவைபட ஆக்கல், பிறர்க்குதவுதல், பொருளின் வருவாயை அறிந்து அதற்குத் தக்கதாகச் செலவுசெய்தல்** முதலியனவும் இல்லையாயின் அக்குடும்பம் நல்வாழ்வு பெறாமல் சிதைந்துவிடும் என்க. இதனை,

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்**

எனவரும் திருக்குறளால் அறிக.

**பொருள் ஈட்டுதலைக் குடும்பத் தலைவனாகிய தந்தையின் செயலாகவும், குடும்பப் பொறுப்பை ஏற்று இல்லற வாழ்வைச் சிறப்பிப்பதைத் தாயின் செயலாகவும் வைத்துப் பாரதியார் கூறிய மரபை நோக்குக. இல்லாள், மனையாள், எனவருஞ் சொற்களும், வாழ்க்கைத் துணைவியாகிய தாய், வீட்டில் இருந்து குடும்பத்தைச் செம்மைபெறச் செய்பவள் என்னும் கொள்கையை நிலைநாட்டுகின்றன.**

6 ஏவல்கள் செய்பவர் மக்கள்; — இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய் — நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

பொருள்: ஏவல்கள் - தந்தை, தாயர் சொல்லிய பணிகளை (கட்டளையிட்ட பணிகளை), செய்பவர் - (உள்ளத்தில் ஊறும் உவகையுடன்) செய்கின்றவர்கள், ஆற்றுகின்றவர்களே, மக்கள் - நன்மக்கள் எனப் பாராட்டியுரைக்கத் தக்கவர்களாவார், இவர் - தந்தை, தாய், மக்கள் எனக்கூறப்பட்ட, யாவரும் - எல்லோரும், ஓர்குலம்-ஒரு குலத்தில் பிறந்தவர்கள், அன்றோ-, (ஆனபடியால்) அனைவரும் - தந்தை, தாய், மக்கள் என்னும் யாவரும், ஒன்றாய் மேவி - (கருத்து வேறுபாடின்றி) ஒன்று சேர்ந்து, நல்ல - சிறந்த, வீடு நடத்துதல் கண்டோம் - வீட்டு வாழ்க்கையை நன்கு நடத்துதலைக் காண்கின்றோம்.

**விளக்கம்:** இக் கவிதையில், தந்தையும் தாயும் இட்ட பணிகளைக் கருத்துடன் ஆற்றிக் குடும்பத்தை மேம்படுத்துதல் நன்மக்களின் கடமை எனக் கூறுகின்ற பாரதியாரின் புலமைப் பண்பை உணர்கின்றோம்.



ஒரு குடும்பத்தில் தந்தையார் பொருளைத் தேடித் தொகுத்தாலும் தாயார் இல்லற கருமங்களை இனிது ஆற்றினாலும், அவர்கள் சொல்லுகின்ற வேலைகளைத் தட்டாமல் ஆற்றுகின்ற நன்மக்களும் அக்குடும்பத்தில் தோன்றி வாழவேண்டுமென்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற**

எனவருந் திருக்குறளையும் நோக்குக.

இங்ஙனம் **வீட்டு வாழ்க்கையில், தந்தை, தாய், மக்கள் எனும் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, உழைத்துக் குடும்பச் சிறப்பைப்** பாதுகாத்தலைப் போலவே, நாட்டின் விடுதலைக்கும், சாதி, சமய வேறுபாடின்றி ஒருதாய் வயிற்றுக் குழந்தைகளைப்போல ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டுமென்னும் குறிப்புப் பொருளொன்று தோன்றுதலையும் நோக்குக.

7 சாதிப் பிரிவுகள் சொல்லி — அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்,
நீதிப் பிரிவுகள் செய்வார் — அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

பொருள்: சாதிப்பிரிவுகள் - சாதி வித்தியாசங்களையே சொல்லி - பெரிதாகப் பாராட்டிக்கூறி, அதில் - அச்சாதியில், தாழ்வென்றும் - மிகவும் இழிந்த சாதியிற் பிறந்தவரென்றும், மேல் என்றும் - இவர் மிகவும் உயர்ந்த சாதியில் பிறந்தவரென்றும், கொள்வார் - வேறுபாடு கொள்வார்கள், நீதிப்பிரிவுகள் - (அங்ஙனம் வேறுபாடு கொண்டவர்கள்) உயர்ந்த சாதியாருக்கொரு நீதியும், இழிந்த சாதியாருக்கொரு நீதியும் என நீதியிலும், வேறுவேறு பிரிவுகளை, செய்வார் - உண்டாக்குவார்கள். அங்கு - அச்சாதிப் பிரிவுகள் உள்ள இடத்தில், நித்தமும் - எப்பொழுதும், சண்டைகள் செய்வார் - சாதியில் உயர்வு தாழ்வு கூறிச் சண்டை பிடிப்பார்கள்.

**விளக்கம்:** இக் கவிதையில், சாதிப் பிரிவுகளால் சண்டை புரிந்து தம்மைத் தாமே ஆற்ற லற்றவர்களாகச் செய்து பிறர்க்கு அடிமைப்பட்டு வாழ்கின்ற பாரத மக்களின் பண்பை எடுத்துக் காட்டி இடித்துரைக்கின்ற பாரதியாரின் உளத்துடிப்பை உணர் கின்றோம்.

சாதி வேறுபாட்டினையே பெரிதாகப் பாராட்டி, ஒருசாதிக் கொரு நீதி வகுத்து, ஓயாமல் சாதிச்சண்டை புரிந்து கெடு கின்ற பாரதமக்களின் நிலைமையை எண்ணியெண்ணிப் பாரதி யார் ஏங்குகின்றார்.

பாரதமக்கள் சாதிப்பிரிவினால் வேறுபட்டுச் சிறுசிறு கூட் டங்களாகப் பிரிந்து நின்றமையாலேயே பிறநாட்டாருக்கு, மிக எளிதில் அடிமைப்பட்டனர் என்னும் உண்மையைப் பாரதியார் அடிக்கடி எடுத்துரைத்துள்ளார்.

**சாதிச்சண்டை போச்சோ உங்கள்**
**சமயச்சண்டை போச்சோ**

என்றும்,

**சாதிகள் இல்லையடி பாப்பா குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்**

என்றும் வரும் பாரதியாரின் கவிதைத் தொடர்களை நோக்குக.

**நீதிப் பிரிவுகள் செய்வார்**

எனும் தொடருடன்,

**வள்ளுவர்செய் திருக்குறளை**
**மறுவற நன்குணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி**
**ஒருகுலத்துக் கொருநீதி**

எனவரும் மனோன்மணீயத் தொடர்களையும் ஒப்பிட்டுணர்க.



8 **சாதிக் கொடுமைகள் வேண்டாம்; — அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்;**
**ஆதர வுற்றிங்கு வாழ்வோம்; — தொழில்**
**ஆயிரம மாண்புறச் செய்வோம.**

பொருள்: *சாதிக்கொடுமைகள் - (சாதியில் உயர்ந்தவர்கள் சாதியில் இழிந்தவர்களைத் துன்புறுத்துகின்ற) சாதிக்கொடுமை கள் இனி இந்த நாட்டில், வேண்டாம் - இல்லாது ஒழிவதாக, வையம் - உலகின்கண் உள்ள மக்கள் முதலிய உயிர்வகைகள் எல்லாம், அன்பு தன்னில்-அன்பினால் (அன்பென்னும் ஒன்றி னால்) செழித்திடும் - வளம்பெற்று வாழ்ந்திடும், (ஆனபடியால்) இங்கு - இவ்வுலகில் (எங்கள் நாட்டில்), ஆதரவு உற்று - ஒரு வர்க்கொருவர் ஆதரவாகப் பொருந்தி, வாழ்வோம் - வாழ்வு பெறுவோம், தொழில் - நமக்கும் பிறர்க்கும் நன்மை நல்கும் தொழில்கள், ஆயிரம் - ஆயிரக்கணக்கானவற்றை, மாண்புற - பெருமை பொருந்தத்தக்கதாக, செய்வோம் - (உயர்வு தாழ்வு பாராமல்) புரிந்திடுவோம்.*

**விளக்கம்:** இக் கவிதையில் சாதிக்கொடுமைகள் செய் வதை விடுத்து, எல்லோரிடத்திலும் அன்பு செய்து வாழவேண்டு மெனக் கூறுகின்ற பாரதியாரின் ஆர்வக்குரலைக் கேட்கின்றோம்.

**சாதிக் கொடுமைகள் வேண்டாம்**
**அன்பு தன்னில் செழித்திடும் வையம்**

எனுங் கவிதைத் தொடர்கள்

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு**

எனுந் திருக்குறளையும்

**முன்பு நின்றதோர் மூவுலகத்தினும்**
**அன்பின் மிக்கதோர் ஆக்கமுண்டாகுமோ**

எனும் கம்பர் கவிதைப் பகுதியையும் நினைவூட்டுகின்றன.

ஒருவர்க்கொருவர் ஆதரவாய் நின்று, ஆயிரக்கணக்கான தொழில்களை ஆற்றி வாழ்வோம் எனப் பாரதியார் கூறுகின்ற ஆர்வத்தை உணருங்கள்.

**ஆதரவு உற்று இங்கு வாழ்வோம்**
**தொழில் ஆயிரம் மாண்புறச் செய்வோம்**

எனும் தொடர்களைப் படிக்கப் படிக்க எமக்கும் ஆர்வம் எழுகின்றது.

9 **பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் — புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்;**
**மண்ணுக் குள்ளே சிலமூடர் — நல்ல**
**மாத ரறிவைக் கெடுத்தார்**

**பொருள்:** *புவி - இந்நிலவுலகத்தை, (இந்நிலவுலகத்தின்கண் உள்ள ஆன்மாக்களை) பேணி - பாதுகாத்து வளர்த்திடும் - ஆக்கமடையச் செய்தருளும், ஈசன் - இறைவன், பெண்ணுக்கு - பெண்களுக்கு, ஞானத்தை வைத்தான் - அறிவை (ஞானத்தை) இயல்பாகவே கொடுத்தருளினான், (ஈசன் தன் இடப்பாகத்தில் இருக்கும் உமாதேவியாரை அறிவில் மிகுந்தவள் எனும் கருத்துப்பட ஞானசத்தி என வைத்துள்ளார் என்னுமோர் குறிப்புப் பொருள் தோன்றுதலையும் நோக்குக) மண்ணுக்குள்ளே - இந்நிலவுலகத்தின்கண் வாழ்கின்ற, சில மூடர் - சில அறிவிலிகள், நல்ல - நற்பண்புகள் வாய்ந்த, மாதர் - பெண்களின், அறிவை - ஞானத்தை, கெடுத்தார் - அழித்தார்கள்.*

**விளக்கம்:** இக்கவிதையில் இறைவனாலே பெண்களுக்கு அருளப்பட்ட அறிவைக் கெடுத்து அவர்களை அடிமைப்படுத்துகின்ற கொடுமையை எண்ணி உள்ளம் இடிந்து குமுறுகின்ற பாரதியாரின் இரக்கத்தை உணர்கின்றோம்.

**பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்**
**புவிபேணி வளர்த்திடும் ஈசன்**

எனும் தொடர்கள் கல்விக்குக் கலைமகளைத் தெய்வமாகக் கொள்வதையும், இறைவனின் அருளாற்றலை, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி எனக் கூறுவதையும் நினைவூட்டுகின்றன.



**பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற**

எனும் திருக்குறளுக்கு, உரைகூறிய பரிமேலழகர், **அறிவறிந்த என்றதினால் மக்கள் என்னும் பெயர் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டி நின்றது** எனச் சொல்லத்தக்க அளவுக்குப் பெண்கள் அறிவற்றவர்கள் எனும் கொள்கை இடைக்காலத்தில் பாரத நாட்டிலே நிலைபெற்றுவிட்டதைப் பாரதியார் எண்ணி மிக வருந்துகின்றார் என்பதை உணர்கின்றோம்.

**ஏட்டையும் பெண்கள்**
**தொடுவதைத் தீமையென்று**
**எண்ணி யிருந்தவர்**
**மாய்ந்து விட்டார்**

என்றும்,

**எட்டும் அறிவினில்**
**ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று**
**கும்மியடி**

என்றும் பாரதியார் கூறும் கவிதைத் தொடர்களையும் நோக்குக.

**மண்ணுக்குள்ளே சிலமூடர் நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்**

எனும் தொடர்களைப் படிக்கும்போது பெண்களை அடிமைப்படுத்தி அறிவில்லாதவர்கள் எனவோர் கொடிய வழக்கத்தையும் நிலைநாட்டி வைத்த கொடியவர்களைப் பாரதியார் மிகமிக வெறுத்துவைகின்ற உணர்ச்சித் துடிப்பு எமதுள்ளத்தையும் தூண்டி உணர்ச்சி ஊட்டுகின்றது.

**விடுதலைக்கு மகளிர் எல்லோரும்**
**வேட்கை கொண்டனர்**
**உடையவள் சத்தி ஆண்பெண்**
**ஒருநிகர் செய்துரிமை அமைத்தாள்**
**இடையிலே பட்டகீழ் நிலைகண்டீர்**
**இதற்கு நாம் ஒருப்பட்டிருப்போமோ**

எனப் பாரதியார் பெண்கள் விடுதலையிற் கூறும் கவிதையினையும் நோக்குக.

10 **கண்கள் இரண்டினில் ஒன்றைக் — குத்தி**
**காட்சி கெடுத்திட லாமோ?**
**பெண்க ளறிவை வளர்த்தால் — வையம்**
**பேதைமை யற்றிடுங் காணீர்**

பொருள்: *கண்கள் இரண்டினில் - (எமக்கு மிக இன்றியமையாத உறுப்பாய் விளங்குகின்ற) இரண்டு கண்களில், ஒன்றைக் குத்தி - ஒரு கண்ணைக் குத்தி, காட்சி - அக்கண்ணில் அமைந்துள்ள காணும் தன்மையை (ஒளியை), கெடுத்திடலாமோ - இல்லாமல் அழித்துவிடலாமா, (அங்ஙனம் அழிப்பவர்கள் ஒருவரும் இல்லை என்பதாம்) பெண்கள் அறிவை - பெண்குலத்தினரின் அறிவினை, வளர்த்தால் - வளர்ச்சியுறச் செய்தால், வையம் - இந் நிலவுலகத்தில் உள்ளவர்கள் இடத்தில் நிலைபெற்றுள்ள, பேதைமை - அறியாமை, அற்றிடும் - அழிந்தொழியும், காணீர் - சிந்தித்துத் தெரிந்துகொள்வீர் என்பதாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில், வாழ்க்கையில் கருத்தொருமித்த காதலுடன் ஈடுபட்டு, ஒத்த அறிவும் ஆற்றலும் உடையவர்களாய் வாழவேண்டிய ஆண் பெண் எனும் இருபாலாரில், பெண்பாலாருடைய அறிவினைக் கெடுத்தல், பொருள்களைக் கண்டுணரும் கண்கள் இரண்டினில் ஒன்றினைக் கெடுத்து விடுதலை ஒக்குமெனப் பாரதியார் உவமானங்காட்டி விளக்குகின்றார்.



**கண்கள் இரண்டினில் ஒன்றினைக் குத்திக்**
**காட்சி கெடுத்திட லாமோ**

எனப் பாரதியார் பெண்குலத்தின் அறிவைக் கெடுத்து, அடிமையாக்கித் தாமும் அடிமைப்பட்டுக் கிடக்கும் பாரத மக்களைப் பார்த்துக் கேட்கின்றார்.

இதில், **கண்கள் — உவமேயம்.** ஒத்த அறிவுடன் **கருத்தொருமித்து வாழவேண்டிய ஆண்களும் பெண்களும் - உவமானம்.**

**கண்கள் இரண்டும் ஒன்றையே நோக்கல்போல** ஆண்களும் பெண்களும், அறிவில் ஒத்தவராய் இருத்தல் பொதுத்தன்மையாகும்.

**கண்களில் ஒன்றினைக் குத்திக் கெடுத்தல் — உவமானம். ஆண், பெண் எனும் இருபிரிவினருள் பெண்களின் அறிவைக் கெடுத்தல் — உவமேயம். ஒத்த தன்மையுடையவற்றைக் குறைத்து மதித்தல் — பொதுத் தன்மையாகும்.**

பெண்களாகிய தாய்க்குலம் சிறந்த அறிவுடன் வாழ்ந்தால், உலக மக்கள் எல்லோரும் அறியாமையில் நீங்கி ஆக்கமுறுவார் என்பது பாரதியாரின் கொள்கையாகும்.

**பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்**
**பேதைமை அற்றிடும் காணீர்**

எனப் பாரதியார் மிக ஆர்வத்துடன் கூறுகின்றார்.

**உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை**
**உமையவள் என்றறியீரோ உணர்ச்சி கெட்டீர்**

எனவும்,

**தாய்க் குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ**
**தாயைப் போலேபிள்ளை என்று முன்னோர்**
**வாக்குளதன்றோ பெண்மை அடிமை உற்றால்**
**மக்க ளெலாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ**

என, **தாய்மாண்பு** எனும் பகுதியில் பாரதியார் பாடிய கவிதைகளையும் நோக்குக.

11 **தெய்வம் பலபல சொல்லிப் — பகைத்**
**தீயை வளர்ப்பவர் மூடர்;**
**உய்வ தனைத்திலும் ஒன்றாய் — எங்கும்**
**ஓர்பொரு ளானது தெய்வம்.**

பொருள்: *தெய்வம் - ஒரே முழுமுதலாய் விளங்கும் பரம் பொருளாகிய தெய்வத்தை, பலபல சொல்லி - பல வேறுபட்ட தெய்வங்களாகத் தம்முள் மாறுபட்டுச் சொல்லி. பகைத் தீயை -(மக்களுக்குள்) சமயப் பகையாகிய கொடு நெருப்பை, வளர்ப்பவர் - மூட்டுகின்றவர்கள், மூடர் - அறிவிலிகள். உய்வது - நாங்கள் ஈடேறும் வண்ணம் வழிகாட்டுகின்ற சமயங்கள், அனைத்திலும் - எல்லாவற்றிலும், ஒன்றாய் - (வேறுவேறான பெயர்களுடன் விளங்கினாலும்) ஒரே பொருளாய் நிற்பதுடன், எங்கும் - இவ்வுலகம் எல்லாம் உள்ள இயங்குதிணைப் பொருள்கள், நிலைத்திணைப் பொருள் எல்லாவற்றிலும் வியாபித்து, ஓர் பொருளானது - ஒரே பொருளாக (ஏக வஸ்துவாக) விளங்குவதே, தெய்வம் – தெய்வமாகும்.*

**விளக்கம்:** இக்கவிதையில் ஒன்றே தெய்வம் என்னும் உண்மையை மறந்து பல தெய்வங்களின் பெயர்களைக் கூறிச் சமயப்போரை மூட்டுகின்ற அறிவிலிகளை வெறுத்துக் கூறுகின்ற பாரதியாரின் உயர்ந்த கொள்கையை உணர்கிறோம்.

ஒரே முழுமுதலாகிய தெய்வந்தான் பல பெயர்களுடன் விளங்குகின்றதென்னும் உண்மையை உணராமல், என் தெய்வம் பெரிது, உன் தெய்வம் சிறிது, எனக்கூறிச் சமயப் பூசலை வளர்த்து மக்களினத்தை அழிக்கின்ற அறிவிலிகள் நெருப்பினும் கொடியவராவர் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**உய்வது அனைத்திலும் ஒன்றாய் எங்கும்**
**ஓர் பொருளானது தெய்வம்**

எனக் கூறும் பாரதியாரின் கொள்கையுடன்,



**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

எனத் திருமூலரும்

**கல்லிடைப் பிறந்து போந்து**
**கடலிடைக் கலந்த நீத்தம்**
**எல்லையில் மறைக ளாலும்**
**இயம்பரும் பொருளி தென்னத்**
**தொல்லையில் ஒன்றே யாகித்**
**துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்**
**பல்பெரும் சமயம் சொல்லும்**
**பொருளும்போற் பரந்த தன்றே**

எனக் கம்பரும் கூறுகின்ற கொள்கைகளையும் ஒப்பிட்டு நோக்குக.

12 **தீயினைக் கும்பிடும் பார்ப்பார், — நித்தம்**
**திக்கை வணங்கும் துருக்கர்**
**கோயிற் சிலுவையின் முன்னே — நின்று**
**கும்பிடும் யேசு மதத்தார்**

பொருள்: *தீயினை – நெருப்பினை (அக்கினியை), கும்பிடும் - வணங்கிடும், பார்ப்பார் - அந்தணர்களும், நித்தம் - என்றும், (ஒவ்வொருநாளும்) திக்கை – மேற்குத்திசையை, வணங்கும் - தொழுகின்ற, (தொழுகைசெய்யும்) துருக்கர் – இஸ்லாமியரும், கோயிற் சிலுவையின் முன்னே - கோயிலின்கண் உள்ள சிலுவைக்கு முன்னே, நின்று - முழங்காலில் நின்று, கும்பிடும் - வணங்குகின்ற, யேசு மதத்தார் - கிறீத்தவர்களும்.*

13 **யாரும் பணிந்திடும் தெய்வம் — பொருள்**
**யாவினும் நின்றிடும் தெய்வம்**
**பாருக்குள்ளே தெய்வம் ஒன்று; — இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டாம்.**

பொருள்: *யாரும் - (ஆகிய) பல சமயத்தவர்களும், பணிந்திடும் தெய்வம் – வணங்கச் செய்யும் தெய்வம், பொருள் யாவினும் – உலகில் உள்ள உயிர்ப்பொருள் உயிரில்லாப்*

பொருள் என்னும் எல்லாவற்றினும் வியாபித்து, நின்றிடும் - விளக்குகின்ற, தெய்வம் - தெய்வமாகும், பாருக்குள்ளே - இந் நிலவுலகத்தின் கண்ணே, தெய்வம் ஒன்று - தெய்வம் ஒன்றே தான் உள்ளது, (கடவுள் ஒருவனே உள்ளான்) பற்பல - பல வேறுபட்ட, சண்டைகள் - சமயச்சண்டைகள், வேண்டாம் - புரிவதை விட்டிடுங்கள்.

**விளக்கம்:** மேற் தொடர்ந்து பொருள் கூறிய இரு கவிதைகளிலும் ஒன்றே தெய்வம் என்னும் கொள்கையை வலியுறுத்திக் காட்டிச் சமயச் சண்டைகளைப் போக்கி மக்களுள்ளத்தில் **ஆன்ம நேய ஒருமைப்பாடென்னும் உயிர்க் கலப்பை** உருவாக்கி வாழ்வளிக்க எண்ணுகின்ற பாரதியாரின் உயர்ந்த நோக்கத்தை உணர்கின்றோம்.

ஓமத்தீயில் இறைவனின் அருள் வெளிப்பாட்டைக்கண்டு வணங்குகின்ற அந்தணரும், மேற்குத்திசையில் இறைவனின் அருள் வெளிப்பாட்டைக்கண்டு தொழுகை புரியும் துருக்கரும், சிலுவையில் இறைவனின் அருள் வெளிப்பாட்டைக்கண்டு வணங்கும் கிறீஸ்தவரும், பிறவாறு இறைவனை வணங்கும் ஏனைய மதத்தினரும், வேறு வேறுவழிகளால் ஒரே தெய்வத்தைத்தான் வழிபாடு புரிகின்றனர் என்பதே பாரதியார் சொல்லும் உயர்ந்த தெய்வக்கொள்கையாகும்.

**பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டாம்**

என முடிந்த முடிபாகப் பாரதியார் தமது உயர்ந்த தெய்வக் கொள்கையை உலகுக்கறிவிக்கின்றார்.

**பூமியிலே கண்டம் ஐந்து மதங்கள் கோடி**
**புத்தமதம் சமணமதம் பார்ஸி மார்க்கம்**
**சாமியென யேசு மதம் போற்றும் மார்க்கம்**
**ஸநாதனமாம் இந்துமதம் இஸ்லாம் யூதம்**
**நாம முயர் சீனத்து தாவு மார்க்கம்**
**நல்ல கன்பூசிமதம் முதலாப் பார்மேல்**
**யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே**
**யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங்கு ஒன்றே**



எனச் **சர்வமத சமரசம்** எனும் பகுதியில் பாரதியார் பாடியுள்ள கவிதையையும் நோக்குக.

**14 வெள்ளை நிறத்தொரு பூனை — எங்கள்**
**வீட்டில் வளருது கண்டீர்;**
**பிள்ளைகள் பெற்றதப் பூனை; — அவை**
**பேருக் கொருநிற மாகும்.**

பொருள்: எங்கள் வீட்டில் - எங்களுடைய வீட்டிலே, வெள்ளை நிறத்து ஒரு பூனை - வெண்மை நிறமுடைய பூனை ஒன்று, வளருது கண்டீர் - நின்று வளர்கின்றது காண்பீர்களாக, அப்பூனை - அந்த வெள்ளைப் பூனை, பிள்ளைகள் பெற்றது - குட்டிகளை ஈன்றது. அவை - அந்தக் குட்டிகள் ஒவ்வொன்றும், பேருக்கு ஒரு நிறமாகும் - வேறுவேறு பெயர் கொண்ட ஒவ்வொரு நிறமுடையனவாகும்.

**15 சாம்பல் நிறமொரு குட்டி — கருஞ்**
**சாந்து நிறமொரு குட்டி,**
**பாம்பு நிறமொரு குட்டி; — வெள்ளைப்**
**பாலின் நிறமொரு குட்டி**

பொருள்: ஒரு குட்டி—ஒரு குட்டியானது, சாம்பல் நிறம்—சாம்பல் நிறமுடையது, ஒரு குட்டி - ஒரு குட்டியானது, கருஞ்சாந்து நிறம் - கருமையான சாந்தைப்போன்ற நிறமுடையது; ஒரு குட்டி - ஒரு குட்டியானது, பாம்பு நிறம் - பாம்பின் நிறமுடையது, ஒரு குட்டி - ஒரு குட்டியானது, வெள்ளை - வெண்மையான, பாலின் நிறம் - பாலின் நிறத்தை உடையது.

**16 எந்த நிறமிருந் தாலும் — அவை**
**யாவும் ஒரேதர மன்றோ?**
**இந்த நிறம்சிறி தென்றும் — இஃது**
**ஏற்ற மென்றும் சொல்லலாமோ?**

பொருள்: எந்த நிறம் இருந்தாலும் - (மேற்கூறிய வண்ணம்) பூனைக்குட்டிகள் எந்தெந்த நிறத்தை உடையனவாகத் தோன்றினும், அவை - அப்பூனைக்குட்டிகள், யாவும் -

எல்லாம், ஒரேதரம் அன்றோ – ஒரே தன்மையை உடையன வன்றோ, இந்த நிறம் – இந்தக் குட்டியின் நிறந்தான், சிறிது என்றும் – இழிவானது என்றும், இஃது – இக்குட்டியின் நிறம், ஏற்றம் என்றும் – உயர்ந்தது என்றும், சொல்லலாமோ – சொல்லமுடியுமோ, முடியாது.

11 வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் — அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் — இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

பொருள்: *வண்ணங்கள் – நிறங்கள், வேற்றுமைப்பட்டால் – (ஒவ்வொருவர்க்கும்) வேறுவேறாக அமைந்து வேறுபட்டிருப்பதினால், அதில் – அந்நிற வேறுபாடாகிய அக்காரணத்தினாலே, மானுடர் – மக்கள், வேற்றுமை இல்லை – (தமது இயல்பில்) வேற்றுமைப்படுதல் இல்லை, எண்ணங்கள் – நினைவுகளும், செய்கைகள் எல்லாம் – ஆற்றுகின்ற செயல்களும் (செய்வினைகளும்) யாவர்க்கும் – எல்லா மக்களுக்கும், இங்கு – இவ்வுலகில், ஒன்றெனல் காணீர் – ஒரே தன்மையாகவே அமைந்திருத்தலை உணருங்கள்.*

**விளக்கம்:** மேல் ஒரே தொடராக வந்துள்ள நான்கு கவிதைகளிலும், நிற வேறுபாட்டினால் உயர்வு தாழ்வு கற்பித்து, மக்களை இகழ்ந்து மதிக்கின்ற நிறத்திமிர் படைத்தோரின் கொள்கையை எடுத்துக்காட்டி இடித்துரைக்கின்ற பாரதியாரின் உணர்ச்சிக் குமுறலைக் கேட்கின்றோம்.

வீட்டில் வளரும் வெள்ளைப்பூனை ஈன்ற குட்டிகள் வேறுவேறு நிறங்களை உடையனவாக விளங்கினாலும் தாய்ப்பூனையின் உள்ளத்தில் அவைகள் எல்லாம் ஒரே தன்மையுடையனவாகவே தோன்றுகின்றன. நல்ல நிறமுடைய குட்டிதான் உயர்ந்தது என்ற எண்ணம் இன்றி எல்லாக் குட்டிகளின்மேலும் அத்தாய்ப் பூனை அன்பைச் சொரிந்து, பாலூட்டி, வளர்க்கின்றது என்னும் உவமையை எடுத்துக்காட்டி நிறத்திமிர் பிடித்தோரை இடித்துரைக்கின்ற பாரதியாரின் புலமை போற்றத்தக்கதாகும்.



எந்த நிறம் இருந்தாலும் அவை
யாவும் ஒரேதரம் அன்றோ

எனப் பாரதியார் உலக மக்களை மிக உணர்ச்சியுடன் கேட்கின்றார்.

வெள்ளையர், கறுப்பர் என நிறவேறுபாட்டினால், மக்களை வேறுபடுத்தி உரைப்பதுடன் வெள்ளையர் உயர்ந்தவர்கள் என்றும், கறுப்பர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் கொண்டு இன்றும் தென் ஆபிரிக்காவில் நிகழ்கின்ற கொடுமைகளை உணாகின்றோம். தென் ஆபிரிக்காவில் வாழ்கின்ற வெள்ளையர்கள், நிறவேறுபாடு ஒன்றினையே காரணமாகக் கொண்டு அங்கு வாழ்கின்ற மற்றைய மக்களை இகழ்ந்து தம்மோடொத்த உரிமைகளைக் கொடுக்க மறுத்துப் பெரும் இன்னல்களை ஆற்றுகின்றார்கள். இச்செயல்களை எல்லாம் எண்ணி உள்ளம் வருந்திய பாரதியார்,

**வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் அதில்
மானுடர் வேற்றுமை இல்லை**

என மிக உணர்ச்சியுடன் கூறுகின்றார்,

வெண்மை நிறம் கொண்டவர்களென்றாலும், கருமை நிறம் நிறம் கொண்டவர்களென்றாலும், செம்மைநிறங் கொண்டவர்களென்றாலும், அவர்களின் நினைவும் செயலும் ஒரே தன்மையாக அமைந்திருத்தலை உணருங்கள் எனப் பாரதியார் எடுத்துரைக்கின்றார். ஒரு வெள்ளையன் உள்ளத்தில் எழுகின்ற உயர்ந்த நினைவுகளும், அவன் ஆற்றுகின்ற செயல்களும் கருமைநிறம் கொண்ட ஒரு கறுப்பனிடத்தில் உளவாதலை உணருங்கள் என்பதே பாரதியாரின் கொள்கையாகும்.

**எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்**

எனவரும் பாரதியாரின் எழுச்சிக்குரலைக் கேளுங்கள். நிறவேறுபாட்டினால், மக்களின் உயிர்க்குணங்களாகிய **அறிவு, அருள்,**

ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, இன்பம், துன்பம், இளமை, மூப்பு முதலியனவும் வேறுபடுதல் இல்லை என்பதாம்.

பூனை, தானீன்ற குட்டிகள் பலநிறங் கொண்டனவாக விளங்கினாலும், அவற்றின் நிறத்தில் உயர்வு தாழ்வு நோக்கி அன்பு செலுத்தாமல், தன்னுடைய குட்டிகள் என்ற ஒரே உணர்ச்சியுடன் அன்பைச் செலுத்திப் பாலூட்டி வளர்த்தலைப்போல, உயர்ந்த நோக்கமும் பண்பாடும் நிரம்பிய சான்றோர்கள், மக்களை நிறத்தினால் வேறுபடுத்தி உயர்வு தாழ்வு உணர்ச்சிகளைக் காட்டாமல், அவர்களின் நினைவு, செயல் என்பவற்றின் ஒத்த தன்மைகளை உணர்ந்து, மதிப்புச் செய்வார்கள் என்பதே பாரதியார் நிலைநாட்டியுரைக்கின்ற உண்மையாகும்.

**18** **நிகரென்று கொட்டு முரசே! — இந்த**
**நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;**
**தகரென்று கொட்டு முரசே! — பொய்மைச்**
**சாதி வகுப்பினை யெல்லாம்**

பொருள்: *இந்த நீணிலம் - இந்தப் பரந்தவுலகத்தின்கண், வாழ்பவர் எல்லாம் - இருந்து வாழ்கின்ற மக்கள் எல்லோரும், நிகரென்று - ஒரே தகுதியுடையவர்கள் என்று சொல்லி, முரசே - முரசப்பறையே, கொட்டு - நீ முழங்குவாயாக, பொய்மை - பொய்யான (பொய்க் கட்டுப்பாடான), சாதி வகுப்பினை - சாதிப் பிரிவுகளை, எல்லாம் - எல்லாவற்றையும், தகர் என்று - நொறுக்கி எறியவேண்டும் என்று சொல்லி, முரசே - முரசப்பறையே, கொட்டு - நீ முழங்குவாயாக.*

**விளக்கம்:** இக் கவிதையில் நிலவுலகில் வாழ்கின்ற மக்கள் எல்லோரும் ஒரே நிகரானவர்கள், தாழ்ந்தவர் உயர்ந்தவர் எனக் கூறுகின்ற சாதிக்கட்டுப்பாட்டைத் தகர்த்துவிட



வேண்டுமெனக் கூறுகின்ற பாரதியாரின் முழக்கத்தைக் கேட்கின்றோம்.

**சாதி மதங்களைப் பாரோம் உயர்**
**சென்மம் இத்தேசத்தில் எய்தின ராயின்**
**வேதிய ராயினும் ஒன்றே அன்றி**
**வேறு குலத்தின ராயினும் ஒன்றே**

எனப் பாரதநாடு எனும் பகுதியில் பாரதியார் பாடுவதையும் நோக்குக.

**19** **அன்பென்று கொட்டு முரசே! — அதில்**
**ஆக்கமுண் டாமென்று கொட்டு;**
**துன்பங்கள் யாவுமே போகும் — வெறுஞ்**
**சூதுப் பிரிவுகள் போனால்**

பொருள்: *முரசே - முரசப்பறையே, அன்பு என்று - அன்பினால் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்வீர்களாக என்று சொல்லி, கொட்டு - முழங்குவாயாக, அதில் - அந்த அன்பினால் ஒன்றுபட்டு வாழ்வதில், ஆக்கம் - செல்வங்கள் (நன்மைகள்), உண்டாம் என்று - உளவாகும் என்று சொல்லி, கொட்டு - முரசே நீ முழங்குவாயாக, வெறும் - பயனற்ற, சூதுப்பிரிவுகள் - வஞ்சனையோடு பொருந்திய சாதிவேறுபாடுகள் (பிரிவுகள்), போனால் - (அன்பினால்) அகன்று விடுமேயானால், துன்பங்கள் யாவுமே - எம்மைச் சூழ்ந்துள்ள வறுமை முதலான இன்னல்கள் எல்லாம், போகும் - நீங்கிவிடும்.*

**விளக்கம்:** இக் கவிதையில் சாதிமத வேறுபாடுகளை மறந்து பாரதமக்கள் எல்லோரும் அன்பினால் ஒன்றுபட்டால் எய்தும் பேறுகளைக் கூறி மகிழ்கின்ற பாரதியாரின் ஆர்வப் பெருக்கைக் காண்கின்றோம்.

பயனற்றதும் வஞ்சனையோடு பொருந்தியதுமாகிய சாதிப் பிரிவைப் போக்கினால் பாரதமக்களைப் பற்றிநின்று வருத்தும் துன்பங்கள் எல்லாம் தொலைந்து விடுதலை வாழ்வும் பெருஞ் செல்வங்களும் உளவாகுமெனக் கூறிக்கூறிப் பாரதியார் மகிழ்கின்றார்.

துன்பங்கள் யாவுமே போகும் வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால்

எனுங் கவிதைத் தொடர்களைப் படிக்கப் படிக்க எழுகின்ற ஈடு பாடு, எம்மையும் பாரதியாருடன் சேர்த்துவிடுகின்றது.

20 அன்பென்று கொட்டு முரசே! — மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும் — இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

பொருள்: *முரசே - முரசப்பறையே, நீ, அன்பென்று - அன்பினால் எல்லோரும் ஒன்றுபடுவீர்களாக என்றுசொல்லி, கொட்டு - முழங்குவாயாக, மக்கள் அத்தனைபேரும் - உலகில் உள்ள மக்கள் எல்லோரும், நிகராம் - ஒரே சமமானவர்கள், இங்கு - இந்தப் பாரதநாட்டில், யாவரும் - எல்லா மக்களும், ஒன்று என்று - ஒரே சமமானவர்கள் என்று, கொண்டால் - கொள்ளுகின்ற வழக்கம் ஏற்படுமானால், இன்பங்கள் யாவும் - மக்கள் தங்கள் வாழ்வில் அடையவேண்டிய இன்பப்பேறுகள் எல்லாம், பெருகும் - பொலிந்துவிளங்கும் (கூடும்).*

**விளக்கம்:** இக் கவிதையில், சாதிப்பிரிவினால் உயர்வு தாழ்வு கற்பிக்கின்ற வழக்கம் பாரதநாட்டை விட்டு நீங்குமானால் ஏற்படும் பெரும் பேறுகளைப்பற்றி மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்கின்ற பாரதியாரின் எழுச்சியைக் காண்கின்றோம்.

உலகில் உள்ள மக்களெல்லோரும் ஓர் இனம், ஒரேசாதி என்ற உணர்ச்சி பாரதநாட்டில் நிலைபெறவேண்டுமெனத் துடிக்கின்ற பாரதியாரின் கவிதை உள்ளம் வானிலும் அகன்றதாகும்.

இன்பங்கள் யாவும் பெருகும் — இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

எனுங் கவிதைத் தொடர்களில் அமைந்துள்ள பொருள்வளம் மிகமிகச் சிறந்ததாகும்.



எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

எனப் பாரதசமுதாயம் எனும் பகுதியில் பாரதியார் பாடியிருக்கும் கவிதைத் தொடர்களையும் நோக்குக.

21 உடன்பிறந் தார்களைப் போல — இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில் — இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

பொருள்: *இவ்வுலகில் - இந்நிலவுலகத்தின்கண் உள்ள, மனிதர் எல்லாரும் - மக்கள் எல்லோரும், உடன்பிறந்தார்களைப் போல - உடன்பிறந்த சகோதரர்களேயாவோம் (சகோதரர்களைப்போல் உள்ளோம்), வையத்தில் - இந்நிலவுலகின்கண், இடம்பெரிதுண்டு - (மக்களாகிய நாம்) இருந்து வாழ்தற்கு மிகப் பரந்துபட்ட பெரிய இடம் இருக்கின்றது, இதில் - இங்ஙனம் அகன்ற இடத்தையுடைய நிலவுலகத்தில் வெவ்வேறு இடங்களில் இருந்து விரும்பிய தொழில்களைச் செய்து வாழ்வதை விடுத்து, ஏதுக்கு - எதற்காக (என்ன பயனை அடைதற்காக), சண்டைகள் செய்வீர் - சாதிச்சண்டை, சமயச்சண்டை எனப் பல சண்டைகளைப் புரிகின்றீர்கள்.*

**விளக்கம்:** இக் கவிதையில் ஒரு தாய்வயிற்றுக் குழந்தைகளைப்போல உலக மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமெனக் கூறுகின்ற பாரதியாரின் அன்புள்ளத்தை அறிகின்றோம்.

இடம் பெரிதுண்டு வையத்தில் — இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்

எனப் பாரதியார் பிறநாடுகளைப் பிடித்து ஆள விரும்புகின்ற வல்லரசுகளையுங் கேட்கின்றார். சாதிச்சண்டை சமயச்சண்டை என்பவற்றைவிட மிகக்கொடிய சண்டையாக நிலைபெற்று உலக மக்களை அல்லற்படுத்துகின்ற நிலச்சண்டை நீங்கவேண்டுமென்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

22 மரத்தினை நட்டவன் தண்ணீர் — நன்கு
வார்த்தே ஓங்கிடச் செய்வான்;
சிரத்தை யுடையது தெய்வம், — இங்கு
சேர்ந்த உணவெல்லை யில்லை.

**பொருள்:** *மரத்தினை நட்டவன் - மரத்தை நட்டவன், (அதற்கு) தண்ணீர் - தண்ணீரினை, நன்கு - நல்லாக, வார்த்தே - ஊற்றி, ஓங்கிடச் செய்வான் - அம்மரத்தினை வளர்ந்திடும்வண்ணம் செய்திடுவான், (இதேபோல) தெய்வம் - எம்மைப் படைத்த தெய்வம், சிரத்தையுடையது - எம்மேல் (மிக்க) அன்புடையது, இங்கு - இந்நிலவுலகத்தின்கண், சேர்ந்த உணவு - (இறைவனருளால் மக்கள் உண்டு வாழுதற்காக) உண்டான உணவுப்பொருள்கள், எல்லையில்லை - அளவில்லாதனவாய் விளங்குகின்றன.*

**விளக்கம்:** இக் கவிதையில், படைத்த கடவுள் படியளப்பான், என்னும் உண்மையை எடுத்துக்காட்டி ஆர்வம் ஊட்டுகின்ற பாரதியாரின் அருள் உள்ளத்தை உணர்கின்றோம்.

மரத்தை நட்டவன் தண்ணீர் ஊற்றி அம்மரத்தினை வளர்த்தல் போலவே எம்மைப் படைத்த தெய்வமும் எமக்கு வாழ வழிவகுக்கும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**மரத்தை நட்டவன் தண்ணீர் ஊற்றி வளர்த்தல் — உவமானம், படைத்த தெய்வம் எமக்குப் படியளந்து ஊட்டிப் பாதுகாத்தல் — உவமேயம், அருளும் ஆற்றலும் — பொதுத்தன்மைகளாகும்.**

சிரத்தை யுடையது தெய்வம் — இங்கு
சேர்ந்த உணவு எல்லை இல்லை

எனவருங் கவிதைத் தொடர்கள் பாரதியாரின் தெய்வ நம்பிக்கையின் உறைப்பை எடுத்துக் காட்டுகின்றன.

23 வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்! — இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்! — பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.



**பொருள்:** *இங்கு - இவ்வுலகத்தில், வாழும் - வாழ்கின்ற, மனிதர் எல்லோர்க்கும் - மக்கள் யாபேருக்கும், வயிற்றுக்கு - வயிறு வளர்ப்பதற்கு, (வயிற்றுப்பசியைத் தீர்ப்பதற்கு) சோறுண்டு கண்டீர் - சோறு இருக்கின்றது என்பதை உணர்வீர், பயிற்றி - நிலத்தை நன்கு பண்படுத்தி, (பயிர் செழித்து வளரத்தக்க பண்புடையதாக நிலத்தைப் பழக்கி யென்பதாம்) உழுதுண்டு - உழவுத்தொழிலைச் செய்து அதனால் வரும்பயனை உணவாகக்கொண்டு, வாழ்வீர் - வாழ்ந்திருங்கள், பிறர் - பிறருக்குரிய, பங்கை - பங்காக (உரிமைப்பாகமாக) உள்ள நிலம் பொருள் முதலியவற்றை, திருடுதல் வேண்டாம் - களவாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.*

**விளக்கம்:** இக் கவிதையில், உழுதுண்டு வாழும் உயர்ந்த நெறியினைப் பாராட்டி யுரைக்கின்ற பாரதியாரின் புலமை உள்ளச் சிறப்பைக் காண்கின்றோம்.

உலகில் வாழ்கின்ற மக்கள், பசிப்பிணியின்றி வாழத்தக்க வாய்ப்புகளை இறைவன் இயல்பாகவே ஈந்துள்ளான்; நிலத்தைப் பண்படுத்தி உழுதுண்டு வாழும் நெறியை மக்கள் மேற்கொள்ளாமல் தொழுதுண்டு வாழும் நெறியைப் பெரிதாக மதித்து நிற்பதினாலேயே பசிப்பிணியும், வறுமையும் உளவாகின்றன என்பதைப் பாரதியார் வலியுறுத்துகின்றார்.

**வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் — இங்கு**
**வாழும் மனிதர் எல்லோர்க்கும்**

எனுங் கவிதைத்தொடர் பாரதியாரின் உயர்ந்த நோக்கத்தைப் புலனாக்குகின்றது. வயிற்றுக்குச் சோறில்லாமல் வாழத்தக்க வறுமை மனிதருக்கு ஏற்படத்தக்க நிலையில் இறைவன் விடவில்லை என்பதாம். மனிதர்கள் முயற்சியின்றிப் பிறர் பொருளைத் திருடி உண்ணும் மானமற்ற நிலை மாறவேண்டுமென்பதே பாரதியாரின் வேட்கையாகும்.

**பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் — பிறர்**
**பங்கைத் திருடுதல் வேண்டாம்**

எனும் கவிதைத் தொடர்கள் மக்கள். தன்மானத்துடன் வாழத்தக்க வழியை வகுத்துக் காட்டுகின்றன.

**வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் — இங்கு**
**வாழும் மனிதர் எல்லோர்க்கும்**
**பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்**

எனுங் கவிதைத் தொடர்களுடன்,

**இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும்**

எனவும்,

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்**

எனவும் வரும் திருக்குறள்களையும் ஒப்பிட்டு நோக்குக.

**24 உடன்பிறந் தவர்களைப் போலே — இவ்**
**வுலகினில் மனிதரெல் லோரும்**
**திடங்கொண் டவர்மெலிந் தோரை — இங்கு**
**தின்று பிழைத்திட லாமோ?**

**பொருள்:** ***இவ்வுலகினில் - இந்த நிலவுலகத்தின்கண் வாழ்கின்ற, மனிதர் எல்லோரும் - மக்கள் யாவரும், உடன்பிறந்தவர்களைப்போலவே - உடன்பிறந்த சகோதரர்களைப் போன்றவர்களேயாவர், (இவ்வுண்மையை மறந்து) இங்கு - உலகில், திடங்கொண்டவர் - வலிமையுடையவர்கள், மெலிந்தோரை - வலிமை அற்றவரை (மெலியவரை), தின்று - வருத்தி, (அவர்களின் பொருள்களைப் பறித்து) பிழைத்திடலாமோ - தாங்கள் மாத்திரம் வாழ்ந்திடலாமோ.***

**விளக்கம்:** இக் கவிதையில் வலியோர் மெலியோரை வருத்தி அவர்களின் செல்வங்களையெல்லாம் தமதாக்கி வாழ்கின்ற வன்கண்மையை இடித்துரைக்கும் பாரதியாரின் இரக்கக் குரலைக் கேட்கின்றோம்.

உடன்பிறந்தாரைப்போல் ஒருவர்க்கொருவர் உதவி வாழ வேண்டிய மக்கள், விலங்குகளைப்போல வேறுபட்டு, வலிமை மிக்கோர், வலிமை அற்றோரை வருத்தி வாழ்கின்ற கொடுமையை எண்ணி எண்ணிப் பாரதியார் இரங்குகின்றார்.



**திடங் கொண்டவர் மெலிந்தோரை — இங்கு**
**தின்று பிழைத்திட லாமோ,**

என உலக மக்களை நோக்கிப் பாரதியார் மிக உணர்ச்சியுடன் கேட்கின்றார்.

**மனிதர் உணவை மனிதர் பறிக்கும்**
**வழக்கம் இனியுண்டோ**
**மனிதர் நோக மனிதர் வாழும்**
**வாழ்க்கை இனியுண்டோ**

எனப் பாரதசமுதாயம் எனும் பகுதியில் பாரதியார் பாடியுள்ள கவிதைத் தொடர்களையும் நோக்குக.

**உடன் பிறந்தவர்களைப் போலே — இவ்**
**வுலகினில் மனிதர் எல்லோரும்**

எனும் தொடர்கள்

**யாதும் ஊரே யாவருங் கேளிர்**

எனவரும் புறநானூற்றுத் தொடரையும்

**திடங் கொண்டவர் மெலிந்தோரை — இங்கு**
**தின்று பிழைத்திட லாமோ**

எனும் தொடர்கள்

**வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து**

எனவரும் திருக்குறளையும் நினைவூட்டுகின்றன.

**25 வலிமை யுடையது தெய்வம், — நம்மை**
**வாழ்ந்திடச் செய்வது தெய்வம்;**
**மெலிவுகண் டாலுங் குழந்தை — தன்னை**
**வீழ்த்தி மிதித்திட லாமோ?**

**பொருள்:** ***தெய்வம் - தெய்வமானது, வலிமை உடையது - மிகுந்த ஆற்றலுடையது, நம்மை - எங்களையெல்லாம், வாழ்ந்திடச் செய்வது - (இவ்வுலகில் இருந்து) வாழும் வண்ணம் வைப்பது, தெய்வம் - தெய்வமேயாகும், மெலிவுகண்டாலும் - வன்***

**லமை இன்மையை அறிந்தாலும், (வாழக்கூடிய வல்லமை இன்மையைக் கண்டாலும் என்பதாம்) குழந்தை தன்னை - (தாம் பெற்ற) குழந்தை (பிள்ளை)யினை, வீழ்த்தி மிதித்திடலாமோ - (பெற்றோர்) நிலத்தில் வீழ்த்தி மிதித்து வருத்தலாமோ, (அங்ஙனம் பெற்றோர்கள் மெலிந்த குழந்தையென்று எண்ணி வருத்தமாட்டார்கள் என்பதாம்),**

**விளக்கம்:** இக் கவிதையில், தெய்வத்தின் முன்னிலையில் வலியவர்கள் மெலியவர்கள் என்ற வேறுபாடு கிடையாதென்னும் உணமையைக் கூறுகின்ற பாரதியாரின் புலமை உள்ளத்தைக் காண்கின்றோம்.

மெலிந்த குழந்தையைப் பெற்றோர் வீழ்த்தி மிதிக்க மாட்டார்கள். அதேபோலத் தெய்வமும் வலியவர் மெலியவர் என்ற வேறுபாடில்லாமல் எல்லோரையும் வாழ்விக்கும் ஆற்றலுடையது என்பதாம்.

**வலிமை யுடையது தெய்வம் நம்மை**
**வாழ்ந்திடச் செய்வது தெய்வம்**

எனுந் தொடர்கள பாரதியாரின் தெய்வ நம்பிக்கையைக் காட்டுகின்றன.

**வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது,**

எனுந் திருக்குறளையும்

**ஆயக்கடவேன் யானேதான்**
**என்னதோ இங்கு அதிகாரம்**
**காயத்திருவாய் உன்னுடைய**
**கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே**

எனவரும் திருவாசகத் தொடர்களையும் நோக்குக.

26 **தம்பிசற்றே மெலிவானால் — அண்ணன்**
**தானடிமை கொள்ள லாமோ?**
**செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி — மக்கள்**
**சிற்றடி மைப்பட லாமோ?**



**பொருள்: தம்பி - உடன்பிறந்த தம்பியானவன், சற்றே மெலிவானால் - சிறிது வல்லமையற்றவனாக இருந்தால், அண்ணன்தான் - அவனின் உடன்பிறந்த தமையனானவன், அடிமை கொள்ளலாமோ - (வலிமையில் குறைந்துவிட்டான் என்பது பற்றி) தன் தம்பியைத் தனக்கடிமை யாக்கலாமோ, செம்புக்கும் - பணத்துக்கும் (காசுக்கும்), கொம்புக்கும் - (கொல்லும்) போர்ப்படைக் கருவிகளுக்கும், அஞ்சி - அச்சங்கொண்டு, மக்கள் - மனிதர்கள், சிற்றடிமைப்படலாமோ - (தம்மைப்போன்ற பிற மனிதரின்கீழ்) கீழ்த்தரமான அடிமைகளாய் இருந்து வாழலாமோ?**

**விளக்கம்:** இக்கவிதையில், வலிமை மிக்கவர்களின் பணத்துக்கும் படைக்கும் அஞ்சி வலிமையற்றவர்கள் அடிமைப்பட்டு வாழ்வதை, இடித்துரைத்து, விடுதலை உணர்ச்சியை ஊட்டுகின்ற பாரதியாரின் உயிர்த்துடிப்பைக் காண்கின்றோம்.

உலக மக்கள் எல்லோரும் உடன்பிறந்தோர்களாவார், என்னும் உண்மையை மறந்து, வலிமையற்றவர்களை வலிமை மிக்கோர், தமது பணப்பெருக்கினாலும், படைப்பெருக்கினாலும் அடக்கி அடிமைப்படுத்துவதை எதிர்த்துப் போராடவேண்டுமென்பதே பாரதியாரின் கொள்கையாகும்.

**செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி — மக்கள்**
**சிற்றடிமைப் படலாமோ?**

எனப் பாரதியார் எழுப்புகின்ற குரலிலே சுதந்திரவெறி கிடந்து அலைமோதுவதை உணருங்கள்.

**(செம்பு என்பது காசையும், கொம்பு என்பது போர்க்கருவிகளையும்** உணர்த்துகின்றன. கொம்பு - குண்டாந்தடி. அஃது, குறிப்பாகப் போர்க்கருவிகளைக் குறிக்கும் பொதுப்பெயராக இச்செய்யுளில் இடம்பெற்றுள்ளது).

ஓர் நாட்டினர் வல்லமை அற்றவர்களானால் அவர்களை வல்லமைமிக்க இன்னொரு நாட்டினர் அடக்கி அடிமைப்படுத்துதல், அன்பினால் அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டுமெனக் கூறும்

மக்களின் பகுத்தறிவுக்கும் பண்பாட்டிற்கும் பொருந்தாத கொடுஞ்செயலாகும் என்பதைப் பாரதியார் அழுத்தம் திருத்த மாக எடுத்துக் காட்டுகின்றார்.

**தம்பி சற்றே மெலிவானால் அண்ணன்**
**தானடிமை கொள்ள லாமோ**

எனப் பாரதியார் எழுப்புகின்ற குரல் உலக சமாதானத்தை விரும்புகின்ற அறிஞர்களுக்குப் புதியதோர் சிந்தனை விருந்தாக நின்று பொலிகின்றது.

**27 அன்பென்று கொட்டு முரசே! — அதில்**
**யார்க்கும் விடுதலை உண்டு;**
**பின்பு மனிதர்க ளெல்லாம் — கல்வி**
**பெற்றுப் பதம்பெற்று வாழ்வார்.**

பொருள்: *முரசே — முரசப்பறையே, நீ, அன்பென்று - அன்புதான் மக்களினத்தின் ஆக்கத்திற்குப் பெருந்துணையானது என்று சொல்லி, கொட்டு - முழங்குவாயாக, அதில் - அங்ஙனம் அன்புணர்ச்சி மக்கள் உள்ளத்தில் ஊறிச் சுரக்குமானால், யார்க்கும் - உலக மக்கள் எல்லோருக்கும், விடுதலை உண்டு — அடிமை வாழ்வு இன்றி சுதந்திரமாக வாழும் பெரிய பேறு கிடைக்கும் (உண்டாகும்), பின்பு - விடுதலைப்பேறு கிடைத்த பின், மனிதர்கள் எல்லாம் - மக்கள் யாவரும், கல்வி பெற்று — கல்வி அறிவை அடைந்து, பதம்பெற்று வாழ்வார் - (இவ்வுலகில்) பெரும்பதவிகளையும் (அவ்வுலகில் இறைவன் திருவடிப் பேற்றையும்) அடைந்து, வாழ்வார்கள்.*

**விளக்கம்:** இக் கவிதையில், மக்கள் எல்லோரும் அன்பினால் ஒன்றுபட்டால் எய்தும் பேறுகளைச் சொல்லி மகிழ்கின்ற பாரதியாரின் சுதந்திரதாகத்தை உணர்கின்றோம்.

மக்கள் எல்லோரும் அன்பினால் ஒன்றுபட்டு ஒருவரையொருவர் அடிமைப்படுத்தாமல், சுதந்திரமாக வாழ்வதினால், பல ஆக்கங்கள் உளவாகும் எனப் பாரதியார் உரைக்கின்றார். சுதந்திர வாழ்வுபெற்ற மக்கள் கல்வியறிவில் மிக்கவர்



களாய் இவ்வுலகிலும் நல்வாழ்வு வாழ்ந்து, அவ்வுலகிலும் பெரும்பேற்றை அடைவார்கள் என்பதாம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

என்பது திருக்குறள்.

**28 அறிவை வளர்த்திட வேண்டும் — மக்கள்**
**அத்தனை பேருக்கும் ஒன்றாய்;**
**சிறியாரை மேம்படச் செய்தால் — பின்பு**
**தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.**

பொருள்: *மக்கள் அத்தனை பேருக்கும் - மக்கள் எல்லோருக்கும், (வறியவர், செல்வர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் வேறுபாடுகளை விடுத்து) ஒன்றாய் - ஒரேவகையான வாய்ப்புக்களை வழங்கி (சமசந்தர்ப்பங் கொடுத்து), அறிவை வளர்த்திட வேண்டும் - கல்வியறிவைப் பெருக்கவேண்டும், சிறியாரை - (இங்ஙனம் கல்விகற்கச் சமசந்தர்ப்பங் கொடுப்பதினால்) கீழ்நிலையில் இருப்போரை, மேம்படச் செய்தால் - அறிவு ஆற்றல்களில் சிறந்தோங்க வைத்தால், பின்பு - அதன் பிறகு, தெய்வம் - (எல்லோரையும் தன் மக்களாகக் கருதிக் கருணை புரிகின்ற) தெய்வம், எல்லோரையும் - மக்கள் எல்லோரையும், வாழ்த்தும் - நல்வாழ்வு பெற்றிடத் திருவருள் புரியும்.*

**விளக்கம்:** இக் கவிதையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் எனும் வேறுபாடின்றி எல்லோர்க்கும் கல்வியறிவை ஊட்ட வேண்டுமெனக் கூறுகின்ற பாரதியாரின் பரந்த நோக்கத்தைக் காண்கின்றோம்.

கல்வியறிவை உயர்ந்தவர்கள் எனக் கூறப்படும் ஒரு பகுதியாருக்கே ஊட்டி, மற்றைய மக்களுக்குக் கல்வி கற்கச் சம உரிமை வழங்காமல் அடக்கிவைத்த கொடுமையைப் பாரதியாரால் பொறுக்க முடியவில்லை.

**அறிவை வளர்த்திட வேண்டும் — மக்கள்**
**அத்தனை பேருக்கும் ஒன்றாய்**

எனப் பாரதியார் எடுத்துரைக்கின்ற கொள்கை கட்டாயக் கல்வி யின் இன்றியமையாமையை விளக்குகின்றது. மக்கள் எல்லோருக்கும் சமமாகக் கல்வியறிவை யூட்டினால் கீழ்நிலையில் உள்ள மக்களும் மேல்நிலையை அடைவார்கள் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**சிறியாரை மேம்படச் செய்தால் — பின்பு**
**தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்**

எனும் தொடர்களில், அறிவை உயர்வு தாழ்வு பாராமல் மக்கள் எல்லோருக்கும் அளிப்பதுதான் தெய்வத்தின் திருவுளச் சம்மதமாகும் என்பதைப் பாரதியார் வலியுறுத்துகின்றார்.

**ஏழை யென்றும் அடிமை என்றும்**
**எவனும் இல்லை, சாதியில்**
**இழிவு கொண்ட மனித ரென்பது**
**இந்தியாவில் இல்லையே**
**வாழி கல்வி செல்வம் எய்தி**
**மனம கிழ்ந்து கூடியே**
**மனிதர் யாரும் ஒருநிகர்**
**சமான மாக வாழ்வமே.**

என, விடுதலை என்னும் பகுதியில் பாரதியார் பாடியுள்ள இக் கவிதையையும் நோக்குக.

29 **பாருக் குள்ளே சமத்தன்மை — தொடர்**
**பற்றுஞ் சகோதரத் தன்மை**
**யாருக்கும் தீமை செய்யாது — புவி**
**யெங்கும் விடுதலை செய்யும்.**

பொருள்: *பாருக்குள்ளே - இவ் வுலகின்கண்ணே, சமத்தன்மை - எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் குலம் எனக் கொள்கின்ற சமத்துவத் தன்மை என்னும் கொள்கையும், தொடர் - (உலக மக்கள் எல்லோரையும்) ஒன்ருக்கித் தொடர்பு படுத்தும் (இணைக்கும்), பற்றும் - அன்பும், சகோதரத்தன்மை - (அந்த அன்பென்னும் உணர்ச்சியினுல் உண்டாகின்ற) சகோதரத்தன்மை யென்னும் (சகோதரத்துவம்) உடன்பிறப்புணர்ச்சியும் உண்டாகுமானுல், யாருக்கும் - எவருக்கும், தீமை செய்யாது - கெடுதியை உண்டாக்காது, புவி எங்கும் - உலகில் உள்ள யாவருக்கும், விடுதலை செய்யும் - விடுதலை என்னும் சுதந்திர வாழ்வை உளவாக்கும் (கொடுக்கும்)*



**விளக்கம்:** இக் கவிதையில், சமத்துவம், அன்பு, சகோதரத்தன்மை என்பவை உலக மக்களிடத்தில் நிலவி அவர்களின் வாழ்வில் சுதந்திர ஒளி தோன்றவேண்டுமெனச் சொல்லி மகிழ்கின்ற பாரதியாரின் பரந்த உள்ளச் செழிப்பை உணர்கின்ருேம்,

உலகில் சமத்துவம் என்னும் மக்கள் உரிமை நிலைபெறுமானுல் அவ்வுரிமை எல்லோரையும் ஒன்றுபடுத்தும் அன்பையும், அந்த அன்பின் குழைவினுல் உளவாகும் சகொதரத்துவம் என்னும் உடன்பிறப்புணர்ச்சியையும் தோற்றுவித்து மக்கள் வாழ்வை வளப்படுத்தும் விடுதலைப் பெரும்பேற்றையும் கொடுத்துவிடும் என்பதே பாரதியாரின் எண்ணமாகும்.

**பாருக்குள்ளே சமத்தன்மை**
**தொடர்பற்றுஞ் சகோதரத்தன்மை**

எனுங் கவிதைத் தொடர்களில் பாரதியாரின் அறிவகலமும், கருணை நெஞ்சமும் அப்படியே புலனுகின்றன. **சமத்துவம் என்பது சரிநிகர் சமானத்தையும், தொடர்பற்று என்பது எல்லோரையும் ஒன்றுபடுத்தித் தொடர்பு செய்யும் அன்பையும், சகோதரத்தன்மை என்பது எல்லோரும் உலகம் என்னும் அன்னையின் மக்கள் என எண்ணும் பரந்த நோக்கத்தையும்** குறிக்கின்றன.

**யாருக்கும் தீமை செய்யாது புவி**
**எங்கும் விடுதலை செய்யும்**

எனும் தொடர்கள், இந்திய மக்கள் மாத்திரமன்றி உலக மக்கள் எல்லோரும் விடுதலை பெற்றுயர வேண்டுமென விரும்புகின்ற பாரதியாரின் பரந்த நோக்கத்தைக் காட்டுகின்றன.

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சுநாம்
எல்லோரும் சமமென்பது உறுதி யாச்சு
சங்குகொண் டேவெற்றி ஊதுவோமே இதைத்
தரணிக் கெல்லாம் எடுத்து ஓதுவோமே

எனச் சுதந்திரப்பள்ளு என்னும் பகுதியில் பாரதியார் பாடியுள்ள கவிதையையும் நோக்குக.

30 வயிற்றுக்குச் சோறிட வேண்டும் — இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து — இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்,

**பொருள்:** *இங்கு - இந்த நிலவுலகத்தில், வாழும் மனிதருக்கெல்லாம் - வாழ்கின்ற மக்கள் எல்லோருக்கும், வயிற்றுக்கு சோறிட வேண்டும் - (வயிற்றில் பசியென்னும் கொடும் பிணி தோன்ருதவண்ணம்) உண்ணுதற்கு உணவு கொடுக்க வேண்டும், (அங்ஙனம் உணவை மாத்திரங் கொடுப்பதுடன் அமையாது) பலகல்வி - பலதிறப்பட்ட கல்வித் துறைகளையெல்லாம், பயிற்றித் தந்து - கற்பித்துதவி, இந்தப்பாரை - (அதனுல்) இந்நிலவுலகத்தை, உயர்த்திட வேண்டும் - உயர்வடையச் செய்தல்வேண்டும்.*

**விளக்கம்:** இக்கவிதையில் வயிற்றுப்பசியைப் போக்கியும், கலையறிவை ஊட்டியும் மக்களை வளம்படுத்த வேண்டுமெனக் கூறுகின்ற பாரதியாரின் ஆர்வக் குரலைக் கேட்கின்ருேம்.

உணவின்றி மக்கள் வருந்தக்கூடிய வறுமை ஒரு நாட்டில் நிலவுமானுல் அந்நாட்டில் அமைதியைக் காணமுடியாது. முதற்கண் மககள் எல்லோருக்கும் உணவு கொடுக்கவேண்டும். இங்ஙனம் உடலை வளர்க்கும் உணவைக் கொடுத்தலுடன் அமையாது அறிவை வளர்க்கும் கல்வியையும் ஊட்டவேண்டும் என்பதே பாரதியாரின் கொள்கையாகும். பசிப்பிணியைப் போக்குதலே முதற்கடமையாகப் பாரதியார் குறிப்பிட்டுள்ளார். பசிவந்திடப் பத்தும் பறக்கும், என்பது பழமொழி.



குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி

என மணிமேகலையிற் பசிப்பிணியின் கொடுமைகளைப்பற்றிக் கூறியுள்ளவற்றையும் நோக்குக.

31 ஒன்றென்று கொட்டு முரசே! — அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! — இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

**பொருள்:** *முரசே - முரசப்பறையே. நீ, ஒன்றென்று - (இவ்வுலகில் வாழ்கின்ற) மக்கள் எல்லோரும் ஓர் குலத்தினர் என்று சொல்லி, கொட்டு - முழங்குவாயாக, அன்பில் - அன்பினுல் ஒன்றுபட்ட பெருவாழ்வைப் பெற்று, ஓங்கென்று - மக்கள் எல்லோரும், சிறப்படைவார்களாக என்று சொல்லி, முரசே - முரசப்பறையே, நீ, கொட்டு - முழங்குவாயாக, இந்த - இவ்வுலகிற் காணப்படும், நானில - முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நால்வகைப்பட்ட நிலப் பிரிவுகளில், வாழ்கின்ற, மாந்தருக்கெல்லாம் - மக்கள் எல்லோருக்கும், நன்றென்று - நன்மை உளவாகுக என்று சொல்லி, முரசே - முரசப்பறையே, கொட்டு - நீ, முழங்குவாயாக.*

**விளக்கம்:** இக் கவிதையில் மக்கள் எல்லோரும் அன்பினுல் ஒன்றுபட்டு வாழ்வார்களாக என வாழ்த்தித் தமது கவிதை முரசை நிறைக்கின்ற பாரதியாரின் ஆர்வக்குரலைக் கேட்கின்ருேம்.

அன்பினுல்தான் உலகில் அமைதியைக் காணமுடியுமென்னும் உண்மையைப் பாரதியார் மிகத் தெளிவாகக் கூறுகின்ருர்

ஒன்றென்று கொட்டு முரசே! — அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!

1 29028



என, அன்பினுல் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஓங்க வேண்டுமெனப் பாரதியார் வாழ்த்துகின்ருர்.

**அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு**

**அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று**

எனவரும் திருக்குறள்களை நோக்குக.

நிலப்பிரிவன்றி, உயர்வு தாழ்வுகளைப்பற்றி மக்களைப் பிரித்துக் கூறும் குலப்பிரிவு இயற்கையானதன்று, என்பதை உளங்கொண்ட பாரதியார்.

**நன்றென்று கொட்டு முரசே இந்த**
**நானில மாந்தருக் கெல்லாம்**

எனுந் தொடர்களில் நால்வகைப்பட்ட நிலத்தில் வாழும் உரிமை பற்றி மக்களை, நானில மாந்தரெனக் கூறினர்.

முற்றிற்று.

இந்நூலின் உரையாசிரியர்
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்
**க. வேந்தனார் அவர்களால்**
இயற்றப்பட்டு இனி வெளிவர இருக்கும்

## நூல்கள்

குழந்தைக் கவிதைகள்
ஈழநாட்டுத் தமிழ் மணிகள்
நன்னூல் விருத்தி, உரை விளக்கம
சிலப்பதிகாரத் தெளிவு
வீரமகேந்திரம்
திருமுறைச் செல்வம்
கட்டுரைக் களஞ்சியம்